Reg. No. 31/2020

வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்

(A Movement for Justice through Legal Aid)

வாயில்லா, வழியில்லா உயிர்களின் நீதிக்கான சட்ட உதவி இயக்கம்

# அரசு ஊழியர் பணி ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள்

[தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளுடன்]



டாக்டர். ரமேஷ் மகாதேவ், எல்.எல்.எம்., பி.ஹெச்.டி. (சட்டம்)

உயர்நீதிமன்ற வழக்கறிஞர் / நிறுவனர் / மேனாள் உதவி ஆணையர்

வல்லுநர் குழு வழக்கறிஞர் – இந்து சமய அறநிலையத்துறை

# புத்தக வெளியீடுகள்


தகவல் பெறும்
உரிமைச் சட்டம், 2005
The Right to Information Act , 2005
NEW EDITION
Human
Rights
Democracy


Reg. No. 31/2020
வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
(A Movement for Justice through Legal Aid)
அரசு ஊழியர் பணி
ஒழுங்கு நடவடிக்கை
நடைமுறைகள்

## ஒரு நிமிடம்...

ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள் வெறும் சட்ட விதிகளை அடிப்படையாக கருதாமல், இயற்கை நீ(ய)தி கோட்பாடுகளை பின்பற்றி அமைந்த நடைமுறைகளை அடிப்படையாக கொண்டவை. ஆகவே தமிழ்நாடு மட்டுமில்லாமல், இந்தியா முழுமைக்குமே ஒழுங்கு நடவடிக்கைகளை பொறுத்தவரை ஒரே மாதிரியான நடைமுறைகளே....

ஒவ்வொரு அரசு துறைகளை பொறுத்து, ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் மாறலாம். ஆனால் பின்பற்றபட வேண்டிய நடைமுறை ஒன்றே...

எனவே எத்துறையாக இருப்பினும் இப்புத்தகத்தில் கொடுக்ப்ப்பட்டுள்ள நடைமுறை படிவ மாதிரிகள் (MODEL FORMS), தங்களது அரசு துறையை பொறுத்து மாற்றி தகவமைத்து பயன்படுத்தும் வகையில் கொடுக்கப்பட்டுள்ள பொதுவான மாதிரி படிவங்களே...

(எளிமையாக புரிந்து கொள்ள வேண்டும் எனும் நோக்கில் கொடுக்கப்பட்டவை)

# அரசு ஊழியர் பணி
# ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள்

**[தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளுடன்]**

[GOVERNMENT SERVANTS DISCIPLINARY PROCEEDINGS]

(நடைமுறை பயன்பாட்டு வடிவில் மற்றும் பார்வையில்)


டாக்டர். **ரமேஷ் மகாதேவ்**, எல்.எல்.எம்., பி.ஹெச்.டி. (சட்டம்)

நிறுவனர்

அம்மா மல்லிகா – மகேஸ்வரி அன்னதான அறக்கட்டளை

வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்

உயர்நீதிமன்ற வழக்கறிஞர் / மேனாள் உதவி ஆணையர்

வல்லுநர் குழு வழக்கறிஞர் – இந்து சமய அறநிலையத்துறை



வெளியீடு

**அம்மா மல்லிகா – மகேஸ்வரி அன்னதான அறக்கட்டளை**

3/145, கே.பி.பி. டவர், கோடக் மகிந்திரா வங்கி மேல்தளம்,
(மீனாட்சி மிஷன் மருத்துவமனை அருகில்)
மேலூர் மெயின் ரோடு, உத்தங்குடி, மதுரை-625 107

Email : drrameshmahadevadvocate@gmail.com
தொடர்புக்கு : **0452-4352690, 72003 89831 (WhatsApp)**
Website : www.vaanamaeellai.org

ISBN : 978-93-100-0369-7

முதற்பதிப்பு : ஆகஸ்ட் 2023

பதிப்புரிமை : நூல் ஆசிரியர்
© Rights reserved with the Author

விலை : ரூ. 400/-

ஆசிரியர் :
**டாக்டர். ரமேஷ் மகாதேவ்,** எல்.எல்.எம்., பி.ஹெச்.டி. (சட்டம்)

வெளியீடு :

**அம்மா மல்லிகா – மகேஸ்வரி அன்னதான அறக்கட்டளை**

3/145, கே.பி.பி. டவர், கோடக் மகிந்திரா வங்கி மேல்தளம்,
(மீனாட்சி மிஷன் மருத்துவமனை அருகில்)
மேலூர் மெயின் ரோடு, உத்தங்குடி, மதுரை-625 107.

Email : drrameshmahadevadvocate@gmail.com
தொடர்புக்கு : **0452-4352690, 72003 89831 (WhatsApp)**
Website : www.vaanamaeellai.org

பிரதிபலன் பாராமல் அன்பு செலுத்துவோர்களால்தான்
அழகாகிறது இந்த உலகு...

இப்புத்தகத்தை வெளியிடுவதற்குரிய எல்லா கவனமும் எடுத்துக் கொள்ளப்பட்டு வெளியிடப்படுகிறது. எனவே இதில் இருக்கக் கூடிய பிழை, அச்சுப்பிழை அல்லது விடுபட்டது ஆகியவற்றால் ஏற்படும் எவ்விதமான இழப்பிற்கும் நூல் ஆசிரியர், வெளியீட்டாளர் மற்றும் அச்சகத்தார் பொறுப்பல்ல.



"என் அம்மா என் தெய்வம்"

நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை...

- ஔவையார் (மூதுரை)

# புத்தகங்களை அஞ்சல் மூலம் பெறுவதற்கு...







A/C No. : 4346059654
Name : Ramesh Mahadev
Bank : Kotak Mahindra Bank
Branch : Uthangudi, Madurai
IFSC : KKBK0008720

UPI ID : 7200389831@upi



Paytm, Google Pay, Phone Pay, NEFT or
Other Online Transfer to 7200389831
புத்தக பிரதியானது ஐந்து வேலை நாட்களுக்குள் (Within 5 Working Days)
கூரியர் (Courier Service) மூலமாக தங்களுக்கு கிடைக்கப்பெறும்.

மேற்படி வகையில் செலுத்தியமைக்கான தொடர்புடைய இரசீதின் விவரங்களுடன் தங்களது பெயர், முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு, கீழ்க்கண்ட வாட்ஸ்அப் (அ) தொலைபேசி எண் (அ) மின்னஞ்சலுக்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றினை அனுப்புங்கள்.


**டாக்டர். ரமேஷ் மகாதேவ், எல்.எல்.எம்., பி.ஹெச்.டி. (சட்டம்)**
உயர்நீதிமன்ற வழக்கறிஞர் / நிறுவனர் / மேனாள் உதவி ஆணையர்
வல்லுநர் குழு வழக்கறிஞர் – இந்து சமய அறநிலையத்துறை

**அம்மா மல்லிகா - மகேஸ்வரி அன்னதான அறக்கட்டளை**
3/145, கே.பி.பி. டவர், கோடக் மகிந்திரா வங்கி மேல்தளம்,
(மீனாட்சி மிஷன் மருத்துவமனை அருகில்),
மேலூர் மெயின் ரோடு, உத்தங்குடி, மதுரை-625 107
Email : drrameshmahadevadvocate@gmail.com
தொடர்புக்கு : 0452-4352690, 72003 89831 (WhatsApp )
Website : www.vaanamaeellai.org

# உள்ளே ...

I. அரசு ஊழியர் பணி ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள் — ஓர் அறிமுகம்

II. 17 (a) சிறிய தண்டனை வகையிலான ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை
(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

III. 17 (b) பெரிய தண்டனை வகையிலான ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை
(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

IV. 17 (e) தற்காலிக பணிநீக்க வகையிலான ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை
(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

V. மேல்முறையீடு மற்றும் பிற தீர்வழிகள் சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை
(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

VI. தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955

VII. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள்

VIII. அரசு ஊழியர் பணி ஒழுங்கு நடவடிக்கை சார்ந்த முக்கிய அரசாணைகள்

# பொருளடக்கம்
## (TABLE OF CONTENTS)

**I. அரசு ஊழியர் பணி ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள் : ஓர் அறிமுகம்**

| | | |
|---|---|---|
| 1. | ஓர் அறிமுகம் | 13 |
| 2. | ஒழுங்கு நடவடிக்கை | 13 |
| 3. | பொருந்துகை | 14 |
| 4. | அரசு ஊழியர் (அ) பணியாளர் | 14 |
| 5. | இந்திய அரசமைப்பு சட்ட வகைமுறைகள் | 16 |
| 6. | தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள் | 17 |
| 7. | தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி தொகுப்பின் கீழான பல்வகை தண்டனை வகைமுறைகள் [விதி – 8] | 17 |
| 8. | ஒழுங்கு நடவடிக்கை தொடுக்கும் அதிகாரம் | 18 |
| 9. | உரிய சட்ட நடைமுறை | 19 |
| 10. | ஒழுங்கு நடவடிக்கை தொடர்வதென முடிவு செய்தல் | 19 |
| 11. | ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகளுக்கான கால வரம்பு | 21 |

## II. 17 (a) சிறிய தண்டனை வகையிலான ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

12. சிறிய தண்டனை வழங்குவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை 25

13. விதி 17 (a)–ன் கீழ் தண்டனையாக ஊதிய உயர்வை தள்ளிப்போடுதல் 26

14. ஊதிய உயர்வு நிறுத்த ஆணைகளை வெளியிடுவதற்கு முன் எந்தெந்த இனங்களில் விதி 17 (b)–ன் கீழான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். 27

14. விதி 17 (a)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை – விளக்கம் சமர்ப்பிக்கக் கோரல் 28

15. விதி 17 (a)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை – விளக்கம் சமர்ப்பித்தல் 30

16. விதி 17 (a)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை – கைவிடுதல் ஆணை 41

17. விதி 17 (a)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை – தண்டனை ஆணை 43

## III. 17 (b) பெரிய தண்டனை வகையிலான ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

18. பெரிய தண்டனை வகையிலான ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை 47

| | | |
|---|---|---|
| 19. | குற்றச்சாட்டு குறிப்பாணை தயார் செய்தல் அல்லது குற்றச்சாட்டுகளைத் தொடுத்தல் | 48 |
| 20. | குற்றக் குறிப்பாணையின் உள்ளடக்கம் | 49 |
| 21. | குற்றச்சாட்டுக் குறிப்பாணை அல்லது காரணம் காட்டும் குறிப்பாணையினை வழங்குதல் அல்லது சார்வு செய்தல் | 49 |
| 22. | ஆவணங்களைப் பார்வையிடுதல் | 50 |
| 23. | விசாரணை அலுவலர் நியமனம் | 51 |
| 22. | விசாரணை | 51 |
| 23. | விசாரணை அலுவலர் மாற்றம் ஏற்படும் நிலையில் | 52 |
| 24. | ஒருதலைப்பட்சமான (Ex-parte) விசாரணை | 52 |
| 25. | விசாரணை அலுவலரின் அறிக்கை | 53 |
| 26. | விதி 17 (b)–ன் கீழான குற்றச்சாட்டை முடிவு செய்தல் | 53 |
| 27. | ஒழுங்கு நடவடிக்கையை முடிவு செய்தல் [அ] இறுதி ஆணை வழங்குதல் | 53 |
| 28. | குற்றவியல் வழக்கில் தண்டிக்கப்படும் போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை | 54 |
| 29. | ஒரே நேரத்தில் குற்றவியல் மற்றும் துறை ரீதியான நடவடிக்கை | 54 |
| 30. | பதவி உயர்வு | 55 |

| | | |
|---|---|---|
| 31. | குற்றச்சாட்டுக் குறிப்பாணை – I | 56 |
| 32. | குற்றச்சாட்டுக் குறிப்பாணை – II | 83 |
| 33. | ஆவணங்களைப் பார்வையிட அனுமதி வேண்டுதல் | 96 |
| 34. | விசாரணை அலுவலர் நியமனம் | 98 |
| 35. | கோப்புக்களை அனுப்பக் கேட்டல் | 100 |
| 36. | விசாரணைக்கு ஆஜராகக் கேட்டல் | 101 |
| 37. | விசாரணை அலுவலர் அவர்கள் முன்னிலையில் வாக்குமூலம் | 103 |
| 38. | சாட்சியங்களை விசாரணைக்கு ஆஜராகக் கேட்டல் | 112 |
| 39. | விசாரணை தேதி மாற்றம் செய்து தர வேண்டுதல் | 114 |
| 40. | சாட்சியங்கள் விசாரணை – மற்றொரு தேதி நிர்ணயம் செய்து தருதல் | 118 |
| 41. | சாட்சியங்கள் விசாரணை அலுவலர் முன்னிலையில் வாக்குமூலம் | 120 |
| 42. | விசாரணை அறிக்கை அனுப்புதல் | 122 |
| 43. | விசாரணை அறிக்கையின் மீது மேல் விளக்கம் கேட்டல் | 147 |
| 44. | விசாரணை அறிக்கையின் மீது மேல் விளக்கம் சமர்ப்பித்தல் | 149 |

45. இறுதி ஆணை பிறப்பித்தல் 151

46. தண்டனைக்கு பின் பணி நியமனம் வழங்குதல் 174

## IV. 17 (e) தற்காலிக பணிநீக்கம் சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

47. தற்காலிக பணிநீக்க ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை 179

48. தற்காலிக பணி நீக்க காலத்திற்கான பிழைப்பூதியம் 180

49. பணியிலிருந்து ஓய்வு பெறும் நாளன்று தற்காலிக பணி நீக்கத்தில் வைத்திடும் ஆணை வெளியிடுதலைத் தவிர்த்தல் 181

50. ஓய்வு பெறும் நாளன்று ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்து, தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் நேர்வில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை 181

51. தற்காலிகப் பணி நீக்க ஆணை 183

52. தற்காலிகப் பணி நீக்க ஆணை – அறிக்கை சமர்ப்பித்தல் 189

53. தற்காலிக பணி நீக்க காலத்திற்கு பிழைப்பூதியம் பெற்று வழங்க வேண்டுதல் 191

54. மாற்றுப் பணியில்லாச் சான்று 193

55. தற்காலிக பணி நீக்க காலத்திற்கு பிழைப்பூதியம் (6 மாதம் முடிவடைந்த நிலையில்) 194

| | | |
|---|---|---|
| 56. | மாற்றுப் பணியில்லாச் சான்று | 196 |
| 55. | தற்காலிகப் பணி நீக்கம் விலக்கிக் கொள்ளுதல் | 197 |
| 56. | தற்காலிகப் பணி நீக்கம் விலக்கிக் கொள்ளப்பட்ட பின் பணி நியமனம் | 201 |

## V. மேல்முறையீடு மற்றும் பிற தீர்வழிகள் சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

| | | |
|---|---|---|
| 58. | மேல்முறையீடு | 205 |
| 59. | சீராய்வு (அ) திருத்தி அமைத்தல் | 205 |
| 60. | மறு ஆய்வு | 205 |
| 61. | நீதிமன்ற தீர்வழிகள் | 206 |
| 62. | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்துடன் ஆலோசனை (தேவைப்படின்) | 206 |
| 63. | மேல்முறையீட்டு மனு சமர்ப்பித்தல் | 207 |
| 64. | அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்துரு கேட்டல் | 220 |
| 65. | அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் கருத்துரு | 222 |
| 66. | அரசு மேல்முறையீடு ஆணை | 227 |
| 67. | அரசால் தண்டனை மாற்றியமைப்பிற்கு பின் பணி நியமனம் வழங்குதல் | 233 |

## VI. தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955


| | | |
|---|---|---|
| 68. | தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை : ஓர் அறிமுகம் | 239 |
| 69. | தமிழ்நாடு காவல் துறையில் ஒழுங்கு நடவடிக்கை தொடுக்க தகுதி வாய்ந்த அலுவலர் மற்றும் மேல் முறையீட்டு அலுவலர் பற்றிய விவரங்கள் | 240 |
| 70. | தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறைடு) விதிகள், 1955 | 257 |
| 71. | தமிழ்நாடு சார்நிலை காவல் அலுவலர்கள் நடத்தை விதிகள், 1964 | 278 |


## VII. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள்


| | | |
|---|---|---|
| 72. | தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள் | 283 |


## VIII. அரசு ஊழியர் பணி ஒழுங்கு நடவடிக்கை சார்ந்த முக்கிய அரசாணைகள்


| | | |
|---|---|---|
| 73. | ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகளுக்கான கால வரம்பு குறித்த அரசாணை | 323 |
| 74. | பணியிலிருந்து ஒய்வு பெறும் நாளன்று தற்காலிக பணி நீக்கத்தில் வைத்திடும் ஆணை வெளியிடுதலைத் தவிர்த்தல் குறித்த அரசாணை | 331 |
| 75. | பதவி உயர்விற்கான தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயாரித்தல் குறித்த அரசின் வழிகாட்டுதல்கள் சார்ந்த அரசாணை | 335 |
| 76. | தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணியிடங்களில் பணிபுரியும் அரசுப் ஊழியர்கள் (அ) பணியாளர்களின் தர ஊதியம் குறித்த அரசாணை | 344 |
| 77. | ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகளுக்கான கால வரம்பு | 354 |


ஆந்திரப் பிரதேசம்
கர்நாடகம்
திருவள்ளூர்
சென்னை
வேலூர்
இராணிப்பேட்டை
காஞ்சிபுரம்
கிருஷ்ணகிரி
திருப்பத்தூர்
செங்கல்பட்டு
திருவண்ணாமலை
தர்மபுரி
விழுப்புரம்
புதுச்சேரி
கள்ளக்குறிச்சி
சேலம்
நீலகிரி
ஈரோடு
கடலூர்
நாமக்கல்
பெரம்பலூர்
அரியலூர்
மயிலாடுதுறை
கோயம்புத்தூர்
திருச்சிராப்பள்ளி
காரைக்கால்
கரூர்
தஞ்சாவூர்
திருப்பூர்
திருவாரூர்
நாகப்பட்டினம்
புதுக்கோட்டை
திண்டுக்கல்
கேரளம்
மதுரை
தேனி
சிவகங்கை
விருதுநகர்
இராமநாதபுரம்
தென்காசி
தூத்துக்குடி
திருநெல்வேலி
இலங்கை
கன்னியாகுமரி

 பகுதி – 1

# I

# அரசு ஊழியர் பணி
# ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள்
# ஓர் அறிமுகம்

 பகுதி – 1

# புத்தக வெளியீடுகள்



தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005
The Right to Information Act , 2005
NEW EDITION
Human
Rights
Democracy




Reg. No. 31/2020
வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
(A Movement for Justice through Legal Aid)
அரசு ஊழியர் பணி ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள்

# I

# ஓர் அறிமுகம்
## (An Introduction)

"**ஒழுங்கு நடவடிக்கை**" என்பது அரசு பணியில் அல்லது பொதுப்பணியில் தவறு இழைத்த அல்லது தகுதியிழப்பு பெறும் அரசு பணியாளரின் முறையற்ற மற்றும் சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகளைச் சட்ட விசாரணை நடைமுறைகளுக்கு உட்படுத்தி கட்டுப்பாடுகளுடன் அரசு பணிகளை மேற்கொள்ள உதவிடும் ஒரு நடவடிக்கையாகும். இதில் சிறு தண்டனையான "எச்சரிக்கை செய்திடல்" முதல் பெரும் தண்டனையான முற்றிலும் பணியில் இருந்து அகற்றும்/நீக்கும் நடைமுறையான "பணியறவு செய்திடல்"

**நல்வாழ்விற்கான அமைதி வழி விலக்கல் (ஒதுக்கி வைத்தல்) கோட்பாடு**
**(Doctrine of Peaceful Rejection (Exclusion) for a Good Life)**

அறமற்ற செயல்கள் செய்வோர் யாராயினும் அவர்களை எதிர்க்க வேண்டாம். நம் வாழ்விலிருந்து அவர்களை அமைதி வழியில் (முற்றிலும்) அறவே ஒதுக்கி வைப்போம். இயல்பாகவே நலம் பெறும் இவ்வுலகம். நம் வீட்டிலிருந்தே தொடங்குவோம் இந்த அமைதி வழி அறப்புரட்சியை... இனிதே வெற்றி பெறுவோம்...

(உண்மையில் அப்போதுதான் இவ்வுலகத்தில் தவறுகள் குறையும். தவறு செய்பவர்களுக்கும் தாம் செய்வது தவறு என்பதும் புரிய வரும்)



டாக்டர். **ரமேஷ் மகாதேவ்**, எல்.எல்.எம்., பி.ஹெச்.டி. (சட்டம்)
நிறுவனர்
அம்மா மல்லிகா – மகேஸ்வரி அன்னதான அறக்கட்டளை
வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
உயர்நீதிமன்ற வழக்கறிஞர் / மேனாள் உதவி ஆணையர்
வல்லுநர் குழு வழக்கறிஞர் – இந்து சமய அறநிலையத்துறை

ஒழுக்கமும், கட்டுப்பாடும் இல்லாதவர்களிடம் உள்ள அறிவை, அறிவு என்று சொல்வதற்கில்லை, அது விஷத்திற்கு ஒப்பானது.

தண்டனை வரையிலான இயற்கை நீதி கோட்பாடுகளைப் பின்பற்றி உரிய விசாரணை முறைகளுக்குப் பின்னர் தண்டனை வழங்கி அரசு பணியினை ஒழுங்குபடுத்தும் ஒரு நடவடிக்கையாகும். தனக்கு வழங்கப்பட்ட பணியினை திறம்படவும், நேர்மையாகவும், சட்டதிட்டங்களுக்கு உட்பட்டும் செய்ய வேண்டியது ஒவ்வொரு அரசு பணியாளரின் முதற் கடமையாகும்.

**பொருந்துகை**

மாநில (State) மற்றும் சார்நிலை (Subordinate) பணித் தொகுப்பிலுள்ள நிரந்தர மற்றும் தற்காலிகப் பணியாளர்கள் அனைவருக்கும் இந்த விதிமுறைகள் பொருந்தும். கார்ப்பரேஷன், போர்டு (Board) முதலிய அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் அயல்பணி முறையில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கும் பொருந்தும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள், 1973, விதி 2 (3)–ன்படி, ''**அரசு ஊழியர் (அ) பணியாளர்**'' என்பது, தமிழ்நாடு அரசு செயற்பாடுகள் தொடர்பாகக் குடிமுறைப் பணித் தொகுதியில் அல்லது பணியிடம் ஏதேனும் ஒன்றில் நியமிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் என்று பொருள்படும்.

**விளக்கம் – 1:** தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணியிடங்களில் பணிபுரியும் அரசுப் ஊழியர்கள் (அ) பணியாளர்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுவர்: –

| | |
|---|---|
| **பிரிவு அ :** | ரூ.6600/– மற்றும் அதற்கு மேற்பட்ட தர ஊதியம் கொண்ட பணியிடங்களிலுள்ள அரசு ஊழியர்கள் (அ) பணியாளர்கள். |
| **பிரிவு ஆ :** | ரூ.4000/– மற்றும் அதற்கு மேல் ரூ.6600/–க்கு கீழுள்ள தர ஊதியம் கொண்ட பணியிடங்களிலுள்ள அரசு ஊழியர்கள் (அ) பணியாளர்கள். |
| **பிரிவு இ :** | ரூ.1400/– மற்றும் அதற்கு மேல் ரூ.4000/–க்கு கீழுள்ள தரஊதியம் கொண்ட பணியிடங்களிலுள்ள அரசு ஊழியர்கள் (அ) பணியாளர்கள். |
| **பிரிவு ஈ :** | ரூ.1300/– க்கு கீழுள்ள தரஊதியம் கொண்ட பணியிடங்களிலுள்ள அரசு ஊழியர்கள் (அ) பணியாளர்கள்.. |
| **(அரசாணை எண்.158, ப. (ம) நி.சீ.(ஏ) துறை, நாள்:06.11.2009; அமல் 09.09.2009)** | |

| தமிழ் நாடு அரசு ஊழியர்கள் (பணிநிபந்தனைகள்) திருத்த சட்டம், 2019<br>அட்டவணை 3—ன்படி<br>(முன்தேதியிட்டு அமல்: 15.09.2016) | | |
|---|---|---|
| பிரிவு அ : (Group A) | Levels 25 to 32 in the Pay Matrix | ரூ.59,300–1,87,700 முதல் 1,28,900–2,25,000 வரையிலான (Levels 25 to 32 in the Pay Matrix) நிலை ஊதியம் கொண்ட பணியிடங்களிலுள்ள அரசு ஊழியர்கள் (அ) பணியாளர்கள் |
| பிரிவு ஆ : (Group B) | Levels 13 to 24 in the Pay Matrix | ரூ.35,900-1,13,500 முதல் 57,700-1,82,400 வரையிலான (Levels 13 to 24 in the Pay Matrix) நிலை ஊதியம் கொண்ட பணியிடங்களிலுள்ள அரசுப் ஊழியர்கள் (அ) பணியாளர்கள் |
| பிரிவு இ : (Group C) | Levels 2 to 12 in the Pay Matrix | ரூ.15,900-50,400 முதல் 35,600-1,12,800 வரையிலான (Levels 2 to 12 in the Pay Matrix) நிலை ஊதியம் கொண்ட பணியிடங்களிலுள்ள அரசுப் ஊழியர்கள் (அ) பணியாளர்கள் |
| பிரிவு ஈ : (Group D) | Level 1 in the Pay Matrix | ரூ.15,900-50,400 (Level 1 in the Pay Matrix) நிலை ஊதியம் கொண்ட பணியிடங்களிலுள்ள அரசுப் ஊழியர்கள் (அ) பணியாளர்கள் |

**விளக்கம் – 2 :** நிறுவனம், கழகம்,அமைப்பு அல்லது உள்ளாட்சி மன்றத்தில் பணிபுரியுமாறு அரசால் அமர்த்தப்பட்டுள்ள அரசுப் ஊழியர் (அ) பணியாளர் மாநிலத் தொகுநிதியல்லாத ஏனைய வாயில்களிலிருந்து அவர் சம்பளம் வாங்கினாலும் இந்த

விதிகளின் பயன் நோக்கில் அரசின் கீழ் பணிபுரியும் அரசுப் பணியாளர்களாகவே கருதப்பட வேண்டும்.

**இந்திய அரசமைப்பு சட்ட வகைமுறைகள்**

இந்திய அரசமைப்பு சட்டம், 1950 ஷரத்து 311 (1)–ன்படி, எந்த ஒரு அரசு ஊழியரும் அவரை நியமனம் செய்த அதிகாரிக்கு கீழ் நிலையில் உள்ள அதிகாரியினால் (Subordinate Authority) பதவி நீக்கம் செய்யப்படக் கூடாது.

ஷரத்து 311 (2)–ன்படி, எந்த ஒரு அரசு ஊழியருக்கும், தன்னுடைய பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு அல்லது பதவி குறைப்பு செய்யப்படுவதற்கு முன்பாக, அவரின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதில் அவருக்கு தன்னுடைய வாதத்தை எடுத்துக்கூற ஒரு நியாயமான சந்தர்ப்பம் (Reasonable Opportunity) அளிக்கப்பட வேண்டும். ஆனால் பின்வரும் மூன்று சூழ்நிலைகளில், நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் எனும் விதி பொருந்தாது.

(a) எந்த ஒரு ஒழுக்கக் கேட்டின் காரணமாக ஒரு குற்றவியல் நடவடிக்கையில் (Criminal Charge) ஒரு அரசு ஊழியர் தண்டிக்கப்பட்டாரோ, அதே ஒழுக்கக் கேட்டின் அடிப்படையில் அவர் பதவி நீக்கம் செய்யப்படும் பொழுதும்; (ஷரத்து 311 (2) (a))

(b) எந்த ஒரு அரசு ஊழியரை பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் படைத்த ஒரு அதிகாரி, சில காரணங்களை எழுத்து வடிவில் சுட்டிக்காட்டி அக்காரணங்களால் அவ்வூழியருக்கு நியாயமான சந்தர்ப்பத்தினை அளிப்பது உசிதமல்ல என்று திருப்தியுறும் பொழுதும்; (ஷரத்து 311 (2) (b))

(c) குடியரசுத்தலைவரோ அல்லது ஆளுநரோ நாட்டின் பாதுகாப்பின் நலனைக் கருதி, ஒரு அரசு ஊழியருக்கு அத்தகு நியாயமான சந்தர்ப்பத்தினை அளிப்பது உசிதமல்ல என்று திருப்தியுறும் பொழுதும் (ஷரத்து 311 (2) (c)

## தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள்

தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி தொகுப்பின் விதி 8–ன் படி, அந்த விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகள் "தகுந்த மற்றும் போதுமான காரணங்களுக்காக" (For good and sufficient reasons) வழங்கப்படலாம். ஆனால் எவையெல்லாம் "தகுந்த மற்றும் போதுமான காரணங்களாக" கொள்ளப்படலாம் என்பது இந்த விதி தொகுப்பில் விளக்கப்படவில்லை. ஊழல், தவறான நடத்தை, பணிபுரிவதில் கவனக் குறைவாகவும் அசட்டையாகவும் இருத்தல், மேலதிகாரிகளின் ஆணைகளுக்கும், அறிவுரைகளுக்கும் கீழ்ப்படியாமை, பணம் கையாடல், விதிகளுக்குப் புறம்பாக நடந்து கொள்வது, உண்மையை மறைத்தல், கணக்குகளில் மோசடி செய்தல், ஏமாற்றுதல், அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்துதல், நன்னடத்தைப் பிறழ்தல் முதலியன ஒரு அரசு ஊழியருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கையினை தொடர்வதற்கு "தகுந்த மற்றும் போதுமான காரணங்களாக" கருதப்படலாம்.

## தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி தொகுப்பின் கீழான பல்வகை தண்டனை வகைமுறைகள் [விதி – 8]

(i) கண்டனம் (Censure)

(ii) அபராதம் (Fine)

(iii) ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வினை நிறுத்தி வைத்தல் (Withholding of increments or promotion)

(iv) முதுநிலைப் பட்டியலில் தற்போதுள்ள நிலைக்குக் கீழ் இறக்கம் செய்வித்தல் (Reduction to lower rank) அல்லது தற்போது உள்ள ஊதிய விகிதத்தில் கீழ்நிலைக்கு இறக்கம் செய்தல். (Reduction to a lower stage in the present time scale)

(v) அரசுக்கு ஏற்பட்ட இழப்பினை ஊதியத்தினின்று பிடித்தம் செய்தல் (Recovery from Pay)

(vi) கட்டாய ஓய்வு (Compulsory Retirement)

(vii) பணி நீக்கம் (Dismissal)

(viii) பணியறவு (Removal)

(ix) தற்காலிக பணி நீக்கம் (Suspension)

விதி 8–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகள் "சிறிய தண்டனைகள்" மற்றும் "பெரிய தண்டனைகள்" என இரு கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இனங்கள் (i) முதல் (iii), (v) மற்றும் (ix)–ல் குறிப்பிடப் பெற்ற தண்டனைகள் சிறு தண்டனைகளாகவும் மற்றும் இனங்கள் (iv) & (vi) முதல் (viii) வரை பெருந்தண்டனைகளாகவும் கருதப்படும்.

இனங்கள் (vi) (vii) அல்லது (viii)–ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகள் நேர்விற்கேற்ப, தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் விதி 19–ன் மீறுகைக்காக அரசு ஊழியர் மீது விதிக்கப்படும்.

அரசு ஊழியர் நடத்தை விதி தொகுப்பின் விதி 19–ல் கூறப்பட்டுள்ள இரு மண வாழ்வு தொடர்பான குற்றம் நிரூபிக்கப்படும் நேர்வுகளில், கட்டாய ஓய்வோ, பணி நீக்கமோ அல்லது பணியறவோ தண்டனையாக வழங்கப்பட வேண்டும். இந்த ஒரு நேர்வில் மட்டுமே நிரூபிக்கப்பட்டதொரு குற்றத்திற்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை எதுவென்று விதி தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஒழுங்கு நடவடிக்கை தொடுக்கும் அதிகாரம்**

சிறிய தண்டனை வழங்கக் கூடிய அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவர், பெரிய தண்டனைக்கு வழிகோலும் ஒழுங்கு நடவடிக்கையைத் துவக்கி வைக்கலாம். தண்டனை வழங்கக்கூடிய அதிகாரியால் மட்டுமே குற்றச்சாட்டுக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதில்லை. குற்றச்சாட்டுகளைப் பிறப்பித்தலும், விசாரணையும், அதிகாரம் பெற்ற தகுந்த அதிகாரியின் ஆணைகளின் கீழ் செயல்படுகிற இன்னொருவரால் செய்யப்படலாம்.

ஒரே துறையினைச் சேர்ந்த ஒன்றுக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை, சம்பந்தப்பட்ட ஊழியர்களில் உயர் பதவி வகிப்பவரின் அடுத்த கட்ட உயர் அதிகாரிகளால் தொடுக்கப்பட்டு ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விசாரணை முடிந்ததும், முடிவு எடுக்கப்படுவதற்காக அத்தகைய உயர் பதவி வகிக்கும் அதிகாரிக்கெதிரான ஒழுங்கு நடவடிக்கையினை முடிவுகட்டும் அதிகாரம் உள்ளவருக்கு அனுப்பப்பட வேண்டும்.

பல்வேறு துறைகளை சேர்ந்த அரசு ஊழியர்களுக்கெதிரான ஒழுங்கு நடவடிக்கை அரசு மட்டத்தில் எடுக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்களில் உயர் பதவி வகிக்கும் ஊழியர் தொடர்புடைய அரசு துறையினால் ஒருங்கிணைந்த நடவடிக்கை தொடுக்கப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை முடிவு செய்யப்பட வேண்டும்.

**உரிய சட்ட நடைமுறை**

தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி தொகுப்பில் சிறிய தண்டனை பிறப்பிப்பதற்கு ஒரு நடைமுறையும், பெரிய தண்டனை பிறப்பிப்பதற்கு பிறிதொரு விரிவான நடைமுறையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. **'சிறிய தண்டனை' வழங்குவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை** [ **விதி** (17 (a)) ]
2. **'பெரிய தண்டனை' வழங்குவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை** [ **விதி** (17 (b)) ]

**ஒழுங்கு நடவடிக்கை தொடர்வதென முடிவு செய்தல்** (Decision to Initiate Disciplinary Proceedings Actions)

ஒழுங்கு நடவடிக்கையினை தொடர்வதென முடிவு செய்த பின்னர் எந்த விதியின் கீழ் நடவடிக்கை தொடுப்பதென்பதனை, அதாவது விதி 17 (a) அல்லது விதி 17 (b)–ன் கீழ் நடவடிக்கை தொடுப்பதென்பதை நன்கு ஆய்வு செய்து முடிவு செய்ய வேண்டும். குற்றச்சாட்டின் தன்மை, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் வழங்கப்பட உத்தேசிக்கும் தண்டனை, விசாரணையின் தன்மை ஆகிய அம்சங்களையும் நன்கு பரிசீலித்து ஒரு முடிவுக்கு வர வேண்டிய கடமை ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலருக்கு உண்டு. விதிகளில் வழங்கப்பட்டுள்ள விருப்புரிமையை (Discretion) விரும்பத்தகாத வகையில் செயல்படுத்தக் கூடாது.

தேவையில்லாத இனங்களில் எல்லாம் விதி 17 (b)–ன் கீழ் நடவடிக்கை தொடுப்பது சரியான அணுகுமுறையன்று. அரசின் 11.03.1993 நாளிட்ட சுற்றறிக்கை எண்.14353 ப.ம.நி.சீ/93–1–ன்படி பெரிய தண்டனை தேவைப்படாத நேர்வுகளில் விதி 17 (b)–ன் கீழ் நடவடிக்கை தொடுப்பதனைத் தவிர்த்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதற்கிணங்க ஊழல், ஒழுக்கமின்மை, ஒழுக்க ஈனம் முதலிய பொதுப்படையான இனங்களுக்கு பாதகம் இன்றி வருவாய்க்கு அதிகமான சொத்து சேர்த்தல், லஞ்சம் பெறல்/பெற முனைதல், கையாடல், ஆவணங்களைத் தவறாக திருத்துதல், தீய நோக்கினை உள்ளடக்கிய கடமை பிறழ்தல், சொந்த நலனுக்குப் பதவியை தவறாக பயன்படுத்துதல், இரகசியங்களைக் கசியவிடல், பயணப்படி மற்றும் மருத்துவ செலவினை ஈடு செய்யும் இடங்களில் பொய்யான கோரிக்கை சமர்ப்பித்தல் முதலியன விதி 17 (b)–ன் கீழ் நடவடிக்கை தொடுத்திட தகுந்த நேர்வுகளாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகளுக்கான கால வரம்பு

| | | |
|---|---|---|
| 1. | குற்றக் குறிப்பாணையினை குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியருக்கு சார்வு செய்து விதி எண் 17 (a) அல்லது விதி எண் 17 (b)-ன் கீழ் விளக்கம் கோருதல் | 15 நாட்கள் |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவர் ஆவணங்களைப் பார்வையிட்டு விளக்கம் சமர்ப்பித்தல், குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர் பதிவுருக்களைக் கொண்டு தன்னிலை விளக்க அறிக்கை தாக்கல் செய்தல் | 30 நாட்கள் |
| 3. | விசாரணை அலுவலர் நியமனம் (இது 17 (b) நடவடிக்கைக்கு மட்டும்) | 7 நாட்கள் |
| 4. | விசாரணை அலுவலர் விசாரணையை முடித்து தனது அறிக்கையை தாக்கல் செய்தல் (இது 17 (b) நடவடிக்கைக்கு மட்டும்) | 30 நாட்கள் |
| 5. | விசாரணை அலுவலரின் அறிக்கை கிடைத்த பின்பு ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் தனது இறுதி முடிவினை எடுத்தல் | 10 நாட்கள் |
| 6. | விசாரணை அலுவலரின் அறிக்கையின் மீது குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர் தனது பதிலறிக்கையினைச் சமர்ப்பித்தல் | 15 நாட்கள் |
| 7. | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கருத்து தேவைப்படின் 30 நாட்களுக்குள் TNPSC கருத்தை பெற வேண்டும். | 30 நாட்கள் |
| 8. | இறுதி உத்தரவைப் பிறப்பித்தல் | |
| | (1) அரசு அல்லாத ஒழுங்கு நடவடிக்கைக் குழு | 7 நாட்கள் |
| | (2) அரசு சார்ந்த இனங்கள் | 30 நாட்கள் |

குறிப்பு : மேற்கூறிய கால அளவிற்குள் விசாரணை முடிக்கப்படவில்லை என்றால் விசாரணை அலுவலர் தகுந்த காரணங்களைக் குறிப்பிட்டு மேலதிகாரியிடம் கால நீட்டிப்பு கோரலாம்.

# சட்ட இதழ் வெளியீடுகள்






# II

# சிறிய தண்டனை [விதி 17 (a)]

# வகையிலான

# ஒழுங்கு நடவடிக்கை

# நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

# II

# [விதி 17 (a)]

## சிறிய தண்டனை வகையிலான ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளின்படி ஒரு அரசு ஊழியரின் மீது சிறு தண்டனையினை வழங்கிட உள்ள ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியருக்கு குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர் இழைத்துள்ள பிழைகள் அல்லது வரம்பு மீறிய செயல்களைக் குறிப்பிட்டு அன்னார் மீது 17 (a)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும், அதற்கான தற்காப்பு விளக்கம் இருப்பின் அதனை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்குமாறும், தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யப்படும் எனவும் "காரணம் காட்டும் குறிப்பாணை" வழங்கிட வேண்டும்.

குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தற்காப்பு விளக்கம் ஏதும் சமர்ப்பிக்காவிடில் நேரடியாக ஒழுங்கு நடவடிக்கையினை முடிவுக்கு கொண்டு வந்து இறுதி ஆணை பிறப்பித்திடலாம்.

17 (a) பிரிவின் கீழ் நடவடிக்கை தொடர்கையில் வழக்கில் நேரடி விசாரணை தேவையில்லை. ஆவணங்கள் ஏதும் பார்வைக்கு வழங்க வேண்டிய அவசியம் இல்லை/மறுக்கலாம்.

தற்காப்பு விளக்கம் ஏற்புடையதாக இருந்து அந்த நேர்வில் குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர் குற்றம் இழைக்கவில்லை என நன்கு தெரியும் பட்சத்தில் விளக்கம் ஏற்கப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார் என இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட ஊழியருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் அல்லது ஒழுங்கு நடவடிக்கையின் முடிவில் குற்றம் இழைத்துள்ளதாக தெரியவரும் பட்சத்தில் சிறு தண்டனைகளை வழங்கி உத்தரவிடலாம்

**தண்டனையாக ஊதிய உயர்வை தள்ளிப்போடுதல்**

விதி 17 (a)–ன் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முடிவாக ஊதிய உயர்வை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்தி வைக்கலாம். இது திரண்ட பயனின்றி (Without cumulative effect or Without accumulated benefit) மற்றும் திரண்ட பயனுடன் (With cumulative effect or With accumulated benefit) என இரு வகைப்படும்.

திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டால், குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டு, தண்டனை காலம் முடிவுற்றதும் நிறுத்தப்பட்ட காலத்தின் ஊதிய உயர்வு வழங்கப்படும். திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டால் தண்டனையாக நிறுத்தப்பட்ட ஊதிய உயர்வின் இழப்பு பணிக்காலம் முழுவதும் இருக்கும். இதுவன்றி ஊதிய உயர்வு தள்ளிப் போகும் காலத்தில் விடுப்பு அனுபவித்தால் அதற்கு இணையான காலத்திற்கு மேலும் ஊதிய உயர்வு தள்ளிப் போகும். திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டால், விடுப்பு எடுப்பதால் ஏற்படும் இடைவெளிகளை சேர்த்து என ஆணையிட வேண்டும். திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தப்படுமேயானால், விடுப்பு எடுப்பதால் ஏற்படும் இடைவெளிகளை நீக்கி கணக்கிட வேண்டும் என ஆணையிட வேண்டும்.

ஊதிய உயர்வானது, ஊதிய நிறுத்த ஆணை வழங்கப்பட்ட தேதிக்கு முன்னரே வழங்கப்பட வேண்டியிருந்து நிர்வாக காரணங்களால் வழங்கப்படாதிருக்கும் நிலையில் அவ்வூதிய உயர்வு அந்த ஆணையினால் பாதிக்கப்படமாட்டாது.

ஊதிய நிறுத்த ஆணை வெளியிடப்படுவதற்கு முன்னர், அந்த தண்டனையால் ஓய்வூதியம் பாதிக்கப்படுமா என்பதைப் பரிசீலித்து, அப்படி பாதிக்கப்படும் எனில் எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதனையும் பரிசீலித்து, இறுதி ஆணையில் ஓய்வூதியத்தின்

மீது தண்டனையின் விளைவு பரிசீலிக்கப்பட்டதையும், அது நிறைவேற்றப்படுவது விரும்பப்படுவதையும் தெளிவாக்கிட வேண்டும்.

ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை முழுமையாக செயல்படுத்த இயலாத சூழ்நிலையில் மட்டுமே, தண்டனை முடிவுறாத காலத்திற்கான ஊதிய உயர்வு நிறுத்தத்திற்கு இணையான தொகையை வசூல் செய்திட வேண்டும். தண்டனை காலம் முடிவுறும் முன்னரே புதிய ஊதிய விகிதங்கள் அறிவிப்பு மற்றும் நீதிமன்ற ஆணைக்கு ஏற்ப தண்டனை காலம் முடிவுறும் முன்னரே பதவி உயர்வு வழங்கல் ஆகிய இனங்களில் இத்தகைய சூழ்நிலை உருவாகிடக் கூடும்.

**ஊதிய உயர்வு நிறுத்த ஆணைகளை வெளியிடுவதற்கு முன் எந்தெந்த இனங்களில் விதி 17 (b)—ன் கீழான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.**

ஊதிய உயர்வு நிறுத்தமென்பது "சிறிய தண்டனை" —க்கான பட்டியலில் இடம்பெற்று இருந்தாலும், ஒரு சில இனங்களில் விதி 17(b)—ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பெரிய தண்டனைக்கான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என விதி 17 (a)—ன் கீழ் வரும் இரண்டாவது காப்புரை கூறுகிறது. அதாவது விதி 17 (a)—ன் கீழ் அனுப்பப்பட்ட காரணம் கேட்கும் அறிவிப்பிற்கான பதிலை பரிசீலித்த பின்னர், சம்பந்தப்பட்ட நேர்வில் ஆணையிடப்படவுள்ள ஊதிய உயர்வு நிறுத்தம் ஓய்வூதியத்திற்கு பாதிப்பு விளைவிக்க கூடுமாயினும், அல்லது ஊதிய உயர்வு நிறுத்தம் திரண்ட பயனோடு (காலவரையறை தேவையில்லை) ஆணையிடப்படக் கூடுமாயினும், அல்லது திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஊதிய உயர்வு நிறுத்தம் ஆணையிடப்படக் கூடுமாயினும் விதி 17 (b)—ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். ஊதிய உயர்வு நிறுத்தம் சிறிய தண்டனையே ஆயினும், மேலே குறிப்பிட்டுள்ள மூன்று இனங்களில் விதி 17 (b)—ன் கீழ் குறிப்பிட்டுள்ள விரிவான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

[ மாதிரி படிவம் ]

## விதி 17 (a)—ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை — விளக்கம் சமர்ப்பிக்கக் கோரல்

**கோயம்புத்தூர், இந்து சமய அறநிலையத்துறை, இணை ஆணையரின் செயல்முறைகள்**

முன்னிலை : திரு.மொ.அXXXXXX, பி.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர்

செ.மு.ந.க.எண்.8215/2021/ஆ2 நாள் : 07.12.2021

பொருள்: பொதுப்பணி – தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி.17(a)—ன் கீழ் நடவடிக்கை— திரு. செ. கXXXXXXXXX, செயல் அலுவலர் நிலை 4, அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், மேட்டுப்பாளையம் நகர் மற்றும் வட்டம் – கோயம்புத்தூர் மாவட்டம் – **விதி 17 (a)—ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை – விளக்கம் சமர்ப்பிக்கக் கோரல் –** தொடர்பாக.

பார்வை : ஆய்வாளர், இந்து சமய அறநிலையத்துறை, மேட்டுப்பாளையம், உ.மு. எண்.25/2021 நாள்: 25.11.2021.

------

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், மற்றும் நகர், அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயிலில் திரு. செ. கXXXXXXXXX நிலை—4 செயல் அலுவலராக பணியாற்றி வருகிறார். மேலும் வெள்ளியங்காடு, அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயிலின் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலராகவும் பொறுப்பு வகித்து வருகிறார். மேற்கண்ட திருக்கோயிலின் குழுக்கோயிலான மேட்டுப்பாளையம் வட்டம், சிறுமுகை, அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயில் நிர்வாகம் தொடர்பாக செயல் அலுவலர் திரு. செ. கXXXXXXXXX மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல் முறையீடு) விதி 17(a) – ன் கீழ் பின்வரும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகிறது.

**குற்றச்சாட்டுகள்:**

1. அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயிலில் துறை அனுமதியின்றி 05.11.2021 அன்று யாகசாலை தொடங்கப்பட்டு 06.11.2021 அன்று குடமுழுக்கு நடத்தியது.

2. கோவிட்–19 பெரும் தொற்று காலத்தில் கூட்டம் கூடுவதைத் தவிர்க்கும் வகையில் செயல்படாமல் அரசின் ஆணையை மதிக்காமல் செயல்பட்டது.
3. மேற்படி குடமுழுக்கு தொடர்பாக 04.11.2021 அன்று செயல் அலுவலருக்கு புகார் மனு வரப்பெற்றும் அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளாமல் தன் கடமையில் இருந்துதவறியது.
4. மேற்படி குடமுழுக்கு தொடர்பாக இது நாள் வரை எவ்வித அறிக்கையும் சமர்ப்பிக்காதது.

திரு. செ. கXXXXXXXXX, செயல் அலுவலர் தனது வாதத்தை எடுத்துக்கூற இதன் மூலம் ஒரு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இவர் தனது விளக்கத்தை இக்குறிப்பாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களக்குள் எழுத்து மூலம் அளிக்குமாறு கோரப்படுகிறார்.

திரு. செ. கXXXXXXXXX, செயல் அலுவலர், குறித்த நாட்களுக்குள் தனது விளக்கத்தை அளிக்கத் தவறினால் இவருக்கு இது குறித்து விளக்கம் அளிக்க ஏதுமில்லை என கருதி இவ்வலுவலகத்தில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் விதிமுறைகளின்படி மேல்நடவடிக்கை தொடங்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இக்குறிப்பாணை கிடைக்கப்பெற்றமைக்கு இதன் பிரதி நகலில் தேதியுடன் ஒப்புதலிட்டு மீள சமர்ப்பிக்குமாறு திரு. செ. கXXXXXXXXX செயல் அலுவலர் கேட்டுக்கொள்ளப் படுகிறார்.

உதவி ஆணையர்

**பெறுநர்:**

1. திரு. செ. கXXXXXXXXX, செயல் அலுவலர், நிலை–4,
அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயில், சிறுமுகை, மேட்டுப்பாளையம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.
(இருப்பு: அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயில், மேட்டுப்பாளையம் நகர் மற்றும் வட்டம்)

**நகல் பணிந்தனுப்படுகிறது**

2. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, கோயம்புத்தூர்.
3. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.

[ மாதிரி படிவம் ]

## விதி 17 (a)—ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை — விளக்கம் சமர்பித்தல்

அனுப்புனர் :
செ. கXXXXXXXXX,
செயல் அலுவலர் நிலை – 4
அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில்,
மேட்டுப்பாளையம் நகர் மற்றும் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

பெறுநர் :
உதவி ஆணையர் அவர்கள்,
உதவி ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை
கோயம்புத்தூர்.

ஐயா,

| | |
|---|---|
| பொருள்: | பணிப்பிரிவு – திரு. செ. கXXXXXXXXX, செயல் அலுவலர் நிலை – 4, அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயில், மேட்டுப்பாளையம் நகர் மற்றும் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் – கூடுதல் பொறுப்பு குழு கோயிலான மேட்டுப்பாளையம் வட்டம், சிறுமுகை அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயில் கும்பாபிஷேகம் – 17(அ)–ன் கீழ் சுமத்தப்பட்டக் குற்றச்சாட்டுகள் – **விளக்கம் சமர்பித்தல்** – தொடர்பாக |
| பார்வை : | உதவி ஆணையர், கோயம்புத்தூர் அவர்களின் செ.மு.ந.க. எண்.8215/2021/ஆ2 நாள்: 07.12.2021 |

-----

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், மற்றும் நகர் அருள்மிகு மதுரகாளி அம்மன் திருக்கோவிலில் செயல் அலுவலராக (செயல் அலுவலர் நிலை – 4) பணியாற்றி வரும் என்மீது, நான் எனது கூடுதல் பொறுப்பில் கவனித்து வரும் மேட்டுப்பாளையம் வட்டம், வெள்ளியங்காடு, அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயிலின் குழு

கோவிலான மேட்டுப்பாளையம் வட்டம், சிறுமுகை அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயில் கும்பாபிஷேகம் தொடர்பாக என் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17(அ)—ன் கீழ் பின்வரும் குற்றச்சாட்டுகள் சுமத்தி எழுத்து மூலமான விளக்கம் சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளது.

**குற்றச்சாட்டு எண். 1 :**

அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயிலில் துறை அனுமதியின்றி 15.9.2021 அன்று யாகசாலை தொடங்கப்பட்டு 16.9.2021 அன்று குடமுழுக்கு நடத்தியது.

**குற்றச்சாட்டு எண். 1—க்கான எனது விளக்கம்**

நான் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், மற்றும் நகர் அருள்மிகு மதுர காளி அம்மன் திருக்கோவிலில் நிலை—4 செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். மேலும், கூடுதல் பொறுப்பாக மேட்டுப்பாளையம் வட்டம், வெள்ளியங்காடு, அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயிலில் செயல் அலுவலராகவும் பொறுப்பு வகித்து வருகிறேன். மேற்படி திருக்கோயிலின் குழு கோயிலான மேட்டுப்பாளையம் வட்டம், சிறுமுகை அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயில் கும்பாபிஷேகம் தொடர்பாக அனைத்துப் பணிகளையும் ஆரம்பம் முதல் இன்றுவரை முறைப்படி துறை அனுமதி பெற்று செயல்பட்டு வருகிறேன். அதன்படி இத்திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு மேற்கொள்வதற்காக முறையாக தொல்லியல் கருத்துருவானது பெறப்பட்டு, 03.05.2018 அன்று மண்டல அளவிலான திருப்பணி குழுவில் ஒப்புதல் பெறப்பட்டு, 2.2.2019 அன்று மாண்பமை உயர்மட்ட குழு பரிந்துரைக்கு அனுப்பப்பட்டு, அதன் ஒப்புதலும் பெறப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, கோயம்புத்தூர் இணை ஆணையர் செ.மு.மூ.மு.எண்.7267/2019/அ1 நாள்:18.06.2019—ன்படி உபய திருப்பணி வேலைகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் மதிப்பீடு அங்கீகாரம் பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டது.

மேலும், கோயம்புத்தூர் இணை ஆணையர் ந.க.எண்.4570/2019/அ1 நாள் : 07.03.2019 உத்தரவின்படி 08.03.2019 அன்று பாலாலயம் செய்யப்பட்டு, திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டது. திருப்பணி வேலைகள் பெரும்பகுதி முடிவடைந்த நிலையில் 7.2.2020 அன்று குடமுழுக்கு நடத்திட, எனக்கு சுற்றுவட்ட கிராம ஊர் பொது மக்களால் கோரிக்கை வைக்கப்பட்டதனைத் தொடர்ந்து அதனடிப்படையில் முறையாக சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி ஆணையருக்கு விண்ணப்பம் செய்து 07.02.2020 அன்று குடமுழுக்கு நடத்திட

ஆணையர் அனுமதியும் முறையே பெறப்பட்டது. ஆனால் அப்பகுதியில் தொடர்ந்து பெய்த மழை போன்ற இயற்கைச் சீற்றங்கள் மற்றும் உபயதாரர்கள் நிதிப் பங்களிப்பு பற்றாக்குறை போன்ற காரணங்களின் அடிப்படையில் அன்றைய தேதியில் கும்பாபிஷேகம் நடத்திட இயலாத நிலை ஏற்பட்டமையினால் சுற்றுவட்டார கிராம பொது மக்கள் வேறு ஒரு தேதியில் கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை வைத்தனர். மேற்படி தொடர் மழை போன்ற இயற்கை சீற்றங்கள் மற்றும் உபயதாரர் பங்களிப்பு பற்றாக்குறை போன்ற காரணங்களை மிகுந்த கவனத்துடன் பரிசீலித்து, மீண்டும் ஆணையருக்கு மேற்படி காரணங்களை **04.04.2021** நாளது கடிதம் மூலமாக தெரிவிக்கப்பட்டு, மீண்டும் **25.4.2021** அன்று கும்பாபிஷேகம் நடத்த அனுமதி கோரி மீண்டும் முறைப்படி விண்ணப்பிக்கப்பட்டது. இந்நிலையில் அரசினால் covid-**19** பெருந்தொற்று நடைமுறைகள் பின்பற்றப்பட்டமையினாலும், அச்சூழ்நிலையில் கும்பாபிஷேகம் அனுமதி பெற இயலாததால் கும்பாபிஷேகம் மீண்டும் வேறு தேதியில் செய்வது என முடிவெடுக்கப்பட்டது.

மேற்படி நிலையில், இத்திருக்கோயிலுக்கு பாத்தியப்பட்ட கிராம மக்கள் அச்சமயங்களில் ஏற்பட்ட இயற்கை சீற்றங்கள் மற்றும் பெரும் தொற்று காரணமாக, நிறைய மக்கள் இறக்கக்கூடிய சூழ்நிலைகள் மற்றும் கடுமையான உடல் உபாதைகளுக்கு ஆளான நிலையில், மேற்படி அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயில் கும்பாபிஷேகம் நடத்த பெறாமையால் தான் மேற்படி சுற்றுவட்ட மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டதாக பெரும்புரளி ஒன்று அக்கிராம மக்களுக்குள் பரவியதால், மேற்படி திருக்கோயிலுக்கு பாத்தியப்பட்ட சுற்றுவட்ட ஊர்பொதுமக்கள் ஒன்று கூடி அவர்கள் காக்கும் கடவுளாக வணங்கும் அருள்மிகு அய்யனாரிடம் குறி கேட்டதாகவும், அதில் உடனடியாக தனக்கு கும்பாபிஷேகம் நடைபெறவில்லை எனில் சுற்றுவட்ட பொதுமக்களுக்கு பெரும் தீங்கு ஏற்படும் என தெரிவிக்கப்பட்டதாகவும், அதனால் அப்பகுதியில் கூடிய சுற்றுவட்ட பொதுமக்களால் உடன் கும்பாபிஷேகம் நடத்தப்பட தன்னிச்சையாக முடிவு எடுக்கப்பட்டு இரவோடு இரவாக பணிகள் மேற்கொண்டு திருக்கோயிலுக்கு எளிமையான முறையில் கும்பாபிஷேகம் தொடர்பான புனிதநீர் ஊற்றும் சடங்கை நிறைவேற்ற சுற்றுவட்ட பொது மக்கள் பெரும்பான்மையாக கூடியமையின் காரணமாக, மேற்படி பொருள் தொடர்பாக என் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட உடன் அன்றே **(04.11.2021)**, நான் நேரடியாக காரமடல் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று புகார் செய்தேன். எனது புகாரினை பரிசீலித்த காவல் ஆய்வாளர் அவர்கள், அதனை மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் கவனத்திற்கு கொண்டு சென்றார். அதனைத் தொடர்ந்து நானும், காரமடல் காவல்துறை ஆய்வாளரும் யாகசாலை அமைக்கும் பணிகளை களத்திற்கு சென்று பாதியில் தடுத்து நிறுத்தி, ஊர்தரப்பு பிரதிநிதிகளை பேச்சுவார்த்தைக்கு மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகம் வர கூறியதன் அடிப்படையில் அவர்களது பிரதிநிதிகள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர். மேற்படி நிலையில் அன்றும், அதன் மறுநாளும்

(05.11.2021) மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தொடர்ந்து சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. அது தொடர்பான தகவல்களை இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு தொலைபேசி வாயிலாக தெரிவித்து வந்தேன். 04.11.2021 மற்றும் 05.11.2021 அன்று இரவு வரை மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கும்பாபிஷேகம் தொடர்பான சமாதான பேச்சுவார்த்தை தொடர்ந்து இரண்டு நாட்கள் இரவு வரை நீடித்து வந்தது. தற்போதைய பெருந்தொற்று சூழ்நிலையில் அரசினால் தடை விதிக்கப்பட்ட நிலையில் தற்போது கும்பாபிஷேகம் நடத்துவதை கைவிட வேண்டும் என்பதை வட்டாட்சியர், காவல்துறை ஆய்வாளர் மற்றும் திருக்கோயில் சார்பாக நானும் சமாதான கூட்டத்தில் பங்கேற்ற மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டோம். வட்டாட்சியர் தலைமையிலான சமாதானக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதிநிதிகள் சுற்றுவட்ட ஊர் பொதுமக்களிடம் கேட்டு சொல்வதாகவும், இத்துறை அனுமதி பெற்றே திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதாக வாக்குறுதி கொடுத்து விட்டு 05.11.2021 அன்று இரவு 9 மணியளவில் அங்கிருந்து சென்றனர்.

இரண்டு முறைக்கு மேல் தொடர்ந்து தடைப்பட்டு வந்த கும்பாபிஷேகத்தை நடத்துவது ஒன்றே தங்களது சுற்றுவட்ட ஊர்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் தொற்று மற்றும் இயற்கை சீற்ற பாதிப்புகளில் இருந்து காத்துக் கொள்வதற்கு உதவும் என அழுத்தமாக அம்மக்கள் உள்ளுக்குள் நம்பியதினால், இரண்டு நாட்கள் வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற தொடர் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பிரதிநிதிகள் இத்துறை அனுமதி பெற்றே திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதாக வாக்குறுதி கொடுத்து விட்டு சென்ற நிலையில், பிரச்சனை சரிசெய்யப்பட்டது என நினைத்த நிலையில், திடீரென 06.11.2021 அன்று காலையில் திருக்கோயிலுக்கு புனித நீர் ஊற்றும் சடங்கினை நிகழ்த்தி விட்டனர். ஆனால் 05.11.2021 அன்று இரவு வரை திருக்கோயிலின் சார்பாக நானும், மேட்டுப்பாளையம் வட்டாச்சியர், காரமடல் காவல் ஆய்வாளர் ஆகியோர் எடுத்த தொடர் முயற்சிகள் போதிய அளவிற்கு பயனளிக்காமல் போய்விட்டதே தவிர, தொடர்ந்து இரண்டு நாட்கள் நான் காவல் நிலையத்திலும், மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்திலுமே உடன் இருந்து மேற்படி தடுப்பு நடவடிக்கை பணிகளில் ஈடுபட்டு வந்தேன்.

மேலும் இரண்டு நாட்கள் வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற தொடர் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பிரதிநிதிகள் இத்துறை அனுமதி பெற்றே திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதாக வாக்குறுதி கொடுத்து விட்டு, திடீரென தனது வாக்குறுதியில் இருந்து நழுவி விட்டனர். மேற்படி சூழ்நிலைகள் அடிப்படையில், என் கடமை தவறுகை என ஏதும் நிகழவில்லை என்பதை மேற்படி தகவல்களின் மூலம் தெரிந்து கொள்ளலாம். மேற்படி சூழ்நிலைகளை கனிவுடன் பரிசீலித்து, எனது கடமை தவறுகை சார்ந்த குற்றச்சாட்டாக கருதுவதற்கு எவ்விதமான நியாயமான முகாந்திரம் இல்லை

என்பதன் அடிப்படையில் மேற்படி குற்றச்சாட்டினை கைவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(மேற்படி பொருள் தொடர்பாக, கோயம்புத்தூர் (வடக்கு) சார் ஆட்சியர், மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் மற்றும் காரமடல் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று சமர்ப்பித்து தடுத்து நிறுத்த நடவடிக்கை கடிதங்களின் நகல் மற்றும் பேச்சுவார்த்தை உடன்படிக்கையின் நகல் ஆகியவை இத்துடன் தங்களின் மேலான பார்வைக்கு பணிவுடன் சமர்ப்பிக்க படுகிறது)

**குற்றச்சாட்டு எண். 02 :**

கோவிட்–19 பெருந்தொற்று காலத்தில் கூட்டம் கூடுவதை தவிர்க்கும் வகையில் செயல்படாமல் அரசின் ஆணையை மதிக்காமல் செயல்பட்டது.

**குற்றச்சாட்டு எண். 02–க்கான விளக்கம்**

குற்றச்சாட்டு 1–க்கான விளக்கத்தில் மேற்படி திருக்கோயிலின் கும்பாபிஷேகம் தொடர்பாக 2018–ம் ஆண்டு முதலே, அதாவது தொல்லியல் துறை கருத்துரு முதல் கும்பாபிஷேகத்திற்கு இறுதியான ஆணையர் அவர்களின் அனுமதி பெறுதல் வரை அனைத்தையும் சட்டவிதிகளை பின்பற்றி செயல் அலுவலர் என்ற முறையில் சிறிதும் கடமை தவறாமல், இரவு பகல் கருதாமல் பணியாற்றி வந்துள்ளேன். மேற்படி கோவிட் 19 பெருந்தொற்று தொடர்பான அரசு மற்றும் துறை வழிகாட்டுதலை சிறிதும் வழுவாமல் பின்பற்றியதாலேயே மற்றும் மதித்து செயல் படவே எண்ணத்தை கொண்டதினாலேயே, மேற்படி நிகழ்வு தொடர்பாக என் கவனத்திற்கு வரப்பெற்றவுடன், அன்றே **(04.11.2021)** மதியம் மேற்படி நிகழ்வினை தடுத்து நிறுத்தும் எண்ணத்தோடு அருகில் உள்ள காரமடல் காவல் நிலையம் சென்று காவல் ஆய்வாளரிடம் புகார் அளித்தேன். அதன் நகல் இதனுடன் இணைத்துள்ளேன்.

எனது புகாரினை பரிசீலித்த காவல் ஆய்வாளர் அவர்கள், அதனை மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் கவனத்திற்கு கொண்டு சென்றார். அதனைத் தொடர்ந்து நானும், காரமடல் காவல்துறை ஆய்வாளரும் யாகசாலை அமைக்கும் பணிகளை களத்திற்கு சென்று பாதியில் தடுத்து நிறுத்தி, ஊர்தரப்பு பிரதிநிதிகளை பேச்சுவார்த்தைக்கு மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகம் வர கூறியதன் அடிப்படையில் அவர்களது பிரதிநிதிகள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர். மேற்படி நிலையில் அன்றும், அதன் மறுநாளும் **(05.11.2021)** மேட்டுப்பாளையம் வட்டாட்சியர்

அலுவலகத்தில் தொடர்ந்து சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. அது தொடர்பான தகவல்களை இணை ஆணையர் அலுவலகத்திற்கு தொலைபேசி வாயிலாக மேலும் தெரிவித்து வந்தேன். 04.11.2021 மற்றும் 05.11.2021 அன்று இரவு வரை மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கும்பாபிஷேகம் தொடர்பான சமாதான பேச்சுவார்த்தை தொடர்ந்து இரண்டு நாட்கள் இரவு வரை நீடித்து வந்தது. தற்போதைய பெருந்தொற்று சூழ்நிலையில் அரசினால் தடை விதிக்கப்பட்ட நிலையில் தற்போது கும்பாபிஷேகம் நடத்துவதை கைவிட வேண்டும் என்பதை வட்டாட்சியர், காவல்துறை ஆய்வாளர் மற்றும் திருக்கோயில் சார்பாக நானும் சமாதான கூட்டத்தில் பங்கேற்ற மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டோம்.

வட்டாட்சியர் தலைமையிலான சமாதானக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதிநிதிகள் சுற்றுவட்ட ஊர்பொதுமக்களிடம் கேட்டு சொல்வதாகவும், இத்துறை அனுமதி பெற்றே திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதாக வாக்குறுதி கொடுத்து விட்டு 05.11.2021 அன்று இரவு 9 மணியளவில் அங்கிருந்து சென்றனர். இரண்டு முறைக்கு மேல் தொடர்ந்து தடைப்பட்டு வந்த கும்பாபிஷேகத்தை நடத்துவது ஒன்றே தங்களது சுற்றுவட்ட ஊர்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் தொற்று மற்றும் இயற்கை சீற்ற பாதிப்புகளில் இருந்து காத்துக் கொள்வதற்கு உதவும் என அழுத்தமாக அம்மக்கள் உள்ளுக்குள் நம்பியதினால், இரண்டு நாட்கள் வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற தொடர் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பிரதிநிதிகள் இத்துறை அனுமதி பெற்றே திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதாக வாக்குறுதி கொடுத்து விட்டு சென்ற நிலையில், பிரச்சனை சரிசெய்யப்பட்டது என நினைத்த நிலையில், திடீரென 06.11.2021 அன்று காலையில் திருக்கோயிலுக்கு புனித நீர் ஊற்றும் சடங்கினை நிகழ்த்தி விட்டனர். ஆனால் 05.11.2021 அன்று இரவு வரை திருக்கோயிலின் சார்பாக நானும், மேட்டுப்பாளையம் வட்டாட்சியர், காரமடல் காவல் ஆய்வாளர் ஆகியோர் எடுத்த தொடர் முயற்சிகள் போதிய அளவிற்கு பயனளிக்காமல் போய்விட்டதே தவிர, தொடர்ந்து இரண்டு நாட்கள் நான் காவல் நிலையத்திலும், மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்திலுமே உடன் இருந்து மேற்படி தடுப்பு நடவடிக்கை பணிகளில் ஈடுபட்டு வந்ததுடன் கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் பொதுமக்கள் ஒரே இடத்தில் அதிகளவில் கூடுவதற்கு அரசினால் விதிக்கப்பட்டுள்ள தடைகள் குறித்து என்னாலும், காவல் ஆய்வாளர் மற்றும் வட்டாட்சியராலும் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் இரண்டு நாட்கள் வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற தொடர் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பிரதிநிதிகள் இத்துறை அனுமதி பெற்றே திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதாக வாக்குறுதி கொடுத்தவிட்டு, திடீரென தனது வாக்குறுதியில் இருந்து நழுவி விட்டனர். மேற்படி சூழ்நிலைகள் அடிப்படையில், என் கடமை தவறுகை என

ஏதும் நிகழவில்லை என்பதை மேற்படி தகவல்களின் மூலம் தெரிந்து கொள்ளலாம். மேற்படி சூழ்நிலைகளை கனிவுடன் பரிசீலித்து, எனது கடமை தவறுகை சார்ந்த குற்றச்சாட்டாக கருதுவதற்கு எவ்விதமான நியாயமான முகாந்திரம் இல்லை என்பதன் அடிப்படையில் மேற்படி குற்றச்சாட்டினை கைவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (மேற்படி பொருள் தொடர்பாக, கோயம்புத்தூர் சார் ஆட்சியர், மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் மற்றும் காரமடல் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று சமர்ப்பித்த/தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட கடிதங்களின் நகல் மற்றும் அமைதி பேச்சுவார்த்தை கூட்ட நடவடிக்கையின் நகல் ஆகியவை இத்துடன் தங்களின் மேலான பார்வைக்கு பணிவுடன் சமர்ப்பிக்க படுகிறது)

**குற்றச்சாட்டு எண். 03 :**

மேற்படி குடமுழுக்கு தொடர்பாக **04.11.2021** அன்று செயல் அலுவலருக்கு புகார் மனு வரப்பெற்றும் அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளாமல் தன் கடமையில் இருந்து தவறியது.

**குற்றச்சாட்டு எண். 03--க்கான விளக்கம்**

மேற்படி நிகழ்வு தொடர்பாக என் கவனத்திற்கு வரப்பெற்றவுடன், அன்றே **(04.11.2021)** மதியம் மேற்படி நிகழ்வினை தடுத்து நிறுத்தும் எண்ணத்தோடு அருகில் உள்ள காரமடல் காவல் நிலையம் சென்று காவல் ஆய்வாளரிடம் புகார் அளித்தேன். அதன் நகல் இதனுடன் இணைத்துள்ளேன்.

எனது புகாரினை பரிசீலித்த காவல் ஆய்வாளர் அவர்கள், அதனை மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் கவனத்திற்கு கொண்டு சென்றார். அதனைத் தொடர்ந்து நானும், காரமடல் காவல்துறை ஆய்வாளரும் யாகசாலை அமைக்கும் பணிகளை களத்திற்கு சென்று பாதியில் தடுத்து நிறுத்தி, ஊர்தரப்பு பிரதிநிதிகளை பேச்சுவார்த்தைக்கு மேட்டுப்பாளையம், வட்டாட்சியர் அலுவலகம் வர கூறியதன் அடிப்படையில் அவர்களது பிரதிநிதிகள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர். மேற்படி நிலையில் அன்றும், அதன் மறுநாளும் **(05.11.2021)** மேட்டுப்பாளையம், வட்டாட்சியர் அலுவலகத்தில் தொடர்ந்து சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. அது தொடர்பான தகவல்களை இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு தொலைபேசி வாயிலாக மேலும் தெரிவித்து வந்தேன்.

**04.11.2021** மற்றும் **05.11.2021** அன்று இரவு வரை மேட்டுப்பாளையம், வட்டாட்சியர் அலுவலகத்தில் கும்பாபிஷேகம் தொடர்பான சமாதான பேச்சுவார்த்தை தொடர்ந்து இரண்டு நாட்கள் இரவு வரை நீடித்து வந்தது. தற்போதைய பெருந்தொற்று சூழ்நிலையில்

அரசினால் தடை விதிக்கப்பட்ட நிலையில் தற்போது கும்பாபிஷேகம் நடத்துவதை கைவிட வேண்டும் என்பதை வட்டாட்சியர், காவல்துறை ஆய்வாளர் மற்றும் திருக்கோயில் சார்பாக நானும் சமாதான கூட்டத்தில் பங்கேற்ற மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டோம். வட்டாட்சியர் தலைமையிலான சமாதானக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதிநிதிகள் சுற்றுவட்ட ஊர்பொதுமக்களிடம் கேட்டு சொல்வதாகவும், இத்துறை அனுமதி பெற்றே திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதாக வாக்குறுதி கொடுத்து விட்டு 05.11.2021 அன்று இரவு 9 மணியளவில் அங்கிருந்து சென்றனர்.

இரண்டு முறைக்கு மேல் தொடர்ந்து தடைப்பட்டு வந்த கும்பாபிஷேகத்தை நடத்துவது ஒன்றே தங்களது சுற்றுவட்ட ஊர்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் தொற்று மற்றும் இயற்கை சீற்ற பாதிப்புகளில் இருந்து காத்துக் கொள்வதற்கு உதவும் என அழுத்தமாக அம்மக்கள் உள்ளுக்குள் நம்பியதினால், இரண்டு நாட்கள் வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற தொடர் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பிரதிநிதிகள் இத்துறை அனுமதி பெற்றே திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதாக வாக்குறுதி கொடுத்து விட்டு சென்ற நிலையில், பிரச்சனை சரிசெய்யப்பட்டது என நினைத்த நிலையில், திடீரென 06.11.2021 அன்று காலையில் திருக்கோயிலுக்கு புனித நீர் ஊற்றும் சடங்கினை நிகழ்த்தி விட்டனர். ஆனால் 05.11.2021 அன்று இரவு வரை திருக்கோயிலின் சார்பாக நானும், மேட்டுப்பாளையம் வட்டாச்சியர், காரமடல் காவல் ஆய்வாளர் ஆகியோர் எடுத்த தொடர் முயற்சிகள் போதிய அளவிற்கு பயனளிக்காமல் போய்விட்டதே தவிர, தொடர்ந்து இரண்டு நாட்கள் நான் காவல் நிலையத்திலும், மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்திலுமே உடன் இருந்து மேற்படி தடுப்பு நடவடிக்கை பணிகளில் ஈடுபட்டு வந்தேன்.

மேலும் இரண்டு நாட்கள் வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற தொடர் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பிரதிநிதிகள் இத்துறை அனுமதி பெற்றே திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதாக வாக்குறுதி கொடுத்து விட்டு, திடீரென தனது வாக்குறுதியில் இருந்து நழுவி விட்டனர். மேற்படி சூழ்நிலைகள் அடிப்படையில், என் கடமை தவறுகை என ஏதும் நிகழவில்லை என்பதை மேற்படி தகவல்களின் மூலம் தெரிந்து கொள்ளலாம். மேற்படி சூழ்நிலைகளை கனிவுடன் பரிசீலித்து, எனது கடமை தவறுகை சார்ந்த குற்றச்சாட்டாக கருதுவதற்கு எவ்விதமான நியாயமான முகாந்திரம் இல்லை என்பதன் அடிப்படையில் மேற்படி குற்றச்சாட்டினை கைவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (மேற்படி பொருள் தொடர்பாக, கோயம்புத்தூர் சார் ஆட்சியர், மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் மற்றும் காரமடல் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று சமர்ப்பித்த/தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட கடிதங்களின் நகல் மற்றும் அமைதி பேச்சுவார்த்தை கூட்ட நடவடிக்கையின் நகல் ஆகியவை இத்துடன் தங்களின் மேலான பார்வைக்கு பணிவுடன் சமர்ப்பிக்க படுகிறது)

**குற்றச்சாட்டு எண். 04 :**

மேற்படி குடமுழுக்கு தொடர்பாக, இதுநாள் வரை எவ்வித அறிக்கையும் சமர்ப்பிக்காதது.

**குற்றச்சாட்டு எண். 04—க்கான விளக்கம்**

இரண்டு நாட்கள் வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற தொடர் பேச்சுவார்த்தையில் **05.11.2021** இரவு **9** மணி வரை பங்கேற்றமையினாலும், அதில் பங்கேற்ற பிரதிநிதிகள் இத்துறை அனுமதி பெற்றே திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதாக வாக்குறுதி கொடுத்தவிட்டு சென்ற நிலையில், பிரச்சனை சரிசெய்யப்பட்டது என நினைத்த நிலையில், திடீரென **06.11.2021** அன்று காலையில் திருக்கோயிலுக்கு புனித நீர் ஊற்றும் சடங்கினை நிகழ்த்தி விட்டனர் என எனக்கு தகவல் வரப்பெற்றதில் இருந்தே நான் மிகுந்த மனஉளைச்சலுக்கு உள்ளானேன். என் உடல் நலமும் தொடர் அலைச்சல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டது. என்ன செய்வதென்றறியாமல் மிகுந்த மனவுளைச்சலுடன் இருந்தேன். ஆகையினால் என்னால் மேற்படி குடமுழுக்கு தொடர்பான அறிக்கை காலத்தே சமர்ப்பிக்க இயலவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்து கொள்கிறேன். ஆனால் **05.11.2021** அன்று இரவு வரை நடைபெற்ற நிகழ்வுகளை தொலைபேசி வாயிலாக இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு தெரிவித்து வந்தேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்து கொள்கிறேன். மேற்படி சூழ்நிலைகளைக் கனிவுடன் பரிசீலித்து, எனது கடமை தவறுகை சார்ந்த குற்றச்சாட்டாக கருதுவதற்கு எவ்விதமான நியாயமான முகாந்திரம் இல்லை என்பதன் அடிப்படையில் மேற்படி குற்றச்சாட்டினை கைவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறுதியான பொது விளக்கம் :**

மேற்படி வகையில் குற்றச்சாட்டு **1**—க்கான விளக்கத்தில் மேற்படி திருக்கோயிலின் கும்பாபிஷேகம் தொடர்பாக **2018**—ம் ஆண்டு முதலே, அதாவது தொல்லியல் துறை கருத்துரு முதல் கும்பாபிஷேகத்திற்கு இறுதியான ஆணையர் அவர்களின் அனுமதி பெறுதல் வரை அனைத்தையும் சட்டவிதிகளை பின்பற்றி, செயல் அலுவலர் என்ற முறையில் சிறிதும் கடமை தவறாமல், இரவு பகல் கருதாமல் பணியாற்றி வந்தேன். மேற்படி கோவிட் 19 பெருந்தொற்று தொடர்பான அரசு மற்றும் துறை வழிகாட்டுதலை சிறிதும் வழுவாமல் பின்பற்றியதாலேயே மற்றும் மதித்து செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தை கொண்டதினாலேயே, மேற்படி நிகழ்வு தொடர்பாக என் கவனத்திற்கு வரப்பெற்றவுடன்,

அன்றே (04.11.2021) மதியம் மேற்படி நிகழ்வினை தடுத்து நிறுத்தும் எண்ணத்தோடு அருகில் உள்ள காரமடல் காவல் நிலையம் சென்று காவல் ஆய்வாளரிடம் புகார் அளித்தேன். அதன் நகல் இதனுடன் இணைத்துள்ளேன்.

இரண்டு நாட்கள் வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற தொடர் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பிரதிநிதிகள் இத்துறை அனுமதி பெற்றே திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதாக வாக்குறுதி கொடுத்து விட்டு சென்ற நிலையில், பிரச்சனை சரிசெய்யப்பட்டது என நினைத்த நிலையில், திடீரென 06.11.2021 அன்று காலையில் திருக்கோயிலுக்கு புனித நீர் ஊற்றும் சடங்கினை நிகழ்த்தி விட்டனர் என எனக்கு தகவல் வரப்பெற்றதில் இருந்தே நான் மிகுந்த மனஉளைச்சலுக்கு உள்ளானேன். என் உடல் நலமும் தொடர் அலைச்சல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டது. ஆனால் 05.11.2021 அன்று இரவு வரை திருக்கோயிலின் சார்பாக நானும், மேட்டுப்பாளையம் வட்டாட்சியர், காரமடல் காவல் ஆய்வாளர் ஆகியோர் எடுத்த தொடர் முயற்சிகள் போதிய அளவிற்கு பயனளிக்காமல் போய்விட்டதே தவிர, தொடர்ந்து இரண்டு நாட்கள் நான் காவல் நிலையத்திலும், மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அலுவலகத்திலுமே உடன் இருந்து மேற்படி தடுப்பு நடவடிக்கை பணிகளில் ஈடுபட்டு வந்தேன் என்பதை தங்களின் மேலான பார்வைக்கு பணிவுடன் சமர்ப்பிக்கிறேன். மேற்படி சூழ்நிலைகளை, பரிசீலித்து, மேற்படி குற்றச்சாட்டுகள் தொடர்பாக, எனது இவ்விளக்கத்தினை கனிவுடன்/கருணையுடன் பரிசீலித்து, எனது கடமை தவறுகை சார்ந்த குற்றச்சாட்டாக கருதுவதற்கு எவ்விதமான நியாயமான முகாந்திரம் இல்லை என்பதன் அடிப்படையில் மேற்படி குற்றச்சாட்டுக்களை கைவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்படியான குற்றச்சாட்டுகளினால் நான் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளேன். அதன் காரணமாக எனது உடல்நிலை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், வரும் காலத்தில் எந்த ஒரு குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் மிகுந்த கவனமுடனும், உரிய எச்சரிக்கையுடனும் செயல்படுவேன் என்றும், என்னை மேலும் சிறப்பான முறையில் நான் பணியாற்றும் திருக்கோயில்களுக்கு பணி செய்ய தயார்படுத்தி கொள்வேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(செ. கXXXXXXXXX)
செயல் அலுவலர்

இணைப்பு :

1. கோயம்புத்தூர் (வடக்கு), சார் ஆட்சியரை நேரில் சந்தித்து சமர்ப்பித்த/தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட கடித நகல்.

2. மேட்டுப்பாளையம் வட்டாட்சியரை நேரில் சந்தித்து சமர்ப்பித்த/தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட கடித நகல்.
3. காரமடல் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று சமர்ப்பித்த/தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட கடித நகல்
4. அமைதி பேச்சுவார்த்தை கூட்ட நடவடிக்கையின் நகல்

**நகல் பணிந்தனுப்படுகிறது**

5. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, கோயம்புத்தூர்.
6. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
7. உபரி.

[ மாதிரி படிவம் ]

## விதி 17 (a)—ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை — கைவிடுதல் ஆணை

**கோயம்புத்தூர், இந்து சமயஅறநிலையத் துறை உதவி ஆணையரின் செயல்முறைகள்**

முன்னிலை : திரு. மொ. அXXXXXX, பி.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர்

செ.மு.ந.க. எண்.8215/2021/ஆ2 நாள்: 24.12.2021

பொருள்: பொதுப்பணி — தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (a)—ன் கீழ் நடவடிக்கை – திரு.செ. கXXXXXXXX, செயல்அலுவலர் நிலை—4, அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், மேட்டுப்பாளையம் நகர் மற்றும் வட்டம் — கோயம்புத்தூர் மாவட்டம் — **விதி 17 (a)—ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை விலக்கி கொள்ளுதல்** — தொடர்பாக.

பார்வை :
1. ஆய்வாளர், இந்து சமய அறநிலையத்துறை, மேட்டுப்பாளையம் உ.மு. எண்.25/2021 நாள் : 25.11.2021.
2. இவ்வலுவலக செ.மு.ந.க. எண்.8215/2021/ஆ2 நாள்: 07.12.2021
3. திரு. செ. கXXXXXXXXX, செயல்அலுவலர், கடித நாள்: 15.12.2021

-----

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயிலின் நிலை 4 செயல் அலுவலர் தனது கூடுதல் பொறுப்பில் கவனித்து வரும், வெள்ளியங்காடு, அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயிலின் உப கோயிலான சிறுமுகை, அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயிலில் திருக்குடமுழுக்கு நடத்தியது தொடர்பாக பார்வை 2—ல் காணும் குறிப்பில் 15 தினங்களுக்குள் விளக்கம் சமர்ப்பிக்குமாறு அன்னாரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. பார்வை 3—ல் காணும் குறிப்பில் திரு. செ. கXXXXXXXXX, நிலை 4 செயல் அலுவலரால்

விளக்கம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. செயல் அலுவலரது விளக்கம் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மேற்காணும் குடமுழுக்கு அனுமதியின்றியும், அரசு வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றாமலும் நடைபெறுவதைத் தடுத்து நிறுத்திட செயல் அலுவலரால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதும், செயல் அலுவலர் தொடர்ந்து களப்பணியில் ஈடுபட்டு வந்ததும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மேற்காணும் நிகழ்வு ஒரு அசாதாரண சூழ்நிலையில் நிகழ்ந்து விட்டபடியால், இதில் செயல் அலுவலரது கவனமின்மை மட்டுமே காரணம் என எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதில்லை என்ற காரணத்தினாலும், செயல் அலுவலர் தற்போது தகுதி காண் பருவத்தினராக இருக்கின்ற காரணத்தினாலும், செயல் அலுவலருக்கு பணியில் போதிய அனுபவமின்மையைக் கருத்தில் கொண்டும் அன்னார் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (a)-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் கைவிடப்படுகிறது. மேலும் இனிவரும் காலங்களில் செயல் அலுவலர் மிகுந்த கவனமுடனும், பணியில் தனக்குரிய பொறுப்புகளை உணர்ந்தும், உயர் அலுவலர்களுக்கு உரிய காலத்தில் தகவல்களைத் தெரிவித்தும், தனது பணியில் முழு ஈடுபாட்டுடன் செவ்வனே செயல்பட அறிவுறுத்தப்படுகிறது.

உதவி ஆணையர்

**பெறுநர்**

1. திரு.செ. கXXXXXXXXX,(பதிவு தபால் )
   செயல் அலுவலர், நிலை 4,
   அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில்,
   மேட்டுப்பாளையம் நகர் மற்றும் வட்டம்,
   கோயம்புத்தூர் மாவட்டம்.

   **நகல் பணிந்தனுப்பப்படுகிறது**

2. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, கோயம்புத்தூர்
3. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34
4. மிகை.

[ மாதிரி படிவம் ]

## I. விதி 17 (a)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை — தண்டனை ஆணை

**கோயம்புத்தூர், இந்து சமயஅறநிலையத் துறை உதவி ஆணையரின் செயல்முறைகள்**

முன்னிலை : திரு. மொ. அXXXXXX, பி.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர்

செ.மு.ந.க. எண்.8215/2021/ஆ2 நாள்: 24.12.2021

பொருள் : பொதுப்பணி – தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (a)–ன் கீழ் நடவடிக்கை – திரு.செ. கXXXXXXXX, செயல் அலுவலர் நிலை 4, அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், மேட்டுப்பாளையம் நகர் மற்றும் வட்டம் – கோயம்புத்தூர் மாவட்டம் – **விதி 17 (a)–ன் கீழ் தண்டனை விதித்தல்** – தொடர்பாக.

பார்வை :
1. ஆய்வாளர், இந்து சமய அறநிலையத்துறை, மேட்டுப்பாளையம், உ.மு. எண்.25/2021 நாள்: 25.11.2021.
2. இவ்வலுவலக செ.மு.ந.க. எண்.8215/2021/ஆ2 நாள்: 07.12.2021
3. திரு. செ. கXXXXXXXXX, செயல்அலுவலர் கடித நாள்: 15.12.2021

----

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயிலின் நிலை 4 செயல் அலுவலர் தனது கூடுதல் பொறுப்பில் கவனித்து வரும், வெள்ளியங்காடு, அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயிலின் உப கோயிலான சிறுமுகை, அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயிலில் திருக்குடமுழுக்கு நடத்தியது தொடர்பாக பார்வை 2–ல் காணும் குறிப்பில் 15 தினங்களுக்குள் விளக்கம் சமர்ப்பிக்குமாறு அன்னாரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. பார்வை 3–ல் காணும் குறிப்பில் திரு. செ. கXXXXXXXXX, நிலை 4 செயல் அலுவலரால் விளக்கம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. செயல் அலுவலரது விளக்கம் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மேற்காணும் குடமுழுக்கு அனுமதியின்றியும், அரசு வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றாமலும் நடைபெறுவதைத் தடுத்து நிறுத்திட உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் தகவல் பெறப்பட்ட பிறகு திருக்கோயிலுக்கு சென்றதன் காரணமாக தகுந்த நேரத்தில் செயல்படாமல் கோவிட் பெருந்தொற்று காலத்தில் ஒரே இடத்தில் மக்கள் கூடுவதற்கு வாய்ப்பளித்து, அரசின் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றாமல் செயல்பட்டு அரசுக்கும், இத்துறைக்கும் பொதுமக்கள் மத்தியில் அவப்பெயர் ஏற்படும் வண்ணம் பணியில் அலட்சியப் போக்குடன் செயல்பட்டது ஏற்கத்தக்கதல்ல. எனவே, செயல் அலுவலரால் கூறப்படும் விளக்கம் பணியில் மெத்தனப் போக்குடன் செயல்பட்டுள்ளதையே சுட்டிக்காட்டுகிறது என்பதால் அன்னாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை.

எனவே, பணியில் அலட்சியப் போக்குடன் செயல்பட்டமைக்காக தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (a)-ன் கீழ் திரு. செ. கXXXXXXXXX, செயல் அலுவலரது ஊதிய உயர்வினை ஓராண்டு காலத்திற்கு (திரண்ட பயனின்றி ஓய்வூதியத்தை பாதிக்காத வகையில்) நிறுத்தம் செய்து உத்தரவிடப்படுகிறது. மேற்காணும் தண்டனையினை திரு. செ. கXXXXXXXXX, செயல் அலுவலரது பணிப்பதிவேட்டில் பதிந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

உதவி ஆணையர்

**பெறுநர் :**

1. திரு. செ. கXXXXXXXXX,
   செயல் அலுவலர், நிலை 4,
   அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில்,
   மேட்டுப்பாளையம் நகர் மற்றும் வட்டம்,
   கோயம்புத்தூர் மாவட்டம்.

**நகல் பணிந்தனுப்பப்படுகிறது**

2. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, கோயம்புத்தூர்
3. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34
4. மிகை.

# III

# பெரிய தண்டனை [விதி 17 (b)]

# வகையிலான

# ஒழுங்கு நடவடிக்கை

# நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

# III

# [விதி 17 (b)]

## பெரிய தண்டனை வகையிலான ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

விதி 17 (b)—ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கையினை தொடர்வதென முடிவு செய்த பின்னர் குற்றச்சாட்டின் தன்மை, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் வழங்கப்பட உத்தேசிக்கும் தண்டனை, விசாரணையின் தன்மை ஆகிய அம்சங்களையும் நன்கு பரிசீலித்து ஒரு முடிவுக்கு வர வேண்டிய கடமை ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலருக்கு உண்டு. விதிகளில் வழங்கப்பட்டுள்ள விருப்புரிமையை (Discretion) விரும்பத்தகாத வகையில் செயல்படுத்தக் கூடாது.

தேவையில்லாத இனங்களில் எல்லாம் விதி 17 (b)—ன் கீழ் நடவடிக்கை தொடுப்பது சரியான அணுகுமுறையன்று. அரசின் 11.03.1993 நாளிட்ட சுற்றறிக்கை எண்.14353 ப.ம.நி.சீ/93—1—ன்படி பெரிய தண்டனை தேவைப்படாத நேர்வுகளில் விதி 17 (b)—ன் கீழ் நடவடிக்கை தொடுப்பதனைத் தவிர்த்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதற்கிணங்க ஊழல், ஒழுக்கமின்மை, ஒழுக்க ஈனம் முதலிய பொதுப்படையான இனங்களுக்கு பாதகம் இன்றி வருவாய்க்கு அதிகமான சொத்து சேர்த்தல், லஞ்சம் பெறல்/பெற முனைதல், கையாடல், ஆவணங்களைத் தவறாக திருத்துதல், தீய நோக்கினை உள்ளடக்கிய கடமை பிறழ்தல், சொந்த நலனுக்குப் பதவியை தவறாக பயன்படுத்துதல், இரகசியங்களைக் கசியவிடல், பயணப்படி மற்றும் மருத்துவ செலவினை ஈடு செய்யும் இடங்களில் பொய்யான கோரிக்கை சமர்ப்பித்தல் முதலியன விதி 17 (b)—ன் கீழ் நடவடிக்கை தொடுத்திட தகுந்த நேர்வுகளாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

விதி 17 (b)–ன் கீழ் தொடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கையில் குற்றச்சாட்டுகளைத் தொடுப்பது மிகவும் முக்கியமான பணியாகும்.

**குற்றச்சாட்டு குறிப்பாணை தயார் செய்தல் அல்லது குற்றச்சாட்டுகளைத் தொடுத்தல்**

இந்த விதிகளில் பட்டியலிட்டு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரிகள் தான் ஒழுங்கு நடவடிக்கை துவக்கி குற்றச்சாட்டு குறிப்பாணை தயார் செய்ய வேண்டும். (Rule 12). பணியமர்வு செய்யும் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரோ அல்லது அவரால் அதிகாரம் ஒப்பளிக்கப்பட்டவரோ குற்றப்பத்திரிக்கை தயார் செய்ய வேண்டும்

1. குற்றச்சாட்டுகள் குறிப்பானவையாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையிலும் தெரிவிக்கப்பட வேண்டும். தெளிவற்ற தன்மை தவிர்க்கப்பட வேண்டும்.

2. சம்பவம் நடந்த இடம், நாள், நேரம் முதலியன தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும். முதலில் நிகழ்வினை குறிப்பிட்டு பின்னர் குற்றச்சாட்டினைத் தெரிவிக்க வேண்டும்.

3. குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர் மீறியதாக அல்லது கடைபிடிக்கத் தவறியதாக கருதப்படுகிற விதிகள் மற்றும் சட்டங்கள் ஆகியவற்றைக் குற்றச்சாட்டு குறிப்பாணையில் குறிப்பிட வேண்டும். அந்த ஆணை அல்லது விதி அல்லது சுற்றறிக்கை, நிகழ்ச்சி நடந்ததாக கூறப்படும் அன்று செயல்பாட்டில் இருந்ததை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு குற்றத்தையும் தனியாகவும், கருத்து செறிவுள்ளதாகவும் குறிப்பிட வேண்டும்.

5. ஒவ்வொரு தவறுக்கும் ஒரு குற்றச்சாட்டு பதியலாம். அதே நேரத்தில் ஒரே குற்றச்சாட்டை பலவாறு பிரித்து பட்டியலிடக் கூடாது.

6. குற்றக் குறிப்பாணையில் இந்த தவறுக்காக இன்ன தண்டனை வழங்கப்படும் என்று எவ்விடத்திலும் குறிப்பிடக் கூடாது. அவ்வாறு பதிவுகள் இருப்பின் குற்றக் குறிப்பாணை செல்லாததாக அமைய முக்கிய காரணமாகி விடும்.

ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு தகுதியான பணியமர்வு அதிகாரி அல்லது அவரால் அந்த நடவடிக்கை தொடர்வதற்கு அதிகாரம் ஒப்பளிக்கப்பட்ட அதிகாரி மட்டுமே குற்றச்சாட்டு குறிப்பாணையில் கையொப்பமிட வேண்டும்.

**குற்றக் குறிப்பாணையின் உள்ளடக்கம்**

விதி 17 (b)–ன் கீழ் வழங்கப்படும் குற்றச்சாட்டு கடிதம் அல்லது குறிப்பாணை எப்படி அமைந்திட வேண்டும் என்பதற்கு அரசே ஒரு மாதிரி படிவத்தை வெளியிட்டுள்ளது. இதில் ஒரு பொதுவான மேல் கடிதமும், நான்கு பிற்சேர்க்கைகளும் அடங்கும். குற்றச்சாட்டுகள் பிற்சேர்க்கை ஒன்றிலும், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமான சாட்டுரைகள் பிற்சேர்க்கை இரண்டிலும், குற்றச்சாட்டினை நிரூபிக்க பயன்படுத்தப்பட உள்ள ஆவணங்களின் பட்டியல் பிற்சேர்க்கை மூன்றிலும், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக சாட்சியமளிப்பவர்களின் பட்டியல் பிற்சேர்க்கை நான்கிலும் தெரிவிக்கப்படும். இந்த குற்றச்சாட்டு கடிதம் அல்லது குறிப்பாணை ஒழுங்கு நடவடிக்கையினைத் தொடுத்திடும் தக்க அதிகாரியினால் கையொப்பமிடப்பட வேண்டும்.

ஒரு பொதுவான மேல் கடிதமும்,

பிற்சேர்க்கை I - குற்றச்சாட்டுகள்;

பிற்சேர்க்கை II - குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமான சாட்டுரைகள்;

பிற்சேர்க்கை III - குற்றச்சாட்டினை நிரூபிக்க பயன்படுத்தப்பட உள்ள ஆவணங்களின் பட்டியல்;

பிற்சேர்க்கை IV - குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக சாட்சியமளிப்பவர்களின் பட்டியல் மற்றும்

வினா படிவம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆவணமாகும்.

**குற்றச்சாட்டுக் குறிப்பாணை அல்லது காரணம் காட்டும் குறிப்பாணையினை வழங்குதல் அல்லது சார்வு செய்தல்** (Mode of services – Service of charge memo or Showcause Notice)

விதி 17 (b)–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டால் குற்றச்சாட்டு குறிப்பாணை ஒன்றை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இணைப்புகள் மற்றும் வினா படிவத்துடன் குற்றம்

சாட்டப்பட்டவருக்கு சார்பு செய்ய வேண்டியது அவசியமாகும்.

விதி 18 (c)—ன் படி கீழே குறிப்பிட்டுள்ள முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றி குற்றச்சாட்டு கடிதம்/குறிப்பாணை சார்வு செய்யப்படலாம்.

நேரில் சார்வு செய்தல் அல்லது பதிவு தபால் மூலம் ஒப்புகை அட்டையுடன் அனுப்பி வைத்தல் அல்லது

கடைசியாக தெரிந்த முகவரியில் சார்வு செய்தல் அல்லது வீட்டில் உள்ள வயது வந்த உறுப்பினரிடம் சார்வு செய்தல் அல்லது

இவை சாத்தியமில்லையென்றால் கடைசியாக வசித்த முகவரியில் பார்வையில் படும்படி ஒட்டி அதற்கான இரு சாட்சிகள் கையொப்பம் பெற வேண்டும்.

இன்னும் மிக முக்கியமான பொருள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மேற்காணும் மூன்று வழி முறைகளும் கூட பின்பற்ற இயலாத நிலையில் தினசரி நாளிதழ்களில் அறிவிப்பு செய்வதன் மூலமும், சம்பந்தப்பட்ட ஆவணம் பிழையாளி அலுவலருக்கு சார்வு செய்யப்பட்டதாக பொருள் கொள்ளலாம்.

**ஆவணங்களைப் பார்வையிடுதல்**

தனது விளக்கத்தை அளிப்பதற்கு முன்னர் குற்றச்சாட்டினை நிரூபிக்க பயன்படுத்தப்பட உள்ள ஆவணங்களையும், சம்பந்தப்பட்ட பிற ஆவணங்களையும் பார்வையிட அனுமதிக்கும்படி குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர் கோரலாம். அத்தகைய வேண்டுகோள் பெறப்படின், ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியின் முன்னிலையிலோ அல்லது அவரால் நியமிக்கப்படுகிற அதிகாரியின் முன்னிலையிலோ ஆவணங்களைப் பார்வையிட அனுமதி வழங்கலாம்.
குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் ஆவணங்களைப் பார்வையிட அனுமதி மறுத்திடலாகாது. ஆனால் தொடர்பில்லாதவை என கருதப்படும் ஆவணங்களையும், பொதுநலன் கருதி பார்வையிட அனுமதிக்க இயலாத ஆவணங்களையும், சரியான பிற காரணங்களுக்காக பார்வையிட மறுக்கக் கூடிய ஆவணங்களையும், அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு பார்வையிட அனுமதி மறுக்கலாம்.

### விசாரணை அலுவலர் நியமனம்

குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியரின் விளக்கத்தைப் பெற்று பரிசீலித்த பின்னர், குற்றச்சாட்டை அவர் மறுக்கின்றார் எனில் நேர்முக விசாரணை நடத்தப்பட வேண்டும். இத்தகைய நேர்வில் குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் கேட்கவில்லையென்றாலும், நேர்முக விசாரணை நடத்தப்படவேண்டும். அனுமதிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள்ளோ அல்லது வழங்கப்பட்ட காலநீட்டிப்புக்குள்ளோ விளக்கம் பெறப்படவில்லை என்றாலும் கூட நேர்முக விசாரணைக்கு நடவடிக்கை எடுத்திடலாம்.

குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர் மீது நேரடி விசாரணை மேற்கொள்ள, ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் விசாரணை அலுவலரை நியமிக்க வேண்டும் அல்லது ஒழுங்கு நடவடிக்கை அலுவலரே விசாரணை அலுவலராகவும் செயல்படலாம்.

விசாரணை அலுவலர் பிழையாளி அலுவலரை விட உயர் நிலை பதவியில் இருக்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்ட நிகழ்வு குறித்து முதல் நிலை அறிக்கை/ஆரம்ப விசாரணை (Preliminary Enquiry) மேற்கொண்ட அலுவலராக இருக்கக்கூடாது. குற்றம் குறித்து நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட அலுவலராக இருக்கக்கூடாது. பிழையாளிக்கு உறவு நிலையிலோ அல்லது அரசு/துறையின் சாட்சியாக அல்லது குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வுகள் தொடர்பான முடிவான கருத்து அல்லது குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வுகளோடு எத்தகைய ஈடுபாடும் இருப்பவராக இருந்திடலாகாது.

### விசாரணை

விதி 17 (b)–ன் கீழ் எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கையில் "விசாரணை" ஒரு முக்கிய அங்கம் ஆகும். இந்த விசாரணை "மறுக்கப்பட்ட குற்றச்சாட்டுகள்" குறித்து நடத்தப்பட வேண்டும். குற்றச்சாட்டின் உண்மை நிலையை கண்டறிய உதவுவதோடு, தண்டனை வழங்குவது குறித்து தக்கதோர் முடிவினை ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி எடுத்திடவும், விசாரணையின் முடிவே ஆதாரமாக அமைந்திடும்.

இந்திய சாட்சிய சட்டம் (Indian Evidence Act) மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Criminal Procedure Code) ஆகியவற்றின் கூறுகள் துறையளவிலான பணி ஒழுங்கு நடவடிக்கை விசாரணைக்குப் பொருந்தாது. இருப்பினும் இவைகள்

இயற்கை நீதியின் கோட்பாட்டிற்கு இணங்க அமைந்துள்ளதால், மிகவும் நுட்பமாக இல்லாவிட்டாலும், சாதாரணமாக பின்பற்றப்பட வேண்டும். இது நீதி விசாரணை போன்றதொரு தோற்றத்தைக் கொண்டுள்ளதால், ஒருதலைப்பட்சமின்றியும், எந்தவொரு சந்தேகத்திற்கு இடமளிக்காமலும், விசாரணை நடத்தப்படுகிறது என்ற உணர்வினை குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியருக்கு உருவாக்கிட வேண்டும். முக்கியமாக அவருக்கு முறையான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

முதல் நாள் விசாரணைக்கான தேதி, நேரம், இடம் முதலியவைகளை முன்கூட்டியே குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியருக்கு தெரிவிக்க வேண்டும். அன்றைய தினம் அவர் குற்றச்சாட்டினை ஒப்புக் கொள்கிறாரா அல்லது மறுக்கின்றாரா என்பதனை முதற்கண் கேட்டறிய வேண்டும். அவர் குற்றச்சாட்டினை ஒப்புக் கொள்கிற பட்சத்தில் அதனை பதிவாக்கி, அவருடைய கையொப்பத்தை பெற்று, விசாரணை அலுவலர் தன்னுடைய கையொப்பத்தையும் இட வேண்டும். மறுக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் குறித்தே விசாரணை நடத்தப்படும்.

விசாரணை அலுவலர் சாட்சியங்கள், குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் அவர் தரப்பு சாட்சியங்கள், தொடர்புடைய ஆவணங்கள் போன்றவற்றைப் பரிசீலித்தும், நேரடி விசாரணை நடத்தியும் விசாரணை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

### விசாரணை அலுவலர் மாற்றம் ஏற்படும் நிலையில்

விசாரணை அலுவலர் மாற்றம் ஏற்படும் நிலையில், விசாரணை முடிந்துள்ள நிலையிலிருந்து தொடரலாம் அல்லது மறுபடியும் ஆரம்பத்திலிருந்து விசாரணையினை தொடங்கலாம். நீதியை நிலைநாட்ட எந்தவொரு சாட்சியையாவது குறிப்பாகவோ அல்லது முழுமையாகவோ விசாரிப்பது பொருத்தமாக இருக்கும் என அவர் கருதினால், அத்தகைய சாட்சியை மீண்டும் அழைத்து விசாரணை, குறுக்கு விசாரணை தேவைப்படின் மறுவிசாரணை ஆகியவைகளை புதிதாக பொறுப்பேற்ற விசாரணை அலுவலர் நடத்திடலாம்.

### ஒருதலைப் பட்சமான (ex-parte) விசாரணை

குற்றச்சாட்டினை முறையாக சார்வு செய்த பின்னரும், குற்றம் சாட்டப்பட்ட ஊழியர் குறிப்பிட்ட கால அளவுக்குள் விளக்கம் தராமலும், விசாரணைக்கு ஆஜராகாமலும்,

விதிகளில் காணும் ஏற்பாடுகளை பின்பற்றாமலோ அல்லது பின்பற்ற மறுப்பு தெரிவித்தாலோ, விசாரணை அலுவலர் ஒருதலைப்பட்சமான (ex-parte) விசாரணை நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

**விசாரணை அலுவலரின் அறிக்கை**

குற்றச்சாட்டின் உண்மை நிலையைக் வெளிக்கொணர்ந்து, இறுதி முடிவு எடுப்பதில் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரிக்கு உதவியாக இருப்பதுவே விசாரணை அதிகாரியின் கடமையாகும். குற்றவியல் வழக்குகளில் உள்ளது போல் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படுவதெல்லாம் துறையளவில் நடைபெறும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது. நிகழ்ந்திருக்கக் கூடியதன் மிகுதிப்பாடு (Preference of property) தான் முடிவுகளுக்கு அளவுகோல். கிடைக்கப்பெற்ற ஆவணங்கள், சாட்சிகளின் வாக்குமூலங்கள், ஆதாரங்கள் மற்றும் மறுப்புரைகளின் அடிப்படையில் எந்தவொரு குற்றச்சாட்டு குறித்தும் தனித்தனியே முடிவினைத் தெரிவிக்க வேண்டும். ஒழுங்கு நடவடிக்கையின் கருப்பொருளுக்கு சற்றேதும் தொடர்பில்லாத எந்த ஒரு காரணத்தையும் கருத்தில் கொள்ளக் கூடாது.

தனது முடிவான அறிக்கையில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது அல்லது நிரூபிக்கப்படவில்லை என்பதை விசாரணை அலுவலர் தெளிவாக குறிப்பிட வேண்டும். சில நேர்வுகளில் குற்றச்சாட்டின் ஒரு பகுதி மட்டுமே நிரூபிக்கப்பட்டதாகக் கருதப்படின் அந்த பகுதி மட்டுமே நிரூபணமானதாகக் குறிப்பிடப்படலாம். எந்த சூழ்நிலையிலும் தண்டனை குறித்து பரிந்துரை செய்யக்கூடாது.

**விதி 17 (b)–ன் கீழான குற்றச்சாட்டை முடிவு செய்தல்**

ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி விசாரணை அறிக்கையினைப் பரிசீலித்து ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தனது கருத்துக்களை (Findings) அளிக்க வேண்டும். விசாரணை அலுவலரின் கண்டுபிடிப்புகள் ஒழுங்கு நடவடிக்கை அலுவலரைக் கட்டுப்படுத்தாது. ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் விசாரணை அறிக்கையினின்று மாறுபட்டும் இறுதி ஆணை வழங்க அதிகாரம் உடையவர் ஆவார்.

**ஒழுங்கு நடவடிக்கையை முடிவு செய்தல் [அ] இறுதி ஆணை வழங்குதல்**

விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் அதனை குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியருக்கு வழங்கி, அவர் மேற்கொண்டு மேல் விளக்கம்/முறையீடு ஏதேனும் செய்ய விரும்பினால் அதனை 15 நாட்களுக்கு மிகாத கால அளவுக்குள் ஒழுங்கு நடவடிக்கை

மேற்கொள்ள அதிகாரம் பெற்ற அலுவலருக்கு அனுப்பி வைக்கும்படி தெரிவிக்க வேண்டும். அவரது மேல் விளக்கத்தினைப் பெற்று மீண்டும் நன்கு பரிசீலனை செய்த பின்னர் இறுதி ஆணை வெளியிடப்பட வேண்டும். இறுதி ஆணை நிலைமையினை முழுமையாக விளக்குகிற பாங்கில் விரிவாக இருந்திட வேண்டும். அதனை தக்க ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியின் பெயரில் வெளியிடுவது மட்டுமின்றி அவரது கையொப்பத்துடன் வெளியிடப்பட வேண்டும். இறுதி ஆணை தக்க முறையில் குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியருக்கு சார்வு செய்யப்பட வேண்டும்.

அனைத்து கட்ட பரிசீலனைக்குப் பின்னர் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்யப்பட்டால் குற்றச்சாட்டின் மீது மேல் நடவடிக்கையை கைவிட்டு அதன்படி இறுதி ஆணையை வெளியிடலாம்.

ஒழுங்கு நடவடிக்கை, கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையின் அறிக்கையின் அடிப்படையில் தொடுக்கப்பட்டிருந்தால், மேல் நடவடிக்கையை கைவிடுவது தொடர்பான ஆணைகளை வெளியிடுவதற்கு முன் விழிப்புப்பணி ஆணையரின் (Vigilance and Anti-Corruption Wing) ஒப்புதலை சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத்துறை மூலம் பெற்றிட வேண்டும்.

**குற்றவியல் வழக்கில் தண்டிக்கப்படும் போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை**

குற்றவியல் வழக்கின் முடிவில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட அரசு ஊழியருக்கெதிராக விதி 17 (b)–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விரிவான நடவடிக்கையினைப் பின்பற்றிட தேவையில்லை. குற்றவியல் வழக்கில் தண்டனைக்குக் காரணமாக அமைந்த நிகழ்ச்சியின் வெளிப்பாடாக, விதி 17 (c) (e) (1)–ன் கீழ் அவர் முறையீடு ஏதேனும் செய்ய விரும்பினால் அதற்கு போதுமான வாய்ப்பினை நல்கி, அந்த முறையீட்டினைப் பரிசீலித்த பின்னர் தண்டனை வழங்கப்படலாம்.

**ஒரே நேரத்தில் குற்றவியல் மற்றும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை**

ஒரே நேரத்தில் குற்றவியல் மற்றும் துறை நிலையிலான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் நேர்வுகளில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் இருந்து பெற்று நடவடிக்கை எடுத்திடலாம். குற்றவியல் நடவடிக்கையில்

விடுவிக்கப்படுவதோ அல்லது தண்டிக்கப்படுவதோ வேறு நிலைப்பாடு.

அலுவலகப் பணிக்கு சற்றேதும் தொடர்பில்லாத குற்றவியல் வழக்கினை எதிர்கொண்டுள்ள அரசு ஊழியரை தேவைப்படும் நேர்வுகளில் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கலாம். குற்றவியல் வழக்கின் முடிவைப் பொறுத்து அவருக்கு எதிராக துறையளவிலான ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடலாம்.

**பதவி உயர்வு**

பதவி உயர்வுக்கு முன்னர் அரசு ஊழியர் மீது திட்டவட்டமான குற்றச்சாட்டு சுமத்தினாலோ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தாலோ பதவி உயர்வு பட்டியலில் அவர் பெயர் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் கூட அவருக்கு பதவி உயர்வு பாதிக்கும்.

[ மாதிரி படிவம் – 1 ]

## குற்றச்சாட்டுக் குறிப்பாணை – I

வட்டாட்சியர் அலுவலகம்,
ஆண்டிப்பட்டி,
தேனி மாவட்டம்

குற்றச்சாட்டுக் குறிப்பாணை ந.க. எண்.4629/2021/அ3 நாள்: 05.04.2021

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள் விதி17(b)–ன் கீழ், ஆண்டிப்பட்டி, வருவாய் துறை, வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள திரு.செ.முXXXXXXXX, தனது செயல்முறை / பணிநெறிமுறை தவறிய கவனக்குறைவான (Negligence), தான்தோன்றித்தனமான மற்றும் அலட்சியப் போக்குடன் உயர் அலுவலர்களின் உத்தரவினை தொடர்ந்து உதாசீனப்படுத்திய நடவடிக்கைகள் (Continuous Willful Disobedience and Arrogant Attitudes) தொடர்பாக ஆண்டிப்பட்டி, வருவாய் துறை, வட்டாட்சியரின் செயல்முறை நடவடிக்கைகள் (செ.மு.ந.க.எண்.4629/2021/அ3 நாள்: 30.03.2021) மூலம் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளது.

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள் விதி17(b)–ன் கீழ், ஆண்டிப்பட்டி, வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள திரு.செ.முXXXXXXXX, தனது செயல்முறை / பணிநெறிமுறை தவறிய கவனக்குறைவான (Negligence), தான்தோன்றித்தனமான மற்றும் அலட்சியப் போக்குடன் உயர் அலுவலர்களின் உத்தரவினை தொடர்ந்து உதாசீனப்படுத்திய நடவடிக்கைகள்(Continuous Willful Disobedience and Arrogant Attitudes) குறித்து விசாரணை ஒன்றை நடத்துவதற்கு கீழே ஒப்பமிட்டவர் கருதியுள்ளார்.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 1–ல் குறிப்பிட்டுள்ள தவறான நடவடிக்கைகள் அல்லது தவறான செய்கைகள் என குறிப்பிட்டு குற்றம் சுமத்தப்பட்டுள்ளவரின் மீதான குற்றச்சாட்டுகளின் விவரம் தரப்பட்டுள்ளது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் உரிய தவறான நடவடிக்கைகள் அல்லது தவறான செய்கைகள் என குறிப்பிடப்படும் குற்றச்சாட்டுகளுக்கான விரிவான மற்றும் தொகுப்பு விவரம் தரப்பட்டுள்ளது. இணைப்பு 3–ல் குற்றச்சாட்டுகளை நிலைநிறுத்திட தேவையான சான்றாவணங்களின் விவரமும், இணைப்பு 4–ல் குற்றச்சாட்டுகளை நிலைநிறுத்திட அதற்கு ஆதாரமாக சாட்சியம் அளிப்பவர்களின் பட்டியல் விவரமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலும் ஏதாகிலும் சாட்சியங்கள் அல்லது ஆவணங்கள் அவசியமானதாக கருதப்படுபவைகளை விசாரணை காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

2. இக்குறிப்பாணை கிடைக்கப் பெற்ற 15 நாட்களுக்குள் திரு. செ. முXXXXXXXX, இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளவர் தனது எழுத்து மூலமான மறுப்புரையை அளிப்பதுடன், வாய்மொழி விசாரணையை அல்லது நேரடியாக கேட்டறியப்படுதலை அல்லது மேற்கூறிய இரு வழிமுறைகளையும், அவர் விரும்புகிறாரா என்பதையும் திரு.செ. முXXXXXXXX, இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளவர் தெரிவிக்குமாறு பணிக்கப்படுகிறார். அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் குற்றச்சாட்டுகளுக்குரிய மறுப்புரை அடங்கிய எழுத்து மூலமான விளக்கங்கள் அன்னாரிடமிருந்து இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெறவில்லை எனில் அவரின் மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புரையாக அவர் தெரிவிக்க ஏதுமில்லை என கருதி மேல்நடவடிக்கைகள் தொடரப்படும்.

3. அவரால் ஏற்றுக் கொள்ளப்படாத அத்தகைய குற்றச்சாட்டுகள் தொடர்பில் வாய்மொழியான விசாரணையொன்று நடைபெறுமென்றும், வாய்மொழியான சான்று பகர்வது மட்டும் கேட்டறியப்படுமென்றும் அவர் அறிவிக்கப் பெறுகிறார். ஆகையினால் அவர் ஒவ்வொரு குற்றச்சாட்டையும் குறிப்பாக ஏற்றுக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ வேண்டும்.

4. மேலும், எழுத்து மூலமாக அவரின் மறுப்பறிக்கையை மேலே 2–வது பத்தியில் குறிப்பிடப்பெற்ற நாளிலோ அல்லது அதற்கு முன்னரோ அளிக்கப் பெறாவிடில் அல்லது விசாரணை செய்யும் அதிகாரியின் முன் நேரில் வருகை தராவிடில் அல்லது பிற வகையில் தவறின் அல்லது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (b)–ன் வழிவகைகளுக்கு அல்லது மேற்கூறிய விதியைப் பின்பற்றி வெளியிடப் பெற்ற ஆணைகளுக்கு அல்லது கட்டளைகளுக்கு இணங்க மறுப்பின் விசாரணை அதிகாரி அவருக்கெதிராக ஒரு சார்பான விசாரணையை மேற்கொள்வார் என திரு.செ. முXXXXXXXXXXXXX, இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளவர் இதன் மூலம் அறிவிக்கப் பெறுகிறார்.

5. 1973–ம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் நடத்தை விதிகளில் விதி 18–க்கு திரு.செ. முXXXXXXX, இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. இவ்விதியின் கீழ் அரசுப் பணியாளர் எவரும் அரசின் கீழ் அவரின் அரசுப்பணி தொடர்பிலான பொருண்மைகள் குறித்துப் பயன் பெறுகின்ற வகையில் யாராவதொரு உயர் அதிகாரியிடம் அரசியல் அல்லது வெளி செல்வாக்கு எதையும் சார்ந்ததாகக் கொண்டு வரவோ அல்லது கொண்டுவர முயற்சிக்கவோ கூடாது. இந்த நடவடிக்கைகளில் பேணப்படும் ஏதேனுமொரு பொருள் தொடர்பாக அவர் பொருட்டு எவரேனுமொருவரிடமிருந்து சார்பான முறையீடு ஏதாவது பெறப்படின், அத்தகையதொரு சார்பு முறையீடு குறித்து திரு.செ. முXXXXXXXX, இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளவர் அறிவார் என்றும், அவர்தம் முயற்சியாலேயே அது அனுப்பப்பட்டுள்ளது என்றும் ஊகிக்கப்பட்டு 1973–ம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் நடத்தை விதிகளின் விதி 18–னை மீறியமைக்காக அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பெறும்.

6. இத்துடன் இணைத்தனுப்பப்படும் வினாப்படிவத்தினை பூர்த்தி செய்து அனுப்பிடவும், இக்குறிப்பாணை கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புகையளிக்கவும் திரு.செ. முXXXXXXX, இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

வட்டாட்சியர்

**இணைப்பு :** இணைப்பு 1 முதல் 4 வரை மற்றும் அதனுடன் இணைந்த வினாப்படிவம்

**பெறுநர் :**

1. திரு. செ. முXXXXXXXX,(பதிவஞ்சல்மூலம்)
இளநிலை உதவியாளர்,
எண்.5, மேலத்தெரு,ஆண்டிப்பட்டி
ஆண்டிப்பட்டி வட்டம், தேனி மாவட்டம்.

**நகல் பணிந்தனுப்பப்படுகிறது**

2. வருவாய் கோட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பெரியகுளம்.
3. மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேனி.
4. உபரி.

வட்டாட்சியர் அலுவலகம்,
ஆண்டிப்பட்டி,
தேனி மாவட்டம்

**பின் இணைப்பு — 1**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ.முXXXXXXXX என்பவரின் செயல்முறை/பணிநெறிமுறை தவறிய கவனக்குறைவான (Negligence), தான்தோன்றித்தனமான மற்றும் அலட்சியப் போக்குடன் உயர் அலுவலர்களின் உத்தரவினை தொடர்ந்து உதாசீனப்படுத்திய நடவடிக்கைகளுக்கு (Continuous Willful Disobedience and Arrogant Attitudes) எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் விவரம்.

**குற்றச்சாட்டு எண். 1 :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில், இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ.முXXXXXXXX, தான் பணியாற்றிய இளநிலை உதவியாளர் பணிக்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ள பணி நெறிமுறைகளை நன்கு தெரிந்திருந்தும் (இத்துறை சார்ந்து சுமார் 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருந்தும்) இளநிலை உதவியாளர் என்ற முறையில், தனது பணியில் முறையாக மனதினை செலுத்தாமலும், பணி செய்ய விரும்பாத அக்கறையற்ற தொடர் மனப்போக்கினாலும், (Negligence & Non Appliction of mind) தனது அலுவலக பணிக்கான கடமையிலிருந்து தவறியது.

**குற்றச்சாட்டு எண். 2 :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு. செ. முXXXXXXXX,

(அ) கோப்புகளில் உரிய காலத்தில் முதல் நடவடிக்கைகள், அடுத்த நடவடிக்கைகள் மற்றும் மேல் நடவடிக்கைகளை எடுக்காததுடன்,

நீண்டகால நிலுவைகளையும் உருவாக்கி அலுவலக நடைமுறை விதிகளின்படி மேல்நடவடிக்கை எடுப்பதை முறையாக மேற்கொள்ளாதது மற்றும் பணியை புறக்கணித்து கடமையிலிருந்து தவறியது.

(ஆ) கோப்புகளைக் காலத்தே (வருடந்தோறும்) முடித்து பதிவறைக்கு அனுப்பாமல் தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கோப்புகளைக் குவித்து வைத்தல் மற்றும் அக்கறையற்ற நடத்தைகளினால் தனது பணிக்கான கடமையைச் செய்யத்தவறியது.

(இ) மேலும், பணிகளை முறைப்படுத்திட அக்கறை ஏதும் இல்லாத மனப்பான்மையுடன் கடமையைச் செய்யத் தவறியது.

**குற்றச்சாட்டு எண். 3 :**

தேனி மாவட்டம், வருவாய் துறை, வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX, கால வரையறை நிர்ணயிக்கப்பட்ட அரசு செயலாளர், மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் தொடர்பான அதிமுக்கியத்துவம்/மிக அவசரம் என அறிவுறுத்தப்படும் தபால்கள்/கோப்புகள் தொடர்பாக காலத்துடன் உரிய மற்றும் தொடர் நடவடிக்கைகள் எடுக்காமலும், அவசர அவசியத்தைக் கருத்தில் கொள்ளாமலும், குறித்த நேரத்தில் உயர் அலுவலகங்களுக்கு பதிலறிக்கை அனுப்புவதை உறுதிப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளாமலும், தனது கடமையிலிருந்து தவறுதல் மூலம் மற்றும் அலட்சியமான மற்றும் அநாகரீகமான நடத்தைகளின் காரணமாக தொடர்ந்து வட்டாட்சியரின் உத்தரவுகளை உதாசீனப்படுத்தி உயர் அலுவலர்களுக்கு கடுமையான மன உளைச்சலையும், அலுவலகத்தின் நிர்வாக நலனுக்கு நெருக்கடியையும் ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 4 :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX, அலுவலக நடைமுறைகளின்படி கோப்புகள் முறையாக கையாளப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், குறைபாடுகள்

கண்டறியப்பட்டால் காலத்தே களைந்திடும் நோக்கத்திற்காகவும், அலுவலக நடைமுறைகளின் அடிப்படையாகக் கருதப்படும் தனது எழுத்தர் பிரிவிற்குட்பட்ட பிரதி மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தொடர் குறிப்பேடு மற்றும் இதர பதிவேடுகளுடன் வட்டாட்சியர் ஆய்வுக்கு சமர்ப்பிக்கத் தவறியது மற்றும் சமர்ப்பிக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமலும், இதுநாள் வரை கோப்புகளை முறையாக கையாளாமலும் தனது கடமையிலிருந்து தவறியுள்ளது.

**குற்றச்சாட்டு எண். 5 :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு. செ. முXXXXXXX, அலுவலக நடைமுறைகளின் அடிப்படையாகக் கருதப்படும் தனது எழுத்தர் பிரிவிற்கான பணிமுன்னேற்றம் தொடர்பான நடப்பு மற்றும் முடிவு செய்யப்பட்ட கோப்புகள் தொடர்பாக நிலுவைப் பட்டியலை தான் பணியாற்றிய காலத்தில் பேணப்படாதது மற்றும் கோப்புகளை உரிய காலத்தில் நடவடிக்கைகள் மற்றும் மேல் நடவடிக்கைகளை எடுக்க இயலாத சூழ்நிலைகளையும், நீண்ட கால நிலுவைகளையும் உருவாக்கி மேல் நடவடிக்கை எடுப்பதை முறையாக மேற்கொள்ளாதது மற்றும் பணியை புறக்கணித்து கடமையிலிருந்து தவறியது. மேலும், தனது எழுத்தர் பிரிவில் எத்தனை கோப்புகள் உள்ளன என்பதைக் கூட தெரிந்து கொள்ளாமலும், ஒழுங்குபடுத்திட எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமலும் தவறான புள்ளி விவரங்களை சமர்ப்பித்தது மற்றும் தவறான நிர்வாகத்தினை மேற்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கியது.

**குற்றச்சாட்டு எண். 6 :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காகலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX, தனது எழுத்தர் பிரிவிற்கான குறைந்தபட்ச முக்கிய அடிப்படை பதிவேடுகளை முறையாக பேணப்பட வேண்டும்/முறையாக பதிவுகள் மேற்கொண்டு பராமரிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக பல்வேறு படிநிலை அலுவலர்களின் ஆய்வு மற்றும் மேற்படி அலுவலர்களின் பல்வேறு உத்திரவுகளுக்குப் பின்னரும் தனது எழுத்தர் பிரிவு சார்ந்த அடிப்படை பதிவேடுகளை முறையாக பேணப்படுவதை/முறையாக பதிவுகள் மேற்கொண்டு பராமரிக்கப்படுவதை உறுதி

செய்யாதது மற்றும் மேற்படி அலுவலர்களின் உத்தரவினைத் தொடர்ந்து உதாசீனப்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 7 :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காகலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX, காலங்காலமாக பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் மிகவும் அடிப்படையாகக் கருதப்படும் உடன் தபால்கள்/இன்றே தபால்கள் மீது உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளாமல் தனது கடமையிலிருந்து தவறியுள்ளது.

**குற்றச்சாட்டு எண். 8 :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காகலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX மீதான பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மேற்படி நபரின் நடத்தைகளுக்கெதிரான கண்டனம் தெரிவிக்கப்பட்டதற்கு எதிராக தன்னுடைய தவறான, ஒழுங்கற்ற மற்றும் அநாகரீக செயல்பாடுகளின் மூலமாக உயர் அலுவலர்களை வேண்டுமென்றே அவமதித்தல் மற்றும் உயர் அலுவலரின் உத்தரவுகளை மற்ற பணியாளர்களுக்கு மத்தியிலேயே உதாசீனப்படுத்துதல் மற்றும் கீழ்படிய மறுத்தல் மூலம் நிர்வாகத்தினைச் சீர்கெடச் செய்தல் மற்றும் முடக்குதல் போன்ற பல்வேறு தவறான நடத்தைகள் மூலமாக அரசு பணியாளருக்கான நன்னடத்தை விதிகளுக்கு புறம்பாக காலங்காலமாக தொடர்ந்து செயல்பட்டு வந்தது.

**குற்றச்சாட்டு எண். 9 :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காகலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX காலங்காலமாக பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் மற்றும் தனது எழுத்தர் பிரிவிற்கு மிகவும் அடிப்படையாகக் கருதப்படும் வழக்குப் பதிவேட்டினை பேணப்படாதது/முறையாக பதிவுகள் மேற்கொண்டு பராமரிக்கப்படுவதை உறுதி செய்யாதது மற்றும் அரசு (அரசு செயலாளர்), மாவட்ட ஆட்சியர் ஆகிய உயர்நிலை அலுவலர்களால் கோரப்படும் விவரங்களைக் குறித்த நேரத்தில் சமர்ப்பிக்க இயலாத நிலையை உருவாக்கி தனது கடமையிலிருந்து தவறியது.

வட்டாட்சியர்

வட்டாட்சியர் அலுவலகம்,
ஆண்டிப்பட்டி,
தேனி மாவட்டம்

**பின் இணைப்பு – 2**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX என்பவரின் செயல்முறை / பணிநெறிமுறை தவறிய கவனக்குறைவான (Negligence), தான்தோன்றித்தனமான மற்றும் அலட்சியப் போக்குடன் உயர் அலுவலர்களின் உத்தரவினை தொடர்ந்து உதாசீனப்படுத்திய நடவடிக்கைகளுக்கு (Continuous Willful Disobedience and Arrogant Attitudes) எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் விரிவான மற்றும் தொகுப்பு விவரம் (குறை கூறல்களின் சாரம்).

**குற்றச்சாட்டு எண். 1 – க்கான குறை கூறல்களின் சாரம் :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX,

| அலுவலர் விவரம் | இவ்வலுவலகத்தில் பணியாற்றிய அனுபவ விவரம் |
|---|---|
| திரு.செ. முXXXXXXXX | இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் 20.01.2016 முதல் பணி நியமனம் செய்யப்பட்டு 30.03.2021 முடிய பணிபுரிந்துள்ளார். (30.03.2021 முதல் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளார்) |
| மொத்த பணி அனுபவம் | 5 ஆண்டுகள் 2 மாதங்கள் 10 நாட்கள் (இவ்வலுவலகத்தில் மட்டும்) |

குறிப்பு : இவ்வலுவலகத்தில் மட்டும் சுமார் 5 ஆண்டுகள் 2 மாதங்கள் 10 நாட்கள் பணிபுரிந்து பல்வேறு வகையான ஆய்வுகள் (மாவட்ட ஆட்சியர் ஆய்வு, மாவட்ட ஆய்வுக்குழு, வருவாய் கோட்டாட்சியரின் காலமுறையான ஆய்வு, இவ்வலுவலகத்தில் பணியாற்றிய பல வட்டாட்சியர்களின் காலமுறையான ஆய்வு, மாவட்ட ஆட்சியர்/வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களின் தொடர் அறிவுறுத்தல்கள் உள்ளிட்டவை) தொடர்பாக பல்வேறு வகையான அலுவலக நடைமுறை சார்ந்த பணி அனுபவங்களை தான் பணிபுரிந்த காலத்தில் பெற்றிருந்தும், தனது இளநிலை உதவியாளர் பணி நெறிமுறைகள் குறித்து நன்கு அறிந்திருந்தும், (இத்துறை சார்ந்து சுமார் 5 ஆண்டுகள் பணி அனுபவம்) பிரிவு எழுத்தர் என்ற முறையில், தனது பணியில் முறையாக மனதினை செலுத்தாமலும், பணி செய்ய விரும்பாத அக்கறையற்ற தொடர் மனப்போக்கினாலும், (Negligence & Non Appliction of mind) தனது அலுவலக பணிக்கான கடமையிலிருந்து தவறியது.

இதற்கு கீழ்காணும் கோப்புகள் சான்றாக உள்ளன.

1. இவ்வலுவலக ந.க.எண்.94/2012/ஆ3 நாள்:08.08.2019.
2. இவ்வலுவலக ந.க.எண்.1164/2019/ஆ3 நாள்:21.08.2019.
3. இவ்வலுவலக ந.க.எண்.1473/2018/ஆ3 நாள்:11.05.2018.
4. இவ்வலுவலக ந.க.எண்.1015/2018/ஆ3 நாள்:27.05.2019.
5. இவ்வலுவலக ந.க.எண்.4786/2011/ஆ3 நாள்:19.06.2019.

இத்தனை ஆண்டுகள் பணி அனுபவம் (சுமார் 5 ஆண்டுகள்) பெற்றிருந்தும், ஒரு கடிதம் கூட பிழையின்றி எழுதத் தெரியாத நிலையையும், மற்றும் கற்றுக் கொண்டிடவும் அக்கறையற்ற தொடர் மனநிலையையும் கொண்டிருந்தார் என்பதற்கும், பணி செய்ய வேண்டும் என்ற எண்ணமே இல்லாத மனப்போக்கில் காலங்காலமாக இருந்து வந்துள்ளார் என்பதற்கும், எவ்வளவு மன உளைச்சல்களை இதன் மூலம் இவ்வலுவலகத்தில் பணியாற்றிய வட்டாட்சியர்களுக்கு அளித்துள்ளார் என்பதற்கும், மேற்காணும் கோப்புகளே சான்றாகும்.

**குற்றச்சாட்டு எண். 2 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX, என்பவரது தன் பதிவேடு தொடர்பான ஆய்வு விவரமானது கீழ்காணுமாறு (பணி முன்னேற்றம்),

## முதல் நடவடிக்கை, அடுத்த நடவடிக்கை மற்றும் கோப்புகளை முடித்து பதிவறைக்கு அனுப்பப்பட்டது தொடர்பான விவரம்

(20.01.2016 முதல் 31.12.2020 வரையிலான தன் பதிவேடுகளின் ஆய்வு விவரம்)

| வ. எண் | விவரம் | இப்பிரிவு எழுத்தர் தொடர்பான கோப்புகளின் ந.க. எண். விவரம் | நடவடிக்கை எடுக்கப்பட்ட கோப்புகளின் நடப்பு எண் விவரம் | அடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட கோப்புகளின் நடப்பு எண் விவரம் | முடிவு செய்யப்பட்ட கோப்புகளின் நடப்பு எண் விவரம் | பதிவறைக்கு அனுப்பப்பட்ட கோப்புகளின் விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2016–ம் ஆண்டிற்கான தன் பதிவேடு (தொகுதி 1) | ந.க.எண்.2003–ல் தொடங்கி 3337 வரையிலான இப்பிரிவிற்கான நடப்பு எண்கள் (மொத்தம் 303 கோப்புகள் /தபால்கள்) | ந.க.எண். 2038,2039, 2075,2091 (மொத்தம் 4 கோப்புகள்) | ஏதுமில்லை | ந.க.எண். 2182, 2499, 2545 (மொத்தம் 3 கோப்புகள்) | ஏதுமில்லை (பதிவறை எழுத்தரின் முத்திரை ஏதுமில்லை) |
| 2 | 2016–ம் ஆண்டிற்கான தன் பதிவேடு (தொகுதி 2) | ந.க.எண்.3338–ல் தொடங்கி 4202 வரையிலான இப்பிரிவிற்கான நடப்பு எண்கள் (மொத்தம் 214 கோப்புகள் /தபால்கள்) | ந.க.எண். 3429,3430, (மொத்தம் 2 கோப்புகள்) | ஏதுமில்லை | ந.க.எண். 3426, 3898, 3976,4200 (மொத்தம் 4 கோப்புகள்) | ஏதுமில்லை (பதிவறை எழுத்தரின் முத்திரை ஏதுமில்லை) |
| 3 | 2017–ம் ஆண்டிற்கான தன் பதிவேடு (தொகுதி 1) | ந.க.எண்.21–ல் தொடங்கி 2149 வரையிலான இப்பிரிவிற்கான நடப்பு எண்கள் (மொத்தம் 491 கோப்புகள் /தபால்கள்) | ந.க.எண். 672,1033, 1091,1092, 1837 (மொத்தம் 5 கோப்புகள்) | ஏதுமில்லை | ந.க.எண். 354,474,479, 520,526,529, 604,644,650, 750,1093, 1283,1669, (மொத்தம் 14 கோப்புகள்) | ஏதுமில்லை (பதிவறை எழுத்தரின் முத்திரை ஏதுமில்லை) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 2017–ம் ஆண்டிற்கான தன் பதிவேடு (தொகுதி 2) | ந.க.எண்.2150–ல் தொடங்கி 3575 வரையிலான இப்பிரிவிற்கான நடப்பு எண்கள் (மொத்தம் 237 கோப்புகள் /தபால்கள்) | ஏதுமில்லை | ஏதுமில்லை | ந.க.எண். 2257,2563, 2564,3005, 3573 (மொத்தம் 5 கோப்புகள்) | ஏதுமில்லை (பதிவறை எழுத்தரின் முத்திரை ஏதுமில்லை) |
| 5 | 2018–ம் ஆண்டிற்கான தன் பதிவேடு (தொகுதி 1 மற்றும் 2) | ந.க.எண்.56–ல் தொடங்கி 2100 வரையிலான இப்பிரிவிற்கான நடப்பு எண்கள் (மொத்தம் 427 கோப்புகள் /தபால்கள்) | ந.க.எண். 52,53,61,73, 74,76,234, 928 (மொத்தம் 8 கோப்புகள்) | ஏதுமில்லை | ந.க.எண். 615,752, 1203 (மொத்தம் 3 கோப்புகள்) | ஏதுமில்லை (பதிவறை எழுத்தரின் முத்திரை ஏதுமில்லை) |
| 6 | 2019–ம் ஆண்டிற்கான தன் பதிவேடு (தொகுதி1 மற்றும் 2) | ந.க.எண்.2265–ல் தொடங்கி 2642 வரையிலான இப்பிரிவிற்கான நடப்பு எண்கள் (மொத்தம் 377 கோப்புகள் /தபால்கள்) | ந.க.எண். 2410,2411, 2412,2413, 2415 (மொத்தம் 5 கோப்புகள்) | ஏதுமில்லை | ந.க.எண். 2356 (மொத்தம் 1 கோப்புகள்) | ஏதுமில்லை (பதிவறை எழுத்தரின் முத்திரை ஏதுமில்லை) |
| | கூடுதல் | **2249** (சுமார் 2 ஆண்டுகள் மற்றும் 2 மாதங்களுக்கான பணிக்காலத்தில்) | **42** (சுமார் 2 ஆண்டுகள் மற்றும் 2 மாதங்களுக் கான பணிக் காலத்தில்) | **ஏதுமில்லை** (சுமார் 2 ஆண்டுகள் மற்றும் 2 மாதங்களுக் கான பணிக் காலத்தில்) | **30** (சுமார் 2 ஆண்டுகள் மற்றும் 2 மாதங்களுக் கான பணிக் காலத்தில்) | **ஏதுமில்லை** (சுமார் 2 ஆண்டுகள் மற்றும் 2 மாதங்களுக் கான பணிக் காலத்தில்) |
| **Reference: 20.01.2016** முதல் **31.12.2020** வரையிலான ஆ1 பிரிவு எழுத்தரின் தன் பதிவேடு | | | | | | |

மேற்படி கோப்புகள் தொடர்பாக,

1. முதல் நடவடிக்கைக் கூட பெரும்பாலான கோப்புகளில் மேற்கொள்ளாமலும்,
2. தொடர் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாமலும்,
3. தொடர் நடவடிக்கை எடுப்பதில் தாமதத்தை ஏற்படுத்தியும்,
4. முடிவுற்ற கோப்புகள் பதிவறைக்கு அனுப்புவதில் தாமதத்தை ஏற்படுத்தியும்,
5. முடிவுற்ற கோப்புகள் பதிவறைக்கு அனுப்பப்படாமலும்,

என பல்வேறு வகையில் மேற்கொள்ள வேண்டிய கடமைகளில் அக்கறை காட்டாமலும், பணி செய்ய விரும்பாமலும் தனது கடமையிலிருந்து தொடர்ந்து தவறியுள்ளார்.

| வ. எண் | எழுத்தர் | காலமுறை அறிக்கைகள் / மாதாந்திர அறிக்கை கோப்புகளின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | ஆ1 | கா.மு. எண்.02/2019 (ஆக்கிரமிப்பு வரன்முறைப்படுத்துதல் விவரங்கள்) | காலமுறை அறிக்கையினை உரிய காலத்தில் (வாரந்தோறும்/மாதந்தோறும்) உயர் அலுவலங்களுக்கு சமர்ப்பிக்காமல் பணியில் அலட்சியப் போக்குடன் செயல்பட்டது. |
| 2. | ஆ1 | கா.மு. எண்.07/2019 (ஆக்கிரமிப்பு அகற்றுதல் விவரங்கள்) | காலமுறை அறிக்கையினை உரிய காலத்தில் (வாரந்தோறும்/மாதந்தோறும்) உயர் அலுவலங்களுக்கு சமர்ப்பிக்காமல் பணியில் அலட்சியப் போக்குடன் செயல்பட்டது. |

தனது எழுத்தர் பிரிவிற்கான காலமுறை அறிக்கைகள் / மாதாந்திர அறிக்கைகளை வருடந்தோறும் முடித்து பதிவறைக்கு அனுப்பாமலும் மற்றும் கோப்புகளைக் காலத்தே முடித்து பதிவறைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளாமலும் தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கோப்புகளைக் குவித்து வைத்தல் மற்றும் அக்கறையற்ற

நடத்தைகளினால் தனது எழுத்தர் பணிக்கான கடமையை செய்யத் தவறியுள்ளார். மேலும், பணிகளை முறைப்படுத்திட அக்கறை இல்லாத மனப்பான்மையுடன் தொடர்ந்து கடமை தவறியுள்ளார்.

**குற்றச்சாட்டு எண். 3 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ.முXXXXXXXX, தான் பணியாற்றும் தனது பிரிவு எழுத்தர் பணிக்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ள பணி நெறிமுறைகளை முறையாக கடைபிடிக்காமலும், மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்து மின்னஞ்சல் வழி கடிதம்/தபால் வழி கடிதம்/அலுவலக தொலைபேசி வாயிலாக மிக அவசரம்/அதிமுக்கியத்துவம் வாய்ந்த கோப்புகள் தொடர்பாக கேட்கப்பட்ட விவரங்களை உரிய காலத்தில் சமர்ப்பிக்காமல் காலந்தாழ்த்தியது.

| வ. எண் | கோப்பு தொடர்பான விவரம் | அவசரம்/அதி முக்கியத்துவத்தின் தன்மை | மாவட்ட ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட தேதி | அறிக்கை சமர்ப்பிக்கக் கோரிய கடைசி தேதி | சமர்ப்பிக்க ஏற்படுத்திய காலதாமதம் |
|---|---|---|---|---|---|
| 1 | தேனி, மாவட்ட ஆட்சியர் ந.க.எண். 4533/2018/சி1 நாள்:24.04.2019 | நீதிப்பேராணை மனுஎண். W.P.No.12094/ 2018 தற்போதைய நிலை விவரம் தெரிவித்தல் | 28.06.2019 (உடன்/இன்றே சமர்ப்பிக்க எழுத்து மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது) | உடன் சமர்ப்பித்திட | மேற்படி பணிகள் மிக மிக அவசரம் மற்றும் உடன் நடவடிக்கைக்கு என எழுத்தாலும், வாய்மொழியா கவும் அறிவுறுத்தப்பட்டதற்கு பின்னரும், மேற்படி கோப்புகள் தொடர்பான விவரங்களைக் குறித்த காலத்தில் உயர் அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்காமல் அவருக்கு அளிக்கப்பட்ட பணியினை செய்திடத் தொடர்ந்து அக்கறை காட்டாமலும், தனது கடமையிலிருந்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | தவறியதோடு மேற்படி விவரங்களை தற்சமயம் (30.03.2021) வரை சமர்ப்பிக்க இயலாத சூழ்நிலையை உருவாக்கியது. |
| 2 | தேனி, மாவட்ட ஆட்சியர் ந.க.எண். 4533/2019/சி1 நாள்:24.04.2019 | நீதிப்பேராணை மனுஎண். W.P.No.12094/ 2019 தற்போதைய நிலை விவரம் தெரிவித்தல் | 25.07.2019 (உடன்/இன்றே சமர்ப்பிக்க எழுத்து மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது) | உடன் சமர்ப்பித்திட | மேற்படி பணிகள் மிக மிக அவசரம் மற்றும் உடன் நடவடிக்கைக்கு என எழுத்தாலும், வாய்மொழியாகவும் அறிவுறுத்தப்பட்டதற்கு பின்னரும், மேற்படி கோப்புகள் தொடர்பான விவரங்களைக் குறித்த காலத்தில் உயர் அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்காமல் அவருக்கு அளிக்கப்பட்ட பணியினை செய்திடத் தொடர்ந்து அக்கறை காட்டாமலும், தனது கடமையிலிருந்து தவறியதோடு மேற்படி விவரங்களை தற்சமயம் (30.03.2021) வரை சமர்ப்பிக்க இயலாத சூழ்நிலையை உருவாக்கியது. |
| 3 | தேனி, மாவட்ட ஆட்சியர் ந.க.எண். 16633/2019/பி1 நாள்:25.07.2019 | **நினைவூட்டு–2** நீதிப்பேராணை மனுஎண். W.P.No.30898/ 2017 மனுதாரருக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்கக் கோருதல் தொடர்பாக. | 01.08.2019 (உடன்/இன்றே சமர்ப்பிக்க எழுத்து மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது) | உடன் சமர்ப்பித்திட | மேற்படி பணிகள் மிக மிக அவசரம் மற்றும் உடன் நடவடிக்கைக்கு என எழுத்தாலும், வாய்மொழியாகவும் அறிவுறுத்தப்பட்டதற்கு பின்னரும், மேற்படி கோப்புகள் தொடர்பான விவரங்களைக் குறித்த காலத்தில் உயர் அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்காமல் அவருக்கு அளிக்கப்பட்ட பணியினை செய்திடத் தொடர்ந்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | அக்கறை காட்டாமலும், தனது கடமையிலிருந்து தவறியதோடு மேற்படி விவரங்களை தற்சமயம் (30.03.2021) வரை சமர்ப்பிக்க இயலாத சூழ்நிலையை உருவாக்கியது. |
| 4 | தேனி, மாவட்ட ஆட்சியர் ந.க.எண். 18454/2019/அ1 நாள்:22.04.2019 | பல ஆண்டுகளாக அறிக்கை கோரப்பட்டு வரப்பெறுவது | 02.05.2018 | உடன் சமர்ப்பித்திட | மேற்படி பணிகள் மிக மிக அவசரம் மற்றும் உடன் நடவடிக்கைக்கு என எழுத்தாலும், வாய்மொழியாகவும் அறிவுறுத்தப்பட்டதற்கு பின்னரும், மேற்படி கோப்புகள் தொடர்பான விவரங்களைக் குறித்த காலத்தில் உயர் அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்காமல் அவருக்கு அளிக்கப்பட்ட பணியினை செய்திடத் தொடர்ந்து அக்கறை காட்டாமலும், தனது கடமையிலிருந்து தவறியதோடு மேற்படி விவரங்களை தற்சமயம் (30.03.2021) வரை சமர்ப்பிக்க இயலாத சூழ்நிலையை உருவாக்கியது. |
| மேற்படி கோப்புகள் போன்ற பல்வேறு மாவட்ட ஆட்சியர்/சார்நிலை அலுவலர்களின் அலுவலகக் கோப்புகள் / தபால்கள் மீது எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் பல மாதங்களாக/பல ஆண்டுகளாக நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாமல் உள்ளது. | | | | | |

மேற்படி கோப்புகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர்/வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்து பலமுறை தொலைபேசி வாயிலாகவும், மேற்படி பணிகள் மிக மிக அவசரம் மற்றும் உடன் நடவடிக்கைக்கு என எழுத்தாலும், நேரிலும் அறிவுறுத்தப்பட்டதற்குப் பின்னரும், மேற்படி கோப்புகள் தொடர்பான விவரங்களை குறித்த காலத்துடன் உயர் அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்காமல் அவருக்கு அளிக்கப்பட்ட பணிகளை செய்திட தொடர்ந்து அக்கறை காட்டாமலும், தனது

கடமையிலிருந்து தவறியதோடு மேலும் மேற்படி விவரங்களை தற்சமயம் (05.04.2021) வரை சமர்ப்பிக்க இயலாத சூழ்நிலையை உருவாக்கியது மற்றும் கடும் மன உளைச்சலை உயர் அலுவலர்களுக்கு ஏற்படுத்தியுள்ளார்.

**குற்றச்சாட்டு எண். 4 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX, அலுவலக நடைமுறைகளின்படி கோப்புகள் முறையாக கையாளப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், குறைபாடுகள் கண்டறியப்பட்டால் காலத்தே களைந்திடும் நோக்கத்திற்காகவும், அலுவலக நடைமுறைகளின் அடிப்படையாக கருதப்படும் தனது எழுத்தர் பிரிவிற்குட்பட்ட பிரதி மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தொடர் குறிப்பு பதிவேடு, முன்கொணர் பதிவேடு மற்றும் இதர பதிவேடுகளுடன் உதவி ஆணையரின் ஆய்வுக்கு சமர்ப்பிக்கத் தவறியது மற்றும் சமர்ப்பிக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமலும் இதுநாள் (05.04.2021) வரை கோப்புகளை முறையாக கையாளமலும் தனது கடமையிலிருந்து தவறியுள்ளார்.

**குற்றச்சாட்டு எண். 5 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX, அலுவலக நடைமுறைகளின் அடிப்படையாக கருதப்படும்,

**நிலுவைப் பட்டியல்**

| வருடம் | ஆரம்ப இருப்பு | வரவு | கூடுதல் | முடிவுசெய்தது | நிலுவை |
|---|---|---|---|---|---|
| 2019 | 1245 | 492 | 1737 | 30 | 1707 |
| 2020 | 1707 | 550 | 2257 | 42 | 2215 |

மேற்காணும் தபால்களின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமலும், அது பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள அக்கறை காட்டாமலும் தொடர்ச்சியாக கடமை தவறியுள்ளார்.

அலுவலக நடைமுறைகளின் அடிப்படையாகக் கருதப்படும் தனது எழுத்தர் பிரிவிற்கான பணிமுன்னேற்றம் தொடர்பான நடப்பு மற்றும் முடிவு செய்யப்பட்டகோப்புகள் தொடர்பாக நிலுவைப் பட்டியலைத் தான் பணியாற்றிய காலத்தில் பேணப்படாதது மற்றும் கோப்புகளை உரிய காலத்தில் நடவடிக்கைகள் மற்றும் மேல் நடவடிக்கைகளை எடுக்க இயலாத சூழ்நிலைகளையும்,

மேலும் கீழ்கண்ட கோப்புகள் தொடர்பாக,

1. மூன்று மாதத்திற்கு உட்பட்டவை
2. ஆறு மாதத்திற்கு உட்பட்டவை
3. ஒரு ஆண்டுக்கு உட்பட்டவை
4. ஒரு ஆண்டுக்கு மேற்பட்டவை தொடர்பாக,

நீண்டகால நிலுவைகளையும் உருவாக்கி மேல் நடவடிக்கை எடுப்பதை முறையாக மேற்கொள்ளாதது மற்றும் பணியை புறக்கணித்து கடமையிலிருந்து தவறியது. மேலும், தனது எழுத்தர் பிரிவில் எத்தனை கோப்புகள் உள்ளன என்பதைக் கூட தெரிந்து கொள்ளாமலும், ஒழுங்குபடுத்திட எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமலும் தவறான புள்ளி விவரங்களை சமர்ப்பித்தது மற்றும் தவறான நிர்வாகத்தினை மேற்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கி உள்ளார்.

**குற்றச்சாட்டு எண். 6 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

தேனி மாவட்டம், வருவாய் துறை, வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ.முXXXXXXX, தான் பணியாற்றும் இளநிலை உதவியாளர் பணிக்கு என நிர்ணயிக்கப்பட்ட பணி நெறிமுறைகளை (இத்துறை சார்ந்து 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருந்தும்) நன்கு தெரிந்திருந்தும் பணி செய்ய விரும்பாத,அக்கறையற்ற தொடர் மனப்போக்கினாலும், அவருடைய பணிக்காலத்தில் இப்பிரிவு எழுத்தரின் குறைந்தபட்ச முக்கிய அடிப்படை பதிவேடுகளான,

1. முன்கொணர் பதிவேடு
2. தொடர் குறிப்பு பதிவேடு
3. காலமுறை அறிக்கைகளும் பதிவேடுகளும்
4. இருப்பு கோப்பு (பொருள் வாரியாக)

5. நினைவூட்டு நாட்குறிப்பேடு
6. மாதாந்திர நிலுவைப் பட்டியல் பதிவேடு
7. சுத்தநகல் பதிவேடு
8. துணை ரொக்கப் பதிவேடு
9. அமைச்சுப் பணியாளர்கள் சார்ந்த குடும்பநல நிதிப் பதிவேடு

போன்ற பதிவேடுகளை முறையாகப் பேணப்பட வேண்டும் மற்றும் முறையாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக கீழ்கண்ட அலுவலர்களின் குறிப்பிட்ட உத்திரவுகளை பெற்றிருந்த பின்னரும்,

1. தேனி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வு (எதிர்பாராத ஆய்வு நாள்:30.01.2018)

2. தேனி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வு (எதிர்பாராத ஆய்வு நாள்:09.01.2019)

மேற்படி ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்திடும் பொருட்டு,

1. இவ்வலுவலக அலுவலக ஆணை எண்.09/2018 நாள்:12.06.2018 அன்று மீண்டும் உத்தரவிடப்பட்டிருந்தும்,

2. இவ்வலுவலக ந.க. எண்.107/2019/அ3 நாள்: 20.03.2019 உத்தரவின் மூலம் மேற்படி ஆய்வுக்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்திட மீண்டும் கோரப்பட்டிருந்தும்,

3. தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக ந.க. எண்.5167/2019/அ1 நாள்: 07.05.2019 உத்தரவின் மூலம் மீண்டும் மேற்படி ஆய்வுக்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்திட மீண்டும் கோரப்பட்டிருந்தும்,

மேற்படி அலுவலர்களால் நேரடியாக கண்டனங்களை பல்வேறு வகையில் தெரிவிக்கப்பட்ட பின்னரும், மேற்படி பல்வேறு படிநிலை அலுவலர்களின் ஆய்வு மற்றும் மேற்படி அலுவலர்களின் பல்வேறு உத்தரவுகளுக்குப் பின்னரும், அதனை சிறிதும்

பொருட்படுத்தாமலும், இதுநாள் வரை ஆக்கப்பூர்வமான எவ்வித பணிகளையும் மேற்கொள்ளாமலும், மேற்படி பதிவேடுகளை முறையாக பேணப்படாமல்/முறையாகப் பதிவுகள் மேற்கொண்டு பராமரிக்காமல், மேற்காணும் பல்வேறு படிநிலை அலுவலர்களின் உத்தரவுகளைத் தெரிந்தே உதாசீனப்படுத்தியுள்ளார்.

**குற்றச்சாட்டு எண். 7 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX, காலங்காலமாக/பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் மிகவும் அடிப்படையாகக் கருதப்படும் உடன் தபால்கள்/இன்றே தபால்கள் மீது உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளாமல் தனது கடமையிலிருந்து தவறி தவறுகை புரிந்துள்ளார்.

**குற்றச்சாட்டு எண். 8 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX மீதான பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக மேற்படி நபரின் நடத்தைகளுக்கெதிரான கண்டனம் தெரிவிக்கப்பட்டதற்கு எதிராக தன்னுடைய தவறான, ஒழுங்கற்ற மற்றும் அநாகரீக செயல்பாடுகளின் மூலமாக உயர் அலுவலர்களை வேண்டுமென்றே அவமதித்தல் மற்றும் உயர் அலுவலரின் உத்தரவுகளை மற்ற பணியாளர்களுக்கு மத்தியிலேயே, உதாசீனப்படுத்துதல் மற்றும் கீழ்படிய மறுத்தல் மூலம், நிர்வாகத்தினையும் அலுவலக பணியாளர்களையும் சீர்கெடச் செய்தல் மற்றும் மேற்படி அநாகரீகமான நடத்தைகளின் மூலமாக உயர் அலுவலர்களை முடக்குதல் உள்ளிட்ட அரசு குடிமைப்பணியாளர் நன்னடத்தை விதிகளுக்கு எதிராக காலங்காலமாக தொடர்ந்து செயல்பட்டு வந்துள்ளார் என்பதும், மேற்படி திரு.செ. முXXXXXXXXXXXX, இளநிலை உதவியாளருக்கு எதிராக தொடர்ந்து பல ஆண்டுகளாக பல்வேறு நிலை அலுவலர்களால் துவக்கப்பட்ட நடவடிக்கைகள் மேற்படி நபரின் நடத்தைகளை உறுதிப்படுத்தும் விதமாக அமைந்தது மட்டுமல்லாமல் அவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான விவரங்கள் கீழ்காணுமாறு,

1. இவ்வலுவலக ந.க.எண்.7328/2018/அ3 நாள்:23.11.2018

2. இவ்வலுவலக ந.க.எண்.7328/2018/அ3 நாள்:27.02.2019
3. இவ்வலுவலக ந.க.எண்.7328/2018/அ3 நாள்:19.11.2020
4. இவ்வலுவலக ந.க.எண்.7328/2018/அ3 நாள்:23.11.2018
5. பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக ந.க.எண்.44813/2019/பி2 நாள்:22.07.2019
6. தேனி, மாவட்ட ஆட்சியர் அறிக்கை ந.க. எண்.7158/2019/அ1 நாள்:05.09.2019
7. இவ்வலுவலக ந.க.எண்.7328/2020/அ3 நாள்:28.08.2020

மேற்கண்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு எதிராக,

1. திரு.செ.முXXXXXXXXXXX, இளநிலை உதவியாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விசாரணை அலுவலர் அறிக்கையின் மீதான மேல் விளக்க கடித நாள்:17.12.2020. மேற்படி கடிதமானது அவரது ஆணவ மற்றும் அவமதிக்கும் போக்கையும் ஒழுங்கற்ற தான்தோன்றித்தனமான நடத்தையையும் மேலும் உறுதிப்படுத்துகிறது.

மேற்படி வகையில் உயர் அலுவலர்களின் பல்வேறு உத்தரவுகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளை சிறிதும் பொருட்படுத்தாமலும், இதுநாள் வரை ஆக்கப்பூர்வமான எவ்வித பணிகளையும் மேற்கொள்ளாமலும், அவரது பணிக்காலத்தில் பணியாற்றிய பெரும்பான்மையான உயர் அலுவலர்களையும் தன்னுடைய தவறான மற்றும் முறையற்ற அநாகரீக நடத்தையினால் முடக்கி தன்னைக் கண்டுகொள்ளாத வகையில் செய்திடும் பொருட்டு தன் போக்கினைத் தொடர்ந்து மாற்றிக் கொள்ளாமல் பின்பற்றி வந்துள்ளார். தனது தொடர் செயல்முறை/பணிமுறை தவறிய கவனக் குறைவான(Negligence) மற்றும் அலட்சியப் போக்குடன் தான்தோன்றித்தனமான உயர் அலுவலர்களின் உத்தரவினைத் தொடர்ந்து உதாசீனப்படுத்திய நடவடிக்கைகளுக்கு (Continuous Willful Disobedience and Arrogant Attitudes) எதிராகவும், மேற்படி நபர் திருந்துவதற்கு எந்த அறிகுறியும் இல்லாததோடு, உயர் அலுவலர்களை வேண்டுமென்றே அவமதிப்பதைத் தொடர்ந்து காணும் போது வேறு எவ்வழி முறையும் பலனளிக்காது என்ற நிலையிலேயும், இவரை இவ்வலுவலகத்தில் வைத்து பணி செய்வதையே கொடுமை என கருதும் அளவிற்கு மன உளைச்சலைத் தொடர்ந்து ஏற்படுத்தியதன் காரணமாக மேற்படி நபரை தற்காலிகப் பணி நீக்கம் செய்வதைத் தவிர வேறு எவ்வழியும் பலனளிக்காது என்ற நிலையிலேயும், அலுவலக நிர்வாகத்தின் ஸ்திர தன்மையை நிலைநாட்டிடும் பொருட்டும் ஆண்டிப்பட்டி, வருவாய் துறை,

வட்டாட்சியரின் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் (செ.மு.ந.க.எண்.4629/2021/அ3 நாள்: 30.03.2021) தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது.

**குற்றச்சாட்டு எண். 9 – க்கான குறை கூறல்களின் சாரம் :**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX, காலங்காலமாக / பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் மற்றும் தனது எழுத்தர் பிரிவிற்கு மிகவும் அடிப்படையாக கருதப்படும் வழக்குப் பதிவேட்டினைப் பேணப்படாதது/முறையாகப் பதிவுகள் மேற்கொண்டு பராமரிக்காதது மற்றும் அரசு (அரசு செயலாளர்), மாவட்ட ஆட்சியர் ஆகிய உயர்நிலை அலுவலர்களால் கோரப்படும் விவரங்களைக் குறித்த நேரத்தில் சமர்ப்பிக்க இயலாத நிலையை உருவாக்கி தனது கடமையிலிருந்து தவறியுள்ளார்.

வட்டாட்சியர்

வட்டாட்சியர் அலுவலகம்,
ஆண்டிப்பட்டி,
தேனி மாவட்டம்

**பின் இணைப்பு — 3**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX அவர்களுக்கு எதிராக சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளுக்கான சான்றாவணங்களின் பட்டியல்

1. இவ்வலுவலக ந.க. எண்.94/2019/ஆ1 நாள்:08.08.2019
2. இவ்வலுவலக ந.க. எண்.1164/2019/ஆ1 நாள்:21.08.2019
3. இவ்வலுவலக ந.க. எண்.1473/2018/ஆ1 நாள்:11.05.2018
4. இவ்வலுவலக ந.க. எண்.94/2018/ஆ1 நாள்:02.05.2018
5. இவ்வலுவலக ந.க. எண்.1015/2018/ஆ1 நாள்:27.05.2019
6. இவ்வலுவலக ந.க. எண்.94/2012/ஆ1 நாள்:04.06.2019
7. இவ்வலுவலக ந.க. எண்.4786/2019/ஆ1 நாள்:19.06.2019
8. இவ்வலுவலக ந.க. எண்.94/2019/ஆ1 நாள்:08.08.2019
9. இவ்வலுவலக காலமுறை அறிக்கைகள்.02/2019/ஆ1
10. இவ்வலுவலக காலமுறை அறிக்கைகள்.07/2019/ஆ1
11. தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக ந.க.எண்.4533/2019/சி1 நாள்: 24.04.2019
12. தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக ந.க.எண்.4533/2019/சி1 நாள்: 16.07.2019
13. தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக ந.க.எண்.16639/2019/சி1 நாள்: 25.07.2019

14. தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக ந.க.எண்.18545/2019/சி2 நாள்: 17.02.2019
15. தேனி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வு (எதிர்பாராத ஆய்வு நாள்:30.01.2018)
16. தேனி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வு (எதிர்பாராத ஆய்வு நாள்:09.01.2019)
17. இவ்வலுவலக அலுவலக ஆணை எண்.05/2018 நாள்:12.06.2018
18. இவ்வலுவலக ந.க. எண்.104/2019/அ3 நாள்: 20.03.2019
19. தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக ந.க.எண்.5167/2019/அ1 நாள்: 07.05.2019
20. மறுகவனிப்பு பதிவேடு
21. தொடர் குறிப்பு பதிவேடு
22. பொறுப்பு ஒப்படைப்பு பட்டியல்
23. இன்றே/உடன் பதிவேடு (2017, 2018, 2019)
24. வட்டாட்சியர் குறியீடு
25. இவ்வலுவலக செ.மு.ந.க. எண்.2649/2019/அ3 நாள்:28.08.2019
26. இவ்வலுவலக அலுவலக ஆணை எண்.08/2019 நாள்:23.07.2019
27. முன்கொணர் பதிவேடு
28. காலமுறை அறிக்கைகளும், பதிவேடுகளும்
29. இருப்பு கோப்பு(பொருள் வாரியாக)
30. நினைவூட்டு நாட்குறிப்பேடு
31. மாதாந்திர நிலுவைப்பட்டியல் பதிவேடு
32. சுத்த நகல் பதிவேடு
33. அலுவலக ஆணை பதிவேடு
34. இப்பிரிவு எழுத்தரின் தன்பதிவேடுகள் (2017, 2018, 2019)

35. இவ்வலுவலக ந.க. எண்.7328/2018/அ3 நாள்:23.11.2018
36. இவ்வலுவலக ந.க. எண்.7328/2018/அ3 நாள்:27.02.2019
37. இவ்வலுவலக ந.க. எண்.7328/2018/அ3 நாள்:19.11.2020
38. இவ்வலுவலக ந.க. எண்.7328/2018/அ3 நாள்:23.11.2018
39. தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக ந.க. எண்.7158/2018/அ1 நாள் : 05.09.2018
40. இவ்வலுவலக ந.க. எண்.2649/2019/அ3 நாள் : 28.08.2019
41. திரு. செ. முXXXXXXXX, இளநிலை உதவியாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விசாரணை அலுவலர் அறிக்கையின் மீதான மேல் விளக்க கடித நாள்:17.12.2020
42. வழக்குப் பதிவேடு

இதற்கு மேலும ஏதாகிலும் சான்றாவணங்கள் அவசியமானதாகக் கருதப்படுபவைகளை விசாரணை காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வட்டாட்சியர் அலுவலகம்
ஆண்டிப்பட்டி,
தேனி மாவட்டம்

**பின் இணைப்பு — 4**

தேனி மாவட்டம், வருவாய் துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி தற்சமயம் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள திரு.செ. முXXXXXXXX அவர்களுக்கு எதிராக சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு சாட்சியம் அளிக்க முன்வந்தவர்கள்/உள்ளவர்களின் சாட்சியம் தொடர்பான விவரமானது சாட்சியங்கள் கலைக்கப்படக்கூடும்/மாற்றப்படக் கூடும் என்பதன் காரணமாக சாட்சியம் அளிக்க முன்வந்தவர்கள்/உள்ளவர்களின் சாட்சியம் தொடர்பான விவரங்கள் பொதுநலன் கருதி பாதுகாக்கப்படுகிறது. மேற்படி சாட்சிகள் வழங்க உள்ள சாட்சியங்கள் குறித்த விவரமானது விசாரணை அலுவலர் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும்.

இதற்கு மேலும ஏதாகிலும் சான்றாவணங்கள் அவசியமானதாகக் கருதப்படுபவைகளை விசாரணை காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வட்டாட்சியர்

## QUESTIONNAIRE FORM

| | | |
|---|---|---|
| 1. | Have you any objection to the form of any of the charges? | |
| 2. | In addition to the written statement of your defense which you are now required to submit, you are entitled continue your defense on the following methods<br>(a) An oral enquiry held in your presence<br>(b) To be heard in person without an oral enquiry<br>Please state in the column opposite whether you enquire either method to be adopted<br>Note: if you choose methods<br>(a) The following witnesses will be recalled to prove the charges<br>(i) Witness examined in your presence at the preliminary enquiry<br>(ii) Witness not yet examined in your presence<br>The evidence recorded from (i) at the preliminary enquiry will be read out at the regular enquiry and you will be given an opportunity to cross-examine the witnesses again<br>Any evidence recorded from (ii) at the preliminary enquiry will be also be read out at the regular enquiry unless you prefer that any of the witnesses be examined in brief before you will be given an opportunity to cross-examine them | |
| 3. | (i) Do you wish to give evidence yourself?<br>(ii) If so, on what points? | |
| 4. | (i) Do you wish to have any witnesses examined on your behalf?<br>(ii) If so, state their names and note briefly the matters to which they are called to depose.<br>Note:<br>After the completion of the enquiry you may, if so you so desire put in a further written statement, of your defense. | |
| 5. | Do you desire to be supplied with copies of any records or the depositions or witnesses or the report of the inquiry officer? If so, give particulars of the records copies of which are required? | |

[ மாதிரி படிவம் – 2 ]

## குற்றச்சாட்டுக் குறிப்பாணை – II

இணை ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்

<u>குற்றச்சாட்டுக் குறிப்பாணை ந.க. எண்.3920/2022 ஆ2 நாள் : 02.02.2022</u>

1. தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 17 (b)–ன் கீழ் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் நிலை – 2 செயல் அலுவலராகப் பணிபுரிந்த திரு. வே. காXXXXXXXX அவர்களுக்கெதிராக நிர்வாகக் குறைபாடுகளுக்காக, விசாரணையொன்றை நடத்துவதற்குக் கீழே ஒப்பமிட்டுள்ளவர் கருதியுள்ளார். குறைகூறல்களின் சாரம் அதாவது, செயல்முறை தவறிய அல்லது பணிமுறை தவறி நடந்து கொள்ளல் பற்றிச் சுமத்தப்பட்டுள்ள குற்றங்களின் மீது நடத்தப் பெறக் கருதியுள்ள விசாரணையைப் பற்றி பின் இணைப்பு 1–ல் அடைவு செய்து தரப்பட்டுள்ளது. குறைகூறல்களின் அட்டவணையொன்று அதாவது செயல்முறை தவறிய அல்லது பணிமுறை தவறி நடந்து கொள்ளல் பற்றிச் சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கு ஆதாரமான ஒவ்வொரு குற்றச்சாட்டும் பின் இணைப்பு 2–ல் இணைக்கப்பட்டுள்ளது. கருதப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் வலுவானவை எனக் கருதுவதற்குரிய ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் பட்டியலொன்றும் முறையே பின் இணைப்பு 3, பின் இணைப்பு 4 ஆகியவற்றில் இணைக்கப்பட்டுள்ளன. தேவையெனக் கண்டறியப்படும் வேறெந்த ஆவணங்களும், சான்றுரைஞர்களும் விசாரணை நடைபெறும்போது ஆராய்வு செய்யப்பெறுவர்.

2. இக்குறிப்பாணை கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் அவரின் எழுத்து மூலமான மறுப்புரையை அளிப்பதுடன் வாய்மொழி விசாரணையை அல்லது நேரடியாகக் கேட்டறியப்படுதலை அல்லது மேற்கூறிய இருவழிமுறைகளையும் அவர் விரும்புகிறாரா என்பதையும் தெரிவிக்குமாறு திரு. வே. சாXXXXXXXX செயல்

அலுவலர் பணிக்கப்பெறுகிறார். எதிர்வாதத்திற்குரிய எழுத்துமூலமான மறுப்பறிக்கையானது, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் கிடைக்கப் பெறவில்லையெனில், அவர் அளிப்பதற்குரிய மறுப்புரை ஏதுமில்லை எனக் கருதி மேற்கண்ட நடவடிக்கை தொடரப்படும்.

3. அவரால் ஏற்றுக் கொள்ளப்படாத அத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வாய்மொழியான விசாரணையொன்று நடைபெறுமென்றும், வாய்மொழியான சான்று பகர்வது மட்டும் கேட்டறியப்படுமென்றும் அவர் அறிவிக்கப்பெறுகிறார். ஆகையினால் அவர் ஒவ்வொரு குற்றச்சாட்டையும் குறிப்பாக ஏற்றுக் கொள்ள அல்லது மறுக்க வேண்டும்.

4. மேலும் எழுத்து மூலமான அவரின் மறுப்பறிக்கையை மேலே 2–வது பத்தியில் குறிப்பிடப்பெற்ற நாளிலோ அல்லது அதற்கு முன்னரோ அளிக்கப்பெறாவிடில் அல்லது விசாரணை செய்யும் அதிகாரியின் முன் நேரில் வருகை தராவிடில் அல்லது பிற வகையில் தவறின் அல்லது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 17 (பி) விதியின் வழிவகைகளுக்கு அல்லது மேற்கூறிய விதியைப் பின்பற்றி வெளியிடப் பெற்ற ஆணைகளுக்கு அல்லது கட்டளைகளுக்கு இணங்க மறுப்பின் விசாரணை அதிகாரி அவருக்கெதிராக ஒரு சார்பான விசாரணையைத் தொடர்வார் என திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் அறிவிக்கப்பெறுகிறார்.

5. 1973–ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகளின் விதி 18–க்கு திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் அவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. இவ்விதியின் கீழ் அரசுப் பணியாளர் எவரும் அரசின் கீழ் அவரின் அரசுப் பணி தொடர்பிலான பொருண்மைகள் குறித்துப் பயன்பெறுகின்ற வகையில் யாராவது ஒரு அதிகாரியிடம் அரசியல் அல்லது வெளிச் செல்வாக்கு எதையும் சார்ந்ததாகக் கொண்டு வரவோ அல்லது கொண்டு வர முயற்சிக்கவோ கூடாது. இந்த நடவடிக்கைகளில் பேணப்படும் ஏதேனும் ஒரு பொருள் தொடர்பாக அவர் பொருட்டு எவரேனும் ஒருவரிடமிருந்து சார்பான முறையீடு ஏதாவது பெறப்படின் அத்தகையதொரு சார்பு முறையீடு குறித்து திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் அறிவார் என்றும் அவர்தம் முயற்சியாலேயே அது அனுப்பப்பட்டுள்ளது என்றும் ஊகிக்கப்பட்டு 1973–ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகளின் விதி 18–னை மீறியமைக்காக அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பெறும்.

6. இத்துடன் இணைத்து அனுப்பப்படும் வினா படிவத்தினைப் பூர்த்தி செய்து அனுப்பிடவும் இக்குறிப்பாணைப் பெற்றமைக்கு ஒப்புகை அளிக்கவும் திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலரைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணை ஆணையர்

**பெறுநர் :**

1. திரு.வே. சாXXXXXXXX (பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்)
   செயல் அலுவலர் நிலை 2 (தற்காலிகப் பணிநீக்கம்)
   எண்.104, மேலூர் மெயின் ரோடு,
   வளர் நகர், மதுரை **625 107.**

**நகல்:**

2. ஆய்வர், இந்து சமய அறநிலையத்துறை, விராலிமலை.
3. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை.

**நகல் பணிந்தனுப்படுகிறது**

4. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.
5. மிகை.

இணை ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.

**பின் இணைப்பு — 1**

தவறான நடத்தை அல்லது நெறிதவறி நடந்து கொள்ளுதல் அடிப்படையில் திரு.வே. சாXXXXXXXX, செயல் அலுவலர், நிலை–2 (தற்காலிகப் பணிநீக்கம்) என்பவருக்கு எதிராக சுமத்துவதற்கு கருதப்பட்டுள்ளக் குற்றச்சாட்டுகள் குறித்த அட்டவணை

**குற்றச்சாட்டு எண். 1 :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலிமனையில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு, வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதியான சிவன் கோயில் கீழ ரத வீதியின் வழிகாட்டி மதிப்பு பெறாமல், மதிப்பு குறைந்த பெருமாள் கோவில் வடக்கு மாட வீதியின் சந்தை மதிப்பினைப் பெற்று அதன் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்ய கணக்கீடு தயார் செய்து, இணை ஆணையருக்குப் பரிந்துரை செய்து குறைவான மதிப்பின் அடிப்படையில் நியாய வாடகை கட்டணம் நிர்ணயம் செய்து திருக்கோவிலுக்கு பெரிய அளவில் நிதியிழப்பினை ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 2 :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலி மனையில் துறை அனுமதியின்றி புதிதாக வணிக வளாகம் கட்டுவது தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு ஏ.எஸ்.524/2017–ல் ஆணையரால் இணக்கத் தீர்வு ஏற்படுத்தப்பட்டு, ஆணையர் சென்னை ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017–ன்படி 01.07.1993 முதல் 28.02.2017 முடிய வாடகைதாரரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட வாடகைத் தொகை ரூ. 1,32,000/– போக மீதமுள்ளத் தொகை ரூ.17,54,051.68/–னை வசூல் செய்து நிரந்தர முதலீட்டில் முதலீடு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்குப் பின்பு இரண்டு ஆண்டுகள் இத்திருக்கோயிலில் செயல் அலுவலராகப் பணியாற்றிய போதும் நிலுவைத் தொகையினை முறையாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்காததால் நாளது தேதி வரை ரூ.14,90,000/– வசூல் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இதனால் நிலுவைத்

தொகையினை வசூல் செய்து நிரந்தர முதலீடு செய்வதன் மூலம் வரப்பெறும் வட்டி வருவாய் இனத்தினை தடை செய்து திருக்கோவிலுக்கு நிதி இழப்பினை ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 3 :**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான விராலிமலை நகரில் சர்வே எண்.12/1–ல் உள்ள 9 ஏக்கர் 20 சென்ட் புன்செய் நிலம் திரு. சண்முகம் என்பவர் வசம் உள்ளது. மேற்காணும் நிலத்திற்கு திரு. சண்முகம் வருடம் ஒன்றுக்கு ரூ.400/– குத்தகையாக செலுத்தி வருகிறார். மேற்படி நிலத்தினைச் சுற்றியுள்ள நிலங்களில் வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பு பகுதியாக மாறியுள்ளதால் குத்தகைதாரரை வெளியேற்ற வருவாய் நீதிமன்றத்தில் பி.டி.150/2020 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் திரு. சண்முகம் இவ்விடத்தில் நீண்ட காலமாக விவசாயம் ஏதும் செய்யாமல் இருந்த காரணத்தினாலும் மேற்படி இடம் விவசாயத்திற்கு தகுதியற்ற மற்றும் குடியிருப்பு பகுதியாக மாறியுள்ள காரணத்தினாலும், மேற்படி இடத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றவும், அவர் இதுவரை செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையினைச் செலுத்த வேண்டியும், வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி வழக்கில் 05.04.2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் குத்தகைதாரரை வெளியேற்ற உத்தரவிடாமல் தாவா நிலத்திற்குரிய குத்தகை பாக்கியை மூன்று மாதத்திற்குள் மனுதாரர் செலுத்த வேண்டும் எனவும், தவறினால் எதிர் மனுதாரரே தாவா நிலத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றலாம் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், தாவா நிலத்திற்கு நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால் அதற்கு தனியாக நீதிமன்றத்தில் மனு செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், நியாயக் குத்தகை நிர்ணயம் செய்வதற்கு எவ்விதமான நடவடிக்கையும் செயல் அலுவலரால் எடுக்கப்படவில்லை.அதனால், நாளது தேதி வரை வருடம் 1–க்கு ரூ.400/– மட்டுமே குத்தகைத் தொகையாக பெறப்பட்டு வரப்பெறுகிறது. நியாய குத்தகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் இருந்து திருக்கோவிலுக்கு மிகப்பெரிய நிதி இழப்பினை ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 4 :**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான, வடக்கு மாட வீதியில் வார்டு எண். 20, கதவு எண்.120–ல் உள்ள காலிமனைக்கு தற்போதைய மாத வாடகை ரூ.161/– ஆகும். திரு.

கந்தசாமி என்பவர் வாடகைதாரராக இருந்து வருகிறார். ஆனால் மேற்படி இடத்தின் வாடகைதாரர் இலாகா அனுமதியில்லாமல் ஒன்பது கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்டி அதனை உள்வாடகைக்கு விட்டு வருகிறார். இலாகா அனுமதி பெறாமல் கட்டடம் கட்டுவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காமல் வாடகைதாரருடன் உடந்தையாக இருந்து இலாகா சட்டவிதிகளுக்கு எதிராகவும், திருக்கோவில் நலனுக்கு எதிராகவும் செயல்பட்டது.

**குற்றச்சாட்டு எண் 5. :**

பசலி 1430–க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.5–ல் மேற்படி பசலியில் பங்குனி மாத உற்சவத்திற்கான செலவு இனங்களில் ஆலயத் தேரைக் கழுவும் பணி உபயதாரர் மூலம் செய்யப்படும் என பதிவு செய்யப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஆனால் ஆலயத் தேரைக் கழுவுவதற்கு ரூ.3,200/– செலவிடப்பட்டு அதற்கு செலவுச்சீட்டு வைக்கப்பட்டுள்ளது. எனவே, உபயதாரர் மூலம் செலவினைச் செய்துவிட்டு ரூ.3,200/– முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை இழப்பாகக் கருதி பொறுப்பாளர்களிடம் இருந்து ஈடு செய்யப்பட வேண்டும் எனவும் தணிக்கைப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை தணிக்கைப் பத்தி தடை நீக்கம் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோயில் நிதியினைக் கையாடல் செய்தது.

**குற்றச்சாட்டு எண். 6 :**

பசலி 1430–க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.7–ல் மேற்படி பசலியில் ஒன்பது வகையான செலவினங்களுக்கான செலவுத் தொகைகளுக்குச் செலவு சீட்டுகள் தாக்கல் செய்யப்படாததால் செலவின் உண்மைத் தன்மையை உறுதி செய்ய இயலவில்லை என்பதால் செலவுத் தொகை ரூ.24,001/– தணிக்கை மறுப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோவில் நிதியினைச் செலவிட்டு அதற்கு செலவுச் சீட்டு வைக்காமல் திருக்கோவில் நிதியினைக் கையாடல் செய்தது.

இணை ஆணையர்

இணை ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.

**பின் இணைப்பு—2**

திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் நிலை 2 (தற்காலிகப் பணிநீக்கம்) என்பவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமான அதாவது தவறான நடவடிக்கை அல்லது நெறிதவறி நடந்து கொள்ளல் பற்றிய குறைகூறல்களின் சாரம் :

**குற்றச்சாட்டு எண். 1 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலிமனையில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு, வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதியான சிவன் கோயில் கீழ ரத வீதியின் வழிகாட்டி மதிப்பு பெறாமல், மதிப்பு குறைந்த பெருமாள் கோவில் வடக்கு மாட வீதியின் சந்தை மதிப்பினைப் பெற்று அதன் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்ய கணக்கீடு தயார் செய்து, இணை ஆணையருக்குப் பரிந்துரை செய்து குறைவான மதிப்பின் அடிப்படையில் நியாய வாடகை கட்டணம் நிர்ணயம் செய்து திருக்கோவிலுக்கு பெரிய அளவில் நிதியிழப்பினை ஏற்படுத்தியது.

விராலிமலை டி.எஸ்.எண். 212/1—ல் வார்டு எண்.23—ல் உள்ள காலிமனையில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு மதிப்பு கூடுதலாக உள்ள வணிக வளாகத்தின் முன்பக்கத்திற்கான வழிகாட்டி மதிப்பைப் பெற்று நியாய வாடகை நிர்ணயக் குழுவின் முன் சமர்ப்பிக்காமல் வணிக வளாகத்தின் பின்பகுதியில் உள்ள இடத்திற்கு வழிகாட்டி மதிப்பு பெற்றுள்ளார். திருக்கோவில் நலனைக் கருத்தில் கொண்டு அதிக மதிப்பிலான வழிகாட்டி மதிப்பில் கணக்கீடு தயார் செய்து வாடகை நிர்ணயம் செய்யாமல் அலட்சியப் போக்குடன் செயல்பட்டு திருக்கோவிலுக்கு நிதியிழப்பினை ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 2 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலி மனையில் துறை அனுமதியின்றி புதிதாக வணிக வளாகம் கட்டுவது தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு ஏ.எஸ்.524/2017—ல் ஆணையரால் இணக்கத்

தீர்வு ஏற்படுத்தப்பட்டு ஆணையர் சென்னை ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017–ன்படி 01.07.1993 முதல் 28.02.2017 முடிய வாடகைதாரரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட வாடகைத் தொகை ரூ. 1,32,000/– போக மீதமுள்ளத் தொகை ரூ.17,54,051.68/–னை வசூல் செய்து நிரந்தர முதலீட்டில் முதலீடு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்குப் பின்பும் இரண்டு ஆண்டுகள் இத்திருக்கோயிலில் செயல் அலுவலராகப் பணியாற்றிய போதும் நிலுவைத் தொகையினை முறையாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்காததால் நாளது தேதி வரை ரூ.14,90,000/– வசூல் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இதனால் நிலுவைத் தொகையினை வசூல் செய்து நிரந்தர முதலீடு செய்வதன் மூலம் வரப்பெறும் வட்டி வருவாய் இனத்தினை தடை செய்து திருக்கோவிலுக்கு நிதி இழப்பினை ஏற்படுத்தியதுடன் நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் உயர் அலுவலர்களின் உத்தரவுகளை உதாசீனப்படுத்தி கடமையிலிருந்து தவறியது.

**குற்றச்சாட்டு எண். 3 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான விராலிமலை நகரில் சர்வே எண்.12/1–ல் உள்ள 9 ஏக்கர் 20 சென்ட் புன்செய் நிலம் திரு. சண்முகம் என்பவர் வசம் உள்ளது. மேற்காணும் நிலத்திற்கு திரு. சண்முகம் வருடம் ஒன்றுக்கு ரூ.400/– குத்தகையாக செலுத்தி வருகிறார். மேற்படி நிலத்தினைச் சுற்றியுள்ள நிலங்களில் வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பு பகுதியாக மாறியுள்ளதால் குத்தகைதாரரை வெளியேற்ற வருவாய் நீதிமன்றத்தில் பி.டி.150/2020 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் திரு. சண்முகம் இவ்விடத்தில் நீண்ட காலமாக விவசாயம் ஏதும் செய்யாமல் இருந்த காரணத்தினாலும் மேற்படி இடம் விவசாயத்திற்கு தகுதியற்ற மற்றும் குடியிருப்பு பகுதியாக மாறியுள்ள காரணத்தினாலும், மேற்படி இடத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றவும், அவர் இதுவரை செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையினைச் செலுத்த வேண்டியும், வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி வழக்கில் 05.04.2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் குத்தகைதாரரை வெளியேற்ற உத்தரவிடாமல் தாவா நிலத்திற்குரிய குத்தகை பாக்கியை மூன்று மாதத்திற்குள் மனுதாரர் செலுத்த வேண்டும் எனவும், தவறினால் எதிர் மனுதாரரே தாவா நிலத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றலாம் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், தாவா நிலத்திற்கு நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால் அதற்கு

தனியாக நீதிமன்றத்தில் மனு செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், நியாயக் குத்தகை நிர்ணயம் செய்வதற்கு எவ்விதமான நடவடிக்கையும் செயல் அலுவலரால் எடுக்கப்படவில்லை.அதனால், நாளது தேதி வரை வருடம் 1–க்கு ரூ.400/– மட்டுமே குத்தகைத் தொகையாக பெறப்பட்டு வரப்பெறுகிறது. 9.20 ஏக்கர் நிலத்திற்கு வருடத்திற்கு வெறும் ரூ.400/– குத்தகையாகப் பெறுவது ஏற்புடையதல்ல. மேலும் குத்தகைதாரர் மேற்காணும் நிலத்தில் பல ஆண்டுகளாக விவசாயம் ஏதும் செய்யாமல் நிலத்தின் தன்மையைப் பாழ்படுத்தியிருப்பதை கண்டு கொள்ளாமல் இருந்து திருக்கோயில் அசையா சொத்துகள் மேலாண்மையில் தனிக்கவனம் செலுத்தாமல் மெத்தனப் போக்குடன் செயல்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும், மேற்காணும் நிலத்தைச் சுற்றி உள்ள பகுதிகள் நகர்ப்புற குடியிருப்பாக மாறி வரும் நிலையில் திருக்கோயில் நிலத்திலிருந்தும் அதிக வருமானம் வரத்தக்க வகையில் மாற்று நடவடிக்கைகள் மேற்கொண்டு திருக்கோயில் நலனைப் பாதுகாத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாதது.

**குற்றச்சாட்டு எண். 4 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான, வடக்கு மாட வீதியில் வார்டு எண். 20, கதவு எண்.120–ல் உள்ள காலிமனைக்கு தற்போதைய மாத வாடகை ரூ.161/– ஆகும். திரு. கந்தசாமி என்பவர் வாடகைதாரராக இருந்து வருகிறார். ஆனால் மேற்படி இடத்தின் வாடகைதாரர் இலாகா அனுமதியில்லாமல் ஒன்பது கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்டி அதனை உள்வாடகைக்கு விட்டு வருகிறார். இலாகா அனுமதி பெறாமல் கட்டடம் கட்டுவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காமல் வாடகைதாரருடன் உடந்தையாக இருந்து இலாகா சட்டவிதிகளுக்கு எதிராகவும், திருக்கோவில் நலனுக்கு எதிராகவும் செயல்பட்டது.

துறை அனுமதி பெறாமல் புதிய கட்டடம் கட்டுவதற்கான பூர்வாங்க பணிகள் துவங்கப்படுவதைத் தடுத்து நிறுத்தாமல் தனது கடமையில் இருந்து தவறி உள்நோக்கத்துடன் செயல்பட்டு வாடகைதாரருடன் உடந்தையாக இருந்து இலாகா விதிகளுக்கு எதிராக செயல்பட்டுள்ளார்.

**குற்றச்சாட்டு எண். 5 — க்கான குறை கூறல்களின் சாரம் :**

பசலி 1430–க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.5–ல் மேற்படி பசலியில்

பங்குனி மாத உற்சவத்திற்கான செலவு இனங்களில் ஆலயத் தேரைக் கழுவும் பணி உபயதாரர் மூலம் செய்யப்படும் என பதிவு செய்யப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஆனால் ஆலயத் தேரைக் கழுவுவதற்கு ரூ.3,200/– செலவிடப்பட்டு அதற்கு செலவுச்சீட்டு வைக்கப்பட்டுள்ளது. எனவே, உபயதாரர் மூலம் செலவினைச் செய்துவிட்டு ரூ.3,200/– முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை இழப்பாகக் கருதி பொறுப்பாளர்களிடம் இருந்து ஈடு செய்யப்பட வேண்டும் எனவும் தணிக்கைப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை தணிக்கைப் பத்தி தடை நீக்கம் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோயில் நிதியினைக் கையாடல் செய்தது.

**குற்றச்சாட்டு எண். 6 – க்கான குறை கூறல்களின் சாரம் :**

பசலி 1430–க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.7–ல் மேற்படி பசலியில் ஒன்பது வகையான செலவினங்களுக்கான செலவுத் தொகைகளுக்குச் செலவு சீட்டுகள் தாக்கல் செய்யப்படாததால் செலவின் உண்மைத் தன்மையை உறுதி செய்ய இயலவில்லை என்பதால் செலவுத் தொகை ரூ.24,001/– தணிக்கை மறுப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோவில் நிதியினைச் செலவிட்டு அதற்கு செலவுச் சீட்டு வைக்காமல் திருக்கோவில் நிதியினைக் கையாடல் செய்தது.

இணை ஆணையர்

இணை ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.

## பின் இணைப்பு—3

திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் நிலை—2 (தற்காலிகப் பணிநீக்கம்) என்பவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்குரிய ஆவணங்களின் பட்டியல்

1. தஞ்சாவூர், இணை ஆணையர், கோப்பு எண்.3920/2022/ஆ2

2. திருக்கோயில் வசமுள்ள சம்பந்தப்பட்ட ஆவணங்கள்

   (அ) திருச்சி, வருவாய் நீதிமன்ற தனித்துணை ஆட்சியரின் தீர்ப்புரை நாள்: 20.08.2007. பி4/61/2002—ன் உத்தரவு நகல்

   (ஆ) சென்னை, ஆணையர் ந.க. எண். 24819/2007/எம்1. நாள் : 11.06.2007—ன் நகல்

   (இ) வணிக வளாகத்தின் புகைப்படம்.

   (ஈ) திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலராகப் பணியாற்றும் போது அனுமதியின்றி கட்டப்பட்ட 2 மாடிக் கட்டடத்தைக் காட்டும் புகைப்படம்.

   (உ) திரு. சண்முகம் ஆக்கிரமிப்பாளர் வசமுள்ள நகர்ப்புற நிலத்தைக் காட்டும் புகைப்படங்கள் இரண்டு.

இணை ஆணையர்

இணை ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.

**பின் இணைப்பு—4**

திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் நிலை—2, (தற்காலிக பணிநீக்கம்) என்பவருக்கு எதிராக வலுவானதாகக் கருதுவதற்கு சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சாட்சியம் அளித்தவர்கள் பட்டியல் 1 மற்றும் 2 விசாரணையின் போது தேவையெனில் எடுத்துக் கொள்ளப்படும்.

1. விராலிமலை, ஆய்வர் அறிக்கை நாள்: 14.05.2021

2. விராலிமலை, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் எழுத்தர் திரு. வேல்முருகன் விராலிமலை ஆய்வர் முன்னிலையில் அளித்த வாக்குமூலம் நாள்:12.01.2022.

இணை ஆணையர்

## QUESTIONNAIRE FORM

| | | |
|---|---|---|
| 1. | Have you any objection to the form of any of the charges? | |
| 2. | In addition to the written statement of your defense which you are now required to submit, you are entitled continue your defense on the following methods<br>(a) An oral enquiry held in your presence<br>(b) To be heard in person without an oral enquiry<br>Please state in the column opposite whether you enquire either method to be adopted<br>Note : if you choose methods<br>(a) The following witnesses will be recalled to prove the charges<br>(i) Witness examined in your presence at the preliminary enquiry<br>(ii) Witness not yet examined in your presence<br>The evidence recorded from (i) at the preliminary enquiry will be read out at the regular enquiry and you will be given an opportunity to cross-examine the witnesses again<br>Any evidence recorded from (ii) at the preliminary enquiry will be also be read out at the regular enquiry unless you prefer that any of the witnesses be examined in brief before you will be given an opportunity to cross-examine them | |
| 3. | (i) Do you wish to give evidence yourself?<br>(ii) If so, on what points? | |
| 4. | (i) Do you wish to have any witnesses examined on your behalf?<br>(ii) If so, state their names and note briefly the matters to which they are called to depose.<br>Note:<br>After the completion of the enquiry you may, if so you so desire put in a further written statement, of your defense. | |
| 5. | Do you desire to be supplied with copies of any records or the depositions or witnesses or the report of the inquiry officer? If so, give particulars of the records copies of which are required? | |

[ மாதிரி படிவம் ]

## ஆவணங்களைப் பார்வையிட அனுமதி வேண்டுதல்

பதிவு அஞ்சல் ஒப்புகையுடன்
நாள் : 28.04.2022

அனுப்புநர்
திரு. வே. சாXXXXXXXX,
செயல் அலுவலர் (த.ப.நீ.)
எண்.104, மேலூர் மெயின் ரோடு,
வளர் நகர், மதுரை – 625 107.

பெறுநர்
இணை ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.

அய்யா,

பொருள் : ஒழுங்கு நடவடிக்கை – தமிழ்நாடு அரசுப்பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது – **ஆவணங்களைப் பார்வையிட அனுமதி வேண்டுதல்** – தொடர்பாக.

பார்வை :

1. இணை ஆணையர், தஞ்சாவூர் செ.மு.ந.க.எண். 3920/2022/ஆ2 நாள் : 02.02.2022
2. இணை ஆணையர், தஞ்சாவூர் ந.க.எண்3920/2022/ஆ2 நாள்: 05.02.2022
3. ஆணையர், சென்னை.செ.மு.ந.க.எண்.24725/2022/எல்2 நாள்: 14.04.2022
4. இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் ந.க.எண்.2588/2022/ஆ1 நாள்: 25.04.2022

------

பார்வை 1 மற்றும் 2–ல் காணும் குறிப்புகளில் என்மீது சுமத்தப்பட்டுள்ள ஆறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக, பார்வை 3–ல் காணும் குறிப்பில் ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரை விசாரணை அலுவலராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. பார்வை 4–ல் காணும் குறிப்பில் 06.05.2022 அன்று விசாரணைக்கு நேரில் ஆஜராகி குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கம் அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, குற்றச்சாட்டுகள் குறித்த இணை ஆணையர் அலுவலக ஆவணங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் ஆவணங்களைப் பார்வையிடவும், தேவையான ஆவணங்களை நகல் எடுத்து கொள்ளவும் அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வே. சாXXXXXXXX,
செயல் அலுவலர்

[ மாதிரி படிவம் ]

## விசாரணை அலுவலர் நியமனம்

**இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் செயல்முறைகள்**

முன்னிலை : திரு. பா. சXXXXXXXX, இ. ஆ. ப.
ஆணையர்.

செ.மு.ந.க. எண். 24725/2022/எல்2 நாள் : 14.04.2022

பொருள் : பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – ஒழுங்கு நடவடிக்கை தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் திரு. வே. சாXXXXXXXX, நிலை–2 செயல் அலுவலர் (தற்காலிகப் பணி நீக்கம்) – முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – **விசாரணை அலுவலர் நியமனம்** – ஆணையிடப்படுகிறது.

பார்வை : இணை ஆணையர், தஞ்சாவூர். குற்றக் குறிப்பாணை எண். 3920/2022/ஆ2 நாள் : 02.02.2022.

-----

திரு. வே. சாXXXXXXXX, நிலை–2, செயல் அலுவலர் (தற்காலிகப் பணி நீக்கம்), புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் பணியாற்றிய போது ஏற்பட்ட நிர்வாக குறைபாடுகளுக்காக, பார்வைக் குறிப்பில் அன்னார் மீது தஞ்சாவூர், இணை ஆணையரால், தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்கு நடவடிக்கை மீது விசாரணை மேற்கொள்ள, திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலின் இணை ஆணையர்/செயல் அலுவலரை விசாரணை அலுவலராக நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ள ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலின் இணை ஆணையர்/செயல் அலுவலர், இந்த ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக, ஒழுங்கு நடவடிக்கை பணிகள், அலுவலக நடைமுறை நூல், ஒழுங்கு நடவடிக்கை கையேடு ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து வழிமுறைகளையும் நன்கு கடைப்பிடித்து, விசாரணை மேற்கொண்டு 60 பணி நாட்களுக்குள் விசாரணை அறிக்கையினை அனுப்பிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான அனைத்து மூல ஆவணங்கள், கோப்புகள் ஆகியவற்றை, விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ள ஸ்ரீரங்கம், இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உடன் தனிநபர் மூலமாக அனுப்பிட தஞ்சாவூர், இணை ஆணையரைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விசாரணை அலுவலர் குறிப்பிடும் நாளில் விசாரணைக்கு ஆஜராகி, விசாரணையினை விரைந்து முடித்திட தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் அளித்திட திரு. வே. சாXXXXXXXX, நிலை–2 செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது. மேலும் குற்றச்சாட்டுகளுக்கான விளக்கத்தினை விசாரணை அலுவலரிடம் அளிக்கவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்) நி. கXXXX
கூடுதல் ஆணையர் (விசாரணை)

/உண்மை நகல் உத்தரவுப்படி/

ஆணையருக்காக.

பெறுநர்:

1. இணை ஆணையர்/செயல் அலுவலர்/விசாரணை அலுவலர்,
   அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்.
2. திரு.வே. சாXXXXXXXX
   நிலை–2, செயல் அலுவலர் (த.ப.நீ.)
   (வரிசை எண். 4–ன் மூலம் சார்வு செய்யப்பட வேண்டும்)
3. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.
4. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை. (மேற்கண்ட குறிப்பினை வரிசை எண்.2–ல் குறிப்பிடப்பட்டுள்ள செயல் அலுவலரிடம் சார்வு செய்து தேதியுடன் கூடிய அத்தாட்சி பெற்று அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.)
5. மிகை

[ மாதிரி படிவம் ]

## கோப்புகளை அனுப்பக் கேட்டல்

**அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்,**
**ஸ்ரீரங்கம்**

அனுப்புநர்
வீ. பாXXXXXX, எம்.ஏ., பி.எல்.,
இணை ஆணையர்/ செயல் அலுவலர்,
அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்,
ஸ்ரீரங்கம்.

பெறுநர்
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலைத்துறை,
தஞ்சாவூர்.

ந.க. எண். 2588/2022–2/ஆ1 நாள் : 25.04.2022

பொருள் : பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – திரு.வே. சாXXXXXXXX – நிலை–2 செயல் அலுவலர் (த.ப.நீ.) – முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் – விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டது – **கோப்புகளை அனுப்பக் கேட்டல்** – தொடர்பாக.

பார்வை : ஆணையர், சென்னை செ.மு.ந.க.எண்.24725/2022/எல்2 நாள்: 14.04.2022.

-----

பார்வை 1–ல் காணும் ஆணையர் குறிப்பில் உத்தரவிடப்பட்டுள்ளவாறு, திரு. வே. சாXXXXXXXX செயல் அலுவலரை (த.ப.நீ.), விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் குற்றச்சாட்டுகள் தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்) வீ. பாXXXXXX
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உ.ந. உ.ப./

கண்காணிப்பாளர்

**நகல் பணிந்து அனுப்பப்படுகிறது**

1. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
2. மிகை.

[ மாதிரி படிவம் ]

## விசாரணைக்கு ஆஜராகக் கேட்டல்

**அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்,**
**ஸ்ரீரங்கம்**

<u>ந.க.எண்2588/2022/ஆ1 நாள் : 21.04.2022</u>

பொருள் : பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – திரு.வே. சாXXXXXX நிலை–2 செயல் அலுவலர் (த.ப.நீ.) – முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் – விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டது – **விசாரணைக்கு ஆஜராகக் கேட்டல்** – தொடர்பாக.

பார்வை : ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை. செ.மு.ந.க.எண்24725/2022/எல்2 நாள்: 14.04.2022.

-----

பார்வைக் குறிப்பில் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலின் செயல் அலுவலராகப் பணியாற்றிய திரு.வே. சாXXXXXXXX என்பவர் மீது 17(b)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி ஒழுங்கு நடவடிக்கை மீது விசாரணை மேற்கொள்ள ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், இணை ஆணையர்/செயல் அலுவலரை விசாரணை அலுவலராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, 06.05.2022 அன்று முற்பகல் 11.00 மணியளவில் இவ்வலுவலகத்தில் நடைபெறவுள்ள விசாரணைக்கு உரிய ஆவணங்களுடனும், குற்றச்சாட்டுகளுக்கான விளக்கத்துடனும் நேரில் ஆஜராகுமாறு திரு.வே. சாXXXXXXXX, நிலை–2, செயல் அலுவலருக்கு (த.ப.நீ.) உத்தரவிடப்படுகிறது.

(ஒம்) வீ. பாXXXXXX,
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/ உ.ந. உ.ப/
கண்காணிப்பாளர்

**பெறுநர் :**

1. திரு.வே.சாXXXXXXXX,
   செயல் அலுவலர், நிலை–2, (த.ப.நீ.)
   எண்.104, மேலூர் மெயின் ரோடு,
   வளர் நகர், மதுரை – 625 107.
   **நகல் பணிந்து அனுப்பப்படுகிறது**
2. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
   **நகல் :**
3. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.
4. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை.
5. உபரி

[ மாதிரி படிவம் ]

## விசாரணை அலுவலர் அவர்கள் முன்னிலையில் வாக்குமூலம்

**ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர்/ விசாரணை அலுவலர் அவர்கள் முன்னிலையில் 06.05.2022 அன்று காலை 11.00 மணிக்கு ஆஜராகி அளிக்கும் வாக்குமூலம்**

தஞ்சாவூர், இணை ஆணையர், செ.மு.ந.க.எண் 3920/2022/ஆ2 நாள்: 05.02.2022 உத்தரவின்படி புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் நிலை–2 செயல் அலுவலராகப் பணியாற்றிய காலத்தில் ஏற்பட்ட நிர்வாகக் குறைபாடுகளுக்காக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள திரு.வே. சாXXXXXXXX ஆகிய நான், தஞ்சாவூர், இணை ஆணையர் செ.மு.ந.க.எண்.3920/2022/ஆ2 நாள் 02.02.2022 உத்தரவின்படி என் மீது புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் முன்னாள் செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் ஏற்பட்ட நிர்வாக குறைபாடுகளுக்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17(b)–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு சென்னை ஆணையர், செ.மு.ந.க.எண். 24725/2022/எல்2 நாள் 14.04.2022 உத்தரவின்படி திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரை விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டதின் அடிப்படையில் மேற்படி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர்/ந.க.எண்.2588/2022/ஆ1 நாள் 21.04.2022 தேதிய உத்தரவின்படி விசாரணைக்கு அழைக்கப்பட்டு தங்கள் முன் நேரில் ஆஜராகி எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை கீழ்கண்டவாறு பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

நான் இதற்கு முன்பு திருச்சிராப்பள்ளி நகர், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலில் நிலை–3 செயல் அலுவலராகப் பணிபுரிந்து பின்னர் பதவி உயர்வு மற்றும் பணிமாறுதல் காரணமாக 05.03.2019 முதல் 09.07.2021 முடிய புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் பணிபுரிந்து வந்துள்ளேன்.

**குற்றச்சாட்டு எண். 1 :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலி மனையில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு, வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதியான சிவன் கோயில் கீழ ரத வீதியின் வழிகாட்டி மதிப்பு பெறாமல், மதிப்பு குறைந்த பெருமாள் கோவில் வடக்கு மாட வீதியின் சந்தை மதிப்பினைப் பெற்று அதன் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்ய கணக்கீடு தயார் செய்து, இணை ஆணையருக்குப் பரிந்துரை செய்து குறைவான மதிப்பின் அடிப்படையில் நியாய வாடகை கட்டணம் நிர்ணயம் செய்து திருக்கோவிலுக்கு பெரிய அளவில் நிதியிழப்பினை ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 1—க்குரிய எனது விளக்கம்**

திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம் மற்றும் மனைகளுக்கு திருக்கோயில் செயல் அலுவலரால் மட்டுமே நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. இந்து சமய அறநிலையச் சட்டப்பிரிவு 34(A)-ன்படி இணை ஆணையர், மாவட்டப் பதிவாளர், தக்கார், செயல் அலுவலர் ஆகியோர்களை உள்ளடக்கிய நியாய வாடகை நிர்ணயக்குழு மூலமாகவே நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது. அதனடிப்படையில் இக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இனத்திற்கு அரசாணைப்படி உரிய வழி முறைகள் பின்பற்றப்பட்டு நியாய வாடகை குழு மூலம் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி நியாய வாடகை தஞ்சாவூர், இணை ஆணையர் மூ.மு. எண் 1007/2020/ஆ3 நாள் 01.07.2020—ன்படி அங்கீகரிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாணையின்படி 01.07.2016 தேதி முதல் முன் தேதியிட்டு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு, அமுல்படுத்தப்பட்டு நாளது தேதி வரை நிலுவை ஏதுமின்றி வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு எனது பணிக்காலத்தில் ரூ.2,15,000/— வாடகை நிலுவைத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதிக்கு சந்தை மதிப்பு அதிகமென எவ்வித ஆதாரமும் இன்றி யூகத்தின் அடிப்படையில் தெரிவித்திருப்பதுடன், அதன் மூலம் எவ்வளவு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என குற்றச்சாட்டில் குறிப்பிடப்படவில்லை. எனவே, மேற்காணும் இடத்திற்கான நியாய வாடகை நிர்ணயம் உரிய விதிமுறைகளின்படியே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதுடன் இதனால் திருக்கோயிலுக்கு எவ்விதமான நிதியிழப்பும் ஏற்படவில்லை

என்பதைக் கருத்தில் கொண்டு இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண். 2 :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலி மனையில் துறை அனுமதியின்றி புதிதாக வணிக வளாகம் கட்டுவது தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு ஏ.எஸ்.524/2017–ல் ஆணையரால் இணக்கத் தீர்வு ஏற்படுத்தப்பட்டு ஆணையர் சென்னை ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017–ன்படி 01.07.1993 முதல் 28.02.2017 முடிய வாடகைதாரரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட வாடகைத் தொகை ரூ. 1,32,000/– போக மீதமுள்ளத் தொகை ரூ.17,54,051.68/–னை வசூல் செய்து நிரந்தர முதலீட்டில் முதலீடு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு பின்பும் இரண்டு ஆண்டுகள் இத்திருக்கோயிலில் செயல் அலுவலராகப் பணியாற்றிய போதும் நிலுவைத் தொகையினை முறையாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்காததால் நாளது தேதி வரை ரூ.14,90,000/– வசூல் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இதனால் நிலுவைத் தொகையினை வசூல் செய்து நிரந்தர முதலீடு செய்வதன் மூலம் வரப்பெறும் வட்டி வருவாய் இனத்தினை தடை செய்து திருக்கோவிலுக்கு நிதி இழப்பினை ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 2–க்குரிய எனது விளக்கம்**

குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாகம் அமைந்துள்ள காலிமனை இடத்திற்கு சென்னை, ஆணையர், ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017–ன் உத்தரவில் 01.07.1993 முதல் 28.02.2017 முடிய கணக்கீடு செய்யப்பட்ட கூடுதல் வாடகை நிலுவைத் தொகையில் வாடகைதாரர் ரூ.1,32,000/– மட்டுமே செலுத்தியுள்ளார் எனவும், உத்தரவு தேதியில் (15.09.2017) வாடகை பாக்கி ரூ.17,54,051.68/– எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாடகை நிலுவைத் தொகை ரூ.17,54,051.68/– எனது பணிக்காலத்தில் ஏற்பட்டதல்ல. சுமார் 24 ஆண்டுகளாக நிலுவையாக உள்ள வாடகையாகும். நான், இத்திருக்கோயிலில் 05.03.2019 முதல் 09.07.2021 முடிய (சுமார் 28 மாதங்கள்) மட்டுமே செயல் அலுவலராகப் பணிபுரிந்துள்ளேன். கேட்பு, வசூல், நிலுவைப் பதிவேட்டின்படி மேற்படி தொகை பல ஆண்டுகளாக நிலுவையாக இருந்து வந்துள்ளது. வசூலாகாத தொகைக்கு வட்டியிழப்பு எனக் குறிப்பிட்டு அதன் மூலம் நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளதாகக்

குற்றச்சாட்டு சுமத்தியிருப்பது பொருத்தமற்றதாகும். மேலும், இக்குற்றச்சாட்டில் நிதியிழப்புத் தொகை குறித்து எதுவும் குறிப்பிடாமல் யூகத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட வாடகை நிலுவைத் தொகை ரூ.17,54,051.68/—னைச் செலுத்தக் கோரி வாடகைதாரருக்கு எனது பணிக்காலத்தில் 05.03.2020 நாளிட்ட பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு நகலை நான் சான்றாவணமாக சமர்ப்பிக்கின்றேன். மேலும், வாடகைதாரரிடம் பலமுறை நேரிலும், பணியாளர்கள் மூலமும் மேற்படி வாடகை நிலுவைத்தொகை செலுத்தக்கோரி உள்ளேன். எனது பணிக்காலத்தில் மேற்கண்ட காலிமனை இடத்திற்கு உரிய வாடகை நிலுவைத்தொகை ரூ.2,64,052/— என்னால் வசூல் செய்யப்பட்டுள்ளது. (இரசீது எண்: 11471/29.05.2019, 11489/07.08.2019, 12626/22.04.2021). மேலும், இக்குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள வாடகை நிலுவைத் தொகை ரூ.14,90,000/— வசூல் செய்ய இயலாத காலக்கெடு முடிவடைந்த தொகை அல்ல. எனவே, என்னால் திருக்கோயிலுக்கு எவ்விதமான நிதியிழப்பும் ஏற்படுத்தப்படவில்லை என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண். 3 :**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான விராலிமலை நகரில் சர்வே எண்.12/1—ல் உள்ள 9 ஏக்கர் 20 சென்ட் புன்செய் நிலம் திரு. சண்முகம் என்பவர் வசம் உள்ளது. மேற்காணும் நிலத்திற்கு திரு. சண்முகம் வருடம் ஒன்றுக்கு ரூ.400/— குத்தகையாக செலுத்தி வருகிறார். மேற்படி நிலத்தினைச் சுற்றியுள்ள நிலங்களில் வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பு பகுதியாக மாறியுள்ளதால் குத்தகைதாரரை வெளியேற்ற வருவாய் நீதிமன்றத்தில் பி.டி.150/2017 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் திரு. சண்முகம் இவ்விடத்தில் நீண்ட காலமாக விவசாயம் ஏதும் செய்யாமல் இருந்த காரணத்தினாலும் மேற்படி இடம் விவசாயத்திற்கு தகுதியற்ற மற்றும் குடியிருப்பு பகுதியாக மாறியுள்ள காரணத்தினாலும், மேற்படி இடத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றவும், அவர் இதுவரை செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையினைச் செலுத்த வேண்டியும், வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி வழக்கில் 05.04.2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் குத்தகைதாரரை வெளியேற்ற உத்தரவிடாமல் தாவா நிலத்திற்குரிய குத்தகை பாக்கியை மூன்று மாதத்திற்குள் மனுதாரர் செலுத்த வேண்டும் எனவும், தவறினால் எதிர் மனுதாரரே

தாவா நிலத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றலாம் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், தாவா நிலத்திற்கு நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால் அதற்கு தனியாக நீதிமன்றத்தில் மனு செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், நியாயக் குத்தகை நிர்ணயம் செய்வதற்கு எவ்விதமான நடவடிக்கையும் செயல் அலுவலரால் எடுக்கப்படவில்லை.அதனால், நாளது தேதி வரை வருடம் 1–க்கு ரூ.400/– மட்டுமே குத்தகைத் தொகையாக பெறப்பட்டு வரப்பெறுகிறது. நியாய குத்தகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் இருந்து திருக்கோவிலுக்கு மிகப்பெரிய நிதி இழப்பினை ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 3–க்குரிய எனது விளக்கம்**

குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விராலிமலை நகர் சர்வே எண் 12/1–ல் உள்ள 9 ஏக்கர் 20 சென்ட் நிலம் திரு. சண்முகம் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்ட புன்செய் நிலமாகும். திருக்கோயில் கேட்பு வசூல் நிலுவைப் பதிவேட்டிலும் புன்செய் நிலம் என பதிவாகியுள்ளது. இந்நிலையில் மேற்படி குத்தகைதாரர் 1983 முதல் 2010 முடிய செலுத்த வேண்டிய குத்தகை பாக்கித் தொகை ரூ.10,800/–க்காக திருச்சி வருவாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண் பி.டி.150/2017–ல் 05.04.2019–ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் "தாவா நிலத்திற்குரிய குத்தகை பாக்கியினை 3 மாதத்திற்குள் மனுதாரரிடம் (செயல் அலுவலர்) செலுத்த உத்தரவிடப்படுகிறது. தவறினால், எதிர் மனுதாரரை (குத்தகைதாரர்) தாவா நிலத்தை விட்டு வெளியேற்ற உத்தரவிடப்படுகிறது. தாவா நிலத்திற்கு நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால் அதற்கு தனியே இந்த நீதிமன்றத்தை அணுகி மனு செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்கண்ட உத்தரவின்படி குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் மேற்படி குத்தகைதாரரிடம் இருந்து திருக்கோயிலுக்கு நிதியிழப்பு ஏதுமின்றி குத்தகை பாக்கி ரூ.10,800/– என்னால் வசூல் செய்யப்பட்டது. (இரசீது எண் 11164 நாள்: 20.10.2019)

மேற்படி குத்தகைதாரரை தாவா நிலத்தில் இருந்து வெளியேற்றுவது அல்லது குத்தகை உயர்வு செய்வது குறித்து வழக்கறிஞர் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததாலும், மேற்படி புன்செய் நிலத்தை மனைப்பகுதியாக மாற்றி திருக்கோயிலுக்கு அதிக வருமானம் வரப்பெறும் வகையில் மேற்படி குத்தகைதாரரை தாவா நிலத்திலிருந்து வெளியேற்ற உயரதிகாரிகளை கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த காரணத்தினாலும், மேற்படி திருக்கோயிலுடன் இணைந்த திருக்கோயில்கள் நிர்வாகம், திருப்பணி வேலைகள், சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள்

நிறைந்த திருவிழாக்கள் மற்றும் கூடுதல் பணிச்சுமை காரணமாக மேற்படி நடவடிக்கை மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டுவிட்டதெனவும், புன்செய் நிலத்திற்கு வருவாய் நீதிமன்றம் மூலம் நியாய வாடகை நிர்ணயம் செய்ய இயலாது என்ற காரணத்தினால் மேற்படி இடத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படவில்லை என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குத்தகை பாக்கித் தொகை ரூ. 10,800/– முழுவதும் வசூல் செய்யப்பட்டு விட்டதாலும், நாளது தேதி வரை ஆண்டு 1–க்கு ரூ. 400/– குத்தகை தொகை நிலுவையின்றி வசூல் செய்யப்பட்டு வருவதாலும், குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ளவாறு நிதியிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண். 4 :**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான, வடக்கு மாட வீதியில் வார்டு எண். 20, கதவு எண்.120–ல் உள்ள காலிமனைக்கு தற்போதைய மாத வாடகை ரூ.161/– ஆகும். திரு. கந்தசாமி என்பவர் வாடகைதாரராக இருந்து வருகிறார். ஆனால் மேற்படி இடத்தின் வாடகைதாரர் இலாகா அனுமதியில்லாமல் ஒன்பது கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்டி அதனை உள்வாடகைக்கு விட்டு வருகிறார். இலாகா அனுமதி பெறாமல் கட்டடம் கட்டுவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காமல் வாடகைதாரருடன் உடந்தையாக இருந்து இலாகா சட்டவிதிகளுக்கு எதிராகவும், திருக்கோவில் நலனுக்கு எதிராகவும் செயல்பட்டது.

**குற்றச்சாட்டு எண். 4–க்குரிய எனது விளக்கம்**

நான் இத்திருக்கோயிலில் 05.03.2019 முதல் 09.07.2021 முடிய நிலை–2 செயல் அலுவலராகப் பணிபுரிந்துள்ளேன். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான, வடக்கு மாட வீதியில் வார்டு எண் 20, கதவு எண். 120–ல் உள்ள காலிமனையின் வாடகைதாரர் திரு. கந்தசாமி என்பவர் மேற்படி இடத்தில் கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி எனது பணிக்காலத்தில் விண்ணப்பம் ஏதும் வழங்கவில்லை எனவும், மேற்படி இடத்தில் எனது பணிக்காலத்தில் கட்டடம் ஏதும் கட்டப்படவில்லை எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி திருக்கோயிலில் எனக்கு பின்னர் செயல் அலுவலராகப் பணிபுரிந்த திருமதி.

கே. மXXXXXXXX என்பவரால் 24.12.2021–ல் மேற்படி வாடகைதாரர் திரு. கந்தசாமி கட்டடம் கட்டிக் கொள்ள அனுமதி வேண்டி தஞ்சாவூர், இணை ஆணையருக்கு அனுப்பிய கடித நகல் சமர்ப்பிக்கப்படுகிறது. எனக்கு பின்னர் பணிபுரிந்த செயல் அலுவலர்கள் காலத்திலேயே வாடகைதாரர் திரு.கந்தசாமி என்பவரால் காலிமனையில் தனது சொந்த செலவில் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி 14.10.2021–ல் விண்ணப்பம் அளித்துள்ளதையும், அதன் பேரில் 20.12.2021–ல் தக்கார் தீர்மானம் இயற்றப்பட்டு புதுக்கோட்டை உதவிப் பொறியாளரால் ரூ.39,80,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து 24.12.2021–ல் நிர்வாக அனுமதி படிவம் மற்றும் இணைப்புகளுடன் தஞ்சாவூர், இணை ஆணையருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்படி காலிமனை இடத்தில் வாடகைதாரர் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்கு மாடி கட்டுவது தொடர்பான நடவடிக்கைகள் எனது காலத்திற்கு பின்னர் பணிபுரிந்த செயல் அலுவலர்களால் தான் எடுக்கப்பட்டுள்ளது என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண். 5 :**

பசலி 1430–க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.5–ல் மேற்படி பசலியில் பங்குனி மாத உற்சவத்திற்கான செலவு இனங்களில் ஆலயத் தேரைக் கழுவும் பணி உபயதாரர் மூலம் செய்யப்படும் என பதிவு செய்யப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஆனால் ஆலயத் தேரைக் கழுவுவதற்கு ரூ.3,200/– செலவிடப்பட்டு அதற்கு செலவுச்சீட்டு வைக்கப்பட்டுள்ளது. எனவே, உபயதாரர் மூலம் செலவினைச் செய்துவிட்டு ரூ.3,200/– முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை இழப்பாகக் கருதி பொறுப்பாளர்களிடம் இருந்து ஈடு செய்யப்பட வேண்டும் எனவும் தணிக்கைப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை தணிக்கைப் பத்தி தடை நீக்கம் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோயில் நிதியினைக் கையாடல் செய்தது.

**குற்றச்சாட்டு எண். 5–க்குரிய எனது விளக்கம்**

இத்திருக்கோயில் பசலி 1430 தணிக்கை அறிக்கை பத்தி எண்.5–ல் ஆலய தேர் கழுவும் பணிக்கான செலவு தொகை ரூ.3,200/–க்கு உரிய செலவு சீட்டுக்கள் காண்பிக்கப்படவில்லை என்பது குற்றச்சாட்டாக சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி செலவுத்தொகை ரூ.3,200/–ல் தேரை சுத்தப்படுத்தும் பணிக்கு ரூ. 2,600/– வாட்டர் சப்ளை செய்த வகையில் ரூ.600/– செலவு செய்யப்பட்டுள்ளது. தேர் சுத்தப்படுத்தும் பணிக்கான செலவுத் தொகை ரூ.2,640/–க்கு பதிலாக ரூ.40/– குறைவு செய்து ரூ.2,600/– வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகை ரூ.600/–க்கான செலவு சீட்டு தணிக்கையின் போது காண்பிக்கப்படாததால் தணிக்கை மறுப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

மேற்படி செலவீனத்திற்கு (ஆடி திருவிழா) பசலி 1430–க்கான வரவு செலவு திட்டத்தில் ஆணையர் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தொகை ரூ. 3,200/– 15.05.2021–ல் நடைபெற்ற தணிக்கை கூட்டமர்வின் போது இக்குற்றச்சாட்டு சுமத்திய இணை ஆணையரால் இத்தொகையினை தடை நீக்கம் (பத்தி எண்.5) செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே இக்குற்றச்சாட்டு உயிரற்றதாகிவிடுகிறது.

மேற்படி, செலவினத்திற்கு வரவு, செலவு திட்டத்தில் உரிய அனுமதி பெறப்பட்டுள்ளதாலும் மேற்படி தொகை ரூ. 3200/–க்கு தணிக்கை தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி தொகை முறைகேடாக பயன்படுத்தப்படவில்லை என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண். 6 :**

பசலி 1430–க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.7–ல் மேற்படி பசலியில் ஒன்பது வகையான செலவினங்களுக்கான செலவுத் தொகைகளுக்குச் செலவு சீட்டுகள் தாக்கல் செய்யப்படாததால் செலவின் உண்மைத் தன்மையை உறுதி செய்ய இயலவில்லை என்பதால் செலவுத் தொகை ரூ.24,001/– தணிக்கை மறுப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோவில் நிதியினைச் செலவிட்டு அதற்கு செலவுச் சீட்டு வைக்காமல் திருக்கோவில் நிதியினைக் கையாடல் செய்தது.

**குற்றச்சாட்டு எண். 6–க்குரிய எனது விளக்கம்**

இத்திருக்கோயில் பசலி 1430 தணிக்கை அறிக்கை பத்தி எண்.7–ல் ஒன்பது வகையான செலவீனங்களுக்குரிய தொகை ரூ. 24,001/–க்கு உரிய செலவு சீட்டுக்கள்

காண்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதைக் குற்றச்சாட்டாக சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி செலவீனங்கள் அனைத்திற்கும் பசலி 1430 வரவு செலவு திட்டத்தில் ஆணையர் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகைக்குரிய செலவு சீட்டுகள் தணிக்கை கூட்டமர்வில் தாக்கல் செய்து தணிக்கை தடை நீக்குவது தொடர்பாக தணிக்கை கோப்பில் தொடர் நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே மேற்படி செலவீனங்கள் அனைத்தும் உரிய துறை அனுமதி பெற்றே செய்யப்பட்டுள்ள நிலையில் திருக்கோவில் நிதி முறைகேடாகச் செலவிடப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி சூழ்நிலைகளை, பரிசீலித்து, மேற்படி குற்றச்சாட்டுகள் தொடர்பாக, எனது இவ்விளக்கத்தினை கனிவுடன்/கருணையுடன் பரிசீலித்து, எனது கடமை தவறுகை சார்ந்த குற்றச்சாட்டாக கருதுவதற்கு எவ்விதமான நியாயமான முகாந்திரம் இல்லை என்பதன் அடிப்படையில் மேற்படி குற்றச்சாட்டுக்களை கைவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்படியான குற்றச்சாட்டுகளினால் நான் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளேன். அதன் காரணமாக எனது உடல்நிலை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், வரும் காலத்தில் எந்த ஒரு குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் மிகுந்த கவனமுடனும், உரிய எச்சரிக்கையுடனும் செயல்படுவேன் என்றும், என்னை மேலும் சிறப்பான முறையில் நான் பணியாற்றும் திருக்கோயில்களுக்கு பணி செய்ய தயார்படுத்தி கொள்வேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வே. சாXXXXXXXX,
செயல் அலுவலர்.

[ மாதிரி படிவம் ]

## சாட்சியங்களை விசாரணைக்கு ஆஜராகக் கேட்டல்

**அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்,**
**ஸ்ரீரங்கம்**

**விசாரணை அறிவிப்பு**

ந.க. எண் 2588/2022/ஆ1 நாள் : 10.05.2022

பொருள் : பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – திரு.வே. சாXXXXXXX நிலை–2 செயல் அலுவலர் (த.ப.நீ) – முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் – விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டது – **சாட்சியங்களை விசாரணைக்கு ஆஜராகக் கேட்டல்** – தொடர்பாக.

பார்வை :
1. இணை ஆணையர், தஞ்சாவூர். குற்றக் குறிப்பாணை எண்.3920/2022/ஆ2 நாள் 02.02.2022
2. ஆணையர், சென்னை செ.மு.ந.க.எண் 24725/2022/எல்2 நாள் : 14.04.2022
3. இவ்வலுவலக ந.க.எண். 2588/2022/ஆ1 நாள் 21.04.2022 மற்றும் 25.04.2022.
4. திரு.வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் வாக்கு மூலம் நாள்06.05.2022

-----

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலின் முன்னாள் நிலை 2 செயல் அலுவலராகப் பணிபுரிந்த போது நடைபெற்ற நிர்வாகக் குறைபாடுகளுக்காக திரு.வே. சாXXXXXXXX மீது பார்வை 1–ல் காணும் குறிப்பின் மூலம் தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு முறை (ம) மேல்முறையீடு)

விதிகளின் விதி 17 (b)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தி ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. அதன்படி பார்வை 2–ல் காணும் குறிப்பில் விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு, பார்வை 3–ல் காணும் குறிப்பில் குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராகக் கோரப்பட்டு, விசாரணை செய்யப்பட்டது. விசாரணையின் போது திரு. வே. சாXXXXXXXX அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தங்களை நேரில் விசாரணை செய்யப்பட வேண்டியுள்ளதால் உரிய ஆவணங்களுடன் 20.05.2022 அன்று விசாரணைக்கு நேரில் ஆஜராகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்) வீ. பாXXXXXX
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உ.ந.உ.ப/

கண்காணிப்பாளர்

**பெறுநர் : (பதிவு அஞ்சல் திரும்பும் அட்டையுடன்)**

1. திருமதி. கே. மXXXXXXXX, செயல் அலுவலர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், விராலிமலை
2. திரு. க. சேXXXXXXX, செயல் அலுவலர், அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில், பெரம்பூர்.
3. திரு.வே.சாXXXXXXXX, செயல் அலுவலர்(த.ப.நீ), எண்.104, மேலூர் மெயின் ரோடு, வளர் நகர், மதுரை – 625 107.
4. திரு. ந. வேல்முருகன், திருக்கோயில் எழுத்தர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், விராலிமலை.

**நகல்**

5. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை.
6. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.

**நகல் பணிந்து அனுப்பப்படுகிறது**

7. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
8. உபரி

[ மாதிரி படிவம் ]

## விசாரணை தேதி மாற்றம் செய்து தர வேண்டுதல்

அனுப்புநர்
திருமதி. கே. மXXXXXXXX,
செயல் அலுவலர்,
அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில்,
விராலிமலை நகர் மற்றும் வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

பெறுநர்
இணை ஆணையர்/செயல் அலுவலர் அவர்கள்,
அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்,
ஸ்ரீரங்கம் நகர் மற்றும் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

---

நாள் : 14.05.2022

அய்யா,

பொருள் : ஒழுங்கு நடவடிக்கை – திரு.வே. சாXXXXXXXX , செயல் அலுவலர் மீது தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைக்கு நேரில் ஆஜராகக் கோரப்பட்டது – **விசாரணை தேதி மாற்றம் செய்து தர வேண்டுதல்** – தொடர்பாக.

பார்வை :

1. இணை ஆணையர், தஞ்சாவூர். குற்றக் குறிப்பாணை எண். 3920/2022/ஆ2 நாள் 02.02.2022
2. ஆணையர், சென்னை செ.மு.ந.க.எண் 24725/2022/எல்2 நாள்: 14.04.2022
3. இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் ந.க. எண்.2588/2022/ஆ1 நாள் 10.05.2022

------

பார்வை 1 மற்றும் 2–ல் காணும் குறிப்புகளின்படி புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் முன்னாள் நிலை–2 செயல் அலுவலர், திரு.வே. சாXXXXXXXX மீது சுமத்தப்பட்டுள்ள ஆறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக உரிய ஆவணங்களுடன் 20.05.2022 அன்று விசாரணைக்கு நேரில் ஆஜராகி குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கம் அளிக்க பார்வை 3–ல் காணும் குறிப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனால், மேற்கண்ட நாளில் சட்டமன்றத்தில் இத்துறை மானியக் கோரிக்கை நடைபெறுவதால் தலைமையிடத்தில் இருக்க வேண்டும் என ஆணையர் அலுவலகத்திலிருந்து பணிக்கப்பட்டுள்ளதால் வேறொரு நாளில் விசாரணை தேதி நிர்ணயம் செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கே. மXXXXXXXX,
செயல் அலுவலர்

**நகல் பணிந்து அனுப்பப்படுகிறது**

1. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை.
2. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.
3. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.

[ மாதிரி படிவம் ]

## விசாரணை தேதி மாற்றம் செய்து தர வேண்டுதல்

அனுப்புநர்
திரு. க. சேXXXXXXX,
செயல் அலுவலர்,
அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில்,
பெரம்பூர், குளத்தூர் வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

பெறுநர்
இணை ஆணையர்/செயல் அலுவலர் அவர்கள்,
அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்,
ஸ்ரீரங்கம் நகர் மற்றும் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

---

நாள் : 15.05.2022

அய்யா,

பொருள் : ஒழுங்கு நடவடிக்கை – திரு.வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் மீது தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ளகுற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைக்கு நேரில் ஆஜராகக் கோரப்பட்டது – **விசாரணை தேதி மாற்றம் செய்து தர வேண்டுதல்** – தொடர்பாக.

பார்வை :

1. இணை ஆணையர், தஞ்சாவூர். குற்றக் குறிப்பாணை எண். 3920/2022/ஆ2 நாள்: 02.02.2022
2. ஆணையர், சென்னை செ.மு.ந.க.எண் 24725/2022/எல்2 நாள்: 14.04.2022
3. இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் ந.க. எண்.2588/2022/ஆ1 நாள்: 10.05.2022.

------

பார்வை 1 மற்றும் 2–ல் காணும் குறிப்புகளின்படி புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் முன்னாள் நிலை–2 செயல் அலுவலர், திரு.வே. சாXXXXXXXX மீது சுமத்தப்பட்டுள்ள ஆறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக உரிய ஆவணங்களுடன் 20.05.2022 அன்று விசாரணைக்கு நேரில் ஆஜராகி குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கம் அளிக்க பார்வை 3–ல் காணும் குறிப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனால், மேற்கண்ட நாளில் சட்டமன்றத்தில் இத்துறை மானியக் கோரிக்கை நடைபெறுவதால் தலைமையிடத்தில் இருக்க வேண்டும் என ஆணையர் அலுவலகத்திலிருந்து பணிக்கப்பட்டுள்ளதால் வேறொரு நாளில் விசாரணை தேதி நிர்ணயம் செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

க. சேXXXXXXX,
செயல் அலுவலர்

**நகல் பணிந்து அனுப்பப்படுகிறது**

1. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை.
2. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.
3. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.

[ மாதிரி படிவம் ]

## சாட்சியங்கள் விசாரணை - மற்றொரு தேதி நிர்ணயம் செய்து தருதல்

**அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்,**

**ஸ்ரீரங்கம்**

**விசாரணை அறிவிப்பு**

ந.க.எண் 2588/2022/ஆ1 நாள்: 22.05.2022

பொருள் : பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – திரு.வே.சாXXXXXXXX – நிலை–2 செயல் அலுவலர் (த.ப.நீ.) – முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் – விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டது – சாட்சியங்களை விசாரணை செய்தல் – **மற்றொரு தேதி நிர்ணயம் செய்து தருதல்** – தொடர்பாக.

பார்வை :

1. இணை ஆணையர், தஞ்சாவூர். குற்றக் குறிப்பாணை எண். 3920/2022/ஆ2 நாள் 02.02.2022
2. ஆணையர், சென்னை செ.மு.ந.க.எண் 24725/2022/எல்2 நாள்: 14.04.2022
3. இவ்வலுவலக ந.க.எண். 2588/2022/ஆ1 நாள் : 21.04.2022 மற்றும் 25.04.2022
4. திரு.வே.சாXXXXXXXX, செயல் அலுவலர் வாக்கு மூலம் நாள்: 06.05.2022
5. திருமதி. கே. மXXXXXXXX, செயல் அலுவலர், கடித நாள்: 14.05.2022
6. திரு. க. சேXXXXXXX, செயல் அலுவலர், கடித நாள் 15.05.2022

-----

பார்வையில் காணும் குறிப்புகளுக்கு செயல் அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. பார்வை 3–ல் காணும் குறிப்பில் மேற்காணும் பொருள் குறித்து, 20.05.2022 அன்று

விசாரணைக்கு ஆஜராகக் கோரப்பட்டது. பார்வை 4 மற்றும் பார்வை 5–ல் காணும் குறிப்புகளில் திருமதி. கே. மXXXXXXXX, திரு. க. சேXXXXXXX ஆகியோரால் அன்றைய தினம் சட்டமன்றத்தில் இத்துறை மானியக் கோரிக்கை நடைபெறுவதால் விசாரணைக்கு மற்றொரு தேதி நிர்ணயம் செய்து தர வேண்டப்பட்டுள்ளதை ஏற்று, **08.06.2022** அன்று குற்றச்சாட்டுகள் குறித்து உரிய ஆவணங்களுடன் மறுவிசாரணைக்கு தவறாது நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க முகவரியில் காணும் அலுவலர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

(ஒம்) வீ. பாXXXXXXX
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உ.ந.உ.ப./

கண்காணிப்பாளர்

**பெறுநர் :** (பதிவு அஞ்சல் திரும்பும் அட்டையுடன்)

1. திருமதி. கே. மXXXXXXXX, செயல் அலுவலர்,
 அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், விராலிமலை
2. திரு. க. சேXXXXXXX, செயல் அலுவலர்,
 அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில், பெரம்பூர்.
3. திரு.வே.சாXXXXXXXX, செயல் அலுவலர்(த.ப.நீ),
 எண்.104, மேலூர் மெயின் ரோடு,
 வளர் நகர், மதுரை – 625 107.
4. திரு. ந. வேல்முருகன், திருக்கோயில் எழுத்தர்,
 அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், விராலிமலை.

**நகல் :**

5. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை.
6. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.

**நகல் பணிந்து அனுப்பப்படுகிறது**

7. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
8. உபரி

[ மாதிரி படிவம் ]

## சாட்சியங்கள் விசாரணை அலுவலர் முன்னிலையில் வாக்குமூலம்

**ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர்/விசாரணை அலுவலர் அவர்கள் முன்னிலையில் 08.06.2022 அன்று காலை 11.00 மணிக்கு ஆஜராகி அளிக்கும் வாக்குமூலம்**

திருமதி. கே. மXXXXXXXX, நிலை–2 செயல் அலுவலர் ஆகிய நான், தஞ்சாவூர், இணை ஆணையர் செ.மு.ந.க.எண்.3920/2022/ஆ2 நாள்:02.02.2022 உத்தரவின்படி, புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில், முன்னாள் செயல் அலுவலராகப் பணிபுரிந்த, திரு.வே.சாXXXXXXXX பணிக்காலத்தில் ஏற்பட்ட நிர்வாக குறைபாடுகளுக்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17(b)–ன் கீழ் அன்னார் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு சென்னை ஆணையர், செ.மு.ந.க.எண். 24725/2022/எல்2 நாள் 14.04.2022 உத்தரவின்படி திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரை விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டதின் அடிப்படையில் மேற்குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்காக திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் ந.க.எண்.2588/2022/ஆ1 நாள் 22.05.2022 தேதிய உத்தரவின்படி விசாரணைக்கு அழைக்கப்பட்டு தங்கள் முன் நேரில் ஆஜராகி எழுத்துப்பூர்வமான எனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

இக்குற்றச்சாட்டு தொடர்பாக தற்போது இத்திருக்கோயிலில் செயல் அலுவலராகப் பணிபுரிந்து வரும் நான் 9/2021–ல் பணியில் சேர்ந்தபொழுது, மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான வடக்கு மாட வீதி, வார்டு எண்.20, கதவு எண்.120–ல் உள்ள காலி மனையில் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்கு மாடி கட்டடம் கட்டிக்கொள்ள மேற்படி இடத்தின் வாடகைதாரர் திரு. கந்தசாமி என்பவர் 14.10.2021–ல் விண்ணப்பித்தார். அதன்பின் அலுவலக கோப்புகளைப் பரிசீலனை செய்ததில் இத்திருக்கோயிலைக் கூடுதல் பொறுப்பில் கவனித்துக் கொண்டிருந்த பெரம்பூர்,

அருள்மிகு வீரமாகாளி அம்மன் திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு. க. சேXXXXXXX வசம் திரு. கந்தசாமி உபயமாக 3 கடைகள் கொண்ட கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி விண்ணப்பித்திருந்ததையும், இலாகா அனுமதிக்கு தக்கார் தீர்மானம் 20.12.2021–ல் இயற்றப்பட்டு 24.12.2021–ல் இணை ஆணையர் அனுமதிக்காக மதிப்பீட்டு நகலுடன் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலராலேயே திரு. க. சேXXXXXXX அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. பெரம்பூர், அருள்மிகு வீரமாகாளி அம்மன் திருக்கோயிலின் செயல் அலுவலரே இத்திருக்கோயிலுக்குத் தக்கார் என்பதால் தக்கார் தீர்மானம் திரு. க. சேXXXXXXX, செயல் அலுவலராலேயே இயற்றப்பட்டுள்ளது. மேலும், இது குறித்து நேரில் இடத்தை ஆய்வு செய்த போது மேற்படி இடத்தில் திரு. கந்தசாமி என்பவர் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் ஏற்கனவே கட்டியிடிருந்த நிலையில் உள்ளூர் அரசியல் நிர்ப்பந்தத்தின் காரணமாகவே ஏற்கனவே கட்டப்பட்ட கட்டடங்களுக்கு 20.12.2021–ல் புதிதாக தக்கார் தீர்மானம் பெறப்பட்டு (தக்கார் திரு. க. சேXXXXXXX) 24.12.2021–ல் தஞ்சாவூர், இணை ஆணையருக்கு கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி என்னால் விண்ணப்பிக்கப்பட்டதே தவிர என்னுடைய பணிக்காலத்தில் திரு.கந்தசாமி என்பவருக்கு புதிதாக கட்டடம் கட்டிக் கொள்ள அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கே. மXXXXXXX,
செயல் அலுவலர்.

[ மாதிரி படிவம் ]

## விசாரணை அறிக்கை அனுப்புதல்

**அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்,**
**ஸ்ரீரங்கம்**

அனுப்புநர்
வீ. பாXXXXXX எம்.ஏ., பி.எல்.,
இணை ஆணையர்/ செயல் அலுவலர்,
அருள்மிகு அரங்கநாத சுவாமி
திருக்கோயில்,
ஸ்ரீரங்கம்.

பெறுநர்
ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை.

ந.க.எண். 2588/2022/ஆ1 நாள் : 20.07.2022

அய்யா,

பொருள் : பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – திரு.வே. சாXXXXX - நிலை–2 செயல் அலுவலர் (த.ப.நீ) – முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் – விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டது – **விசாரணை அறிக்கை அனுப்புதல்** – தொடர்பாக.

பார்வை :

1. இணை ஆணையர், தஞ்சாவூர். குற்றக் குறிப்பாணை எண். 3920/2022/ஆ2 நாள்: 02.02.2022.
2. ஆணையர், சென்னை செ.மு.ந.க .எண் 24725/2022/எல்2 நாள்: 14.04.2022.
3. இவ்வலுவலக ந.க. எண். 2588/2022/ஆ1 நாள்: 21.04.2022 மற்றும் 25.04.2022.
4. திரு.வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் வாக்கு மூலம் நாள்: 06.05.2022.

5. இவ்வலுவலக ந.க. எண்.2588/2022/ஆ1 நாள்: 22.05.2022.
6. திருமதி. கே. மXXXXXXXX, செயல் அலுவலர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், விராலிமலை வாக்கு மூலம் நாள்: 08.06.2022.
7. திரு. க. சேXXXXXXX, செயல் அலுவலர், அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில், பெரம்பூர் வாக்குமூலம் நாள்: 08.06.2022.
8. திரு. வேல்முருகன், திருக்கோயில் எழுத்தர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், விராலிமலை. வாக்குமூலம் நாள்: 08.06.2022.

------

பார்வை 1–ல் காணும் உத்தரவில், புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலின் முன்னாள் நிலை 2 செயல் அலுவலர் திரு.வே. சாXXXXXXXX என்பவர் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17(b)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டதன் தொடர்ச்சியாக பார்வை 2–ல் காணும் குறிப்பில் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவில் இணை ஆணையர்/செயல் அலுவலரை விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 3–ல் காணும் குறிப்பின் மூலம் தொடர்புடைய கோப்பு நகல்கள் தஞ்சாவூர் இணை ஆணையரிடமிருந்து பெறப்பட்டு விசாரணை நடவடிக்கைகள் துவக்கப்பட்டன என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பார்வை 3–ல் காணும் குறிப்பின் மூலம் குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் திரு.வே. சாXXXXXXXX 06.05.2022 அன்று விசாரணைக்கு நாள் நிர்ணயம் செய்து விசாரணை அறிவிப்பு அனுப்பப்பட்டதில் செயல் அலுவலர் திரு.வே. சாXXXXXXXX விசாரணைக்கு நேரில் ஆஜராகி தனது எழுத்து மூலமான விளக்கத்தினைச் சமர்ப்பித்துள்ளார். மேலும் அன்றைய தினம் நடைபெற்ற நேரடி விசாரணையின் போது சில குற்றச்சாட்டுகள் தற்போதைய செயல் அலுவலர் மற்றும் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலர்கள் காலத்தில் நடைபெற்றவை என தெரிவிக்கப்பட்டதால் அது தொடர்பாக சாட்சியங்களை விசாரணை செய்ய பார்வை 5–ல் காணும் குறிப்பின்படி விசாரணை அறிவிப்பு அனுப்பப்பட்டு, 08.06.2022 அன்று செயல் அலுவலர்கள் திருமதி. கே. மXXXXXXX, திரு. க. சேXXXXXXX மற்றும் திருக்கோயில் எழுத்தர் திரு. வேல்முருகன்

ஆகியோர் விசாரணைக்கு நேரில் ஆஜராகி தங்களது எழுத்து மூலமான விளக்கத்தினைச் சமர்ப்பித்துள்ளனர்.

**08.06.2022** அன்று மேற்படியாளர்கள் சமர்ப்பித்த வாக்குமூலங்கள், ஆவணங்கள் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, திரு.வே.சாXXXXXXXX, நிலை–2, செயல் அலுவலர்(த.ப.நீ) சமர்ப்பித்த விளக்கம், தஞ்சாவூர் இணை ஆணையரிடமிருந்து பெறப்பட்ட தொடர்புடைய கோப்புகள், திருக்கோயில் கோப்புகள் ஆகியவற்றை பரிசீலித்து விசாரணை அறிக்கை பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**குற்றச்சாட்டு எண். 1 :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலி மனையில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு, வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதியான சிவன் கோயில் கீழ ரத வீதியின் வழிகாட்டி மதிப்பு பெறாமல், மதிப்பு குறைந்த பெருமாள் கோவில் வடக்கு மாட வீதியின் சந்தை மதிப்பினைப் பெற்று அதன் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்ய கணக்கீடு தயார் செய்து, இணை ஆணையருக்குப் பரிந்துரை செய்து குறைவான மதிப்பின் அடிப்படையில் நியாய வாடகை கட்டணம் நிர்ணயம் செய்து திருக்கோவிலுக்கு பெரிய அளவில் நிதியிழப்பினை ஏற்படுத்தியது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம் மற்றும் மனைகளுக்கு திருக்கோயில் செயல் அலுவலரால் மட்டுமே நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. இந்து சமய அறநிலையச் சட்டப்பிரிவு **34(A)**-ன்படி இணை ஆணையர், மாவட்டப் பதிவாளர், தக்கார், செயல் அலுவலர் ஆகியோர்களை உள்ளடக்கிய நியாய வாடகை நிர்ணயக்குழு மூலமாகவே நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது. அதனடிப்படையில் இக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இனத்திற்கு அரசாணைப்படி உரிய வழி முறைகள் பின்பற்றப்பட்டு நியாய வாடகை குழு மூலம் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி நியாய வாடகை தஞ்சாவூர், இணை ஆணையர் மூ.மு. எண் **1007/2020/ஆ3** நாள் **01.07.2020**–ன்படி அங்கீகரிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாணையின்படி **01.07.2016** தேதி முதல் முன் தேதியிட்டு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு, அமுல்படுத்தப்பட்டு நாளது தேதி வரை நிலுவை ஏதுமின்றி வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு

எனது பணிக்காலத்தில் ரூ.2,15,000/– வாடகை நிலுவைத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதிக்கு சந்தை மதிப்பு அதிகமென எவ்வித ஆதாரமும் இன்றி யூகத்தின் அடிப்படையில் தெரிவித்திருப்பதுடன், அதன் மூலம் எவ்வளவு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என குற்றச்சாட்டில் குறிப்பிடப்படவில்லை. எனவே, மேற்காணும் இடத்திற்கான நியாய வாடகை நிர்ணயம் உரிய விதிமுறைகளின்படியே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதுடன் இதனால் திருக்கோயிலுக்கு எவ்விதமான நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

இக்குற்றச்சாட்டு தொடர்பாக செயல் அலுவலர் அளித்த விளக்கத்தில் மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான விராலிமலை டி.எஸ்.எண். 212/1–ல் வார்டு எண்.23–ல் உள்ள காலி மனையில் அமைந்துள்ள வணிக வளாகத்திற்கு அரசாணையின்படி நியாய வாடகை நிர்ணயம் செய்ய சார் பதிவாளர் அலுவலகத்தில் சிவன் கோயில் கீழ ரத வீதியின் வழிகாட்டி மதிப்பு இல்லாத நிலையில், அருகில் உள்ள பெருமாள் கோயில் வடக்கு மாட வீதியின் சந்தை மதிப்பின்படி 01.03.2020–ல் நியாய வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதாகவும் தற்போது நியாய வாடகையாக ரூ.12,451/– பெறப்பட்டு வருவதாகவும், மேற்படி நியாய வாடகை நிர்ணயம், நியாய வாடகை நிர்ணயக் குழுவான மாவட்ட பதிவாளர், மண்டல இணை ஆணையர் மற்றும் திருக்கோயில் தக்கார் ஆகியோரது பரிந்துரை அடிப்படையில் செய்யப்பட்டு தஞ்சாவூர், இணை ஆணையர் மூ.மு.எண் 1007/2020/ஆ3 நாள்01.07.2020–ன் படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் இதனால் திருக்கோயிலுக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார்.

மேலும் விராலிமலை டி.எஸ்.எண். 212/1–ல் வார்டு எண்.23, சிவன் கோயில் கீழ ரத வீதிக்கு 2016–ல் வழிகாட்டி மதிப்பு இல்லை என 04.05.2022–ல் சார் பதிவாளர் சான்றினைப் பெற்று தற்போது 10.05.2022–ல் கூடுதல் ஆவணமாக செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார். மதிப்பு கூடுதலாக உள்ள வணிக வளாகத்தின் முன்பக்கத்திற்கான வழிகாட்டி மதிப்பைப் பெற்று நியாய வாடகை நிர்ணயக் குழுவின் முன் சமர்ப்பிக்காமல்

வணிக வளாகத்தின் பின்பகுதியில் உள்ள இடத்திற்கு வழிகாட்டி மதிப்பு பெற்றுள்ளார் என்பதே அன்னார் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு ஆகும். குற்றச்சாட்டுக்கு உள்ளான அலுவலர் குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளிக்காமல் வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதி இடத்திற்கு வழிகாட்டி மதிப்பு இல்லை என தற்போது விளக்கம் அளித்து அதற்கு உரிய புகைப்பட நகலை 04.05.2022—ல் பெற்று தாக்கல் செய்து உள்ளார். எனவே, அவருடைய விளக்கம் குற்றச்சாட்டுக்குப் பொருத்தமற்றதாகவும், ஏற்கத்தக்கதாகவும் இல்லாததால் இக்குற்றச்சாட்டு நிரூபணம் ஆகின்றது என முடிவு செய்யப்படுகிறது.

**குற்றச்சாட்டு எண். 2 :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலி மனையில் துறை அனுமதியின்றி புதிதாக வணிக வளாகம் கட்டுவது தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு ஏ.எஸ்.524/2017—ல் ஆணையரால் இணக்கத் தீர்வு ஏற்படுத்தப்பட்டு ஆணையர் சென்னை ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017—ன்படி 01.07.1993 முதல் 28.02.2017 முடிய வாடகைதாரரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட வாடகைத் தொகை ரூ. 1,32,000/— போக மீதமுள்ளத் தொகை ரூ.17,54,051.68/—னை வசூல் செய்து நிரந்தர முதலீட்டில் முதலீடு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு பின்பும் இரண்டு ஆண்டுகள் இத்திருக்கோயிலில் செயல் அலுவலராகப் பணியாற்றிய போதும் நிலுவைத் தொகையினை முறையாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்காததால் நாளது தேதி வரை ரூ.4,90,000/— வசூல் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இதனால் நிலுவைத் தொகையினை வசூல் செய்து நிரந்தர முதலீடு செய்வதன் மூலம் வரப்பெறும் வட்டி வருவாய் இனத்தினை தடை செய்து திருக்கோவிலுக்கு நிதி இழப்பினை ஏற்படுத்தியது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாகம் அமைந்துள்ள காலிமனை இடத்திற்கு சென்னை, ஆணையர், ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017—ன் உத்தரவில் 01.07.1993 முதல் 28.02.2017 முடிய கணக்கீடு செய்யப்பட்ட கூடுதல் வாடகை நிலுவைத் தொகையில் வாடகைதாரர் ரூ.1,32,000/— மட்டுமே செலுத்தியுள்ளார் எனவும், உத்தரவு தேதியில் (15.09.2017) வாடகை பாக்கி

ரூ.17,54,051.68/– எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாடகை நிலுவைத் தொகை ரூ.17,54,051.68/– எனது பணிக்காலத்தில் ஏற்பட்டதல்ல. சுமார் 24 ஆண்டுகளாக நிலுவையாக உள்ள வாடகையாகும். நான், இத்திருக்கோயிலில் 05.03.2019 முதல் 09.07.2021 முடிய (சுமார் 28 மாதங்கள்) மட்டுமே செயல் அலுவலராகப் பணிபுரிந்துள்ளேன். கேட்பு வசூல் நிலுவைப் பதிவேட்டின்படி மேற்படி தொகை பல ஆண்டுகளாக நிலுவையாக இருந்து வந்துள்ளது. வசூலாகாத தொகைக்கு வட்டியிழப்பு எனக் குறிப்பிட்டு அதன் மூலம் நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளதாகக் குற்றச்சாட்டு சுமத்தியிருப்பது பொருத்தமற்றதாகும். மேலும், இக்குற்றச்சாட்டில் நிதியிழப்புத் தொகை குறித்து எதுவும் குறிப்பிடாமல் யூகத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட வாடகை நிலுவைத் தொகை ரூ.17,54,051.68/–னைச் செலுத்தக் கோரி வாடகைதாரருக்கு எனது பணிக்காலத்தில் 05.03.2020 நாளிட்ட பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு நகலை நான் சான்றாவணமாக சமர்ப்பிக்கின்றேன். மேலும், வாடகைதாரரிடம் பலமுறை நேரிலும், பணியாளர்கள் மூலமும் மேற்படி வாடகை நிலுவைத்தொகை செலுத்தக்கோரி உள்ளேன் எனது பணிக்காலத்தில் மேற்கண்ட காலிமனை இடத்திற்கு உரிய வாடகை நிலுவைத்தொகை ரூ.2,64,052/– என்னால் வசூல் செய்யப்பட்டுள்ளது. (இரசீது எண்: 11471/29.05.2019, 11489/07.08.2019, 12626/22.04.2021). மேலும், இக்குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள வாடகை நிலுவைத் தொகை ரூ.14,90,000/– வசூல் செய்ய இயலாத காலக்கெடு முடிவடைந்த தொகை அல்ல. எனவே, என்னால் திருக்கோயிலுக்கு எவ்விதமான நிதியிழப்பும் ஏற்படுத்தப்படவில்லை என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

குற்றஞ்சாட்டப்பட்ட செயல் அலுவலர் திரு.வே. சாXXXXXXX விளக்கம் பரிசீலிக்கப்பட்டது. செயல் அலுவலர் தனது விளக்கத்தில் தான் 05.03.2019 முதல் 09.07.2021 முடிய புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் நிலை–2 செயல் அலுவலராகப் பணியாற்றியதாகவும், மேற்படி திருக்கோயிலுக்கு சொந்தமான விராலிமலை டி.எஸ்.எண். 212/1–ல் 0.72 சென்ட் இடத்தில் உள்ள வணிக வளாகத்திற்கு வாடகை வசூல் செய்வது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு

ஏ.எஸ்.524/2017—ல் ஆணையரால் இணைக்கத் தீர்வு ஏற்படுத்தப்பட்டு, சென்னை, ஆணையர் ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017—ன்படி 01.07.1993 முதல் 28.02.2017 முடிய உள்ள வாடகை நிலுவைத் தொகை ரூ. 18,86,051.68/—ல் ஏற்கனவே வாடகைதாரரால் செலுத்தப்பட்ட தொகை ரூ. 1,32,000/— போக மீதமுள்ள தொகை ரூ.17,54,051.68/—னை வசூல் செய்து நிரந்தர முதலீடு செய்யவும், மேற்படி இடத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி இடத்திற்கு தன்னால் 01.03.2020 முதல் நியாய வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதாகவும் நிலுவைத் தொகை ரூ.17,54,051.68/—ல் ரூ.2,64,052/— வசூல் செய்யப்பட்டு மீதத் தொகை ரூ. 14,90,000/— நிலுவையாக உள்ளது என்றும் திருக்கோயில் வாடகை பாக்கி என்பது திருக்கோயிலுக்கு நிதி இழப்பு ஆகாது என விளக்கம் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கு ஏ.எஸ்.எண்.524/2017—ல் இணக்கத் தீர்வு ஆணையரால் ஏற்படுத்தப்பட்டு இரு தரப்பினரும் இணக்கத் தீர்வினை ஏற்றுக்கொண்ட நிலையில் ஆணையரின் உத்தரவின்படி அன்னார் தன்னுடைய பணிக்காலத்தில் (05.03.2019 முதல் 09.07.2021 முடிய) வாடகை நிலுவைத் தொகையினை முழுமையாக வசூல் செய்யவில்லை. மீதமுள்ள நிலுவைத் தொகையை வசூல் செய்ய சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கையாக நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்திருக்க வேண்டும் அல்லது சட்டப்பிரிவு 79C—ன் கீழ் இணை ஆணையர் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இவை இரண்டையும் குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் செய்யத் தவறியுள்ளார். விசாரணையின் போது, வாடகைதாரர்களுக்கு வாடகை நிலுவை குறித்து அறிவிப்பு அனுப்பியதாகத் தெரிவித்ததற்கு தகுந்த ஆதாரமும் அளிக்கவில்லை. செயல் அலுவலர் தன்னுடைய விளக்கத்தில் திருக்கோயில் பலவகை ரசீது எண். 11471, 11479, 12626 மூலம் வசூல் செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ள தொகை ரூ.2,64,052/— அன்னாருடைய பணிக்காலத்தில் வசூலிக்கப்படவில்லை. அவருக்குப் பின் வந்த செயல் அலுவலர்களாலேயே வசூலிக்கப்பட்டுள்ளது என்பது மேற்படி ரசீதுகளின் நகல்களின் மூலம் தெரிய வருகிறது. இத்திருக்கோயில் செயல் அலுவலராக பணியாற்றிய இரண்டு ஆண்டு காலத்தில் இவர் நிலுவைத் தொகையினை வசூலிக்கவில்லை. எனவே நிலுவை தொகையினை முழுமையாக வசூல் செய்து நிரந்தர முதலீடு செய்யப்படாததால் வட்டி வருவாய் இழப்பு ஏற்பட்டது என்ற இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

**குற்றச்சாட்டு எண். 3 :**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான விராலிமலை நகரில் சர்வே எண்.12/1–ல் உள்ள 9 ஏக்கர் 20 சென்ட் புன்செய் நிலம் திரு. சண்முகம் என்பவர் வசம் உள்ளது. மேற்காணும் நிலத்திற்கு திரு. சண்முகம் வருடம் ஒன்றுக்கு ரூ.400/– குத்தகையாக செலுத்தி வருகிறார். மேற்படி நிலத்தினைச் சுற்றியுள்ள நிலங்களில் வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பு பகுதியாக மாறியுள்ளதால் குத்தகைதாரரை வெளியேற்ற வருவாய் நீதிமன்றத்தில் பி.டி.150/2017 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் திரு. சண்முகம் இவ்விடத்தில் நீண்ட காலமாக விவசாயம் ஏதும் செய்யாமல் இருந்த காரணத்தினாலும் மேற்படி இடம் விவசாயத்திற்கு தகுதியற்ற மற்றும் குடியிருப்பு பகுதியாக மாறியுள்ள காரணத்தினாலும், மேற்படி இடத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றவும், அவர் இதுவரை செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையினைச் செலுத்த வேண்டியும், வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி வழக்கில் 05.04.2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் குத்தகைதாரரை வெளியேற்ற உத்தரவிடாமல் தாவா நிலத்திற்குரிய குத்தகை பாக்கியை மூன்று மாதத்திற்குள் மனுதாரர் செலுத்த வேண்டும் எனவும், தவறினால் எதிர் மனுதாரரே தாவா நிலத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றலாம் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், தாவா நிலத்திற்கு நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால் அதற்கு தனியாக நீதிமன்றத்தில் மனு செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், நியாயக் குத்தகை நிர்ணயம் செய்வதற்கு எவ்விதமான நடவடிக்கையும் செயல் அலுவலரால் எடுக்கப்படவில்லை.அதனால், நாளது தேதி வரை வருடம் 1–க்கு ரூ.400/– மட்டுமே குத்தகைத் தொகையாக பெறப்பட்டு வரப்பெறுகிறது. நியாய குத்தகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் இருந்து திருக்கோவிலுக்கு மிகப்பெரிய நிதி இழப்பினை ஏற்படுத்தியது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விராலிமலை நகர் சர்வே எண் 12/1–ல் உள்ள 9 ஏக்கர் 20 சென்ட் நிலம் திரு. சண்முகம் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்ட புன்செய் நிலமாகும். திருக்கோயில் கேட்பு வசூல் நிலுவைப் பதிவேட்டிலும் புன்செய் நிலம் என பதிவாகியுள்ளது. இந்நிலையில் மேற்படி குத்தகைதாரர் 1983 முதல் 2010 முடிய செலுத்த வேண்டிய குத்தகை பாக்கித் தொகை ரூ.10,800/–க்காக திருச்சி வருவாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண் பி.டி.150/2017–ல் 05.04.2019–ல்

வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் "தாவா நிலத்திற்குரிய குத்தகை பாக்கியினை 3 மாதத்திற்குள் மனுதாரரிடம் (செயல் அலுவலர்) செலுத்த உத்தரவிடப்படுகிறது. தவறினால், எதிர் மனுதாரரை (குத்தகைதாரர்) தாவா நிலத்தை விட்டு வெளியேற்ற உத்தரவிடப்படுகிறது. தாவா நிலத்திற்கு நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால் அதற்கு தனியே இந்த நீதிமன்றத்தை அணுகி மனு செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்கண்ட உத்தரவின்படி குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் மேற்படி குத்தகைதாரரிடம் இருந்து திருக்கோயிலுக்கு நிதியிழப்பு ஏதுமின்றி குத்தகை பாக்கி ரூ.10,800/– என்னால் வசூல் செய்யப்பட்டது. (இரசீது எண் 11164 நாள்: 20.10.2019)

மேற்படி குத்தகைதாரரை தாவா நிலத்தில் இருந்து வெளியேற்றுவது அல்லது குத்தகை உயர்வு செய்வது குறித்து வழக்கறிஞர் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததாலும், மேற்படி புன்செய் நிலத்தை மனைப்பகுதியாக மாற்றி திருக்கோயிலுக்கு அதிக வருமானம் வரப்பெறும் வகையில் மேற்படி குத்தகைதாரரை தாவா நிலத்திலிருந்து வெளியேற்ற உயரதிகாரிகளை கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த காரணத்தினாலும், மேற்படி திருக்கோயிலுடன் இணைந்த திருக்கோயில்கள் நிர்வாகம், திருப்பணி வேலைகள், சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் நிறைந்த திருவிழாக்கள் மற்றும் கூடுதல் பணிச்சுமை காரணமாக மேற்படி நடவடிக்கை மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டுவிட்டதெனவும், புன்செய் நிலத்திற்கு வருவாய் நீதிமன்றம் மூலம் நியாய வாடகை நிர்ணயம் செய்ய இயலாது என்ற காரணத்தினால் மேற்படி இடத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படவில்லை என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குத்தகை பாக்கித் தொகை ரூ. 10,800/– முழுவதும் வசூல் செய்யப்பட்டு விட்டதாலும், நாளது தேதி வரை ஆண்டு 1–க்கு ரூ. 400/– குத்தகை தொகை நிலுவையின்றி வசூல் செய்யப்பட்டு வருவதாலும், குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ளவாறு நிதியிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

இக்குற்றச்சாட்டு தொடர்பாக செயல் அலுவலர் திரு.வே.சா XXXXXXXX அளித்த விளக்கம் பரிசீலிக்கப்பட்டது. விராலிமலை புறநகர் சர்வே எண். 12/1–ல் உள்ள ஏக்கர்

9.20 சென்ட் புன்செய் நிலத்திற்கு குத்தகைதாரராக இருந்து வரும் திரு. சண்முகம் என்பவரிடமிருந்து 1983 முதல் 2010 முடிய குத்தகை நிலுவைத் தொகை ரூ.10,800/–னை வசூல் செய்திடவும், அன்னாரை குத்தகை நிலத்திலிருந்து வெளியேற்றிடவும் திருச்சி வருவாய் நீதிமன்றத்தில் பி.டி. 150/2017–ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி நீதிமன்றத்தின் 05/04/2019–ம் தேதிய உத்தரவில் குத்தகைதாரர் மூன்று மாதத்திற்குள் குத்தகை தொகை ரூ.10,800/–னை செலுத்த வேண்டும் எனவும், குத்தகைதாரர் குத்தகை செலுத்த தவறும்பட்சத்தில் குத்தகைதாரரை குத்தகை நிலத்திலிருந்து வெளியேற்றவும், நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால் மேற்படி நீதிமன்றத்தில் மனு செய்ய உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து நிலுவைத் தொகை ரூ.10,800/– தன்னால் பலவகை இரசீது எண். 11164 நாள்:20.10.2019–ன்படி வசூல் செய்யப்பட்டுவிட்டதாகவும், மேற்படி இடத்தினை சுற்றி வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பு பகுதியாக மாறியதால் குத்தகைதாரரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க இருந்த காரணத்தினால், வருவாய் நீதிமன்ற உத்தரவின்படி நியாய குத்தகை நிர்ணயம் செய்ய மனு தாக்கல் செய்யவில்லை எனவும், திருப்பணி மற்றும் திருவிழாக்கள் போன்ற இதர பணிகளின் காரணமாக நியாய குத்தகை நிர்ணயம் செய்ய இயலாத நிலை குத்தகை குத்தகை ஏற்பட்டதாகவும், இதனால் திருக்கோயிலுக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார்.

செயல் அலுவலரின் விளக்கம் ஏற்கக்கூடியதாக இல்லை. நகர்ப்புற நிலமான மேற்கண்ட இடத்தினை சுற்றி குடியிருப்புகள் வரப்பெற்று மனைப் பகுதிகளாக மாறி வரும் சூழ்நிலையில் விலை மதிப்புள்ள நகர்ப்புற திருக்கோயில் இடத்தினைப் பாதுகாக்கும் நோக்கில் புன்செய் குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் இடத்தின் குத்தகை உரிமையினை இரத்து செய்து மேற்படி வாடகைதாரரை வெளியேற்ற நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் அல்லது வருவாய் நீதிமன்ற உத்தரவின்படி தற்கால நிலவரத்தின்படி நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் பணிச் சுமையால் மேற்கண்ட நடவடிக்கையை எடுக்கவில்லை என செயல் அலுவலர் திரு.வே. சாXXXXXXXX தனது விளக்கத்தில் இக்குற்றச்சாட்டினை ஏற்றுக்கொண்டுள்ளதால் இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என முடிவு செய்யப்படுகிறது.

**குற்றச்சாட்டு எண். 4 :**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான, வடக்கு மாட வீதியில் வார்டு எண். 20, கதவு

எண்.120–ல் உள்ள காலிமனைக்கு தற்போதைய மாத வாடகை ரூ.161/– ஆகும். திரு. கந்தசாமி என்பவர் வாடகைதாரராக இருந்து வருகிறார். ஆனால் மேற்படி இடத்தின் வாடகைதாரர் இலாகா அனுமதியில்லாமல் ஒன்பது கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்டி அதனை உள்வாடகைக்கு விட்டு வருகிறார். இலாகா அனுமதி பெறாமல் கட்டடம் கட்டுவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காமல் வாடகைதாரருடன் உடந்தையாக இருந்து இலாகா சட்டவிதிகளுக்கு எதிராகவும், திருக்கோவில் நலனுக்கு எதிராகவும் செயல்பட்டது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

நான் இத்திருக்கோயிலில் 05.03.2019 முதல் 09.07.2021 முடிய நிலை–2 செயல் அலுவலராகப் பணிபுரிந்துள்ளேன். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான, வடக்கு மாட வீதியில் வார்டு எண் 20, கதவு எண். 120–ல் உள்ள காலிமனையின் வாடகைதாரர் திரு. கந்தசாமி என்பவர் மேற்படி இடத்தில் கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி எனது பணிக்காலத்தில் விண்ணப்பம் ஏதும் வழங்கவில்லை எனவும், மேற்படி இடத்தில் எனது பணிக்காலத்தில் கட்டடம் ஏதும் கட்டப்படவில்லை எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி திருக்கோயிலில் எனக்கு பின்னர் செயல் அலுவலராகப் பணிபுரிந்த திருமதி. கே. மXXXXXXXX என்பவரால் 24.12.2021–ல் மேற்படி வாடகைதாரர் திரு. கந்தசாமி கட்டடம் கட்டிக் கொள்ள அனுமதி வேண்டி தஞ்சாவூர், இணை ஆணையருக்கு அனுப்பிய கடித நகல் சமர்ப்பிக்கப்படுகிறது. எனக்கு பின்னர் பணிபுரிந்த செயல் அலுவலர்கள் காலத்திலேயே வாடகைதாரர் திரு.கந்தசாமி என்பவரால் காலிமனையில் தனது சொந்த செலவில் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி 14.10.2021–ல் விண்ணப்பம் அளித்துள்ளதையும், அதன் பேரில் 20.12.2021–ல் தக்கார் தீர்மானம் இயற்றப்பட்டு புதுக்கோட்டை உதவிப் பொறியாளரால் ரூ.39,80,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து 24.12.2021–ல் நிர்வாக அனுமதி படிவம் மற்றும் இணைப்புகளுடன் தஞ்சாவூர், இணை ஆணையருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்படி காலிமனை இடத்தில் வாடகைதாரர் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்கு மாடி கட்டுவது தொடர்பான நடவடிக்கைகள் எனது காலத்திற்கு பின்னர் பணிபுரிந்த செயல் அலுவலர்களால் தான் எடுக்கப்பட்டுள்ளது என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

இக்குற்றச்சாட்டு தொடர்பாக செயல் அலுவலர் திரு.வே. சாXXXXXXXX அளித்த விளக்கத்தில் தான் விராலிமலை, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் **05.03.2019** முதல் **09.07.2021** முடிய செயல் அலுவலராகப் பணிபுரிந்ததாகவும், மேற்படி திருக்கோவிலுக்குச் சொந்தமான வடக்கு மாட வீதி கதவு எண்.120–ல் உள்ள காலி மனையில் திரு. கந்தசாமி என்பவர் வாடகைதாரராக இருந்து வந்துள்ளதாகவும், மேற்கண்ட இடத்தில் அன்னாரால் இரண்டு அடுக்கு மாடி கட்டடம் கட்ட **14.10.2021–ல்** விண்ணப்பிக்கப்பட்டு அதனடிப்படையில் புதுக்கோட்டை உதவி பொறியாளரால் ரூ. **39,80,000/–க்கு** தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மற்றும் **20.12..2021–ந்** தேதிய தக்கார் தீர்மானத்தின் அடிப்படையில் **24.12.2021–ல்** அப்போதைய செயல் அலுவலர் திருமதி. கே. மXXXXXXXX என்பவரால் இணை ஆணையர் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், தன்னுடைய பணி காலத்தில் மேற்படி கட்டடம் கட்டப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இக்குற்றச்சாட்டு தொடர்பாக தற்போது இத்திருக்கோயிலில் செயல் அலுவலராகப் பணிபுரிந்து வரும் திருமதி. கே. மXXXXXXXX **08.06.2022–ல்** நேரில் விசாரணைக்கு ஆஜராகி எழுத்து மூலமாக அளித்துள்ள வாக்குமூலத்தில் தான் **12/2021–ல்** பணியில் சேர்ந்தபொழுது, மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான வடக்கு மாட வீதி, வார்டு எண்.20, கதவு எண்.120–ல் உள்ள காலி மனையில் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்கு மாடி கட்டடம் கட்டிக்கொள்ள மேற்படி இடத்தின் வாடகைதாரர் திரு. கந்தசாமி என்பவர் **14.10.2021–ல்** விண்ணப்பித்தார் என்றும், அலுவலக கோப்புகளைப் பரிசீலனை செய்ததில் இத்திருக்கோயிலைக் கூடுதல் பொறுப்பில் கவனித்துக் கொண்டிருந்த பெரம்பூர், அருள்மிகு வீரமாகாளி அம்மன் திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு. க. சேXXXXXXX வசம் திரு. கந்தசாமி உபயமாக 3 கடைகள் கொண்ட கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி விண்ணப்பித்திருந்ததையும், இலாகா அனுமதிக்கு தக்கார் தீர்மானம் **20.10.2021–ல்** இயற்றப்பட்டு **23.10.2021–ல்** இணை ஆணையர் அனுமதிக்காக மதிப்பீட்டு நகலுடன் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலர் திரு. க. சேXXXXXXX அனுப்பியது அறியப்பட்டதாகவும் பெரம்பூர், அருள்மிகு வீரமாகாளி அம்மன் திருக்கோயிலின் செயல் அலுவலரே இத்திருக்கோயிலுக்கும் தக்கார் என்பதால் தக்கார் தீர்மானம் இவராலேயே இயற்றப்பட்டதாகவும், ஆவண நகல்களுடன் சமர்ப்பித்திருந்தார். மேலும், இது குறித்து நேரில் இடத்தை ஆய்வு செய்த போது மேற்படி இடத்தில் திரு. கந்தசாமி என்பவர் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் ஏற்கனவே கட்டப்பட்டிருந்த

நிலையில் உள்ளூர் அரசியல் நிர்ப்பந்தத்தின் காரணமாக ஏற்கனவே கட்டப்பட்ட கட்டடங்களுக்கு 20.12.2021–ல் புதிதாக தக்கார் தீர்மானம் பெறப்பட்டு (தக்கார் திரு. க. சேXXXXXXX) 24.12.2021–ல் தஞ்சாவூர், இணை ஆணையருக்கு கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி தன்னால் விண்ணப்பிக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், மேற்படி பொருள் தொடர்பாக திரு. க. சேXXXXXXX, செயல் அலுவலரை 08.06.2022–ல் நேரில் விசாரணைக்கு ஆஜராகக் கோரி விசாரிக்கப்பட்டதில், தான் பெரம்பூர், அருள்மிகு வீரமாகாளி அம்மன் திருக்கோயிலின் செயல் அலுவலராகப் பணிபுரிந்த காலத்தில் விராலிமலை, சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலராக 10.09.2021 முதல் 14.12.2021 முடிய பணியாற்றி வந்ததாகவும், திருக்கோயிலுக்குச் சொந்தமான வடக்கு மாட வீதி வார்டு எண் 20, கதவு எண்.120–ல் உள்ள காலி மனையில் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டடம் தனது பணிக் காலத்தில் கட்டப்படவில்லை என்றும், திருமதி.கே. மXXXXXXXX செயல் அலுவலராகப் பணிபுரிந்த காலத்தில் மேற்படி இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு 20.12.2021–ல் தக்கார் தீர்மானம் இயற்றப்பட்டு 24.12.2021–ல் இணை ஆணையர், தஞ்சாவூர் அவர்களுக்கு முன்மொழிவுகள் திருமதி. கே. மXXXXXXXX செயல் அலுவலரால் அனுப்பப்பட்டுள்ளது என்றும் , மேற்படி புதிய கட்டடம் கட்டுவதற்கு மின் இணைப்பு துண்டிப்பதற்கு மின் வாரியத்திற்கு யாருடைய பணிக் காலத்தில் கையொப்பம் இட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிந்தால் மேற்படி கட்டடம் யாருடைய பணிக் காலத்தில் கட்டப்பட்டது எனத் தெரிய வரும் என எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் அளித்துள்ளார்.

குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் அளித்துள்ள விளக்கம், திருமதி. கே. மXXXXXXX மற்றும் திரு.க. சேXXXXXXX ஆகியோர் அளித்த வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்ததில், விராலிமலை நகர் மற்றும் வட்டம் வடக்கு மாட வீதி கதவு எண். 120–ல் உள்ள மனையில் வாடகைதாரர் திரு. கந்தசாமி என்பவருக்கு ஒன்பது கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக எழுத்துப்பூர்வமான நடவடிக்கைகள் செயல் அலுவலர் திரு.வே. சாXXXXX பணி காலத்திற்கு பின்னர் பணிபுரிந்த செயல் அலுவலர்கள் திருமதி.கே. மXXXXXXX மற்றும் திரு.க. சேXXXXXXX பணிக்காலத்திலே தான் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், திருக்கோயில் எழுத்தர் திரு. வேல்முருகன் 08.06.2022 அன்று அளித்த வாக்குமூலத்தில் குற்றம் சாட்டப்பட்ட திரு.வே. சாXXXXXXX செயல் அலுவலர்

பணிக்காலத்தில் தான் மேற்காணும் புல எண்ணில் புதிய கட்டடம் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக வாக்குமூலம் அளித்துள்ளார். குற்றஞ்சாட்டப்பட்ட செயல் அலுவலர் தன்னுடைய பணிக்காலத்தில் புதியக் கட்டடம் கட்டப்படவில்லை என தெரிவித்துள்ளார். அவருக்கு பின் கூடுதல் பொறுப்பில் இத்திருக்கோயிலின் செயல் அலுவலராகவும், தக்காராகவும் பணியாற்றிய திரு. க. சேXXXXXXX தன்னுடைய பணிக்காலத்தில் கட்டடம் கட்டப்படவில்லை என தெரிவித்துள்ளார். ஆனால், தக்கார் நிலையில் தீர்மானம் இயற்றி கூடுதல் பொறுப்பு செயல் அலுவலர் நிலையிலேயும் கட்டடம் கட்ட அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ளதும் ஆவணங்களில் உள்ளது. அதற்கு பின் வந்த செயல் அலுவலர் திருமதி. கே. மXXXXXXXX, ஏற்கனவே கட்டப்பட்ட கட்டடங்களுக்கு உள்ளூர் அரசியல் நிர்பந்தத்தின் காரணமாகவே புதிதாக தக்கார் தீர்மானம் பெற்று (தக்கார் திரு. க. சேXXXXXXX) அனுமதி வேண்டி தான் விண்ணப்பித்ததாக வாக்குமூலம் அளித்துள்ளார். இவற்றை மறுத்து குறுக்கு விசாரணை எதுவும் குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் மேற்கொள்ளவில்லை. தனக்கு பின்னால் பணியாற்றிய செயல் அலுவலர்களை விசாரணை செய்யும் போது, தன்னுடைய தரப்பை நிலைநாட்ட குறுக்கு விசாரணை செய்யவும் இல்லை.

குற்றஞ்சாட்டப்பட்ட செயல் அலுவலர் பணிக்காலத்தில் தான் கட்டடம் இடிக்கப்பட்டதாகத் திருக்கோயில் பணியாளர் வாக்குமூலம் அளித்துள்ளார். புதிய கட்டடம் தன்னுடைய பணிக்காலத்தில் கட்டப்படவில்லை என குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் தெரிவித்துள்ள நிலையில் விசாரணையின் போது அதனை மறுத்து வாக்குமூலம் ஏதும் அளிக்கவில்லை. எனவே, புதிய கட்டடம் குற்றம் சாட்டபட்ட செயல் அலுவலர் பணிக்காலத்தில் கட்டப்படவில்லை எனினும், துறை அனுமதி பெறாமல் புதிய கட்டடம் கட்டுவதற்கான பூர்வாங்க பணிகள் துவங்கப்படுவதைத் தடுத்து நிறுத்தாமல் தனது கடமையில் இருந்து தவறி உள்நோக்கத்துடன் செயல்பட்டிருப்பது விசாரணையில் தெரிய வருகிறது. இலாகா அனுமதி பெறாமல் கட்டடம் கட்டுவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காமல், உள்நோக்கத்துடன் தனது கடமையிலிருந்து தவறி வாடகைதாரருடன் உடந்தையாக இருந்து இலாகா விதிகளுக்கு எதிராக செயல்பட்டார் என்ற இக்குற்றச்சாட்டு நிரூபணம் ஆகிறது.

**குற்றச்சாட்டு எண். 5 :**

பசலி 1430—க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.5—ல் மேற்படி பசலியில்

பங்குனி மாத உற்சவத்திற்கான செலவு இனங்களில் ஆலயத் தேரைக் கழுவும் பணி உபயதாரர் மூலம் செய்யப்படும் என பதிவு செய்யப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஆனால் ஆலயத் தேரைக் கழுவுவதற்கு ரூ.3,200/– செலவிடப்பட்டு அதற்கு செலவுச்சீட்டு வைக்கப்பட்டுள்ளது. எனவே, உபயதாரர் மூலம் செலவினைச் செய்துவிட்டு ரூ.3,200/– முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை இழப்பாகக் கருதி பொறுப்பாளர்களிடம் இருந்து ஈடு செய்யப்பட வேண்டும் எனவும் தணிக்கைப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை தணிக்கைப் பத்தி தடை நீக்கம் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோயில் நிதியினைக் கையாடல் செய்தது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

இத்திருக்கோயில் பசலி 1430 தணிக்கை அறிக்கை பத்தி எண்.5–ல் ஆலய தேர் கழுவும் பணிக்கான செலவு தொகை ரூ.3,200/–க்கு உரிய செலவு சீட்டுக்கள் காண்பிக்கப்படவில்லை என்பது குற்றச்சாட்டாக சுமத்தப்பட்டுள்ளது.

சூமற்படி செலவுத்தொகை ரூ.3,200/– ல் தேரை சுத்தப்படுத்தும் பணிக்கு ரூ. 2,600/– வாட்டர் சப்ளை செய்த வகையில் ரூ.600/– செலவு செய்யப்பட்டுள்ளது. சூதர் சுத்தப்படுத்தும் பணிக்கான செலவுத் தொகை ரூ.2,640/–க்கு பதிலாக ரூ.40/– குறைவு செய்து ரூ.2,600/– வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகை ரூ.600/– க்கான செலவு சீட்டு தணிக்கையின் போது காண்பிக்கப்படாததால் தணிக்கை மறுப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

சூமற்படி செலவீனத்திற்கு (ஆடி திருவிழா) பசலி 1430–க்கான வரவு செலவு திட்டத்தில் ஆணையர் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தொகை ரூ. 3,200/– 15.05.2021–ல் நடைபெற்ற தணிக்கை கூட்டமர்வின் போது இக்குற்றச்சாட்டு சுமத்திய இணை ஆணையரால் இத்தொகையினை தடை நீக்கம் (பத்தி எண்.5) செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. ஏனவே இக்குற்றச்சாட்டு உயிரற்றதாகிவிடுகிறது.

சூமற்படி, செலவினத்திற்கு வரவு, செலவு திட்டத்தில் உரிய அனுமதி பெறப்பட்டுலூாளதாலும் மேற்படி தொகை ரூ. 3200/–க்கு தணிக்கை தடை நீக்கம் செய்யப்பட்டுலூாளதாலும், மேற்படி தொகை முறைகேடாக பயன்படுத்தப்படவில்லை

என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

குற்றஞ்சாட்டப்பட்ட செயல் அலுவலர் திரு.வே.சாXXXXXXXX அளித்த விளக்கம் பரிசீலிக்கப்பட்டது. செயல் அலுவலர் தனது விளக்கத்தில் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்ட தேர் கழுவும் பணிக்கான செலவு ரூ.3,200/— பங்குனி மாத உற்சவத்திற்கானது இல்லை எனவும், ஆடி பெருந்திருவிழாவின் பொழுது 07.08.2020 அன்று நடைபெற்ற தேரோட்டத்திற்கான செலவினமாகும் எனவும், மேற்படி பணியினை உபயதாரர் மூலம் செய்ய முடிவு செய்யப்பட்ட நிலையில் விலைப்புள்ளி கோரப்படவில்லை எனவும், உபயதாரர் கிடைக்காத நிலையில் அவசர அவசியம் கருதி திருக்கோயில் மூலம் ரூ.2,600/— செலவு செய்யப்பட்டது எனவும் அதற்கான உரிய ரசீதுகள் பெறப்பட்டுள்ளது எனவும் இதில் திருக்கோயில் நிதி தவறாக பயன்படுத்தப்படவில்லை எனவும் விளக்கம் அளித்துள்ளார்.

குற்றச்சாட்டில் ஆலய தேரைக் கழுவுவதற்கு ரூ.3,200/— முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், செயல் அலுவலரின் விளக்கத்தில் ரூ.2,600/—க்கான செலவினங்களுக்கு மட்டுமே செலவுச்சீட்டு சமர்ப்பித்தும் ரூ. 2,640/—க்கு ரசீது நகல்களுடன் விளக்கம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கூசயல் அலுவலரின் விளக்கம் முபமையாக இல்லை. மீதமுள்ள ரூ.600/— செலவினத்திற்கு விளக்கம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. ஏனவே இக்குற்றச்சாட்டு பகுதியாக நிரூபணமாகிறது.

**குற்றச்சாட்டு எண் 6 :**

பசலி 1430—க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.7—ல் மேற்படி பசலியில் ஒன்பது வகையான செலவினங்களுக்கான செலவுத் தொகைகளுக்குச் செலவு சீட்டுகள் தாக்கல் செய்யப்படாததால் செலவின் உண்மைத் தன்மையை உறுதி செய்ய இயலவில்லை என்பதால் செலவுத் தொகை ரூ.24,001/— தணிக்கை மறுப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோவில் நிதியினைச் செலவிட்டு அதற்கு செலவுச் சீட்டு வைக்காமல் திருக்கோவில் நிதியினைக் கையாடல் செய்தது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

இத்திருக்கோயில் பசலி 1430 தணிக்கை அறிக்கை பத்தி எண்.7–ல் ஒன்பது வகையான செலவீனங்களுக்குரிய தொகை ரூ. 24,001/–க்கு உரிய செலவு சீட்டுக்கள் காண்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதைக் குற்றச்சாட்டாக சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி செலவீனங்கள் அனைத்திற்கும் பசலி 1430 வரவு செலவு திட்டத்தில் ஆணையர் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகைக்குரிய செலவு சீட்டுகள் தணிக்கை கூட்டமர்வில் தாக்கல் செய்து தணிக்கை தடை நீக்குவது தொடர்பாக தணிக்கை கோப்பில் தொடர் நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே மேற்படி செலவீனங்கள் அனைத்தும் உரிய துறை அனுமதி பெற்றே செய்யப்பட்டுள்ள நிலையில் திருக்கோவில் நிதி முறைகேடாகச் செலவிடப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

இக்குற்றச்சாட்டு தொடர்பாக செயல் அலுவலர் திரு.வே.சாXXXXXXXX அளித்த விளக்கத்தில் பசலி 1430 தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.7–ல் ஒன்பது வகையான செலவினங்களுக்குச் செலவு சீட்டுகள் தாக்கல் செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டு தொகை ரூ. 24,001/– தணிக்கை மறுக்கப்பட்டது எனவும், அவற்றில் வரிசை எண். 6–ல் ஆணையர் பொதுநலநதி ரூ.9,500/–க்கான வங்கி வரைவோலை எடுக்கப்பட்டதற்கான நகல் செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள விளக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதர செலவீனங்களுக்கு தற்போது செலவு சீட்டுகள் மற்றும் இரசீதுகள் வைக்கப்பட்டு தணிக்கை தடை நீக்கம் செய்ய நடவடிக்கையில் உள்ளது என தெரிவித்துள்ளார்.

செயல் அலுவலரின் விளக்கத்திலிருந்தும் ஆவணங்களைப் பரிசீலித்ததன் அடிப்படையிலும் தணிக்கையின் போது உரிய செலவு சீட்டுகள் இல்லாமலும், உரிய ரசீதுகள் செலவு சீட்டுகளில் வைக்கப்படாமலும் கணக்குகள் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது உறுதியாகிறது. செலவீனங்கள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் செலவுச்சீட்டு இல்லாமலும், உரிய இரசீதுகள் இல்லாமலும் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மேற்படி செலவுத் தொகை ரூ.24,001/–ல் ஆணையர்

பொது நிதி தொகை ரூ.9,500/– செலவீனம் தவிர இதர ரூ.14,501/– செலவின் உண்மைத்தன்மையில் சந்தேகம் எழுகிறது. எனவே இக்குற்றச்சாட்டு பகுதியாக நிரூபணம் ஆகிறது.

எனவே மேற்கண்ட ஆறு குற்றச்சாட்டுகளில் 1, 2, 3 மற்றும் 4 நிரூபணமாகிறது. குற்றச்சாட்டு 5 மற்றும் 6 பகுதியாக நிரூபணமாகிறது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுறது. இத்துடன் தஞ்சாவூர், இணை ஆணையர் அலுவலக கோப்பு எண். 3920/2022/ஆ2, செயல் அலுவலர், திரு.வே. சாXXXXXXXX சமர்ப்பித்த விளக்கம் மற்றும் கூடுதல் ஆவணங்கள் ஆகியவை இணைக்கப்பட்டு விசாரணை அறிக்கை பணிந்தனுப்பப்படுகிறது.

இணை ஆணையர் /செயல்அலுவலர்,
அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்,
ஸ்ரீரங்கம்.

**இணைப்பு :**

1. தஞ்சாவூர், இணை ஆணையர் அலுவலக கோப்பு எண். 3920/2022/ஆ2 (1 முதல் 104 பக்கங்கள்)
2. செயல் அலுவலர், திரு.வே. சாXXXXXXXX சமர்ப்பித்த விளக்கம் (1 முதல் 144 பக்கங்கள்)
3. சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் (பக்கம் 1 முதல் 34 முடிய)
4. வினா படிவம்
5. சரிபார்ப்பு பட்டியல்

**நகல் :**

6. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.
7. மிகை.

ANNEXURE

**TAMIL NADU CIVIL SERVICES (DISCIPLINE & APPEAL) RULES**
**CHECK LIST FOR DISCIPLINARY CASE**

PART-A

(For all departments of Secretariat and all other departments under the Government)

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the Charged Officer | : | V. SXXXXXXXX |
| 2. | Designation and Office in which he is/was working | : | Executive Officer, Grade II Charges framed at : Arulmigu Subramaniya Swamy Temple, Viralimalai, Town and Taluk, Pudukkottai District.<br><br>Present working Station: Arulmigu Mariamman Temple, Woraiyur, Trichirppalli Taluk and District |
| 3. | Group to which he belongs (i.e. (A, B, C or D) | : | Group B |
| 4. | His present pay and scale of pay | : | 70600/-<br>Level – 18<br>(Scale of Pay : 9300 – 34800 GP. 4800) |
| 5. | Date of accrual of annual increment | : | 1st July |
| 6. | Whether the Charged Officer comes under State Service or Subordinate Service | : | Subordinate Service |
| 7. | a) Date of Birth | : | 18.06.1972 |
| | b) Date of Superannuation | | 30.06.2032 |

| | | | |
|---|---|---|---|
| 8. | i) Date of entry into Government Service and the post in which he was appointed first | : | Executive Officer, Grade IV - Direct Appointment (16.06.2002) |
| | ii) The name of the service in which the said post, referred to in item (i) above was included | | |
| | iii) Details of posts held by the charged officer so far (Name of service in which the posts included, method of appointment viz.. Direct recruitment /recruitment by transfer / promotion/transfer, the period for which he was holding the post, etc., should be furnished. | | 1) Executive Officer, Grade IV - Direct Appointment (16.06.2002 to 18.10.2006)<br>2) Executive Officer, Grade III- on Proomotion (19.10.2006 to 14.07.2016)<br>3) Executive Officer, Grade II - on promotion (24.07.2016 to till date) |
| 9. | Whether the cased involves more than one Government servant, ifso, state | : | No |
| | (i) whether they belong to the same department or different department | : | |
| | (ii) whether charge was issued by the competent authority as specified in rule 9A of the Tamil Nadu Civil Services (Disciplinary and Appeal) Rules | : | |
| 10. | In the case of members of State Services whether Head of Department is competent to frame charge under the rule12(2) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules except those cases coming under rule 9A of the said Rules | : | - |

| | | | |
|---|---|---|---|
| 11. | Nature of charges framed (in brief) | : | Administrative defects |
| 12. | (a) Whether placed under suspension or not; if so date of suspension<br><br>(b) Whether suspension orders issued by the Competent Authority | : | Yes<br><br>Yes |
| 13. | Whether definite and specific charges have been framed | : | Definite and specific charges framed |
| 14. | Whether a statement of allegations on which each charge is based has been communicated | : | Yes |
| 15. | Date on which the charge memo/letter was served on the Charges officer | : | 02.02.2022 |
| 16. | Whether the charged Officer has been asked to:<br>i. Put his written statement of defence<br>ii. State whether he wants an oral inquiry; and<br>iii. State whether he wants to be heard in person<br><br>Note: The Charged Officer should be allowed a personal hearing before or after enquiry, if so desired by him. A personal hearing must be given, if desired before issue of final orders. | : | <br>Yes<br>Yes<br>Yes |
| 17. | Date of submission of explanation by the Charged Officer | : | 06.05.2022 |
| 18. | Date of appointment of Enquiry Officer | : | 14.04.2022 |
| 19. | Whether the inquiry Officer informed the exact time and venue of the Inquiry to the Officer of the Directorate of Vigilance and Anti-corruption who conduct the investigation to be present at the time of inquiry. (He will apply inrespect of cases arising out of enquiry report, of the Directorate of Vigilance and Anti-corruption) | : | - |

| | | | |
|---|---|---|---|
| 20. | Whether the Enquiry Officer has been asked to prepare the Enquiry Report as per the Guideline in the Handbook on Disciplinary Procedures. | : | Yes |
| 21. | Date of submission of the Enquiry Report by the Enquiry Officer | : | 20.07.2022 |
| 22. | If the Charged Officer does not want an oral enquiry. Whether such an inquiry was directed by the authority concerned. | : | - |
| 23. | Whether evidence has been recorded at the oral inquiry in the presence of the person Charged | : | Yes |
| 24. | Whether the witnesses examined at the preliminary enquiry, if any,were recalled during the oral inquiry to prove the charges | : | - |
| 25. | Whether copies of the evidence such as the complaints and statements made by witnesses during preliminary enquiry, etc.,on which the competent authority proposes to rely upon have been furnished to the Accused Officer as early as possible before the prosecution witnesses are to be cross examined | : | Yes |
| 26. | Whether the documentary evidence including inspection reports, statements by witnesses recorded by the Vigilance and Anti-corruption Department, etc.,relied upon have been furnished both by prosecution and defence,have been filed as exhibits and properly proved. | : | - |
| 27. | if any witness was examined at the preliminary enquiry in the absence of the person charged, was his presence considered necessary at the oral inquiry by the Accused Officer and, if so, was he examined in the presence of the person charged? | : | Yes |

| | | | |
|---|---|---|---|
| 28. | Whether the person charged was allowed to cross-examine the witnesses produced by the prosecution, to give evidence inperson and to call witnesses on his behalf? | : | Yes |
| 29. | Was any witness asked for by the person charged, refused to be allowed and if so, was sufficient reason recorded to the effect? | : | |
| 30. | Did any contingency arise where the request of the charged officer for furnishing certain records could not be conceded or disclosed to him in public interestor for any other sustained and justifiable reason, If so, whether the Accused Officer was informed accordingly and the fact of such refusal together with the reason therefore recorded in writing? | : | - |
| 31. | Was there any request to be heard in person in addition to the oral inquiry, and if so, was it complied with? | : | - |
| 32. | Does the proceedings of the oral enquiry contain a sufficient record of the evidence and statement of the findings of the grounds thereof? | : | - |
| 33. | Was a report of the inquiry andor the personal hearing with findings, recorded by the enquiry authority even in cases where he is himself the punishment authority? | : | Does not arise |
| 34. | Whether the inquiry report was communicated to the directorate of Vigilance and Anti-corruption immediately after its receipts and its reaction awaited for two months? (This will arise in respect of cases arising out of enquiry report of Directorate of Vigilance and Anti-Corruption | : | - |

| | | | |
|---|---|---|---|
| 35. | Authority competent to impose the penalty.<br>(In respect of cases falling under rule 9A of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, the authority competent specified therein should also be indicated | : | - |
| 36. | Whether the competent authority to impose the penalty agreed/disagreed with the findings of the inquiry Officers | : | - |
| 37. | Whether the further representation of the charged Officer on the report of the inquiry Officer obtained by communicating the said report to him together with the reasons for disagreement by the disciplinary authority. | : | - |
| 38. | Whether the Tamil Nadu Public Service Commission was consulted for its opinion on the punishment proposed. (This will arise only in respect on the cases where the Government are the punishment authority) | : | - |
| 39. | Whether the charges framed, explanation of the Charged Officer, further representation of the Charged Officer on the findings of the inquiry Officer and all other relevant records including the views of the TamilNadu Public Service Commission independently and carefully examined by the punishing Authority and whether the fact recorded in the final orders? | : | - |
| 40. | a) Penalty proposed to be imposed<br>b) Whether penalty of recovery from pay of the loss in addition to any other penalty is proposed<br>c) Is the final order proposed to be issued self-contained and speaking?<br>d) Whether the copy of the Tamil Nadu Public Service Commission's letter | : | - |

| | | | |
|---|---|---|---|
| | containing its views is enclosed with the final orders to the Charges Officer unless the Chief Minister otherwise directs in the public interest under rule 25 of the Tamil Nadu Public Service Commission Rules of Procedure. | | |
| 41. | Where the Vigilance Commission was consulted through administrative Department of Secretariat for dropping of charges (This will arise in respect of cases arising out of the inquiry report of the Directorate of Vigilance and Anti-Corruption | : | - |
| 42. | Has the acknowledgement of the person been obtained to token having received the copy of the final orders or alternatively, was the order sent by registered post with acknowledgement due or tendered to an adult member of his family or affixed it in some conspicuous part of his last known place of residence? | : | - |

XXXXXXXXXXX
இணை ஆணையர் /செயல்அலுவலர்,
அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்,
ஸ்ரீரங்கம்.

[ மாதிரி படிவம் ]

## விசாரணை அறிக்கையின் மீது மேல் விளக்கம் கேட்டல்

ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை–34

ந.க. எண். 24725/2022/எல் 2 நாள்: 10.08.2022

பொருள் : பணிப்பிரிவு – திரு.வே. சாXXXXXXXX – செயல் அலுவலர் நிலை 2 முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் – விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை – **விசாரணை அறிக்கையின் மீது மேல் விளக்கம் கேட்டல்** – தொடர்பாக,

பார்வை : இணைஆணையர்/செயல்அலுவலர்/விசாரணைஅலுவலர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவில், ஸ்ரீரங்கம் ந.க. எண்.2588/2022/ஆ1 நாள் 20.07.2022.

-------

பார்வைக் குறிப்புடன் வரப்பெற்றுள்ள விசாரணை அறிக்கையின் நகல் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது. அதன் மீதான தமது மேல் விளக்கத்தினை 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்க திரு.வே. சாXXXXXXXX, நிலை–2 செயல் அலுவலரைப் பணிக்கப்படுகிறது. தவறின் அன்னாரால் அளிக்கக்கூடிய மேல் விளக்கங்கள் ஏதுமில்லை எனக் கருதி மேல் நடவடிக்கை தொடரப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆணையருக்காக

/உ.ந.உ.ப./

கண்காணிப்பாளர்

இணைப்பு : விசாரணை அறிக்கை நகல்

**பெறுநர் :**

திரு.வே. சாXXXXXXXX, (ஒப்புதல் பதிவஞ்சல் வழியாக)
செயல் அலுவலர் நிலை 2, (த.ப.நீ.)
எண்.104, மேலூர் மெயின் ரோடு, வளர் நகர், மதுரை –621 104.

**நகல் :**

1. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.
2. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை.
3. மிகை.

[ மாதிரி படிவம் ]

## விசாரணை அறிக்கையின் மீது மேல் விளக்கம் சமர்ப்பித்தல்

அனுப்புநர்
திரு.வே. சாXXXXXXXX,
செயல் அலுவலர்,(த.ப.நீ)
எண்.104, மேலூர் மெயின் ரோடு,
வளர் நகர், மதுரை –621 104.

பெறுநர்
உயர்திரு. ஆணையர் அவர்கள்
இந்துசமய அறநிலையத்துறை,
சென்னை–34.

நாள் : 25.08.2022

அய்யா,

பொருள் : பணிப்பிரிவு – திரு.வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் நிலை 2, முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் – விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை – **விசாரணை அறிக்கையின் மீது மேல் விளக்கம் சமர்ப்பித்தல்** – தொடர்பாக.

பார்வை :

1. இணை ஆணையர், தஞ்சாவூர். குறிப்பாணை எண்.3920/2022/ஆ2 நாள் : 02.02.2022
2. ஆணையர், சென்னை. செ.மு.ந.க. எண் 24725/2022/எல்2 நாள் : 14.04.2022
3. இணை ஆணையர்/செயல் அலுவலர்/விசாரணை அலுவலர் அருள்மிகுஅரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், ந.க.எண்.2588/2022/ஆ நாள்: 14.04.2022
4. எனது எழுத்து மூலமான விளக்கம் நாள்: 06.05.2022
5. இணை ஆணையர்/செயல் அலுவலர்/விசாரணை அலுவலர், அருள்மிகுஅரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், ந.க. எண்.2588/2022/ஆ நாள்: 20.07.2022

6. ஆணையர் சென்னை ந.க.எண்.24725/2014/எல்2 நாள் : 04.08.2022

----

நான் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம், மற்றும் நகர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் 05.03.2019 முதல் 09.07.2021 முடிய செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிர்வாக சீர்கேடுகள் குறித்து பார்வை 2–ல் காணும் குறிப்பின் மூலம் என்மீது ஆறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

மேற்படி குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை அதிகாரியாக நியமனம் செய்யப்பட்ட ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/நிர்வாக அதிகாரி அவர்களின் பார்வை 3–ல் காணும் உத்தரவின்படி 06.05.2022 அன்று நடைபெற்ற விசாரணையின் பொழுது நேரில் ஆஜராகி மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு எழுத்து மூலமான எனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளேன்.

பார்வை 6–ல் காணும் ஆணையர் அவர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளபடி மேற்படி விசாரணை அலுவலர் அளித்துள்ள அறிக்கை மீது எனது மேல் விளக்கத்தினை இத்துடன் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

பார்வை 1–ல் காணும் இணை ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை தஞ்சாவூர் அவர்களின் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆறு குற்றச்சாட்டுகளுக்கு நான் விசாரணை அலுவலர் முன்பு 06.05.2022 அன்று நேரில் ஆஜராகி அளித்துள்ள எனது விளக்கத்தினையே, மேற்படி குற்றச்சாட்டுகளுக்குரிய எனது மேல் விளக்கமாக ஏற்றுக் கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
வே. சாXXXXXXX
செயல் அலுவலர்

[ மாதிரி படிவம் ]

## இறுதி ஆணை பிறப்பித்தல்

**இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் செயல்முறைகள்**

முன்னிலை : திரு. பா. சXXXXXXXX, இ. ஆ. ப.
ஆணையர்

<u>செ.மு.ந.க. எண் 24725/2022/எல் 2 நாள்: 21.02.2023</u>

பொருள் : பணிப்பிரிவு – திரு.வே. சாXXXXXXXX – நிலை 2 – செயல் அலுவலர் முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் – விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது – **இறுதி ஆணை பிறப்பித்தல் –** தொடர்பாக.

பார்வை :
1. இணை ஆணையர், தஞ்சாவூர். குறிப்பாணை எண்.3920/2022/ஆ2 நாள் : 02.02.2022
2. இவ்வலுவலக செ.மு.ந.க.எண் 24725/2022/எல்2 நாள்:14.04.2022
3. இணை ஆணையர்/செயல் அலுவலர்/விசாரணை அலுவலர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், ந.க.எண் : 2588/2022/ஆ நாள்: 20.07.2022
4. இவ்வலுவலக ந.க.எண் 24725/2022/எல் 2 நாள்: 10.08.2022
5. திரு. வே. சாXXXXXXXX, நிலை–2 செயல் அலுவலர், மேல் விளக்க அறிக்கை நாள்: 25.08.2022

------

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் செயல் அலுவலராகப் பணிபுரிந்த திரு. வே. சாXXXXXXXX,

நிலை–2 செயல் அலுவலர், தனது பணிக்காலத்தின் போது ஏற்படுத்திய நிர்வாகக் குறைபாடுகளுக்காக அன்னார் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தி பார்வைக் குறிப்பு 1–ன்படி தஞ்சாவூர், இணை ஆணையரால் ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட குற்றச்சாட்டுகள் மீது விசாரணை மேற்கொள்ள ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்இணை ஆணையர்/செயல் அலுவலரை பார்வை 2–ல் காணும் குறிப்பின்படி விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டது. விசாரணை அலுவலர் தமது விசாரணையை முடித்து அறிக்கையினைப் பார்வைக்குறிப்பு 3–ன்படி அளித்திருந்தார். விசாரணை அறிக்கையின் மீதான மேல் விளக்கத்தினை அளிக்குமாறு திரு. சூவ. சாXXXXXXXX, நிலை–2, செயல் அலுவலரை பார்வை 4–ல் காணும் குறிப்பின்படி கேட்கப்பட்டு மேல் விளக்கங்கள் பெறப்பட்டன.

திரு. சூவ. சாXXXXXXXX, நிலை–2 செயல் அலுவலர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், செயல் அலுவலரது விளக்கங்கள், விசாரணை அலுவலர் முடிவுகள் மற்றும் செயல் அலுவலரின் மேல் விளக்கங்கள் ஆகியவற்றின் சாராம்சம் பின்வருமாறு:

**குற்றச்சாட்டு எண். 1 :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலி மனையில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு, வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதியான சிவன் கோயில் கீழ ரத வீதியின் வழிகாட்டி மதிப்பு பெறாமல், மதிப்பு குறைந்த பெருமாள் கோவில் வடக்கு மாட வீதியின் சந்தை மதிப்பினைப் பெற்று அதன் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்ய கணக்கீடு தயார் செய்து, இணை ஆணையருக்குப் பரிந்துரை செய்து குறைவான மதிப்பின் அடிப்படையில் நியாய வாடகை கட்டணம் நிர்ணயம் செய்து திருக்கோவிலுக்கு பெரிய அளவில் நிதியிழப்பினை ஏற்படுத்தியது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம் மற்றும் மனைகளுக்கு திருக்கோயில் செயல் அலுவலரால் மட்டுமே நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. ஹிந்து சமய அறநிலையச் சட்டப்பிரிவு 34 (A)-ன்படி இணை ஆணையர், மாவட்டப் பதிவாளர், தக்கார், செயல் அலுவலர் ஆகியோர்களை உள்ளடக்கிய நியாய வாடகை

நிர்ணயக்குழு மூலமாகவே நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆதனடிப்படையில் இக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இனத்திற்கு அரசாணைப்படி உரிய வழி முறைகள் பின்பற்றப்பட்டு நியாய வாடகை குழு மூலம் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி நியாய வாடகை தஞ்சாவூர், இணை ஆணையர் மூ.மு. எண் 1007/2020/ஆ3 நாள் 01.07.2020–ன்படி அங்கீகரிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாணையின்படி 01.07.2016 தேதி முதல் முன் தேதியிட்டு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு, அமுல்படுத்தப்பட்டு நாளது தேதி வரை நிலவை ஏதுமின்றி வசூல் செய்யப்பட்டு வருகிறது. சூமற்கண்ட நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு எனது பணிக்காலத்தில் ரூ.2,15,000/– வாடகை நிலவைத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

ஹிக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதிக்கு சந்தை மதிப்பு அதிகமென எவ்வித ஆதாரமும் இன்றி யூகத்தின் அடிப்படையில் தெரிவித்திருப்பதுடன், அதன் மூலம் எவ்வளவு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என குற்றச்சாட்டில் குறிப்பிடப்படவில்லை. ஏனவே, மேற்காணும் இடத்திற்கான நியாய வாடகை நிர்ணயம் உரிய விதிமுறைகளின்படியே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதுடன் இதனால் திருக்கோயிலுக்கு எவ்விதமான நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

இக்குற்றச்சாட்டு தொடர்பாக செயல் அலுவலர் அளித்த விளக்கத்தில் மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான விராலிமலை டி.எஸ்.எண். 212/1–ல் வார்டு எண்.23–ல் உள்ள காலி மனையில் அமைந்துள்ள வணிக வளாகத்திற்கு அரசாணையின்படி நியாய வாடகை நிர்ணயம் செய்ய சார் பதிவாளர் அலுவலகத்தில் சிவன் கோயில் கீழ ரத வீதியின் வழிகாட்டி மதிப்பு இல்லாத நிலையில், அருகில் உள்ள பெருமாள் கோயில் வடக்கு மாட வீதியின் சந்தை மதிப்பின்படி 01.03.2020–ல் நியாய வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதாகவும் தற்போது நியாய வாடகையாக ரூ.12,451/– பெறப்பட்டு வருவதாகவும், மேற்படி நியாய வாடகை நிர்ணயம், நியாய வாடகை நிர்ணயக் குழுவான மாவட்ட பதிவாளர், மண்டல இணை ஆணையர் மற்றும் திருக்கோயில் தக்கார் ஆகியோரது பரிந்துரை அடிப்படையில் செய்யப்பட்டு தஞ்சாவூர், இணை ஆணையர் மூ.மு.எண் 1007/2020/ஆ3

நாள்01.07.2020–ன் படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் இதனால் திருக்கோயிலுக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார்.

மேலும் விராலிமலை டி.எஸ்.எண். 212/1–ல் வார்டு எண்.23, சிவன் கோயில் கீழ ரத வீதிக்கு 2016–ல் வழிகாட்டி மதிப்பு இல்லை என 04.05.2022–ல் சார் பதிவாளர் சான்றினைப் பெற்று தற்போது 10.05.2022–ல் கூடுதல் ஆவணமாக செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார். முதிப்பு கூடதலாக உள்ள வணிக வளாகத்தின் முன்பக்கத்திற்கான வழிகாட்டி மதிப்பைப் பெற்று நியாய வாடகை நிர்ணயக் குழுவின் முன் சமர்ப்பிக்காமல் வணிக வளாகத்தின் பின்பகுதியில் உள்ள இடத்திற்கு வழிகாட்டி மதிப்பு பெற்றுள்ளார் என்பதே அன்னார் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு ஆகும். குற்றச்சாட்டுக்கு உள்ளான அலுவலர் குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளிக்காமல் வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதி இடத்திற்கு வழிகாட்டி மதிப்பு இல்லை என தற்போது விளக்கம் அளித்து அதற்கு உரிய புகைப்பட நகலை 04.05.2022–ல் பெற்று தாக்கல் செய்து உள்ளார். ஏனவே, அவருடைய விளக்கம் குற்றச்சாட்டுக்குப் பொருத்தமற்றதாகவும், ஏற்கத்தக்கதாகவும் இல்லாததால் இக்குற்றச்சாட்டு நிரூபணம் ஆகின்றது என முடிவு செய்யப்படுகிறது.

**செயல் அலுவலரின் மேல் விளக்கம்**

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் அவர்களின் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆறு குற்றச்சாட்டுகளுக்கு நான் விசாரணை அலுவலர் முன்பு 06.05.2022 அன்று நேரில் ஆஜராகி அளித்துள்ள எனது விளக்கத்தினையே, மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கான எனது மேல் விளக்கமாக ஏற்றுக்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண். 2 :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலி மனையில் துறை அனுமதியின்றி புதிதாக வணிக வளாகம் கட்டுவது தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு ஏ.எஸ்.524/2017–ல் ஆணையரால் இணக்கத் தீர்வு ஏற்படுத்தப்பட்டு ஆணையர் சென்னை ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017–ன்படி 01.07.1993 முதல் 28.02.2017 முடிய வாடகைதாரரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட வாடகைத் தொகை ரூ. 1,32,000/– போக மீதமுள்ளத் தொகை

வசூல் செய்யப்பட்டுள்ளது. (இரசீது எண்: 11471/29.05.2019, 11489/07.08.2019, 12626/22.04.2021). மேலும், இக்குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள வாடகை நிலுவைத் தொகை ரூ.14,90,000/– வசூல் செய்ய இயலாத காலக்கெடு முடிவடைந்த தொகை அல்ல. எனவே, என்னால் திருக்கோயிலுக்கு எவ்விதமான நிதியிழப்பும் ஏற்படுத்தப்படவில்லை என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

குற்றஞ்சாட்டப்பட்ட செயல் அலுவலர் திரு.வே.சா XXXXXXXX விளக்கம் பரிசீலிக்கப்பட்டது. செயல் அலுவலர் தனது விளக்கத்தில் தான் 05.03.2019 முதல் 09.07.2021 முடிய புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் நிலை–2 செயல் அலுவலராகப் பணியாற்றியதாகவும், மேற்படி திருக்கோயிலுக்கு சொந்தமான விராலிமலை டி.எஸ்.எண். 212/1–ல் 0.72 செண்ட் இடத்தில் உள்ள வணிக வளாகத்திற்கு வாடகை வசூல் செய்வது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு ஏ.எஸ்.524/2017–ல் ஆணையரால் இணைக்கத் தீர்வு ஏற்படுத்தப்பட்டு, சென்னை, ஆணையர் ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017–ன்படி 01.07.1993 முதல் 28.02.2017 முடிய உள்ள வாடகை நிலுவைத் தொகை ரூ. 18,86,051.68/–ல் ஏற்கனவே வாடகைதாரரால் செலுத்தப்பட்ட தொகை ரூ. 1,32,000/– போக மீதமுள்ள தொகை ரூ.17,54,051.68/–னை வசூல் செய்து நிரந்தர முதலீடு செய்யவும், மேற்படி இடத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி இடத்திற்கு தன்னால் 01.03.2020 முதல் நியாய வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதாகவும் நிலுவைத் தொகை ரூ.17,54,051.68/–ல் ரூ.2,64,052/– வசூல் செய்யப்பட்டு மீதத் தொகை ரூ. 14,90,000/– நிலுவையாக உள்ளது என்றும் திருக்கோயில் வாடகை பாக்கி என்பது திருக்கோயிலுக்கு நிதி இழப்பு ஆகாது என விளக்கம் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கு ஏ.எஸ்.எண்.524/2017–ல் இணக்கத் தீர்வு ஆணையரால் ஏற்படுத்தப்பட்டு இரு தரப்பினரும் இணக்கத் தீர்வினை ஏற்றுக்கொண்ட நிலையில் ஆணையரின் உத்தரவின்படி அன்னார் தன்னுடைய பணிக்காலத்தில் (05.03.2019 முதல் 09.07.2021 முடிய) வாடகை நிலுவைத் தொகையினை முழுமையாக வசூல் செய்யவில்லை. மீதமுள்ள நிலுவைத் தொகையை

ரூ.17,54,051.68/—னை வசூல் செய்து நிரந்தர முதலீட்டில் முதலீடு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு பின்பும் இரண்டு ஆண்டுகள் இத்திருக்கோயிலில் செயல் அலுவலராகப் பணியாற்றிய போதும் நிலுவைத் தொகையினை முறையாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்காததால் நாளது தேதி வரை ரூ.4,90,000/— வசூல் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இதனால் நிலுவைத் தொகையினை வசூல் செய்து நிரந்தர முதலீடு செய்வதன் மூலம் வரப்பெறும் வட்டி வருவாய் இனத்தினை தடை செய்து திருக்கோவிலுக்கு நிதி இழப்பினை ஏற்படுத்தியது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாகம் அமைந்துள்ள காலிமனை இடத்திற்கு சென்னை, ஆணையர், ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017—ன் உத்தரவில் 01.07.1993 முதல் 28.02.2017 முடிய கணக்கீடு செய்யப்பட்ட கூடுதல் வாடகை நிலுவைத் தொகையில் வாடகைதாரர் ரூ.1,32,000/— மட்டுமே செலுத்தியுள்ளார் எனவும், உத்தரவு தேதியில் (15.09.2017) வாடகை பாக்கி ரூ.17,54,051.68/— எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாடகை நிலுவைத் தொகை ரூ.17,54,051.68/— எனது பணிக்காலத்தில் ஏற்பட்டதல்ல. சுமார் 24 ஆண்டுகளாக நிலுவையாக உள்ள வாடகையாகும். நான், இத்திருக்கோயிலில் 05.03.2019 முதல் 09.07.2021 முடிய (சுமார் 28 மாதங்கள்) மட்டுமே செயல் அலுவலராகப் பணிபுரிந்துள்ளேன். கேட்பு, வசூல், நிலுவைப் பதிவேட்டின்படி மேற்படி தொகை பல ஆண்டுகளாக நிலுவையாக இருந்து வந்துள்ளது. வசூலாகாத தொகைக்கு வட்டியிழப்பு எனக் குறிப்பிட்டு அதன் மூலம் நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளதாகக் குற்றச்சாட்டு சுமத்தியிருப்பது பொருத்தமற்றதாகும். மேலும், இக்குற்றச்சாட்டில் நிதியிழப்புத் தொகை குறித்து எதுவும் குறிப்பிடாமல் யூகத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட வாடகை நிலுவைத் தொகை ரூ.17,54,051.68/—னைச் செலுத்தக் கோரி வாடகைதாரருக்கு எனது பணிக்காலத்தில் 05.03.2020 நாளிட்ட பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு நகலை நான் சான்றாவணமாக சமர்ப்பிக்கின்றேன். மேலும், வாடகைதாரரிடம் பலமுறை நேரிலும், பணியாளர்கள் மூலமும் மேற்படி வாடகை நிலுவைத்தொகை செலுத்தக்கோரி உள்ளேன். எனது பணிக்காலத்தில் மேற்கண்ட காலிமனை இடத்திற்கு உரிய வாடகை நிலுவைத்தொகை ரூ.2,64,052/— என்னால்

வசூல் செய்ய சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கையாக நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்திருக்க வேண்டும் அல்லது சட்டப்பிரிவு 79C–ன் கீழ் இணை ஆணையர் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இவை இரண்டையும் குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் செய்யத் தவறியுள்ளார். விசாரணையின் போது, வாடகைதாரர்களுக்கு வாடகை நிலுவை குறித்து அறிவிப்பு அனுப்பியதாகத் தெரிவித்ததற்கு தகுந்த ஆதாரமும் அளிக்கவில்லை. செயல் அலுவலர் தன்னுடைய விளக்கத்தில் திருக்கோயில் பலவகை ரசீது எண். 11471, 11479, 12626 மூலம் வசூல் செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ள தொகை ரூ.2,64,052/– அன்னாருடைய பணிக்காலத்தில் வசூலிக்கப்படவில்லை. அவருக்குப் பின் வந்த செயல் அலுவலர்களாலேயே வசூலிக்கப்பட்டுள்ளது என்பது மேற்படி ரசீதுகளின் நகல்களின் மூலம் தெரிய வருகிறது. இத்திருக்கோயில் செயல் அலுவலராக பணியாற்றிய இரண்டு ஆண்டு காலத்தில் இவர் நிலுவைத் தொகையினை வசூலிக்கவில்லை. எனவே நிலுவை தொகையினை முழுமையாக வசூல் செய்து நிரந்தர முதலீடு செய்யப்படாததால் வட்டி வருவாய் இழப்பு ஏற்பட்டது என்ற இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

**செயல் அலுவலரின் மேல் விளக்கம்**

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் அவர்களின் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆறு குற்றச்சாட்டுகளுக்கு நான் விசாரணை அலுவலர் முன்பு 06.05.2022 அன்று நேரில் ஆஜராகி அளித்துள்ள எனது விளக்கத்தினையே, மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கான எனது மேல் விளக்கமாக ஏற்றுக் கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண். 3 :**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான விராலிமலை நகரில் சர்வே எண்.12/1–ல் உள்ள 9 ஏக்கர் 20 சென்ட் புன்செய் நிலம் திரு. சண்முகம் என்பவர் வசம் உள்ளது. மேற்காணும் நிலத்திற்கு திரு. சண்முகம் வருடம் ஒன்றுக்கு ரூ.400/– குத்தகையாக செலுத்தி வருகிறார். மேற்படி நிலத்தினைச் சுற்றியுள்ள நிலங்களில் வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பு பகுதியாக மாறியுள்ளதால் குத்தகைதாரரை வெளியேற்ற வருவாய் நீதிமன்றத்தில் பி.டி.150/2017 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் திரு. சண்முகம் இவ்விடத்தில் நீண்ட காலமாக விவசாயம் ஏதும் செய்யாமல் இருந்த

காரணத்தினாலும் மேற்படி இடம் விவசாயத்திற்கு தகுதியற்ற மற்றும் குடியிருப்பு பகுதியாக மாறியுள்ள காரணத்தினாலும், மேற்படி இடத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றவும், அவர் இதுவரை செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையினைச் செலுத்த வேண்டியும், வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி வழக்கில் 05.04.2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் குத்தகைதாரரை வெளியேற்ற உத்தரவிடாமல் தாவா நிலத்திற்குரிய குத்தகை பாக்கியை மூன்று மாதத்திற்குள் மனுதாரர் செலுத்த வேண்டும் எனவும், தவறினால் எதிர் மனுதாரரே தாவா நிலத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றலாம் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், தாவா நிலத்திற்கு நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால் அதற்கு தனியாக நீதிமன்றத்தில் மனு செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், நியாயக் குத்தகை நிர்ணயம் செய்வதற்கு எவ்விதமான நடவடிக்கையும் செயல் அலுவலரால் எடுக்கப்படவில்லை.அதனால், நாளது தேதி வரை வருடம் 1-க்கு ரூ.400/- மட்டுமே குத்தகைத் தொகையாக பெறப்பட்டு வரப்பெறுகிறது. நியாய குத்தகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் இருந்து திருக்கோவிலுக்கு மிகப்பெரிய நிதி இழப்பினை ஏற்படுத்தியது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விராலிமலை நகர் சர்வே எண் 12/1-ல் உள்ள 9 ஏக்கர் 20 சென்ட் நிலம் திரு. சண்முகம் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்ட புன்செய் நிலமாகும். திருக்கோயில் கேட்பு வசூல் நிலுவைப் பதிவேட்டிலும் புன்செய் நிலம் என பதிவாகியுள்ளது. இந்நிலையில் மேற்படி குத்தகைதாரர் 1983 முதல் 2010 முடிய செலுத்த வேண்டிய குத்தகை பாக்கித் தொகை ரூ.10,800/-க்காக திருச்சி வருவாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண் பி.டி.150/2017-ல் 05.04.2019-ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் "தாவா நிலத்திற்குரிய குத்தகை பாக்கியினை 3 மாதத்திற்குள் மனுதாரரிடம் (செயல் அலுவலர்) செலுத்த உத்தரவிடப்படுகிறது. தவறினால், எதிர் மனுதாரரை (குத்தகைதாரர்) தாவா நிலத்தை விட்டு வெளியேற்ற உத்தரவிடப்படுகிறது. தாவா நிலத்திற்கு நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால் அதற்கு தனியே இந்த நீதிமன்றத்தை அணுகி மனு செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்கண்ட உத்தரவின்படி குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் மேற்படி குத்தகைதாரரிடம் இருந்து திருக்கோயிலுக்கு நிதியிழப்பு ஏதுமின்றி குத்தகை பாக்கி ரூ.10,800/-

என்னால் வசூல் செய்யப்பட்டது. (இரசீது எண் 11164 நாள்: 20.10.2019)

மேற்படி குத்தகைதாரரை தாவா நிலத்தில் இருந்து வெளியேற்றுவது அல்லது குத்தகை உயர்வு செய்வது குறித்து வழக்கறிஞர் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததாலும், மேற்படி புன்செய் நிலத்தை மனைப்பகுதியாக மாற்றி திருக்கோயிலுக்கு அதிக வருமானம் வரப்பெறும் வகையில் மேற்படி குத்தகைதாரரை தாவா நிலத்திலிருந்து வெளியேற்ற உயரதிகாரிகளை கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த காரணத்தினாலும், மேற்படி திருக்கோயிலுடன் இணைந்த திருக்கோயில்கள் நிர்வாகம், திருப்பணி வேலைகள், சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் நிறைந்த திருவிழாக்கள் மற்றும் கூடுதல் பணிச்சுமை காரணமாக மேற்படி நடவடிக்கை மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டுவிட்டதெனவும், புன்செய் நிலத்திற்கு வருவாய் நீதிமன்றம் மூலம் நியாய வாடகை நிர்ணயம் செய்ய இயலாது என்ற காரணத்தினால் மேற்படி இடத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படவில்லை என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குத்தகை பாக்கித் தொகை ரூ. 10,800/– முழுவதும் வசூல் செய்யப்பட்டு விட்டதாலும், நாளது தேதி வரை ஆண்டு 1–க்கு ரூ. 400/– குத்தகை தொகை நிலுவையின்றி வசூல் செய்யப்பட்டு வருவதாலும், குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ளவாறு நிதியிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

இக்குற்றச்சாட்டு தொடர்பாக செயல் அலுவலர் திரு.வே.சாXXXXXXXX அளித்த விளக்கம் பரிசீலிக்கப்பட்டது. விராலிமலை புறநகர் சர்வே எண். 12/1–ல் உள்ள ஏக்கர் 9.20 சென்ட் புன்செய் நிலத்திற்கு குத்தகைதாரராக இருந்து வரும் திரு. சண்முகம் என்பவரிடமிருந்து 1983 முதல் 2010 முடிய குத்தகை நிலுவைத் தொகை ரூ.10,800/–னை வசூல் செய்திடவும், அன்னாரை குத்தகை நிலத்திலிருந்து வெளியேற்றிடவும் திருச்சி வருவாய் நீதிமன்றத்தில் பி.டி. 150/2017–ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி நீதிமன்றத்தின் 05/04/2019–ம் தேதிய உத்தரவில் குத்தகைதாரர் மூன்று மாதத்திற்குள் குத்தகை தொகை ரூ.10,800/–னை செலுத்த வேண்டும் எனவும், குத்தகைதாரர் குத்தகை செலுத்த தவறும்பட்சத்தில் குத்தகைதாரரை குத்தகை நிலத்திலிருந்து வெளியேற்றவும், நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால்

மேற்படி நீதிமன்றத்தில் மனு செய்ய உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து நிலுவைத் தொகை ரூ.10,800/– தன்னால் பலவகை இரசீது எண். 11164 நாள் : 20.10.2019–ன்படி வசூல் செய்யப்பட்டுவிட்டதாகவும், மேற்படி இடத்தினை சுற்றி வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பு பகுதியாக மாறியதால் குத்தகைதாரரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க இருந்த காரணத்தினால், வருவாய் நீதிமன்ற உத்தரவின்படி நியாய குத்தகை நிர்ணயம் செய்ய மனு தாக்கல் செய்யவில்லை எனவும், திருப்பணி மற்றும் திருவிழாக்கள் போன்ற இதர பணிகளின் காரணமாக நியாய குத்தகை நிர்ணயம் செய்ய இயலாத நிலை குத்தகை குத்தகை ஏற்பட்டதாகவும், இதனால் திருக்கோயிலுக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார்.

செயல் அலுவலரின் விளக்கம் ஏற்கக்கூடியதாக இல்லை. நகர்ப்புற நிலமான மேற்கண்ட இடத்தினை சுற்றி குடியிருப்புகள் வரப்பெற்று மனைப் பகுதிகளாக மாறி வரும் சூழ்நிலையில் விலை மதிப்புள்ள நகர்ப்புற திருக்கோயில் இடத்தினைப் பாதுகாக்கும் நோக்கில் புன்செய் குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் இடத்தின் குத்தகை உரிமையினை இரத்து செய்து மேற்படி வாடகைதாரரை வெளியேற்ற நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் அல்லது வருவாய் நீதிமன்ற உத்தரவின்படி தற்கால நிலவரத்தின்படி நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் பணிச் சுமையால் மேற்கண்ட நடவடிக்கையை எடுக்கவில்லை என செயல் அலுவலர் திரு.வே. சாXXXXXXXX தனது விளக்கத்தில் இக்குற்றச்சாட்டினை ஏற்றுக்கொண்டுள்ளதால் இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என முடிவு செய்யப்படுகிறது.

**செயல் அலுவலரின் மேல் விளக்கம்**

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் அவர்களின் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆறு குற்றச்சாட்டுகளுக்கு நான் விசாரணை அலுவலர் முன்பு 06.05.2022 அன்று நேரில் ஆஜராகி அளித்துள்ள எனது விளக்கத்தினையே, மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கான எனது மேல் விளக்கமாக ஏற்றுக்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண். 4:**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான, வடக்கு மாட வீதியில் வார்டு எண். 20, கதவு

எண்.120–ல் உள்ள காலிமனைக்கு தற்போதைய மாத வாடகை ரூ.161/– ஆகும். திரு. கந்தசாமி என்பவர் வாடகைதாரராக இருந்து வருகிறார். ஆனால் மேற்படி இடத்தின் வாடகைதாரர் இலாகா அனுமதியில்லாமல் ஒன்பது கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்டி அதனை உள்வாடகைக்கு விட்டு வருகிறார். இலாகா அனுமதி பெறாமல் கட்டடம் கட்டுவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காமல் வாடகைதாரருடன் உடந்தையாக இருந்து இலாகா சட்டவிதிகளுக்கு எதிராகவும், திருக்கோவில் நலனுக்கு எதிராகவும் செயல்பட்டது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

நான் இத்திருக்கோயிலில் 05.03.2019 முதல் 09.07.2021 முடிய நிலை–2 செயல் அலுவலராகப் பணிபுரிந்துள்ளேன். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான, வடக்கு மாட வீதியில் வார்டு எண் 20, கதவு எண். 120–ல் உள்ள காலிமனையின் வாடகைதாரர் திரு. கந்தசாமி என்பவர் மேற்படி இடத்தில் கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி எனது பணிக்காலத்தில் விண்ணப்பம் ஏதும் வழங்கவில்லை எனவும், மேற்படி இடத்தில் எனது பணிக்காலத்தில் கட்டடம் ஏதும் கட்டப்படவில்லை எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி திருக்கோயிலில் எனக்கு பின்னர் செயல் அலுவலராகப் பணிபுரிந்த திருமதி. கே. மXXXXXXXX என்பவரால் 24.12.2021–ல் மேற்படி வாடகைதாரர் திரு. கந்தசாமி கட்டடம் கட்டிக் கொள்ள அனுமதி வேண்டி தஞ்சாவூர், இணை ஆணையருக்கு அனுப்பிய கடித நகல் சமர்ப்பிக்கப்படுகிறது. எனக்கு பின்னர் பணிபுரிந்த செயல் அலுவலர்கள் காலத்திலேயே வாடகைதாரர் திரு.கந்தசாமி என்பவரால் காலிமனையில் தனது சொந்த செலவில் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி 14.10.2021–ல் விண்ணப்பம் அளித்துள்ளதையும், அதன் பேரில் 20.12.2021–ல் தக்கார் தீர்மானம் இயற்றப்பட்டு புதுக்கோட்டை உதவிப் பொறியாளரால் ரூ.39,80,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து 24.12.2021–ல் நிர்வாக அனுமதி படிவம் மற்றும் இணைப்புகளுடன் தஞ்சாவூர், இணை ஆணையருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்படி காலிமனை இடத்தில் வாடகைதாரர் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்கு மாடி கட்டுவது தொடர்பான நடவடிக்கைகள் எனது காலத்திற்கு பின்னர் பணிபுரிந்த செயல் அலுவலர்களால் தான் எடுக்கப்பட்டுள்ளது என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

இக்குற்றச்சாட்டு தொடர்பாக செயல் அலுவலர் திரு.வே. சாXXXXXXXX அளித்த விளக்கத்தில் தான் விராலிமலை, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் **05.03.2019** முதல் **09.07.2021** முடிய செயல் அலுவலராகப் பணிபுரிந்ததாகவும், மேற்படி திருக்கோவிலுக்குச் சொந்தமான வடக்கு மாட வீதி கதவு எண்.120—ல் உள்ள காலி மனையில் திரு. கந்தசாமி என்பவர் வாடகைதாரராக இருந்து வந்துள்ளதாகவும், மேற்கண்ட இடத்தில் அன்னாரால் இரண்டு அடுக்கு மாடி கட்டடம் கட்ட **14.10.2021—ல்** விண்ணப்பிக்கப்பட்டு அதனடிப்படையில் புதுக்கோட்டை உதவி பொறியாளரால் ரூ. **39,80,000/—க்கு** தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மற்றும் **20.12..2021—ந்** தேதிய தக்கார் தீர்மானத்தின் அடிப்படையில் **24.12.2021—ல்** அப்போதைய செயல் அலுவலர் திருமதி. கே. மXXXXXXXX என்பவரால் இணை ஆணையர் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், தன்னுடைய பணி காலத்தில் மேற்படி கட்டடம் கட்டப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இக்குற்றச்சாட்டு தொடர்பாக தற்போது இத்திருக்கோயிலில் செயல் அலுவலராகப் பணிபுரிந்து வரும் திருமதி. கே. மXXXXXXXX 08.06.2022—ல் நேரில் விசாரணைக்கு ஆஜராகி எழுத்து மூலமாக அளித்துள்ள வாக்குமூலத்தில் தான் **9/2021—ல்** பணியில் சேர்ந்தபொழுது, மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான வடக்கு மாட வீதி, வார்டு எண்.20, கதவு எண்.120—ல் உள்ள காலி மனையில் **9** கடைகள் கொண்ட இரண்டு அடுக்கு மாடி கட்டடம் கட்டிக்கொள்ள மேற்படி இடத்தின் வாடகைதாரர் திரு. கந்தசாமி என்பவர் **14.10.2021—ல்** விண்ணப்பித்தார் என்றும், அலுவலக கோப்புகளைப் பரிசீலனை செய்ததில் இத்திருக்கோயிலைக் கூடுதல் பொறுப்பில் கவனித்துக் கொண்டிருந்த பெரம்பூர், அருள்மிகு வீரமாகாளி அம்மன் திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு. க. சேXXXXXXX வசம் திரு. கந்தசாமி உபயமாக **3** கடைகள் கொண்ட கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி விண்ணப்பித்திருந்ததையும், இலாகா அனுமதிக்கு தக்கார் தீர்மானம் **20.10.2021—ல்** இயற்றப்பட்டு **23.10.2021—ல்** இணை ஆணையர் அனுமதிக்காக மதிப்பீட்டு நகலுடன் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலர் திரு. க. சேXXXXXXX அனுப்பியது அறியப்பட்டதாகவும் பெரம்பூர், அருள்மிகு வீரமாகாளி அம்மன் திருக்கோயிலின் செயல் அலுவலரே இத்திருக்கோயிலுக்கும் தக்கார் என்பதால் தக்கார் தீர்மானம் இவராலேயே இயற்றப்பட்டதாகவும், ஆவண நகல்களுடன் சமர்ப்பித்திருந்தார். மேலும், இது குறித்து நேரில் இடத்தை ஆய்வு செய்த போது மேற்படி இடத்தில் திரு. கந்தசாமி என்பவர் **9**

கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் ஏற்கனவே கட்டப்பட்டிருந்த நிலையில் உள்ளூர் அரசியல் நிர்ப்பந்தத்தின் காரணமாக ஏற்கனவே கட்டப்பட்ட கட்டடங்களுக்கு 20.12.2021–ல் புதிதாக தக்கார் தீர்மானம் பெறப்பட்டு (தக்கார் திரு. க. சேXXXXXXX) 24.12.2021–ல் தஞ்சாவூர், இணை ஆணையருக்கு கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி தன்னால் விண்ணப்பிக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், மேற்படி பொருள் தொடர்பாக திரு. க. சேXXXXXXX, செயல் அலுவலரை 08.06.2022–ல் நேரில் விசாரணைக்கு ஆஜராகக் கோரி விசாரிக்கப்பட்டதில், தான் பெரம்பூர், அருள்மிகு வீரமாகாளி அம்மன் திருக்கோயிலின் செயல் அலுவலராகப் பணிபுரிந்த காலத்தில் விராலிமலை, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலராக 10.09.2021 முதல் 14.12.2021 முடிய பணியாற்றி வந்ததாகவும், திருக்கோயிலுக்குச் சொந்தமான வடக்கு மாட வீதி வார்டு எண் 20, கதவு எண்.120–ல் உள்ள காலி மனையில் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டடம் தனது பணிக் காலத்தில் கட்டப்படவில்லை என்றும், திருமதி.கே. மXXXXXXXX செயல் அலுவலராகப் பணிபுரிந்த காலத்தில் மேற்படி இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு 20.12.2021–ல் தக்கார் தீர்மானம் இயற்றப்பட்டு 24.12.2021–ல் இணை ஆணையர், தஞ்சாவூர் அவர்களுக்கு முன்மொழிவுகள் திருமதி. கே. மXXXXXXXX செயல் அலுவலரால் அனுப்பப்பட்டுள்ளது என்றும் , மேற்படி புதிய கட்டடம் கட்டுவதற்கு மின் இணைப்பு துண்டிப்பதற்கு மின் வாரியத்திற்கு யாருடைய பணிக் காலத்தில் கையொப்பம் இட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிந்தால் மேற்படி கட்டடம் யாருடைய பணிக் காலத்தில் கட்டப்பட்டது எனத் தெரிய வரும் என எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் அளித்துள்ளார்.

குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் அளித்துள்ள விளக்கம், திருமதி. கே. மXXXXXXXX மற்றும் திரு. க. சேXXXXXXX ஆகியோர் அளித்த வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்ததில், விராலிமலை நகர் மற்றும் வட்டம் வடக்கு மாட வீதி கதவு எண். 120–ல் உள்ள மனையில் வாடகைதாரர் திரு. கந்தசாமி என்பவருக்கு ஒன்பது கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக எழுத்துப்பூர்வமான நடவடிக்கைகள் செயல் அலுவலர் திரு.வே.சாXXXXXXXX பணி காலத்திற்கு பின்னர் பணிபுரிந்த செயல் அலுவலர்கள் திருமதி.கே. மXXXXXXXX மற்றும் திரு.க. சேXXXXXXX பணிக்காலத்திலே தான் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், திருக்கோயில் எழுத்தர் திரு. வேல்முருகன் 08.06.2022

அன்று அளித்த வாக்குமூலத்தில் குற்றம் சாட்டப்பட்ட திரு.வே. சாXXXXXXXX செயல் அலுவலர் பணிக்காலத்தில் தான் மேற்காணும் புல எண்ணில் புதிய கட்டடம் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக வாக்குமூலம் அளித்துள்ளார். குற்றஞ்சாட்டப்பட்ட செயல் அலுவலர் தன்னுடைய பணிக்காலத்தில் புதியக் கட்டடம் கட்டப்படவில்லை என தெரிவித்துள்ளார். அவருக்கு பின் கூடுதல் பொறுப்பில் இத்திருக்கோயிலின் செயல் அலுவலராகவும், தக்காராகவும் பணியாற்றிய திரு. க. சேXXXXXXX தன்னுடைய பணிக்காலத்தில் கட்டடம் கட்டப்படவில்லை என தெரிவித்துள்ளார். ஆனால், தக்கார் நிலையில் தீர்மானம் இயற்றி கூடுதல் பொறுப்பு செயல் அலுவலர் நிலையிலேயும் கட்டடம் கட்ட அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ளதும் ஆவணங்களில் உள்ளது. அதற்கு பின் வந்த செயல் அலுவலர் திருமதி. கே. மXXXXXXXX, ஏற்கனவே கட்டப்பட்ட கட்டடங்களுக்கு உள்ளூர் அரசியல் நிர்ப்பந்தத்தின் காரணமாகவே புதிதாக தக்கார் தீர்மானம் பெற்று (தக்கார் திரு. க. சேXXXXXXX) அனுமதி வேண்டி தான் விண்ணப்பித்ததாக வாக்குமூலம் அளித்துள்ளார். இவற்றை மறுத்து குறுக்கு விசாரணை எதுவும் குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் மேற்கொள்ளவில்லை. தனக்கு பின்னால் பணியாற்றிய செயல் அலுவலர்களை விசாரணை செய்யும் போது, தன்னுடைய தரப்பை நிலைநாட்ட குறுக்கு விசாரணை செய்யவும் இல்லை.

குற்றஞ்சாட்டப்பட்ட செயல் அலுவலர் பணிக்காலத்தில் தான் கட்டடம் இடிக்கப்பட்டதாகத் திருக்கோயில் பணியாளர் வாக்குமூலம் அளித்துள்ளார். புதிய கட்டடம் தன்னுடைய பணிக்காலத்தில் கட்டப்படவில்லை என குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் தெரிவித்துள்ள நிலையில் விசாரணையின் போது அதனை மறுத்து வாக்குமூலம் ஏதும் அளிக்கவில்லை. எனவே, புதிய கட்டடம் குற்றம் சாட்டபட்ட செயல் அலுவலர் பணிக்காலத்தில் கட்டப்படவில்லை எனினும், துறை அனுமதி பெறாமல் புதிய கட்டடம் கட்டுவதற்கான பூர்வாங்க பணிகள் துவங்கப்படுவதைத் தடுத்து நிறுத்தாமல் தனது கடமையில் இருந்து தவறி உள்நோக்கத்துடன் செயல்பட்டிருப்பது விசாரணையில் தெரிய வருகிறது. இலாகா அனுமதி பெறாமல் கட்டடம் கட்டுவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காமல், உள்நோக்கத்துடன் தனது கடமையிலிருந்து தவறி வாடகைதாரருடன் உடந்தையாக இருந்து இலாகா விதிகளுக்கு எதிராக செயல்பட்டார் என்ற இக்குற்றச்சாட்டு நிரூபணம் ஆகிறது.

**செயல் அலுவலரின் மேல் விளக்கம்**

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் அவர்களின்

குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆறு குற்றச்சாட்டுகளுக்கு நான் விசாரணை அலுவலர் முன்பு **06.05.2022** அன்று நேரில் ஆஜராகி அளித்துள்ள எனது விளக்கத்தினையே, மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கான எனது மேல் விளக்கமாக ஏற்றுக்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண். 5 :**

பசலி **1430**–க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.5–ல் மேற்படி பசலியில் பங்குனி மாத உற்சவத்திற்கான செலவு இனங்களில் ஆலயத் தேரைக் கழுவும் பணி உபயதாரர் மூலம் செய்யப்படும் என பதிவு செய்யப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஆனால் ஆலயத் தேரைக் கழுவுவதற்கு ரூ.**3,200/–** செலவிடப்பட்டு அதற்கு செலவுச்சீட்டு வைக்கப்பட்டுள்ளது. எனவே, உபயதாரர் மூலம் செலவினைச் செய்துவிட்டு ரூ.**3,200/–** முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை இழப்பாகக் கருதி பொறுப்பாளர்களிடம் இருந்து ஈடு செய்யப்பட வேண்டும் எனவும் தணிக்கைப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை தணிக்கைப் பத்தி தடை நீக்கம் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோயில் நிதியினைக் கையாடல் செய்தது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

இத்திருக்கோயில் பசலி **1430** தணிக்கை அறிக்கை பத்தி எண்.5–ல் ஆலய தேர் கழுவும் பணிக்கான செலவு தொகை ரூ.**3,200/–**க்கு உரிய செலவு சீட்டுக்கள் காண்பிக்கப்படவில்லை என்பது குற்றச்சாட்டாக சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி செலவுத்தொகை ரூ.**3,200/–** ல் தேரை சுத்தப்படுத்தும் பணிக்கு ரூ. **2,600/–** வாட்டர் சப்ளை செய்த வகையில் ரூ.**600/–** செலவு செய்யப்பட்டுள்ளது. தேர் சுத்தப்படுத்தும் பணிக்கான செலவுத் தொகை ரூ.**2,640/–**க்கு பதிலாக ரூ.**40/–** குறைவு செய்து ரூ.**2,600/–** வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகை ரூ.**600/–** க்கான செலவு சீட்டு தணிக்கையின் போது காண்பிக்கப்படாததால் தணிக்கை மறுப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

மேற்படி செலவீனத்திற்கு (ஆடி திருவிழா) பசலி **1430**–க்கான வரவு செலவு திட்டத்தில் ஆணையர் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தொகை ரூ. **3,200/–**

15.05.2021–ல் நடைபெற்ற தணிக்கை கூட்டமர்வின் போது இக்குற்றச்சாட்டு சுமத்திய இணை ஆணையரால் இத்தொகையினை தடை நீக்கம் (பத்தி எண்.5) செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே இக்குற்றச்சாட்டு உயிரற்றதாகிவிடுகிறது.

மேற்படி, செலவினத்திற்கு வரவு, செலவு திட்டத்தில் உரிய அனுமதி பெறப்பட்டுள்ளதாலும் மேற்படி தொகை ரூ. 3200/–க்கு தணிக்கை தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி தொகை முறைகேடாக பயன்படுத்தப்படவில்லை என்பதால் இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

குற்றஞ்சாட்டப்பட்ட செயல் அலுவலர் திரு.வே.சா XXXXXXXX அளித்த விளக்கம் பரிசீலிக்கப்பட்டது. செயல் அலுவலர் தனது விளக்கத்தில் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்ட தேர் கழுவும் பணிக்கான செலவு ரூ.3,200/– பங்குனி மாத உற்சவத்திற்கானது இல்லை எனவும், ஆடி பெருந்திருவிழாவின் பொழுது 07.08.2020 அன்று நடைபெற்ற தேரோட்டத்திற்கான செலவினமாகும் எனவும், மேற்படி பணியினை உபயதாரர் மூலம் செய்ய முடிவு செய்யப்பட்ட நிலையில் விலைப்புள்ளி கோரப்படவில்லை எனவும், உபயதாரர் கிடைக்காத நிலையில் அவசர அவசியம் கருதி திருக்கோயில் மூலம் ரூ.2,600/– செலவு செய்யப்பட்டது எனவும் அதற்கான உரிய ரசீதுகள் பெறப்பட்டுள்ளது எனவும் இதில் திருக்கோயில் நிதி தவறாக பயன்படுத்தப்படவில்லை எனவும் விளக்கம் அளித்துள்ளார்.

குற்றச்சாட்டில் ஆலய தேரை கழுவுவதற்கு ரூ.3,200/– முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், செயல் அலுவலரின் விளக்கத்தில் ரூ.2,600/–க்கான செலவினங்களுக்கு மட்டுமே செலவுச்சீட்டு சமர்ப்பித்தும் ரூ. 2,640/–க்கு ரசீது நகல்களுடன் விளக்கம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. செயல் அலுவலரின் விளக்கம் முழுமையாக இல்லை. மீதமுள்ள ரூ.600/– செலவினத்திற்கு விளக்கம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. எனவே இக்குற்றச்சாட்டு பகுதியாக நிரூபணமாகிறது.

**செயல் அலுவலரின் மேல் விளக்கம்**

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் அவர்களின் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆறு குற்றச்சாட்டுகளுக்கு நான் விசாரணை அலுவலர் முன்பு 06.05.2022 அன்று நேரில் ஆஜராகி அளித்துள்ள எனது விளக்கத்தினையே மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கான எனது மேல் விளக்கமாக ஏற்றுக்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண். 6 :**

பசலி 1430–க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.7–ல் மேற்படி பசலியில் ஒன்பது வகையான செலவினங்களுக்கான செலவுத் தொகைகளுக்குச் செலவு சீட்டுகள் தாக்கல் செய்யப்படாததால் செலவின் உண்மைத் தன்மையை உறுதி செய்ய இயலவில்லை என்பதால் செலவுத் தொகை ரூ.24,001/– தணிக்கை மறுப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோவில் நிதியினைச் செலவிட்டு அதற்கு செலவுச் சீட்டு வைக்காமல் திருக்கோவில் நிதியினைக் கையாடல் செய்தது.

**செயல் அலுவலரின் விளக்கம்**

இத்திருக்கோயில் பசலி 1430 தணிக்கை அறிக்கை பத்தி எண்.7–ல் ஒன்பது வகையான செலவீனங்களுக்குரிய தொகை ரூ. 24,001/–க்கு உரிய செலவு சீட்டுக்கள் காண்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதைக் குற்றச்சாட்டாக சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி செலவீனங்கள் அனைத்திற்கும் பசலி 1430 வரவு செலவு திட்டத்தில் ஆணையர் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகைக்குரிய செலவு சீட்டுகள் தணிக்கை கூட்டமர்வில் தாக்கல் செய்து தணிக்கை தடை நீக்குவது தொடர்பாக தணிக்கை கோப்பில் தொடர் நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே மேற்படி செலவீனங்கள் அனைத்தும் உரிய துறை அனுமதி பெற்றே செய்யப்பட்டுள்ள நிலையில் திருக்கோவில் நிதி முறைகேடாகச் செலவிடப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு இக்குற்றச்சாட்டினைக் கைவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**விசாரணை அலுவலரின் முடிவு**

இக்குற்றச்சாட்டு தொடர்பாக செயல் அலுவலர் திரு.வே. சாXXXXXXXX அளித்த விளக்கத்தில் பசலி 1430 தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.7—ல் ஒன்பது வகையான செலவினங்களுக்குச் செலவு சீட்டுகள் தாக்கல் செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டு தொகை ரூ. 24,001/— தணிக்கை மறுக்கப்பட்டது எனவும், அவற்றில் வரிசை எண். 6—ல் ஆணையர் பொதுநலநதி ரூ.9,500/—க்கான வங்கி வரைவோலை எடுக்கப்பட்டதற்கான நகல் செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள விளக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதர செலவீனங்களுக்கு தற்போது செலவு சீட்டுகள் மற்றும் இரசீதுகள் வைக்கப்பட்டு தணிக்கை தடை நீக்கம் செய்ய நடவடிக்கையில் உள்ளது என தெரிவித்துள்ளார்.

செயல் அலுவலரின் விளக்கத்திலிருந்தும் ஆவணங்களைப் பரிசீலித்ததன் அடிப்படையிலும் தணிக்கையின்போது உரிய செலவு சீட்டுகள் இல்லாமலும், உரிய ரசீதுகள் செலவு சீட்டுகளில் வைக்கப்படாமலும் கணக்குகள் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது உறுதியாகிறது. செலவீனங்கள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் செலவுச்சீட்டு இல்லாமலும், உரிய இரசீதுகள் இல்லாமலும் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மேற்படி செலவுத்தொகை ரூ24,001/—ல் ஆணையர் பொது நிதி தொகை ரூ.9,500/— செலவீனம் தவிர இதர ரூ.14,501/— செலவின் உண்மைத்தன்மையில் சந்தேகம் எழுகிறது. எனவே இக்குற்றச்சாட்டு பகுதியாக நிரூபணம் ஆகிறது.

**செயல் அலுவலரின் மேல் விளக்கம்**

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் அவர்களின் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆறு குற்றச்சாட்டுகளுக்கு நான் விசாரணை அலுவலர் முன்பு 06.05.2022 அன்று நேரில் ஆஜராகி அளித்துள்ள எனது விளக்கத்தினையே, மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கான எனது மேல் விளக்கமாக ஏற்றுக்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

## ஆணை :

திரு.வே. சாXXXXXXXX, நிலை—2, செயல் அலுவலர் மீது சுமத்தப்பட்ட

குற்றச்சாட்டுக்கள், செயல் அலுவரின் விளக்கம், விசாரணை அலுவலரின் முடிவு, செயல் அலுவலரின் மேல் விளக்கம் மற்றும் தொடர்புடைய இதர ஆவணங்கள் ஆகியவை கவனமுடனும், சுயமாகவும், ஆழ்ந்தும் பரிசீலிக்கப்பட்டன. திரு.வே. சாXXXXX, நிலை–2, செயல் அலுவலர் மீது மொத்தம் 6 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அவற்றில் 4 குற்றச்சாட்டுகள் முழுமையாக நிரூபணமானதாகவும், 2 குற்றச்சாட்டுகள் பகுதியாக நிரூபணமாவதாகவும் விசாரணை அலுவலர் தெரிவித்துள்ளார்.

திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள வணிக வளாகம் தொடர்பான வழக்கில் ஆணையரால் இணக்கத்தீர்வு ஏற்படுத்தப்பட்டு வாடகைதாரரால் ஏற்கனவே செலுத்தப்பட்டத் தொகை போக மீதமுள்ள தொகையினை வசூல் செய்து நிரந்தர முதலீடு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தும் நிலுவைத் தொகையினை வசூலிக்க நடவடிக்கை எடுக்காததால் ரூ.14,90,000/– வசூல் செய்யப்படாமல் நிலுவையாக வைத்து வட்டி வருவாய் இனத்தினைத் தடை செய்து திருக்கோவிலுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியது என குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. வணிக வளாகம் உள்ள இடத்திற்கு நிலுவையாக உள்ள தொகையினை வசூலிக்கவும், மேற்கண்ட இடத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யவும் தம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், திருக்கோவில் வாடகை நிலுவை என்பது நிதியிழப்பு ஆகாது என்றும் குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். செயல் அலுவலர் பணியாற்றிய காலத்தில் நிலுவைத் தொகையினை முழுமையாக வசூல் செய்யவில்லை. நிலுவைத் தொகையினை வசூலிக்க நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்தோ அல்லது சட்டப்பிரிவு 79(c)–ன் கீழ் இணைஆணையர் மன்றத்தில் நடவடிக்கை எடுத்தோ நிலுவைத் தொகையினை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதிக்கான சந்தை மதிப்பு பெறாமல் குறைந்த மதிப்பு உள்ள பெருமாள் கோவில் வடக்கு மாட வீதியின் சந்தை மதிப்பினைப் பெற்று நியாய வாடகை நிர்ணயம் செய்யப் பரிந்துரை செய்து திருக்கோவிலுக்குப் பெரிய அளவில் நிதியிழப்பினை ஏற்படுத்தியது.

மேற்கண்ட வணிக வளாகத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்ய சிவன்கோவில் கீழ இரத வீதியில் வழிகாட்டி மதிப்பு இல்லாத நிலையில் அருகில் உள்ள வடக்கு மாட வீதியின் வழிகாட்டி மதிப்பின்படி நியாய வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மதிப்புக் கூடுதலாக இருக்கும்

வணிக வளாகத்தின் முன்பக்கத்திற்கான வழிகாட்டி மதிப்பினைப் பெற்று நியாய வாடகை நிர்ணயக்குழுவின் முன்பு சமர்ப்பிக்காமல் வணிக வளாகம் அமைந்துள்ள இடத்திற்கு வழிகாட்டி மதிப்பு இல்லை எனத் தெரிவித்துள்ளது ஏற்கக்கூடியதாக இல்லை.

மேற்கண்ட திருக்கோயிலுக்குச் சொந்தமான 9.20 ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்குப் பெற்ற குத்தகைதாரர் நீண்ட காலமாக விவசாயம் எதுவும் செய்யாமல் இருந்த காரணத்தால் மேற்கண்ட நிலங்கள் குடியிருப்புப் பகுதியாக மாறி உள்ள நிலையில் குத்தகைதாரரை வெளியேற்ற நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு குத்தகை நிலுவையை மனுதாரர் 3 மாதத்திற்குள் செலுத்தவேண்டும் எனவும், தவறின் குத்தகைதாரரை வெளியேற்றலாம் எனவும், நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய தனியே நீதிமன்றத்தில் மனு செய்யவும் நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டும் அதன்படி நடவடிக்கை எடுக்காமல் நாளது தேதி வரை குத்தகைத் தொகை ஆண்டு 1—க்கு ரூ. 400/— மட்டுமே வசூலிக்கப்பட்டு வருவதோடு, நியாய வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்காதது.

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள குத்தகைதாரர் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ரூ.10,800/—னை தம்மால் வசூல் செய்யப்பட்டு விட்டதாகவும், மேற்கண்ட இடத்தினைச் சுற்றி வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்புப் பகுதியாக மாறியதால் குத்தகைதாரரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க இருந்த காரணத்தினால் நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய மனு தாக்கல் செய்ய இயலவில்லை எனவும் திருப்பணி, திருவிழாக்கள் போன்ற இதர பணிகள் காரணமாக நியாயக் குத்தகை செய்ய இயலாத நிலை ஏற்பட்டது என்று கூறுவது ஏற்பிற்குரியதாக இல்லை.

விலைமதிப்புள்ள நகர்ப்புறத்தில் அமைந்துள்ள திருக்கோவில் இடத்தினைப் பாதுகாக்காமலும், குத்தகைதாரரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்காமலும் நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்காமலும் தமது பணிச்சுமையால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை என செயல் அலுவலர் ஒப்புக்கொண்டுள்ளார்.

திருக்கோயிலுக்குச் சொந்தமான காலி மனையில் உள்ள வாடகைதாரர் துறை அனுமதி இல்லாமல் 2 அடுக்கு மாடிகளாகப் 9 கடைகள் கட்டி அவற்றை உள் வாடகைக்கு விடப்பட்டதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமல் வாடகைதாரருக்கு உடந்தையாக இருந்து சட்டவிதிகளுக்கு எதிராகச் செயல்பட்டது.

மேற்கண்ட இடத்தில் தம் பணிக்காலத்தில் கட்டடம் எதுவும் கட்டப்படவில்லை என குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள வாடகைதாரர் மேற்கண்ட இடத்தில் 2 அடுக்குமாடி கட்ட விண்ணப்பித்ததில் கட்டடம் கட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக எழுத்துப் பூர்வமான நடவடிக்கைகள் மேற்கண்ட செயல் அலுவலர் பணிபுரிந்த காலத்திற்குப் பின்னர் பணிபுரிந்த செயல் அலுவலர்கள் காலத்தில் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், திருக்கோவில் எழுத்தர் விசாரணை அலுவலர் முன்பு அளித்த வாக்குமூலத்தில் மேற்கண்ட செயல் அலுவலர் பணிக்காலத்தில் தான் கட்டடம் கட்டத் தொடங்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். குற்றம் சாட்டப்பட்ட செயல் அலுவலர் தன்னுடைய பணிக்காலத்தில் மேற்கண்ட கட்டடங்கள் கட்டப்படவில்லை என்பதை நிரூபிப்பதற்கு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை எனவும், குறுக்கு விசாரணை அல்லது மறுத்து வாக்குமூலம் எவற்றையும் அளிக்கவில்லை எனவும் விசாரணை அலுவலர் தெரிவித்துள்ளார். இதன்மூலம் துறை அனுமதி பெறாமல் கட்டடம் கட்டுவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காமல் வாடகைதாரருடன் உடந்தையாக இருந்து விதிகளுக்கு எதிராகச் செயல்பட்டுள்ளார் என்பது புலனாகிறது.

பசலி 1430–ல் பங்குனி மாத உற்சவத்திற்கு விலைப்புள்ளி எதுவும் கோராமல் தேரைக் கழுவுவற்கு ரூ.3,200/– செலவிட்டதாகத் தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதை நீக்கம் செய்யாமலும் தவறான முறையில் திருக்கோவில் நிதியினைக் கையாடல் செய்தது.

மேற்கண்ட தேர் கழுவும் பணி ஆடிப் பெருந்திருவிழாவின் போது நடைபெற்ற தேரோட்டத்திற்கான செலவீனமாகும் என்றும், உபயதாரர் கிடைக்காத நிலையில் அவசர அவசியம் கருதி திருக்கோவில் நிதி ரூ.2,600/– செலவு செய்யப்பட்டதாகவும் அதற்கான உரிய பற்றுச் சீட்டுகள் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தேரைக் கழுவுவதற்கு ரூ.3,200/– பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் ரூ. 2,600/– செலவு செய்யப்பட்டதற்கு மட்டுமே செயல் அலுவலரால் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.600/– செலவிடப்பட்டதற்கு விளக்கம் எதுவும் சமர்ப்பிக்காததால் தணிக்கை தடையை நீக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பது உறுதியாகிறது.

பசலி 1430–ல் 9 வகையான செலவினங்களுக்குச் செலவு சீட்டுகள் தாக்கல் செய்யாததால் ரூ.24,001/– தணிக்கை அறிக்கையில் மறுப்பாகத்

தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய செலவுச் சீட்டுக்கள் இல்லாமல் திருக்கோவில் நிதியைக் கையாடல் செய்தது.

தணிக்கையின் போது உரிய செலவுச் சீட்டுக்கள் இல்லாமலும், உரிய இரசீதுகள் செலவுச்சீட்டுக்களில் வைக்கப்படாமலும் கணக்குகள் தணிக்கைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. செலவீனங்கள் மேற்கொள்ளப்பட்டபோது செலவுச் சீட்டுக்கள் இல்லாமலும், இரசீதுகள் இல்லாமலும் செலவீனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகையான ரூ.24,001/–ல் ஆணையர் பொதுநலநிதிக்காகப் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ.9,500/– தவிர இதர செலவினங்களின் உண்மைத் தன்மையில் ஐயம் உள்ளதால் உரிய செலவுச் சீட்டுகளின்றித் தவறான முறையில் திருக்கோவில் நிதியினைச் செலவிட்டுள்ளார் என்பது உறுதியாகிறது.

குற்றச்சாட்டுகளுக்குச் செயல் அலுவலரால் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் மேற்கூறியவாறு ஏற்கக்கூடியவையாக இல்லை. விசாரணை அறிக்கையின் மீது செயல் அலுவலரை மேல்விளக்கம் கேட்கப்பட்டதில் ஏற்கனவே விசாரணை அலுவலர் முன்பு தாம் அளித்த விளக்கத்தையே மேல் விளக்கமாக எடுத்துக் கொள்ளுமாறு செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். எனவே குற்றச்சாட்டு எண்கள் 1 முதல் 4 வரை முழுமையாக நிரூபணமாகின்றன என்றும், குற்றச்சாட்டு எண்கள் 5 மற்றும் 6 ஆகியவை பகுதியாக நிரூபணமாகின்றன என்றும் விசாரணை அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள முடிவுகள் ஏற்கப்படுகின்றன.

உறுதி செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மிகவும் கடுமையானவை. இதன் காரணமாக திருக்கோவில் சொத்துகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. தவிர பெருமளவில் நிதியிழப்பும் ஏற்பட்டுள்ளது. எனவே உறுதி செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் கடுமை தன்மையைக் கருத்தில் கொண்டு திரு.வே. சாXXXXXXXX, நிலை–2, செயல் அலுவலரை தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 8 (iv)–ன் கீழ் செயல் அலுவலர், நிலை–2 என்ற நிலையிலிருந்து அதன் கீழ் நிலைப் பதவியான நிலை–3 செயல் அலுவலராக ரூ.20600/– ( Level – 10 ) தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் **01.03.2023 முதல் 5 ஆண்டுகளுக்குப் பணி இறக்கம் செய்து ஆணையிடப்படுகிறது. (Reduction to a lower post for 5 years).** பதவி இறக்கம் என்ற தண்டனையானது இந்த ஆணை கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும் எனவும், பிறப்பிக்கப்பட்டுள்ள

இத்தண்டனையால் தண்டனைக் காலம் முடிவுற்ற பின்பு ஊதிய உயர்வு பாதிக்கப்படும் என்றும், தண்டனைக் காலம் முடிவுற்ற பின்பு தண்டனைக் காலத்திற்கு முந்தைய பதவியான செயல் அலுவலர் நிலை–2 பதவியை அவர் அடையும் போது தண்டனைக் காலத்திற்கு முன் செயல் அலுவலர், நிலை–2 பதவியில் என்ன ஊதியம் பெற்றாரோ அதே ஊதியம் தான் அன்னாருக்கு நிர்ணயம் செய்யப்பட வேண்டுமெனவும், பதவி இறக்கம் என்ற தண்டனையானது விடுப்புக் காலத்தை உள்ளடக்கியது மற்றும் ஒய்வூதியத்தை பாதிக்கும் தன்மையுடையது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாணையின் மீது மேல்முறையீடு செய்ய விரும்பினால் இவ்வுத்தரவு கிடைக்கப்பெற்ற 60 நாட்களுக்குள் **"அரசுச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 600 009"** என்ற முகவரிக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ.ம்) பா. சXXXXXXXX
ஆணையர்

/உ.ந.உ.ப./

கண்காணிப்பாளர்

பெறுநர் :

1. திரு.வே. சாXXXXXXXX, (ஒப்புகை பதிவஞ்சலின் மூலம்)
செயல் அலுவலர் நிலை 2 (தற்காலிகப் பணிநீக்கம்)
எண்.104, மேலூர் மெயின் ரோடு,
வளர் நகர், மதுரை 625 107.
2. உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை.
3. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.
4. பணிப்பதிவேட்டிற்கு
5. "எல்" பிரிவு கண்காணிப்பாளர் (இவ்வலுவலகம்)
6. மிகை.

[ மாதிரி படிவம் ]

## பணி இறக்க தண்டனைக்கு பின் பணி நியமனம் வழங்குதல்

**இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் செயல்முறைகள்**

முன்னிலை : திரு. பா. சXXXXXXXX, இ. ஆ. ப.
ஆணையர்

<u>செ.மு.ந.க.எண் 24725/2022/எல்2 நாள்: 28.02.2023</u>

பொருள் : பணிப்பிரிவு – ஒழுங்கு நடவடிக்கை – தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) – விதி 17 (b)–ன் கீழ் – திரு.வே. சாXXXXXXXX – செயல் அலுவலர் நிலை –2 – முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – ஆணை பிறப்பிக்கப்பட்டது – **பணி இறக்க தண்டனைக்கு பின் பணி நியமனம் வழங்குதல்** – நிலை 3 செயல் அலுவலராகப் பணி நியமனம் வழங்குதல் – ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1. இணை ஆணையர், தஞ்சாவூர், குறிப்பாணை எண் 3920/2022/ஆ2 நாள்: 02.02.2022
2. இவ்வலுவலக செ.மு.ந.க.எண்24725/2014/எல்2 நாள்: 21.02.2023

------

திரு.வே. சாXXXXXXXX, நிலை–2, செயல் அலுவலர் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் பணிபுரிந்தபோது ஏற்பட்ட நிர்வாகக் குறைபாடுகளுக்காக அன்னார் மீது பார்வைக்குறிப்பு 1–ன்படி தஞ்சாவூர், இணை ஆணையரால் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் பார்வைக்குறிப்பு 2–ல் காணும் ஆணையில் அன்னாரை நிலை 2 செயல் அலுவலர் என்ற நிலையிலிருந்து அதன் கீழ்நிலைப் பதவியான நிலை 3 செயல் அலுவலர் பதவிக்கு ஐந்தாண்டுகளுக்குப் பணி இறக்கம் செய்து

ஆணையிடப்பட்டுள்ளது. (Reduction to a lower post for 5 years)

எனவே, திரு.வே. சாXXXXXXXX, செயல் அலுவலருக்கு நிலை 3 செயல் அலுவலராக திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாபநாசம் அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயிலில் பணிநியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

திரு. வே. சாXXXXXXXX, நிலை 3 செயல் அலுவலர் உடன் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ள திருக்கோவிலில் பணியில் சேர ஆணையிடப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாபநாசம் அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயிலில் கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்து வரும் செயல் அலுவலர் தம்மிடம் உள்ள மேற்கண்ட திருக்கோவிலின் அனைத்துப் பொறுப்புகளையும் திரு.வே. சாXXXXXXXX, நிலை 3 செயல் அலுவலரிடம் ஒப்படைக்க ஆணையிடப்படுகிறது.

பொறுப்பு ஒப்படைத்து/ஏற்றமைக்கு அறிக்கை அனுப்பவும் செயல் அலுவலர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

பொறுப்பு ஒப்படைத்து/ஏற்றதைக் கண்காணித்து அறிக்கை அனுப்ப இணை ஆணையர்/உதவி ஆணையரைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒ.ம்) நி. கXXXXXXXX,
கூடுதல் ஆணையர் (விசாரணை)
ஆணையருக்காக.

/உண்மை நகல் உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்

பெறுநர்:

1. திரு.வே. சாXXXXXXXX,
   செயல் அலுவலர் – வரிசை எண் 3–ன் மூலம்.
2. செயல் அலுவலர்,
   அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில்,
   பாபநாசம், அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்

3. உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை,

4. உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, திருநெல்வேலி.

5–6. இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
திருநெல்வேலி/தஞ்சாவூர்.

7. 'எல்3' பிரிவு, இவ்வலுவலகம் – எண்ணிடல் மூலம்.

8. மிகை.

 பகுதி – 4

# IV

# தற்காலிக பணிநீக்க ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

 பகுதி – 4

# IV

## [விதி 17 (e)]

### தற்காலிக பணிநீக்க ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளின்படி,

(அ) மிகக் கடுமையான குற்றச்சாட்டு குறித்து நடவடிக்கை மேற்கொள்ள உள்ள நிலையில்,

(ஆ) இந்திய குற்றவியல் சட்டத்தின்படி, குற்றம் இழைத்து விசாரணை நிலுவையில் இருந்து வரும் நிலையில் தற்காலிகப் பணி நீக்கம் செய்விக்கும் அதிகாரம் குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியரின் நிலைக்கு அடுத்த உயர்நிலையில் உள்ள (Immediate Superior Officer of the State Service or Any Higher Authority) மாநிலப் பணி அலுவலருக்கு மட்டுமே உண்டு. மேலும், அவருக்கும் மேல்நிலையில் உள்ள அலுவலர்களும் இந்த அதிகாரத்தினைச் செயல்படுத்திடலாம்.

உரிய ஆணை வழங்கப்பட்டு, பணியாளர் பணியிலிருந்து விடுவிக்கப்படும் நாளிலிருந்து தற்காலிகப் பணி நீக்கத்தில் இருப்பதாகக் கொள்ளலாம்.

இந்த விதிகளின் கீழ் செய்யப்பட்ட (அ) செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட தற்காலிக பணி நீக்க உத்தரவு, அதனைப் பிறப்பித்த அதிகாரியினால் (அ) அதன் சார்நிலை அதிகாரியினால் எந்நேரத்திலும் திரும்பப் பெறப்படலாம்/நீக்கப்படலாம்.

**தற்காலிக பணி நீக்க காலத்திற்கான பிழைப்பூதியம் (Subsistence Allowance)**

| | | முதல் 6 மாதம் | 6 மாதத்திற்குப் பின் | |
|---|---|---|---|---|
| | | | உயர்த்தினால் | குறைப்பு செய்யப்பட்டால் |
| 1. | அடிப்படை சம்பளம் | 50% | 75% | 25% |
| 2. | அகவிலைப்படி | 50% | 75% | 25% |
| 3. | வீட்டு வாடகைப்படி | 100% | 100% | 100% |
| 4. | நகர ஈட்டுப்படி | 100% | 100% | 100% |
| 5. | மருத்துவப்படி | NIL | NIL | NIL |

காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு 48 மணி நேரம் காவல்துறையில் காவலில் வைக்கப்பட்டால், கைது செய்யப்பட்ட நேரத்தில் இருந்து தற்காலிக பணி நீக்கத்தில் இருப்பதாகக் கருதி உத்தரவிட வேண்டும். இதற்கு காவல்துறையின் FIR மற்றும் மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவு இரண்டும் தேவை.

தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள ஒருவர் ஓய்வு நாளன்று (Date of Superannuation) ஓய்வுபெற அனுமதிக்கலாகாது. அன்னாரின் பணி ஓய்வு நாளில் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப்பட உரிய அரசாணைகளை வழங்கிட வேண்டும். அந்த அதிகாரம் அரசுக்கு மட்டுமே உண்டு.

**பணியிலிருந்து ஓய்வு பெறும் நாளன்று தற்காலிக பணி நீக்கத்தில் வைத்திடும் ஆணை வெளியிடுதலைத் தவிர்த்தல்**

பணியிலிருந்து ஓய்வு பெறும் நாளன்று பிறப்பிக்கப்படும் தற்காலிக பணி நீக்க ஆணைகளை தவிர்த்திடுவது தொடர்பாக அரசாணை பலவகை எண் 144 ப.ம.நி.சீ.(N) துறை, நாள்: 8.6.2007–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆணைகளுக்கிணங்க கடைசி தருணத்தில், அதாவது பணியிலிருந்து ஓய்வு பெறும் நாளன்று அரசு ஊழியரை தற்காலிக பணிநீக்கத்தில் வைத்திடுவது தவிர்க்கப்பட வேண்டும். இத்தகைய நேர்வுகளில், அரசு ஊழியரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிப்பதா அல்லது தற்காலிகப் பணி நீக்கத்தில் வைப்பதா என்பதனை அரசு ஊழியர் பணியில் இருந்து ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே முடிவு செய்திட வேண்டும். இந்த மூன்று மாத கால அளவுக்குள் ஏதேனும் ஒழுங்கீனம் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் அதிவேகமாக நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட அரசு ஊழியருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை தமிழ்நாடு ஓய்வூதிய விதி தொகுப்பின் விதி 9–ன் கீழ் தொடரப்படும் என்பதனை தெளிவாக குறிப்பிட்டு, அவருக்கு ஓய்வு பெறுவதற்கு அனுமதியை வழங்கிடலாமா அல்லது குற்றச்சாட்டின் கடுமையினைக் கருதி அவரை தற்காலிகப் பணி நீக்கத்தில் வைத்திட வேண்டுமா என்பதனை விரைந்து முடிவு செய்திடல் வேண்டும். நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கையில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் நேர்வில் ஓய்வூதிய பிடித்தம் அல்லது ஓய்வூதியத்தில் குறைப்பு போன்ற தண்டனை மட்டுமே சாலப் பொருத்தமாக இருக்குமென சம்பந்தப்பட்ட அதிகாரியால் கருதப்படின், சம்பந்தப்பட்ட அரசு ஊழியருக்கெதிரான ஒழுங்கு நடவடிக்கை தமிழ்நாடு ஓய்வூதிய விதி தொகுப்பின் விதி 9–ன் கீழ் தொடரப்படும் என்பதனை தெளிவாக குறிப்பிட்டு, அவர் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதித்திடலாம். இந்த ஆணைக்கிணங்க ஒரு அரசு ஊழியர் பணியில் இருந்து ஓய்வு பெறும் நாளிலிருந்து 3 மாதங்களுக்கு முன்பே ஆணைகள் வெளியிடுவதில் சரிவர நடவடிக்கை எடுக்கப்படாமல் தவறுகள் இழைக்கப்படுமாயின், அத்தகைய நேர்வுகள் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட காரணமாக அமைந்திடக் கூடும்.

**ஓய்வு பெறும் நாளன்று ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்து, தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் நேர்வில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை**

அரசு ஊழியர் ஓய்வு பெறும் தருணத்தில், அவருக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை

நிலுவையில் இருந்து, குற்றச்சாட்டின் தன்மை கடுமையாக இருந்து, அவர் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டிருந்தால், அடிப்படை விதி 56 (1) (c)—ன் கீழ் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதி மறுத்து, அவரது பணியினை விசாரணை முடிந்து இறுதி ஆணை வெளியிடப்படும் வரை நீட்டித்து ஆணையிடப்பட வேண்டும்.

விதி 17 (b)—ன் கீழ் தொடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையினை எதிர்கொண்டுள்ள ஒரு அரசு ஊழியர் பணியில் இருந்து ஓய்வுபெற அனுமதிக்கப்பட்டால், நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கை தமிழ்நாடு ஓய்வூதிய விதி தொகுப்பின் விதி 9—ன் கீழ் தொடரப்படும். ஒழுங்கு நடவடிக்கையை தொடுத்திட்ட அதிகாரியே, அதனை தொடர்ந்து நடத்தி, குற்றச்சாட்டின் மேல் முடிவினை கண்டறிந்து, இறுதி ஆணைகள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

[ மாதிரி படிவம் ]

# தற்காலிகப் பணி நீக்க ஆணை – I

**மேலூர், வருவாய் துறை வட்டாட்சியரின் செயல்முறை நடவடிக்கைகள்**

பிறப்பிப்பவர் : திருமதி. மெ. காXXXXXXX
வட்டாட்சியர்

செ.மு.ந.க. எண் 8244/2022/பி2 நாள்: 10.04.2022

பொருள் : பணிப்பிரிவு – திரு. சோ. மXXXXXXXX – அலுவலக உதவியாளர் – வட்டாட்சியர் அலுவலகம் – மேலூர் நகர் மற்றும் வட்டம் – மதுரை மாவட்டம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள் – **விதி 17 (e)–ன் கீழ் தற்காலிகப் பணிநீக்கம் செய்தல்** – தொடர்பாக.

------

பார்வைக் குறிப்பின்படி திரு. சோ. மXXXXXXXX, அலுவலக உதவியாளரின் செயல்முறை/பணி நெறிமுறை தவறிய கவனக்குறைவான (Negligence), தான்தோன்றித்தனமான மற்றும் அலட்சியப் போக்குடன் உயர் அலுவலரின் உத்தரவினை தொடர்ந்து உதாசீனப்படுத்திய நடவடிக்கைகளுக்காக அன்னார் மீது தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி துறைரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் குற்றச்சாட்டுக்களின் கடுமைத் தன்மை கருதியும், நிர்வாக நலன் கருதியும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (e)–ன் கீழ் 10.04.2022 தேதி முதல் தற்காலிகப் பணி நீக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

தற்காலிகப் பணி நீக்க காலத்தில் மதுரை நகரையே தலைமையிடமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று திரு. சோ. மXXXXXXXX, அலுவலக உதவியாளருக்கு

உத்தரவிடப்படுகிறது. தற்காலிகப் பணி நீக்க காலத்திற்கு உண்டான பிழைப்பூதியத்தை உரிய விதிமுறைகளின்படி பெற்றுக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது.

வட்டாட்சியர்

**பெறுநர் :**

1. திரு. சோ. மXXXXXXXX (பதிவஞ்சல் மூலம்)
   அலுவலக உதவியாளர் (த.ப.நீ.),
   எண்22/7, திருச்சி மெயின் ரோாடு,
   மேலூர் நகர் மற்றும் வட்டம்,
   மதுரை மாவட்டம்.
   **நகல் பணிந்தனுப்பப்படுகிறது.**
2. வருவாய் கோட்டாட்சியர், வருவாய்த்துறை, மேலூர்.
3. மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை.
4. மிகை

[ மாதிரி படிவம் ]

## தற்காலிகப் பணி நீக்க ஆணை – II

**தஞ்சாவூர், இந்து சமய அறநிலையத்துறை, இணை ஆணையரின்**
**செயல்முறை நடவடிக்கைகள்**

பிறப்பிப்பவர் : திரு. மு. தேXXXXXXXX
இணை ஆணையர்.

செ.மு.ந.க. எண் 3920/2022/ஆ2 நாள்: 05.02.2022

பொருள் : பணிப்பிரிவு – திரு. வே. சாXXXXX – செயல் அலுவலர் – நிலை 2 – முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் – விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள் – **விதி 17 (e)–ன் கீழ் தற்காலிகப் பணிநீக்கம் செய்தல்** – தொடர்பாக.

பார்வை : தஞ்சாவூர், இந்து சமய அறநிலையத்துறை, இணை ஆணையரின் குற்றக் குறிப்பாணை எண்.3920/2022/ஆ2 நாள் : 02.02.2022.

------

பார்வைக் குறிப்பின்படி திரு. வே. சாXXXXXXXX, நிலை–2, செயல் அலுவலரின் மீது தமிழ்நாடு அரசுப்பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்கு முறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் 6 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. குற்றச்சாட்டுக்களின் கடுமைத் தன்மை கருதி, மேற்படி ஒழுங்கு நடவடிக்கை மீதான விசாரணை நிலுவையில் இருக்க துறையின் நிர்வாக நலன் கருதி தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (e)–ன் கீழ் 05.02.2022 – தேதி முதல் தற்காலிகப் பணி நீக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

தற்காலிகப் பணி நீக்க அதிகாரத்தில் புதுக்கோட்டை நகரையே தலைமையிடமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கப்படுகிறது.தற்காலிகப் பணிநீக்கத்திற்கு உண்டான பிழைப்பூதியத்தை உரிய விதிமுறைகளின்படி பெற்றுக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது.

இணை ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.

**பெறுநர் :**

1. திரு. வே. சாXXXXXXXX
செயல் அலுவலர் நிலை – 2
அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில்,
விராலிமலை நகர் மற்றும் வட்டம்
புதுக்கோட்டை மாவட்டம்

**நகல் :**

2. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை.
3. ஆய்வர், இந்து சமய அறநிலையத்துறை, குளத்தூர்.
(இந்த ஆணை நகலினை திரு.வே. சாXXXXXXXX, நிலை–2 செயல் அலுவலருக்கு சார்வு செய்து நாளுடன் கூடிய சான்றினைப் பெற்று அனுப்பக் கேட்டுக் கொள்ளப்படுகிறது)

**நகல் பணிந்தனுப்பப்படுகிறது.**

4. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.
5. மிகை

[ மாதிரி படிவம் ]

## SUSPENSION ORDER - III

### Proceedings of the Pudukkottai District Collector, Pudukkottai

Present: Thiru. Dr. Rxxxxxxxxxxxx, I.A.S.
District Collector

Pro. Rc. No.5012/2023 A3 Dated: 05/05/2023

Sub : Establishment - Thiru. R. Saxxxxxxxx – Tahsildar – Office of the Tahsildar, Aranthangi – Pudukkotttai District –Tamil Nadu Civil Service (Discipline & Appeal) Rules Rule 17 (e) – **Placed under Suspension** – Orders issued

Ref : D.O. Letter No. 1275/2023/A5 Dated26.03.2023.

------------

Whereas on basis of above ref. letters and certain charges relating to Continuous Willful Disobedience, Arrogant Attitudes and Dereliction of Duties leveled against one Thiru. R. Saxxxxxxxx, Tahsildar, Office of the Tahsildar, Aranthangi, Pudukkottai District.

And whereas an enquiry into the charges framed against Thiru. R. Saxxxxxxxx, Tahsildar, is Contemplated.

And whereas in the circumstances of his continuance in office is seriously subverting the discipline in the present office and it is necessary in the public interest and administration of the Office of the Tahsildar, Thiru. R. Saxxxxxxxx, Tahsildar under suspension from service.

Now therefore under sub-rule (e) of the rule 17 of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules the said Thiru. R. Saxxxxxxxx,

Tahsildar, with immediate effect placed under suspension from service, until further order.

During the period of suspension, the said Thiru. R. Saxxxxxxxx, Tahsildar, will be paid subsistence allowance and dearness allowance as admissible under rule 53 (i) of the Fundamental Rules.

The Headquarters of the said Thiru. R. Saxxxxxxxx, Tahsildar, during the period of suspension shall be Pudukkottai and he shall not leave headquarters without obtaining prior permission of the authority concerned.

District Collector

To.

1. Thiru. R. Saxxxxxxxx,
   Tahsildar,
   Office of the Tahsildar,
   Aranthangi,
   Pudukkottai District.
2. Copy to the Revenue Divisional Office, Aranthangi, Pudukkottai District.
   (Copy in duplicate for service and return of the served copy)
3. Copy to the Office of the Tahsildar, Aranthangi, Pudukkottai District.
4. Copy to Personal Assistant (General), Office of the District Collector, Pudukkottai.
4. Notice Board, this office.
5. Extra.

[ மாதிரி படிவம் ]

## தற்காலிகப் பணி நீக்க ஆணை — அறிக்கை சமர்ப்பித்தல்

**இந்து சமய அறநிலையத்துறை**

அனுப்புநர்
திரு. மு. தேXXXXXXXX, எம்.ஏ., பி.எல்.,
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.

பெறுநர்
ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை.

ந.க. எண். 3920/2022/ஆ2 நாள் : 05.02.2022

அய்யா,

பொருள் : பணிப்பிரிவு – திரு. வே. சாXXXXXX – செயல் அலுவலர் – நிலை 2 – முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் – விராலிமலை நகர் மற்றும் வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள் **விதி 17 (b)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, விதி 17 (e)–ன் கீழ் தற்காலிகப் பணிநீக்கம் செய்தல் –** அறிக்கை சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை : இணை ஆணையர், தஞ்சாவூர். குற்றக் குறிப்பாணை எண்.3920/2022/ஆ2 நாள் : 02.02.2022

-----

பார்வையில் காணும் குறிப்புகளின்படி புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் நிலை–2 செயல் அலுவலராகப் பணிபுரியும் திரு. வே. சாXXXXXXXX மீது நிர்வாக சீர்கேடுகள்

காரணமாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, விதி 17 (e)–ன் கீழ் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. குற்றக் குறிப்பாணையின் நகல் தக்க மேல் நடவடிக்கைகளுக்காக இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.

**நகல் :**

1. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை.
2. ஆய்வர், இந்து சமய அறநிலையத்துறை, குளத்தூர்.

[ மாதிரி படிவம் ]

## தற்காலிக பணி நீக்க காலத்திற்கு பிழைப்பூதியம் பெற்று வழங்க வேண்டுதல்

நாள்: 15.05.2022

பெறுநர்:
வருவாய் வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மேலூர் நகர் மற்றும் வட்டம்,
மதுரை மாவட்டம்.

அய்யா,

பொருள் : பிழைப்பூதியம் – தற்காலிக பணிநீக்க காலத்திற்கு பிழைப்பூதியம் – ஏப்ரல் 2022 மாதத்திற்கான **பிழைப்பூதியம் பெற்று வழங்க வேண்டுதல்** – தொடர்பாக.

பார்வை : வருவாய் வட்டாட்சியர், மேலூர். செ.மு.ந.க.எண்.8244/2022/பி2 நாள் : 10.04.2022.

-----

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் மற்றும் நகரில் உள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த போது பார்வையில் காணும் வருவாய் வட்டாட்சியர் உத்தரவின்படி தற்காலிக பணி நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டு 10.04.2022 தேதி முதல் தற்காலிகப் பணி நீக்கத்தில் இருந்து வருகிறேன்.

எனவே, தற்காலிக பணி நீக்க காலத்தில் உத்திரவில் குறிப்பிட்டுள்ளவாறு தலைமையிடத்தில் வசித்து வரும் எனக்கு ஏப்ரல் மாதத்திற்கான பிழைப்பூதியத் தொகையினை விதிகளின்படி பெற்று வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் நான் தலைமையிடமான மதுரை மாவட்டத்தில் கீழ்காணும் முகவரியில் வசித்து வருகிறேன் எனவும் பணி நீக்க காலத்தில் நான் வேறு எங்கும் அரசு மற்றும் அரசு

சார்ந்த துறைகளிலோ, தனியார் நிறுவனங்களிலோ பணிபுரியவில்லை எனவும் சான்று அளிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
சோ. முXXXXXXXX

அலுவலக உதவியாளர் (த.ப.நீ.)

**இணைப்பு : மாற்றுப்பணி இல்லா சான்று**

**தற்போதைய முகவரி**
சோ. முXXXXXXXX
த/பெ. சோXXXXX
எண்.332/1, சிவகங்கை மெயின் ரோாடு,
சாத்தமங்கலம்,
மதுரை – 625 112.

**நகல் பணிந்தனுப்பப்படுகிறது.**
வருவாய் கோட்டாட்சியர், வருவாய்த்துறை, மேலூர்.

[ மாதிரி படிவம் ]

## மாற்றுப் பணியில்லாச் சான்று

**மாற்றுப் பணியில்லாச் சான்று**

10.04.2022 முதல் 30.04.2022 வரை

பெயர் : சோ. முXXXXXXXX

பிரிவு : மேலூர்.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் மற்றும் நகரில் உள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த போது, மேலூர், வருவாய் வட்டாட்சியரால் செ.மு.ந.க. எண். 8244/2022/பி2, நாள்: 10.4.2022 உத்தரவின்படி 10.04.2022 பிற்பகல் முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளேன். தற்போது மேலூர், வருவாய் வட்டாட்சியர் உத்தரவின்படி, தலைமையிடத்தில் வசித்து வருவதால் எனக்கு ஏப்ரல் 2022 மாதத்திற்கான பிழைப்பூதியத்தை பெற்று தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் 10.04.2022 முதல் 30.04.2022 முடிய உள்ள காலத்திற்கு என்னால் வேறு வருவாய் வரத்தக்க வகையில் மாற்றுப் பணி ஏதும் பார்க்கவில்லை எனவும், வேறு வருவாய் எதுவும் ஈட்டப் பெறவில்லை எனவும் சான்றளிக்கிறேன்.

சோ. முXXXXXXXX

அலுவலக உதவியாளர் (த.ப.நீ.)

[ மாதிரி படிவம் ]

## தற்காலிக பணி நீக்க காலத்திற்கு பிழைப்பூதியம் (6 மாதம் முடிவடைந்த நிலையில்)

அனுப்புநர்:
க. நெXXXXXX,
சார்பதிவாளர் (த.ப.நீ.)
11/2, பிருந்தாவன் காலனி,
செங்கல்பட்டு.

பெறுநர்
மாவட்ட பதிவாளர் அவர்கள்,
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
செங்கல்பட்டு.

நாள்: 05.11.2020

அய்யா,

பொருள்: பிழைப்பூதியம் – தற்காலிக பணி நீக்க காலத்திற்கு பிழைப்பூதியம் – தற்போது **6 மாதம் முடிவடைந்த நிலையில் விதிகளின்படி 75 விழுக்காடோ அல்லது முழுமையாகவோ பெற்று வழங்க வேண்டுதல்**– தொடர்பாக.

பார்வை: துணை பதிவுத்துறை தலைவர், செங்கல்பட்டு செ.மு.ந.க. எண்.2122/2020 அ5 நாள்: 28.04.2020.

-----

செங்கல்பட்டு மாவட்டம், வட்டம், மற்றும் நகரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராகப் பணிபுரிந்த போது பார்வையில் காணும் குறிப்பின்படி தற்காலிக பணி நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டு 29.04.2020 தேதி முதல் பிழைப்பூதியம் பெற்று வருகிறேன்.

எனவே, தற்காலிக பணி நீக்க காலத்தில் உத்திரவில் குறிப்பிட்டுள்ளவாறு தலைமையிடத்தில் வசித்து வரும் எனக்கு, தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு தற்போது 6 மாதம் முடிவடைந்த நிலையில் விதிகளின்படி பிழைப்பூதியத் தொகையினை

75 விழுக்காடோ அல்லது முழுமையாகவோ பெற்றுத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பிழைப்பூதியம் 31.7.2020 வரை பெறப்பட்டுள்ளது. 01.08.2020 முதல் 30.9.2020 முடிய 2 மாதத்திற்கு பிழைப்பூதியம் பெற்று வழங்க வேண்டி விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது எனக்கு 01.10.2020 முதல் 31.10.2020 வரை 75 விழுக்காடோ அல்லது முழுமையாகவோ பிழைப்பூதியம் பெற்று வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நான் தலைமையிடமான செங்கல்பட்டில் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன் எனவும் பணி நீக்க காலத்தில் நான் வேறு எங்கும் அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளிலோ தனியார் நிறுவனங்களிலோ பணிபுரியவில்லை என்பதற்கான சான்றும் இத்துடன் இணைத்து சமர்பித்துள்ளேன் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

க. நெXXXXXX
சார் பதிவாளர் (த.ப.நீ)

**இணைப்பு :** மாற்றுப்பணி இல்லா சான்று

[ மாதிரி படிவம் ]

## மாற்றுப் பணியில்லாச் சான்று

**மாற்றுப் பணியில்லாச் சான்று**
**01.10.2020** முதல் **31.10.2020** வரை

சார்பதிவாளர் பெயர் : க.நெXXXX
பிரிவு : செங்கல்பட்டு.

செங்கல்பட்டு மாவட்டம், வட்டம், மற்றும் நகரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராகப் பணி புரிந்த போது, செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு காவல் துறையினரால் **28.04.2020** அன்று கைது செய்யப்பட்டதால் செங்கல்பட்டு, மாவட்ட பதிவாளர் செ.மு.ந.க.எண். **2122/2020/**அ**5** நாள்:**28.04.2020** உத்தரவின்படி **28.04.2020** பிற்பகல் முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளேன். மேலும் செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு **28.04.2020** இரவு முதல் **18.05.2020** முடிய வேலூர் மத்திய சிறையில் இருந்துள்ளேன். அதன் பிறகு செங்கல்பட்டு.தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்ற உத்தரவு Crl.M.P.No.2226/2020 in Cr.No.05/2020 நாள் **19.5.2020**–ன் நிபந்தனை ஜாமீனில் செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தில் **19.05.2020** முதல் தினமும் காலை **10.00** மணி மற்றும் மாலை **5.00** மணிக்கு ஆஜராகி கையொப்பமிட்டு வந்துள்ளேன். தற்போது செங்கல்பட்டு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்ற உத்தரவு Crl.M.P.No.4232/2020 in Cr.No.05/2020 நாள் **15.09.2020**–ன்படி கையொப்பம் இடுவதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

தற்போது செங்கல்பட்டு மாவட்ட பதிவாளர் உத்தரவின்படி தலைமையிடத்தில் வசித்து வருவதால் எனக்கு பிழைப்பூதியத்தை பெற்று தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் **01.10.20210** முதல் **31.10.2020** முடிய உள்ள காலத்திற்கு என்னால் வேறு மாற்றுப்பணி ஏதும் பார்க்கவில்லை எனவும், வேறு வருவாய் எதுவும் ஈட்டப் பெறவில்லை எனவும் சான்றளிக்கிறேன்.

க. நெXXXX
சார்பதிவாளர் (த.ப.நீ)

[ மாதிரி படிவம் ]

# தற்காலிகப் பணி நீக்கம் விலக்கிக் கொள்ளுதல்

**சென்னை—16, பதிவுத்துறை தலைவரின் செயல்முறைகள்**

முன்னிலை : திரு.நீ. விXXXXXXXX., இ.ஆ.ப
பதிவுத்துறை தலைவர்

**செ.மு.ந.க.எண்.25100/2021/பி2 நாள்: 06.05.2021**

பொருள்: பணிப்பிரிவு – பதிவுத்துறை – ஒழுங்கு நடவடிக்கை திரு. க. நெXXXX — சார்பதிவாளர் (த.ப.நீ.) – முன்னாள் சார்பதிவாளர் (த.ப.நீ.), சார்பதிவாளர் அலுவலகம் – செங்கல்பட்டு நகர் மற்றும் மாவட்டம் – தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு முறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)—ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை – **தற்காலிகப் பணி நீக்கம் விலக்கிக் கொள்ளுதல்** – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. மாவட்ட பதிவாளர், செங்கல்பட்டு. செ.மு.ந.க. எண்.2122/2020/அ5 நாள்: 28.04.2020
2. மாவட்ட பதிவாளர், செங்கல்பட்டு கு.கு.ந.க. எண்.6994/2020/அ2 நாள்: 19.10.2020

------

திரு. க. நெXXXX, சார்பதிவாளர் (த.ப.நீ.) செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் நகர் சார்பதிவாளர் அலுவலகத்தில் போலி ஆவணங்களைக் கொண்டு பத்திரப் பதிவு செய்ய திரு. மனோகர் என்பவரிடம் கையூட்டு பெற்றதால் லஞ்ச ஒழிப்புத் துறையினரால் கைது செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து செங்கல்பட்டு, மாவட்ட பதிவாளரால் பார்வை குறிப்பு 1—ல் தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (e)—ன் கீழ் தற்காலிக பணி நீக்கம் செய்தும், பார்வை குறிப்பு 2—ன் மூலம் தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (b)—ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தியும் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது.

2. இந்நிலையில் அன்னார் மீதான விசாரணை நிலுவையில் இருக்க தற்காலிக பணி நீக்கத்தை விலக்கிக் கொண்டு உத்தரவிடப்படுகிறது. அன்னாருக்கு பணி நியமனம் வழங்குவது தொடர்பாக தனியே உத்தரவு பிறப்பிக்கப்படும்.

(ஒம்.) நீ. விXXXXXXXX
பதிவுத்துறை தலைவர்

**பெறுநர் :**

1. க. நெXXXXXX
   சார்பதிவாளர் (த.ப.நீ.)
   11/2, பிருந்தாவன் காலனி,
   செங்கல்பட்டு நகர் மற்றும் மாவட்டம்.

   **நகல் :**

2. துணை பதிவுத்துறை தலைவர், மண்டல பதிவுத்துறை அலுவலகம், செங்கல்பட்டு.
3. மாவட்ட பதிவாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், செங்கல்பட்டு.
4. மிகை.

[ மாதிரி படிவம் ]

## தற்காலிகப் பணி நீக்கம் விலக்கிக் கொள்ளுதல்

**மதுரை, மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள்**

முன்னிலை : திரு. நா. குXXXXXXXX., இ.ஆ.ப
மாவட்ட ஆட்சித் தலைவர்

செ.மு.ந.க. எண்.23625/2022/பி2 நாள்: 23.12.2022

பொருள்: பணிப்பிரிவு – வருவாய் துறை – ஒழுங்கு நடவடிக்கை திரு. சோ. முXXXXXXXX – முன்னாள் அலுவலக உதவியாளர் (த.ப.நீ.), வட்டாட்சியர் அலுவலகம் – மேலூர் நகர் மற்றும் வட்டம் – மதுரை மாவட்டம் – தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (a)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது – **17 (e)–ன் கீழான தற்காலிகப் பணி நீக்கம் விலக்கிக் கொள்ளுதல்** – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:

1. வட்டாட்சியர், மேலூர். செ.மு.ந.க.எண்.8244/2022/பி2 நாள் : 10.04.2022
2. வட்டாட்சியர், மேலூர், கு.கு.ந.க.எண்.8244/2022/பி2 நாள் : 13.04.2022
3. திரு. சோ. முXXXXXXXX, அலுவலக உதவியாளர் கடித நாள் : 05.05.2022 மற்றும் 09.07.2022.
4. தற்காலிக பணி நீக்க சீராய்வுக் கூட்டம், நாள்: 20.12.2022

-----

திரு. சோ. முXXXXXXXX, அலுவலக உதவியாளர் (த.ப.நீ.), மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் மற்றும் நகர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்த போது தனது பணியில் கவனமின்றி செயல்படுதல் மற்றும் அலட்சியப் போக்குடன் உயர் அலுவலர்களது உத்தரவுகளைத் தொடர்ந்து உதாசீனப்படுத்துதல் உள்ளிட்ட குற்றங்களுக்காக

பார்வை குறிப்பு 1–ல் காணும் உத்தரவின்படி தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (e)–ன் கீழ் தற்காலிகப் பணிநீக்கம் செய்தும், பார்வை குறிப்பு 2–ன் மூலம் தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (a)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தியும் ஒழுங்கு நடவடிக்கைத் தொடரப்பட்டது.

இந்நிலையில் பார்வைக் குறிப்பு 4–ல் காணும் தற்காலிக பணி நீக்க சீராய்வுக் குழு கூட்டத்தின் முடிவின்படி அன்னார் மீதான விசாரணை நிலுவையில் இருக்க தற்காலிக பணிநீக்கத்தை விலக்கிக் கொண்டு மீண்டும் பணி நியமனம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (a)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் நிலுவையில் இருக்க, விதி 17 (e)–ன் கீழ் செய்யப்பட்ட தற்காலிகப் பணிநீக்கம் விலக்கிக் கொள்ளப்படுகிறது என உத்தரவிடப்படுகிறது. அன்னாருக்கு பணி நியமனம் வழங்குவது தொடர்பாக தனியே உத்தரவு பிறப்பிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நா. குXXXXXXXX
மாவட்ட ஆட்சித் தலைவர்

பெறுநர்:

1. சோ. முXXXXXXXX
   த/பெ.சோXXXXX
   எண்.332/1, சிவகங்கை மெயின் ரோாடு,
   சாத்தமங்கலம்,
   மதுரை – 625 112.
2. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மேலூர்.
3. வருவாய் கோட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர்.
4. மிகை.

[ மாதிரி படிவம் ]

## தற்காலிகப் பணி நீக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டபின் பணி நியமனம்

**மதுரை, மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள்**

முன்னிலை : திரு. நா. குXXXXXXXX., இ.ஆ.ப
மாவட்ட ஆட்சித் தலைவர்

செ.மு.ந.க.எண்.23625/2022/பி2 நாள்: 23.12.2022

பொருள்: பணிப்பிரிவு – வருவாய் துறை – ஒழுங்கு நடவடிக்கை – தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (a)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை – திரு. சோ. முXXXXXXXX, அலுவலக உதவியாளர் (த.ப.நீ) – தற்காலிகப் பணிநீக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது – பணிமாற்றம் வழங்க விருப்பம் தெரிவித்துள்ளது – **தற்காலிகப் பணி நீக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டபின் பணி நியமனம்** – மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் வட்டாட்சியர் அலுவலகத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பணிநியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. வட்டாட்சியர், மேலூர், செ.மு.ந.க.எண்.8244/2022/பி2, நாள்: 10.04.2022.
2. வட்டாட்சியர், மேலூர், கு.கு.ந.க..எண்.8244/2022/பி2, நாள்: 13.04.2022.
3. திரு. சோ. முXXXXXXXX, அலுவலக உதவியாளர் கடித நாள்: 05.05.2022 மற்றும் 09.07.2022.
4. தற்காலிக பணி நீக்க சீராய்வுக் கூட்டம், நாள்: 20.12.2022
5. இவ்வலுவலக செ.மு..ந.க.எண்.23626/2022/பி2 நாள்: 23.12.2022

-----

திரு. சோ. முXXXXXXXX, அலுவலக உதவியாளர் (த.ப.நீ), மதுரை மாவட்டம், மேலூர் நகர் மற்றும் வட்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்த போது தனது பணியில் கவனமின்றி செயல்படுதல் மற்றும் அலட்சியப் போக்குடன் உயர் அலுவலர்களது உத்தரவுகளைத் தொடர்ந்து உதாசீனப்படுத்துதல் உள்ளிட்ட குற்றங்களுக்காக பார்வை குறிப்பு 1–ல் காணும் உத்தரவின்படி தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை

மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (e)–ன் கீழ் தற்காலிகப் பணிநீக்கம் செய்தும், பார்வை குறிப்பு 2–ன் மூலம் தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (a)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தியும் ஒழுங்கு நடவடிக்கைத் தொடரப்பட்டது.

திரு. சோ. முXXXXXXXX, அலுவலக உதவியாளரின் தற்காலிகப் பணிநீக்கம் தொடர்பாக பார்வை 4–ல் காணும் தற்காலிகப் பணிநீக்க இனங்கள் தொடர்பான சீராய்வு கூட்டத்தில் மேற்கண்ட அலுவலக உதவியாளரின் தற்காலிகப் பணிநீக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டு பணிமாற்றம் மூலம் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பணி நியமனம் செய்ய பரிசீலிக்கலாம் என முடிவு செய்யப்பட்டது.

திரு. சோ. முXXXXXXXX, அலுவலக உதவியாளரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, அன்னாரின் தற்காலிகப் பணிநீக்கம் பார்வைக் குறிப்பு 4–ன்படி விலக்கிக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து திரு. சோ. முXXXXXXXX, அலுவலக உதவியாளரை பணிமாற்றம் மூலம் திருப்பரங்குன்றம், வட்டாட்சியர் அலுவலகத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பணி நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது.

திரு. சோ. முXXXXXXXX, அலுவலக உதவியாளர் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ள பணியிடத்தில் உடன் பணியில் சேர ஆணையிடப்படுகிறது. அன்னார் பணியில் சேர்ந்த விவரத்தினை உடன் தெரிவிக்குமாறு தொடர்புடைய சார்நிலை அலுவலரைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒம்). திரு. நா. குXXXXXXXX
மாவட்ட ஆட்சித் தலைவர்

/உண்மை நகல் உத்தரவுப்படி/

பெறுநர்: நேர்முக உதவியாளர் (பொது)

1. சோ. முXXXXXXXX
   த/பெ.சோXXXXX
   எண்.332/1, சிவகங்கை மெயின் ரோாடு,
   சாத்தமங்கலம், மதுரை – 625 112.
2. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மேலூர் / திருப்பரங்குன்றம்.
3. வருவாய் கோட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர் / திருமங்கலம்.
4. பி 2 பிரிவு, இவ்வலுவலகம் (எண்ணிடல் மூலம்)
5. மிகை

# V

# மேல்முறையீடு மற்றும் பிற தீர்வழிகள் சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

# V

## மேல்முறையீடு மற்றும் பிற தீர்வழிகள் சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை

(நடைமுறை பயன்பாட்டு மாதிரி படிவங்களுடன்)

**மேல்முறையீடு** (Appeal) : விதி 27–ன்படி, உத்தரவு தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் மேல் முறையீடு செய்யப்பட வேண்டும். ஒழுங்கு நடவடிக்கை எடுத்த அதிகாரியின் மேலதிகாரிக்குத்தான் மேல்முறையீடு அனுப்ப வேண்டும். மேல் முறையீடு குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியரின் பெயரிலேயே இருக்க வேண்டும். முறையற்ற அல்லது மரியாதை இல்லாத வாக்கியங்கள் பயன்படுத்தப்படக் கூடாது (விதி 25 மற்றும் 26) முறை வழி அலுவலர் மூலம் தான் அனுப்ப வேண்டும் (விதி 26)

**சீராய்வு (அ) திருத்தி அமைத்தல்** (Revision) : விதி 36–ன்படி, மேல் முறையீட்டு அலுவலர், துறைத்தலைவர், அரசு ஆகியோர் தானாகவே உரிய ஆவணங்களைப் பெற்று ஆய்வு செய்து தண்டனையை திருத்தி அமைக்கும் அதிகாரம் உண்டு. (காலக்கெடு தண்டணை வழங்கப்பட்ட 6 மாதத்திற்குள்)

**மறு ஆய்வு** (Review) : விதி 37–ன்படி மாநில அரசானது எந்நேரத்திலும் தாமாகவோ அல்லது வேறுவகையில், மறு ஆய்வின் கீழ் உள்ள உத்தரவு பிறப்பிக்கும் நேரத்தில் கிடைக்காத (அ) முன்னிடப்படாத புதிய சான்றுப் பொருள் (அ) சாட்சியம் மற்றும் வழக்கின் போக்கை திசை மாற்றக் கூடிய தன்மையிலானது அவர்தம் கவனத்திற்கு வந்திடும்போது, இவ்விதிகளின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மறு ஆய்வு செய்திடலாம்

**நீதிமன்ற தீர்வழிகள் :** மேற்கண்ட இனங்களில் அல்லது நடைமுறைகளில் குறையுற்ற அல்லது திருப்தி இல்லாத நிலையில் குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர், **மாண்பமை உயர்நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தில்** மனு செய்து தகுந்த மற்றும் இன்ன பிற தீர்வழிகளை பெறலாம்.

**தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்துடன் ஆலோசனை (தேவைப்படின்)**

முக்கிய ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் அரசு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசனையைக் கோரும். தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளின்படி நடைமுறைகள் அனைத்தும் முழுமையாக பின்பற்றப்பட்டு உள்ளனவா என தேர்வாணையம் பரிசீலிக்கும். அதன் மீது தனது ஆலோசனையை வழங்கும். தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசனைக்குப் பிறகே அரசு ஆணை பிறப்பிக்கும்.

அரசே தண்டனை வழங்கும் நேர்வுகளில் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து பெறப்படும் மறு ஆய்வு மனுவின் மீதும் அரசு தேர்வாணையத்தின் கருத்தினைப் பெற்று அதன்பிறகு ஆணை பிறப்பிக்கும்.

[ மாதிரி படிவம் ]

## மேல்முறையீட்டு மனு சமர்ப்பித்தல்

அனுப்புநர்
திரு.வே.சா XXXXXXXX,
செயல் அலுவலர்,
அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில்,
பாபநாசம், அம்பாசமுத்திரம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்

பெறுநர் :
அரசு செயலாளர் அவர்கள்,
சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

**வழி :**
ஆணையர் அவர்கள்,
இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம்,
சென்னை–600 034

---

நாள் : 10.03.2023

அய்யா,

பொருள் : பணிப்பிரிவு – மேல் முறையீட்டு மனு – தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 8 (iv)–ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை, சென்னை, செ.மு.ந.க. எண்.24725/2022/எல்2 நாள்:21.02.2023 உத்தரவு – திரு.வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் – செயல் அலுவலர், அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில், பாபநாசம், அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம் – **மேல்முறையீட்டு மனு சமர்ப்பித்தல்** – தொடர்பாக.

பார்வை :

1. இணை ஆணையர், தஞ்சாவூர், குற்ற குறிப்பாணை எண்: 3920/2022/ஆ2 நாள்: 02.02.2022
2. இணை ஆணையர்/செயல் அலுவலர்/விசாரணை அலுவலர்

அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், ந.க. எண்:2588/2022/ஆ1 நாள்: 21.07.2022.

3. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34. செ.மு.ந.க. எண் 24725/2022/எல்2 நாள்: 21.02.2023
4. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34 செ.மு.ந.க. எண் 24725/2022/எல்2 நாள்: 28.02.2023.

-------

நான் தற்பொழுது பார்வை 4–ல் காணும் உத்தரவின்படி திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாபநாசம் அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயிலில் நிலை–3, செயல் அலுவலராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 05.03.2019 முதல் 09.07.2021 முடிய உள்ள காலத்தில் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் செயல் அலுவலராகப் பணிபுரிந்த போது ஏற்பட்டதாகக் கருதப்பட்ட நிர்வாகக் குறைபாடுகள் தொடர்பாக பார்வை 1–ல் காணும் குறிப்பின் மூலம் என் மீது சுமத்தப்பட்ட 6 (ஆறு) குற்றச்சாட்டுக்களுக்கு பார்வை 2–ல் காணும் குறிப்பின் மூலம் விசாரணை அலுவலரால் ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் பார்வை 3–ல் காணும் குறிப்பின் மூலம் ஆணையர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ள இறுதி உத்தரவின் மீது தமிழ்நாடு குடிமைப்பணி ஒழுங்குமுறை மற்றும் மேல் முறையீடு விதி 19–ன் படி கீழ்க்காணும் காரணங்கள் அடிப்படையில் இந்த மேல்முறையீட்டு மனு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**மேல்முறையீட்டு காரணிகள்**

- ஆணையரின் 21.02.2023 நாளிட்ட இறுதி உத்தரவு தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளுக்கு முரணாக உள்ளது.

- தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளை சரியாகவும், முறையாகவும் பின்பற்றாமல் ஆணையரால் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அது சட்டத்தின் முன்பு நிற்கத்தக்கது அல்ல.

- தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 ( b)–ன்கீழ் ஒருவருக்கு அதிகபட்ச தண்டனைகளில் ஒன்றினை வழங்க உத்தேசிக்கும் போது அது குறித்து அவருக்கு முன் அறிவிப்பு அனுப்பப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவரின் விளக்கம் கேட்கப்பட வேண்டும் என விதி 17(b)–ல் உள்ளது.

"If the competent authority is of the opinion that any of the Major Penalty should be imposed on the employee. Then the authority will have to arrive at provisional conclusion in regard to the penalty to be imposed for this delinquent will be supplied with the findings of the enquiry officers with instruction on the finding of enquiry officer"

இந்த நிகழ்வில் விசாரணை அலுவலரின் அறிக்கை மீது என்னிடம் மேல் விளக்கம் மட்டுமே கேட்கப்பட்டது. ஆணையரால் வழங்க உத்தேசிக்கப்பட்ட தண்டனை குறித்து அந்த குறிப்பில் எதுவும் குறிப்பிடவில்லை. எனவே ஆணையரின் இறுதி உத்தரவு தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளுக்கு முரணானதாக உள்ளது.

- என் மீது தஞ்சாவூர், இணை ஆணையரால் சுமத்தப்பட்ட 6 (ஆறு) குற்றச்சாட்டுகளுக்கும், விசாரணை அலுவலர் முன்பாக 06.05.2022 அன்று என்னால் கொடுக்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலிக்காமல் விசாரணை அலுவலரது அறிக்கையை மட்டும் ஆதாரமாகக் கொண்டு ஆணையரால் இறுதி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

- விசாரணை அலுவலர் அறிக்கையின் பேரில் ஆணையர் அவர்களால் என்னிடம் வாய்மொழி விசாரணை அல்லது நேரடியாக கேட்டறியப்படுதல் (நேரடி விசாரணை) ஆகிய எவ்வித விதிமுறைகளும் பின்பற்றப்படவில்லை.

- தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் பிறப்பிக்கப்படும் இறுதி உத்தரவு ஒரு தெளிவான காரணம் காட்டும் உத்தரவாக (Speaking Order) இருக்க வேண்டும் என்று விதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது, ஆனால் ஆணையரின் இறுதி உத்தரவு அவ்வாறு Speaking Order ஆக இல்லாமல் விசாரணை அலுவலரின் முடிவுகளை ஏற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்டு ஒரு சுருக்க (Summary) உத்தரவாக மட்டுமே உள்ளது. இது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளுக்கு முரணானது ஆகும் என்பதால் ஆணையரின் இறுதி உத்தரவினை நீக்கறவு செய்திட பணிந்து வேண்டுகிறேன்.

மேற்கண்ட காரணங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் வாரியாக கீழே தரப்பட்டுள்ள விளக்கங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் அடிப்படையில் பார்வை 3–ல்

காணும் குறிப்பின் மூலம் ஆணையரால் பிறப்பிக்கப்பட்டுள்ள இறுதி உத்தரவானது மறு பரிசீலனைக்கும், இரத்து செய்வதற்கும் தகுதியானது என பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

என்மீது சுமத்தப்பட்ட 6 குற்றச்சாட்டுகளில் 1 முதல் 4 வரை உள்ள குற்றச்சாட்டுகள் முழுமையாக நிரூபணமாகின்றன எனவும், 5 மற்றும் 6 ஆகிய குற்றச்சாட்டுகள் பகுதியாக நிரூபணமாகிறது எனவும் விசாரணை அலுவலர் தெரிவித்துள்ளார். மேற்கண்ட குற்றச்சாட்டுகள் தொடர்பான எனது மேல்முறையீட்டு விளக்கத்தினைக் கீழக்கண்டவாறு பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

**குற்றச்சாட்டு எண். 1—க்குரிய எனது மேல்முறையீட்டு விளக்கம்**

திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டிடம் மற்றும் மனைகளுக்கு திருக்கோயில் செயல் அலுவலரால் மட்டுமே நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. சட்டப்பிரிவு 34 (A)-ன்படி இணை ஆணையர், மாவட்டப் பதிவாளர், தக்கார், செயல் அலுவலர் ஆகியோர்களை உள்ளடக்கிய நியாய வாடகை நிர்ணயக்குழு மூலமாக நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது. அதனடிப்படையில் இக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இனத்திற்கு அரசாணைப்படி உரிய வழி முறைகள் பின்பற்றப்பட்டு நியாய வாடகை குழு மூலம் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி நியாய வாடகை தஞ்சாவூர், இணை ஆணையர் மூ.மு. எண் 1007/2020/ஆ3 நாள் 01.07.2020—ன்படி அங்கீகரிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது அரசாணையின்படி 01.07.2016 தேதி முதல் முன் தேதியிட்டு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு, அமுல்படுத்தப்பட்டு நாளது தேதி வரை நிலுவை ஏதுமின்றி வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு எனது பணிக்காலத்தில் ரூ. 2,15,000/— வாடகை நிலுவைத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதிக்கு சந்தை மதிப்பு அதிகமென எவ்வித ஆதாரமும் இன்றி யூகத்தின் அடிப்படையில் தெரிவித்து அதன் மூலம் எவ்வளவு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என குற்றச்சாட்டில் குறிப்பிடப்படாமலும், சமர்ப்பிக்கப்பட்டுள்ள சான்றாவணங்களையும் அளிக்கப்பட்ட விளக்கத்தினையும் முறையாக பரிசீலனை செய்யாமலும், குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என விசாரணை அலுவலர் முடிவு செய்திருப்பது எவ்விதத்திலும் நியாயமானதல்ல என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இக்குற்றச்சாட்டில் எந்த ஒரு இடத்திலும் குற்றம் சாட்டிய அலுவலர் முதல் விசாரணை

செய்த அலுவலர் மற்றும் இறுதி உத்தரவு பிறப்பித்த ஆணையர் வரை மேற்படி இடத்திற்கான சந்தை மதிப்பினை பெறாமல் இழப்பு என்று எந்த அளவீட்டினை வைத்து நிர்ணயம் செய்தார்கள் என்பது விளக்கப்படவில்லை. மாறாக தற்போது சந்தை மதிப்பு பெற்றாலும் புதிதாக நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்கு தடை ஏதும் அறநிலையத்துறை சட்டத்தில் இல்லை. எனவே அறுதியிட்டு கூறாமல் பொதுவான குற்றச்சாட்டாக காணப்படுவதால் இக்குற்றச்சாட்டானது ஒரு குற்றச்சாட்டு என்ற வரையறைக்குள்ளாகவே வருவதற்கு ஏற்புடையதல்ல என்பதால் இதனை நீக்கறவு செய்ய வேண்டுகிறேன்.

**குற்றச்சாட்டு எண். 2—க்குரிய எனது மேல்முறையீட்டு விளக்கம்**

குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாகம் அமைந்துள்ள காலிமனை இடத்திற்கு ஆணையர், சென்னை, ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017—ன் உத்தரவில் 01.07.1993 முதல் 28.02.2017 முடிய கணக்கீடு செய்யப்பட்ட கூடுதல் வாடகை நிலுவைத் தொகையில் வாடகைதாரர் ரூ.1,32,000/— மட்டுமே செலுத்தியுள்ளார் எனவும், உத்தரவு தேதியில் (15.09.2017) வாடகை பாக்கி ரூ.17,54,051.68/— எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாடகை நிலுவைத் தொகை ரூ. 17,54,051.68/— எனது பணிக்காலத்தில் ஏற்பட்டதல்ல. சுமார் 24 ஆண்டுகளாக சேர்ந்துள்ள வாடகை நிலுவையாகும். நான் இத்திருக்கோயிலில் 05.03.2017 முதல் 09.07.2019 முடிய (சுமார் 28 மாதங்கள்) மட்டுமே செயல் அலுவலராக பணிபுரிந்துள்ளேன். கேட்பு பதிவேட்டின் படி மேற்படி தொகை நிலுவையாக இருந்து வந்துள்ளது. வசூலாகாத தொகைக்கு வட்டியிழப்பு என குறிப்பிட்டு அதன் மூலம் நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளதாக குற்றச்சாட்டு சுமத்தியிருப்பது பொருத்தமற்றதாகும். மேலும் இக்குற்றச்சாட்டில் நிதியிழப்பு தொகை குறித்து எதுவும் குறிப்பிடாமல் யூகத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட வாடகை நிலுவைத் தொகை ரூ. 17,54,051.68/— ஐ செலுத்தக் கோரி வாடகைதாரருக்கு எனது பணிக்காலத்தில் 05.03.2020 நாளிட்ட பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு நகலை நான் சான்றாவணமாக விசாரணை அலுவலர் முன்பு சமர்ப்பித்த போதும், வாடகைதாரரிடம் பலமுறை நேரிலும், பணியாளர்கள் மூலமும் மேற்படி வாடகை நிலுவைத்தொகை செலுத்தக்கோரி நான் மேற்படி வாடகை நிலுவையை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்ட விபரத்தினை விளக்கமாக அளித்தபோதும், விசாரணை அலுவலர் அதனை முறையாக பரிசீலனை செய்யாமல் இக்குற்றச்சாட்டு நிரூபணம் ஆகின்றது என முடிவு செய்திருப்பதில் எவ்வித நியாயமும் இல்லை என பணிந்து தெரிவிக்கப்படுகிறது. மேலும் எனது பணிக்காலத்தில் மேற்கண்ட காலிமனை இடத்திற்கு

உரிய வாடகை நிலுவைத்தொகை ரூ.2,64,052/– என்னால் வசூல் செய்யப்பட்டுள்ளது. (இரசீது எண்: 11471/29.05.2019, 11489/07.08.2019, 12626/22.04.2021).மேலும் இக்குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள வாடகை நிலுவைத் தொகை ரூ. 14,90,000/– வசூல் செய்ய இயலாத காலக்கெடு முடிவடைவந்த தொகை அல்ல. மேற்படி தொகை ஆணையர் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னரே வாடகைதாரரால் திருக்கோயிலுக்கு முழுவதுமாக செலுத்தப்பட்டுள்ளதால் நிதியிழப்பு ஏதும் இல்லை. (இரசீது எண்: 18079/17.08.2021, 18523/20.10.2021, 18637/24.11.2021, 18648/30.01.2022, 19263/23.04.2022) எனவே இறுதி உத்தரவு வழங்கப்பட்ட 21.02.2023 தேதிக்கு முன்னரே திருக்கோயிலுக்கு நிதியிழப்பு எதுவும் இல்லாமலேயே என்னால் நிதியிழப்பு ஏற்பட்டதாக விசாரணை அலுவலர் தெரிவித்துள்ளதை ஆணையர் அப்படியே ஒப்புக்கொண்டுள்ளார் என்பது உண்மைக்கு மாறானதாக உள்ளது.

எனவே, இக்குற்றச்சாட்டில் தெரிவித்துள்ள நிதியிழப்பு திருக்கோயிலுக்கு ஏற்படவில்லை என்பதாலும் ஆணையரின் உத்தரவு உண்மை நிலையை ஆராயாமல் பிறப்பிக்கப்பட்டது என்பதாலும் அதனை ரத்து செய்ய வேண்டுகிறேன்.

**குற்றச்சாட்டு எண். 3—க்குரிய எனது மேல்முறையீட்டு விளக்கம்**

குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விராலிமலை நகர் சர்வே எண் 12/1—ல் உள்ள 9 ஏக்கர் 20 சென்ட் நிலம் திரு. சண்முகம் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்ட புன்செய் நிலமாகும். திருக்கோயில் கேட்பு வசூல் நிலுவைப் பதிவேட்டிலும் புன்செய் நிலம் என பதிவாகியுள்ளது. இந்நிலையில் மேற்படி குத்தகைதாரர் 1983 முதல் 2010 முடிய செலுத்த வேண்டிய குத்தகை பாக்கித் தொகை ரூ.10,800/—க்காக திருச்சி வருவாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண் பி.டி.150/2017—ல் 05.04.2019—ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் "தாவா நிலத்திற்குரிய குத்தகை பாக்கியினை 3 மாதத்திற்குள் மனுதாரரிடம் (செயல் அலுவலர்) செலுத்த உத்தரவிடப்படுகிறது, தவறினால் எதிர் மனுதாரரை (குத்தகைதாரர்) தாவா நிலத்தை விட்டு வெளியேற்ற உத்தரவிடப்படுகிறது. தாவா நிலத்தில் நியாய குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால் அதற்கு தனியே இந்த நீதிமன்றத்தில் மனு செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது."

முன்கண்ட உத்தரவின்படி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் மேற்படி குத்தகைதாரரிடம் இருந்து திருக்கோயிலுக்கு நிதியிழப்பு ஏதுமின்றி குத்தகை பாக்கி ரூ. 10,800/— என்னால் வசூல் செய்யப்பட்டது. (இரசீது எண் 11164 நாள்: 20.10.2019)

மேற்படி குத்தகைதாரரை தாவா நிலத்தில் இருந்து வெளியேற்றுவது அல்லது குத்தகை

உயர்வு செய்வது குறித்து வழக்கறிஞர் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததாலும், மேற்படி புன்செய் நிலத்தை மனைப்பகுதியாக மாற்றி திருக்கோயிலுக்கு அதிக வருமானம் வரப்பெறும் வகையில் மேற்படி குத்தகைதாரரை தாவா நிலத்திலிருந்து அதிக வருமானம் வரப்பெறும் வகையில் மேற்படி குத்தகைதாரரை தாவா நிலத்திலிருந்து வெளியேற்ற உயரதிகாரிகளை கலந்து நடவடிக்கை எடுக்க இருந்த காரணத்தினாலும், மேற்படி திருக்கோயிலுடன் இணைந்த திருக்கோயில்கள் நிர்வாகம், திருப்பணி வேலைகள், சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் நிறைந்த திருவிழாக்கள் மற்றும் கூடுதல் பணிச்சுமை காரணமாக மேற்படி நடவடிக்கை மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டுவிட்டதெனவும், புன்செய் நிலத்திற்கு வருவாய் நீதிமன்றம் மூலம் நியாய வாடகை நிர்ணயம் செய்ய இயலாது என்ற காரணத்தினால் மேற்படி இடத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படவில்லை என்ற விவரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குத்தகை பாக்கித் தொகை ரூ. 10,800/– முழுவதும் உரிய காலக் கெடுவிற்குள் வசூல் செய்யப்பட்டு விட்டதாலும், நாளது தேதி வரை ஆண்டு 1–க்கு ரூ. 400/– குத்தகை தொகை நிலுவையின்றி வசூல் செய்யப்பட்டு வருவதாலும், குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ளவாறு நிதியிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதால் ஆணையர் உத்தரவினை ரத்து செய்ய பணிந்து வேண்டுகிறேன்.

**குற்றச்சாட்டு எண். 4–க்குரிய எனது மேல்முறையீட்டு விளக்கம்**

நான் இத்திருக்கோயிலில் 05.03.2019 முதல் 09.07.2021 முடிய நிலை–2 செயல் அலுவலராகப் பணிபுரிந்துள்ளேன். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான, வடக்கு மாட வீதியில் வார்டு எண் 20, கதவு எண். 120–ல் உள்ள காலிமனையின் வாடகைதாரர் திரு. கந்தசாமி என்பவர் மேற்படி இடத்தில் கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி எனது பணிக்காலத்தில் விண்ணப்பம் ஏதும் வழங்கவில்லை எனவும், மேற்படி இடத்தில் எனது பணிக்காலத்தில் கட்டடம் ஏதும் கட்டப்படவில்லை எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி திருக்கோயிலில் எனக்கு பின்னர் செயல் அலுவலராகப் பணிபுரிந்த திருமதி. கே. மXXXXXXXX என்பவரால் 24.12.2021–ல் மேற்படி வாடகைதாரர் திரு. கந்தசாமி கட்டடம் கட்டிக் கொள்ள அனுமதி வேண்டி தஞ்சாவூர், இணை ஆணையருக்கு அனுப்பிய கடித நகல் சமர்ப்பிக்கப்படுகிறது. எனக்கு பின்னர் பணிபுரிந்த செயல் அலுவலர்கள் காலத்திலேயே வாடகைதாரர் திரு.கந்தசாமி என்பவரால் காலிமனையில் தனது சொந்த செலவில் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி 14.10.2021–ல் விண்ணப்பம் அளித்துள்ளதையும்,

அதன் பேரில் 20.12.2021–ல் தக்கார் தீர்மானம் இயற்றப்பட்டு புதுக்கோட்டை உதவிப் பொறியாளரால் ரூ.39,80,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து 24.12.2021–ல் நிர்வாக அனுமதி படிவம் மற்றும் இணைப்புகளுடன் தஞ்சாவூர், இணை ஆணையருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது

எனக்கு பின்னர் பணிபுரிந்த திரு. க. சேXXXXXXX மற்றும் திருமதி. கே. மXXXXXXXX ஆகியோரை விசாரணை அலுவலர் விசாரணை செய்து வாக்குமூலங்கள் பெற்றுள்ளார். மேற்படி விசாரணை மற்றும் வாக்குமூலங்களிலிருந்து மேற்படி காலிமனை இடத்தில் மேற்படி வாடகைதாரர் 9 கடைகள் கொண்ட இரண்டு அடுக்கு மாடி கட்டுவது தொடர்பான நடவடிக்கைகள் எனது காலத்திற்கு பின்னர் பணிபுரிந்த செயல் அலுவலர்களால் தான் எடுக்கப்பட்டுள்ளது என இக்குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை அலுவலரின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணை அலுவலர் இவ்வாறு தெரிவித்து விட்டு, திருக்கோயில் பணியாளர் ஒருவரின் வாக்குமூலத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட சான்றாவணங்களை முறையாக பரிசீலனை செய்யாமல் எனது பணிக்காலத்தில் தான் மேற்படி கட்டிடம் கட்டப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் எந்த ஆதாரமும் இல்லாமல் இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என்று விசாரணை அலுவலர் தெரிவித்துள்ளதை அப்படியே ஏற்று ஆணையர் அவர்கள் இறுதி உத்தரவு பிறப்பித்துள்ளார். இக்குற்றச்சாட்டு சம்பந்தமாக விசாரணை அலுவலரோ அல்லது ஆணையரோ ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யவில்லை என்பதையே இம்முடிவு காட்டுகிறது.

மேலும் மேற்படி வாடகைதாரர் திரு. கந்தசாமி என்பவர் மேற்படி காலிமனை இடத்தில் ஏற்கனவே இருந்த ஆஸ்பெஸ்டால் கட்டிடத்தை இடித்துவிட்டு 9 கடைகள் கொண்ட புதிய கட்டிடத்தை கட்டும் பணியை 2010–ம் ஆண்டு திரு. க. சேXXXXXXX செயல் அலுவலராக பணிபுரிந்த பொழுது கட்டத் துவங்கினேன் என முன்னாள் செயல் அலுவலர் திருமதி. கே. மXXXXXXXX என்பவருக்கு அளித்துள்ள கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார். ஏனவே எனது பணிக்காலத்தில் மேற்கண்ட கட்டிடம் கட்டப்படவில்லை என்பதால் ஆணையர் இறுதி உத்தரவை ரத்து செய்ய வேண்டுகிறேன்.

**குற்றச்சாட்டு எண். 5—க்குரிய எனது மேல்முறையீட்டு விளக்கம்**

இத்திருக்கோயில் பசலி 1417 தணிக்கை அறிக்கை பத்தி எண்–1–ல் ஆலய தேர் கழுவும் பணிக்கான செலவு தொகை ரூ.3,200/–க்கு உரிய செலவு சீட்டுக்கள்

காண்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளவை குற்றச்சாட்டாக சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி செலவுத்தொகை ரூ.3,200/– ல் தேரை சுத்தப்படுத்தும் பணிக்கு ரூ. 2,600/–ம் வாட்டர் சப்ளை செய்த வகையில் ரூ. 600/–ம் செலவு செய்யப்பட்டுள்ளது. தேர் சுத்தப்படுத்தும் பணிக்கான செலவுத் தொகை ரூ. 2,640/–க்கு பதிலாக ரூ. 40/– குறைவு செய்து ரூ. 2,600/– வழங்கப்பட்டுள்ளது. மீதி தொகை ரூ. 600/–க்கான செலவு சீட்டு தணிக்கையின் போது காண்பிக்கப்படாததால் தணிக்கை மறுப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது. விசாரணை அலுவலர் செலவு சீட்டு இல்லாத ரூ. 600/–க்கு மட்டும் ஆட்சேபணை எழுப்பி இக்குற்றச்சாட்டு பகுதி நிரூபணமாகிறது என முடிவு செய்துள்ளார்.

மேற்படி செலவினத்திற்கு (ஆடி திருவிழா) பசலி 1417–க்கான வரவு செலவு திட்டத்தில் ஆணையர் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தொகை ரூ. 3,200/– 15.05.2021–ல் நடைபெற்ற தணிக்கை கூட்டமர்வின் போது இக்குற்றச்சாட்டு சுமத்திய இணை ஆணையரே இத்தொகையினைத் தடை நீக்கம் (பத்தி எண் 5) செய்துள்ளார் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே இக்குற்றச்சாட்டு உயிரற்றதாகிவிடுகிறது.

மேற்படி செலவினத்திற்கு வரவு, செலவு திட்டத்தில் உரிய அனுமதி பெறப்பட்டுள்ளதாலும் மேற்படி தொகை ரூ. 3200/–க்கு தணிக்கை தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி தொகை முறைகேடாகப் பயன்படுத்தப்படவில்லை என பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே ஆவணங்களைப் பார்வையிடாமல் இக்குற்றச்சாட்டு பகுதி நிரூபணமாகிறது என்ற விசாரணை அலுவலரின் முடிவினை ஆணையர் அவர்கள் அப்படியே ஏற்றுக் கொண்டது நியாயமானது அல்ல என்பதால் ஆணையரின் இறுதி உத்தரவினை ரத்து செய்ய பணிந்து வேண்டுகிறேன்.

**குற்றச்சாட்டு எண். 6—க்குரிய எனழ மேல்முறையீட்டு விளக்கம்**

இத்திருக்கோயில் பசலி 1417 தணிக்கை அறிக்கை பத்தி, எண் 2–ல் ஒன்பது வகையான செலவினங்களுக்குரிய தொகை ரூ. 18,001/– க்கு உரிய செலவு சீட்டுக்கள் காண்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதை குற்றச்சாட்டாக சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி செலவினங்கள் அனைத்திற்கும் பசலி 1417 வரவு செலவு திட்டத்தில் ஆணையர்

அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகைக்குரிய செலவு சீட்டுகள் தணிக்கை கூட்ட தாக்கல் செய்து தணிக்கை தடை நீக்குவது தொடர்பாக தணிக்கை கோப்பில் தொடர் நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

விசாரணை அலுவலர் தனது விசாரணை அறிக்கையில் மேற்படி செலவினத்தொகை ரூ.18,001/–ல் ரூ.9,501/–க்கு மட்டும் ஆட்சேபணை எழுப்பி இக்குற்றச்சாட்டு பகுதி நிரூபணமாகிறது என தெரிவித்துள்ளார்.

மேற்படி செலவினங்களுக்கு ஆணையர் அனுமதி பெறப்பட்டுள்ளதாலும், மேற்படி தொகை தொடர்பாக தணிக்கை கோப்பில் தொடர் நடவடிக்கை நிலுவையில் உள்ளதாலும், மேற்படி செலவினம் முறைகேடாக பயன்படுத்தப்படவில்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

விசாரணை அலுவலர் தனது விசாரணை அறிக்கையில் மேற்படி செலவினத்தொகை ரூ. 18,001/–ல் ரூ. 9,501/–க்கு மட்டும் ஆட்சேபணை எழுப்பி இக்குற்றச்சாட்டு பகுதி நிரூபணமாகிறது என தெரிவித்துள்ளார்.

மேற்படி செலவினங்களுக்கு ஆணையர் அனுமதி பெறப்பட்டுள்ளதாலும், மேற்படி தொகை தொடர்பாக தணிக்கை கோப்பில் தொடர் நடவடிக்கை நிலுவையில் உள்ளதாலும், மேற்படி செலவினம் முறைகேடாக பயன்படுத்தப்படவில்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே ஆவணங்களைப் பார்வையிடாமலும் பகுதி குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என்ற விசாரணை அலுவலரின் முடிவினை ஆணையர் அவர்கள் அப்படியே ஏற்றுக் கொண்டது நியாயமானது அல்ல என்பதால் ஆணையர் உத்தரவினை நீக்கறவு செய்திட பணிந்து வேண்டுகிறேன்.

திருக்கோயிலுக்கு நிதியிழப்பு என்று தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளில் காணும் தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்டுவிட்டது. அதனால் திருக்கோயிலுக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படவில்லை. நன்னடத்தை விதிகளில் கூறப்பட்டுள்ள நன்னடத்தை விதிகளை மீறியதாக குற்றச்சாட்டுகளில் எதுவும் காணப்படவில்லை. இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்கு புறம்பாக நடந்து கொண்டதாகவோ, அல்லது துறைக்கு அவப்பெயர் ஏற்படும் வண்ணம் நடந்து கொண்டதாகவோ குற்றச்சாட்டு எதுவும் இல்லை. ஏற்கனவே இம்மேல்முறையீட்டு மனுவில் நான் தெரிவித்துள்ளபடி அதிகபட்ச தண்டனை வழங்குவதற்கு முன்பு அதற்கான முறையான அறிவிப்பு ஆணையரால் கொடுக்கப்பட்டு எனது விளக்கம் கோரப்படவில்லை. ஆணையரின் நேரடி விசாரணைக்கு என்னை அழைக்கவில்லை.

குற்றச்சாட்டுகளின் ஆழம், அவற்றின் தன்மை குற்றச்சாட்டுகளின் சாரத்தால் திருக்கோயிலுக்கோ அல்லது துறைக்கோ ஏற்படும் இழப்பு, விசாரணை அலுவலர் முன்பு நான் அளித்துள்ள விளக்கங்கள் ஆகியவற்றை ஆவணங்களைக் கொண்டு பரிசீலிக்காமல் விசாரணை அலுவலரின் முடிவினை மட்டும் வைத்து ஆணையரால் இறுதி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தணிக்கை அறிக்கையில் உள்ள குறைபாடுகளைக் குற்றச்சாட்டாக கொண்டுவர இயலாது என்பது பொதுவான விதி ஆகும். ஆனால் என்மீது சுமத்தப்பட்ட குற்றக்குறிப்பாணையில் எந்த முறையான நடைமுறையும் பின்பற்றப்படவில்லை. குற்றச்சாட்டு எண் 5–ல் உள்ள தொகையினை அக்குற்றச்சாட்டு பிறப்பித்த அலுவலரே தணிக்கை கூட்டமர்வில் நீக்கம் செய்துள்ளதை விசாரணை அலுவலரோ அல்லது ஆணையரோ கவனிக்கவில்லை. குற்றச்சாட்டு எண் 2–ல் கண்டுள்ள தொகை முழுவதும் ஆணையரால் இறுதி உத்தரவு பிறப்பிக்கும் தேதிக்கு முன்னரே வசூல் செய்யப்பட்டு விட்ட நிலையில் அதனை நிதியிழப்பாக கருத இயலாது.

என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குரிய ஆவணங்களை பரிசீலிக்காமலும் அவை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை கவனிக்காமலும், எனக்கு பார்வை 3–ல் காணும் உத்தரவின்படி கீழ்க்கண்டவாறு மிகக் கடுமையானதும் அதிகபட்சமுமான தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இது பொது சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பானது ஆகும்.

**உத்தரவு விபரம்**

"உறுதி செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் கடுமையைக் கருத்தில் கொண்டு திரு.வே.சாXXXXXXXX, நிலை–2 செயல் அலுவலரை தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 8 (iv)–ன் கீழ் செயல் அலுவலர் நிலை–2 என்ற நிலையிலிருந்து அதன் கீழ் நிலை பதவியான நிலை–3 செயல் அலுவலராக ரூ.20600/– ( Level – 10 ) தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் 01.03.2023 முதல் 5 ஆண்டுகளுக்கு பணியிறக்கம் செய்து ஆணையிடப்படுகிறது. (Reduction to a Lower Post for Fiver years) பதவியிறக்கம் என்ற தண்டனையானது இந்த ஆணை கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு செயல்படுத்தப்படும் எனவும் பிறப்பிக்கப்பட்டுள்ள இத்தண்டனையில் தண்டனைக்காலம் முடிவுற்ற பின்பு ஊதிய உயர்வு பாதிக்கப்படும் எனவும், தண்டனை காலம் முடிவுற்ற பின்பு தண்டனை காலத்திற்கு முந்தையப் பதவியான செயல் அலுவலர் நிலை–2 பதவியை அவர் அடையும் போது தண்டனைக் காலத்திற்கு முன் செயல் அலுவலர் நிலை–2 பதவியில் என்ன ஊதியம் பெற்றாரோ அதே ஊதியம் தான் அன்னாருக்கு நிர்ணயம் செய்யப்பட வேண்டுமெனவும், பதவியிறக்கம் என்ற தண்டனையானது விடுப்பு காலத்தை உள்ளடக்கியது மற்றும்

ஓய்வூதியத்தை பாதிக்கும் தன்மையுடையது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாணையின் மீது மேல்முறையீடு செய்ய விரும்பினால் இவ்வுத்தரவு கிடைக்கப் பெற்ற 60 நாட்களுக்குள் அரசு செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9 என்ற முகவரிக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது."

பார்வையில் காணும் ஆணையர் உத்தரவு 04.03.2023–ம் தேதியன்று என்னால் பெறப்பட்டது. ஆணையர் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி உரிய காலக் கெடுவிற்குள் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்படுகிறது.

மேற்படி காரணங்களை ஏற்று இந்த மேல்முறையீட்டு மனுவின் மீதான நடவடிக்கைகள் முடிவுறும் வரை ஆணையரது உத்தரவிற்கு தடை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, மேன்மைமிகு அரசு செயலர் அவர்கள் மேற்கண்ட விளக்கங்களை ஏற்று ஆணையர் அவர்களது செ.மு.ந.க. எண் 24725/2022/எல்2 நாள்: 21.02.2023 உத்தரவு தொடர்பான கோப்புகளைத் தருவித்து பரிசீலனை செய்து, எனது மேல்முறையீட்டு மனுவை ஏற்று குற்றச்சாட்டுகளை ரத்து செய்தும், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகபட்ச தண்டனையை ரத்து செய்தும் உத்தரவு வழங்குமாறு மிக பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மேல்முறையீடு தொடர்பாக கூடுதல் விவரங்கள் கிடைக்கப் பெற்றால் அவற்றை உள்ளடக்கிய கூடுதல் மேல்முறையீட்டு மனுவினை சமர்ப்பிப்பதற்கு உரிய வாய்ப்பினை எனக்கு வழங்குமாறும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

(வே. சாXXXXXXXX)
செயல் அலுவலர்

**இணைப்பு :**

**குற்றச்சாட்டு எண் 1–க்குரிய ஆவணங்கள்**

1. வாடகை நிலுவை செலுத்தக் கோரி அனுப்பப்பட்ட 05.03.2020 நாளிட்ட அறிவிப்பு நகல்.
2. ரூ.14,90,000/– க்கு வசூல் செய்யப்பட்ட திருக்கோயில் பலவகை இரசீது நகல்கள்

3. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் பணிக்காலத்தில் வாடகை நிலுவை வசூல் செய்யப்பட்ட இரசீது நகல்கள்.

**குற்றச்சாட்டு எண் 2–க்குரிய ஆவணங்கள்**

1. தஞ்சாவூர், இணை ஆணையர் ரூ.மு. எண் 1007/2020/ஆ3 நாள்: 01.07.2020 உத்தரவு நகல்
2. நியாய வாடகை நிர்ணய படிவம்
3. சட்டப்பிரிவு 34(a) நகல்
4. விராலிமலை சார்பதிவாளர் அலுவலக சான்று

**குற்றச்சாட்டு எண் 3–க்குரிய ஆவணங்கள்**

1. வருவாய் நீதிமன்ற வழக்கு எண் PT No. 150/2017 நாள்: 05.04.2019 தீர்ப்பு நகல்
2. ரூ.10,800/– குத்தகை பாக்கி வசூல் செய்யப்பட்ட ரசீது நகல்

**குற்றச்சாட்டு எண் 4–க்குரிய ஆவணங்கள்**

1. வாடகைதாரர் திரு.கந்தசாமி என்பவரின் 14.10.2021 நாளிட்ட மனு நகல்
2. புதுக்கோட்டை உதவி பொறியாளரின் 24.12.2021 நாளிட்ட மதிப்பீட்டு நகல்
3. 20.12.2021 நாளிட்ட தக்கார் தீர்மான நகல்
4. மதிப்பீடு மற்றும் நிர்வாக அனுமதி படிவம் நகல்
5. 24.12.2021 நாளிட்ட செயல் அலுவலர் திருமதி. கே. மXXXXXXXX கடித நகல்

**குற்றச்சாட்டு எண் 5–க்குரிய ஆவணங்கள்**

1. ஆணையர் சென்னை ரூ.மு.எண் : 28153/2020/ஜி4, நாள் 22.02.2020 நகல்
2. இணை ஆணையர், தஞ்சாவூர் ந.க.எண் 1870/2020 ஆ3 நாள்: 24.10.2020 உத்தரவு நகல்
3. பசலி 1430 செலவு சீட்டு வரிசை எண் 373.
4. தணிக்கை கூட்டமர்வு தடைநீக்க அறிக்கை நகல்.

**குற்றச்சாட்டு எண் 6–க்குரிய ஆவணங்கள்**

1. ஆணையர் சென்னை ரூ.மு.எண் : 28153/2020/ஜி4, நாள் : 22.02.2020 நகல்
2. பசலி 1430 செலவு சீட்டு வரிசை எண் 22, 39, 147, 148, 169, 179, 219, 302, 417

**இதர ஆவணங்கள்**

1. ஆணையர் சென்னை செ.மு.ந.க. எண்: 24725/2022/எல்2, நாள்: 21.02.2023
2. 15.08.2022 நாளிட்ட எனது மேல் விளக்கம் நகல்
3. ஆணையர் இறுதி உத்தரவு பெறப்பட்ட அத்தாட்சி நகல்

[ மாதிரி படிவம் ]

## அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் கருத்துரு கேட்டல்

அனுப்புநர் :
அரசு முதன்மைச் செயலாளர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை,
தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

பெறுநர் :
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,
பிரேசர் பாலச் சாலை,
சென்னை – 600 003.

கடித எண். 11947/அநி2–1/2023–3 நாள் : 15.04.2023

கலியுக – சித்திரை 02,
திருவள்ளுவர் ஆண்டு 2054

அய்யா,

பொருள் : மேல்முறையீடு – திரு. வே.சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை–3) அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில், பாபநாசம், அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம் – செயல் அலுவலர்–2 நிலையிலிருந்து செயல் அலுவலர்–3 நிலைக்கு "பதவியிறக்கம்" எனும் தண்டனையினை எதிர்த்து அரசுக்கு மேல் முறையீடு செய்யப்பட்டது – **தேர்வாணையத்தின் கருத்துரு கேட்டல்** – தொடர்பாக.

பார்வை :

1. திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை–3), அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில், பாபநாசம், அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.
2. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை செ.மு.ந.க.எண்.24725/2022/எல்2 நாள்:20.02.2023

---------

பார்வையில் காணும் கடிதங்களின்பால் தங்களின் கனிவான கவனத்தைக் கொணர விழைகிறேன். திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாபநாசம் அருள்மிகு

பாபநாசசுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் திரு. வே. சாXXXXXXXX அவர்களின் மீது அவரது முந்தைய நிர்வாகக் குறைபாடுகளுக்காக இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் வழங்கப்பட்டுள்ள தண்டனை நியாயமற்றதாக இருப்பதாக அன்னாரால் கருதப்படுவதால் அதனை எதிர்த்து அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளார். ஏனவே, அன்னார் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளையும், குற்றச்சாட்டுகளுக்கு இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் வழங்கப்பட்டுள்ள தண்டனைகளையும், கவனமுடன் பரிசீலித்து, பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மேல்முறையீடு மீதான தேர்வாணையத்தின் கருத்துருவினை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பார்வை 2–ல் காணும் இந்து சமய அறநிலையத்துறை, ஆணையரின் இறுதி உத்தரவு நகல் பரிசீலனைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

அரசு செயலருக்காக

/உண்மை நகல் உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்

இணைப்பு : பார்வைக் குறிப்புகளின் நகல்.

[ மாதிரி படிவம் ]

## அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் கருத்துரு

**முக்கம்**

அனுப்புநர் :
திரு. மா. தxxxxxx, இ.ஆ.ப.
செயலாளர்,
தமிழ்நாடுஅரசுப்பணியாளர்
தேர்வாணையம், பிரேசர் பாலச் சாலை,
சென்னை – 600 003.

பெறுநர் :
அரசு முதன்மைச் செயலாளர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் (அ.நி.2.2) துறை,
தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

கடித எண்.3181/டிசிடி–சி1/2023–1 நாள்: 24.05.2023

கலியுக – வைகாசி 11
திருவள்ளுவர் ஆண்டு 2054

அய்யா,

பொருள் : மேல்முறையீடு – திரு. வே.சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை–3) அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில், பாபநாசம், அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம் – செயல் அலுவலர்–2 நிலையிலிருந்து செயல் அலுவலர்–3 நிலைக்கு "பதவியிறக்கம்" எனும் தண்டனையினை எதிர்த்து அரசுக்கு மேல் முறையீடு செய்யப்பட்டது – **தேர்வாணையத்தின் கருத்து அனுப்பப்படுவது** – தொடர்பாக.

பார்வை : அரசுக் கடித எண் 11947/அ.நி 2–1/2023–3 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி. 2.2) துறை, நாள்: 15.04.2023.

---------

பார்வையில் காணும் அரசுக் கடிதத்தின்பால் கனிவான கவனத்தைக் கொணர விழைவதுடன், மேலே பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மேல்முறையீடு மீதான தேர்வாணையத்தின் கருத்துகள் பின்வருமாறு தெரிவிக்கப் பணிக்கப்பட்டுள்ளேன்.

இவ்வழக்கில், திரு. வே. சாXXXXXXXX, இந்து சமய அறநிலையத் துறையில் (தற்போது திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாபநாசம் அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் நிலை–3) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் செயல் அலுவலர் நிலை–2 ஆக பணிபுரிந்தபோது ஏற்பட்ட நிர்வாகக் குறைபாடுகள் தொடர்பாக அன்னார் மீது இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணை மூலம் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17 (b)–ன் கீழ் ஆறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் கோரப்பட்டுள்ளது.

மேற்முறையீட்டாளர் தமது 06.05.2022 நாளிட்ட விளக்கத்தில் தம்மீது சுமத்தப்பட்ட 6 குற்றச்சாட்டுகளையும் மறுத்து பூர்த்தி செய்யப்பட்ட வினாப் படிவத்தின் வாயிலாக வாய்மொழி விசாரணையை கோரியுள்ளார்.

இவ்வொழுங்கு நடவடிக்கை மீது விசாரணை மேற்கொள்ள திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவில் இணை ஆணையர்/செயல் அலுவலரை விசாரணை அலுவலராக இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் 14.04.2022 நாளிட்ட செயல்முறை ஆணை மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து விசாரணை அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது மேல்முறையீட்டாளர் தமது எழுத்துமூலமான விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார். மேலும், திருக்கோயிலில் பணிபுரிந்த செயல் அலுவலர்கள் மற்றும் குற்றச்சாட்டிற்கு ஆதாரமாக குறிப்பிடப்பட்ட பணியாளர் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. விசாரணை அலுவலர் தனது விசாரணை அறிக்கையில் மேல்முறையீட்டாளர் மீது சுமத்தப்பட்ட 6 குற்றச்சாட்டுகளில் 4 குற்றச்சாட்டுகள் நிரூபணமாவதாகவும் 2 குற்றச்சாட்டுகள் பகுதி நிரூபணமாவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் 10.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் விசாரணை அறிக்கையின் நகல் மேல்முறையீட்டாளருக்கு சார்பு செய்யப்பட்டு அதன் மீதான கூடுதல் விளக்கம் கோரப்பட்டதில் 06.05.2022 நாளிட்ட விளக்கக் கடிதத்தினையே தனது கூடுதல் விளக்கமாக ஏற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில், இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் 20.02.2023 நாளிட்ட செயல்முறை ஆணைகள் மூலம் நிரூபணமான குற்றச்சாட்டிற்கு தண்டனையாக "செயல்

அலுவலர் நிலை–2 என்ற நிலையிலிருந்து அதன் கீழ் நிலைப் பதவியான நிலை–3 செயல் அலுவலராக ரூ.20600/– ( Level – 10 ) தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் 01.03.2023 முதல் 5 ஆண்டுகளுக்கு பணி இறக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது." இப்பதவி இறக்கம் என்ற தண்டனையானது இந்த ஆணை கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும் எனவும், இத்தண்டனை காலம் முடிவுற்ற பின்பு ஊதிய உயர்வு பாதிக்கப்படும் என்றும் தண்டனைக்காலம் முடிவுற்ற பின்பு தண்டனை காலத்திற்கு முந்தைய பதவியான செயல் அலுவலர் நிலை–2 பதவியை அவர் அடையும் போது தண்டனைக் காலத்திற்கு முன் செயல் அலுவலர் நிலை–2 பதவியில் என்ன ஊதியம் பெற்றாரோ அதே ஊதியம் தான் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமெனவும், பதவி இறக்கம் என்ற தண்டனையானது விடுப்பு காலத்தை உள்ளடக்கியது என்றும், ஓய்வூதியத்தை பாதிக்கும் தன்மையுடையது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் 28.02.2023 நாளிட்ட செயல்முறைகள் மூலம் மேல்முறையீட்டாளரை பணியிறக்கம் செய்து திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாபநாசம் அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோவிலில் செயல் அலுவலர் நிலை–3 ஆக பணி நியமன ஆணை வழங்கி பணியில் சேர ஆணையிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அன்னார் 04.03.2023 முதல் பணியேற்றுள்ளார்.

மேலும், இத்தண்டனையை எதிர்த்து மேல்முறையீட்டாளர் 10.03.2023 அன்று அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதைத் தொடர்ந்து, அரசு இம்மேல்முறையீடு தொடர்பான ஆவணங்களை தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்து அதன்மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியுள்ளது.

இவ்வழக்கு தொடர்பான ஆவணங்கள் தேர்வாணையத்தால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன.

இந்நேர்வில், மேல்முறையீட்டாளர் மீதான குற்றச்சாட்டுகள், விசாரணை அலுவலரின் கண்டுபிடிப்புகள், மேல்முறையீட்டாளரின் விளக்கங்கள், விசாரணையின் போது அளித்த சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவைகளை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் வணிக வளாகம் உள்ள இடத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை வசூல் செய்ய தனியார் பணியில் இருந்த 2 வருடங்களில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது. ஆனால் பாக்கி நிலுவைத் தொகையினை வசூல் செய்ய சட்டரீதியாக வாய்ப்பு உள்ளது. ஏனென்றால் நிலுவைத் தொகையினை அவருக்குப் பின் பணியேற்கும் செயல் அலுவலர் மற்றும் உயர் அதிகாரிகளால் வசூல் செய்திருக்க வழி உள்ளது. மேலும் திருக்கோவிலுக்கு

சொந்தமான இடங்களில் உள்ள கட்டடம் மற்றும் மனைகளுக்கு செயல் அலுவலரால் மட்டுமே நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. அதை உயர் அதிகாரிகளால் ஆய்வு செய்து முடிவு செய்ய வேண்டிய நிலை உள்ளதால் இக்குற்றச்சாட்டில் மேல்முறையீட்டாளரை மட்டுமே குற்றஞ்சாட்டுவது நியாயமாகத் தோன்றவில்லை.

மேலும், விலை மதிப்புள்ள நகர்ப்புறத்தில் அமைந்துள்ள திருக்கோவில் இடத்திற்கான குத்தகை தொகையை நிலுவையின்றி வசூல் செய்யப்பட்டுவிட்டதாலும் குத்தகைதாரரை வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்படாததாலும் தமது பணிச்சுமையால் நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்க இயலவில்லை என செயல் அலுவலர் ஒப்புக்கொண்டுள்ளது, 2019–2021 ஆம் ஆண்டில் இருந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளை எடுத்துக்காட்டுகிறது.

மேலும், திருக்கோவிலுக்குரிய இடத்தில் உள்ள வாடகைதாரர், புதிய கட்டடம் கட்ட அனுமதி கோரி 2021–ல் தான் விண்ணப்பித்துள்ளார். மேலும் கட்டடம் கட்ட ஏறத்தாழ 2 ஆண்டுகளுக்கு மேல் ஆகும். ஆகவே இது எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என ஆதாரம் இல்லை. இவருக்கு எதிராக ஒருவர் தான் சாட்சியம் கூறியுள்ளார். மேலும் உயர் அதிகாரிகளின் இது குறித்த ஆய்வு பற்றி ஆவணங்களில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அக்கட்டடத்திற்கு மின்வாரியம் மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதியும் காணப்படவில்லை. அக்காலத்தில் பணியில் இருந்த செயல் அலுவலரை தீர விசாரிக்காமல், மேல்முறையீட்டாளர் தான் துறை அனுமதி பெறாமல் கட்டடம் கட்டுவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காமல் வாடகைதாரருடன் உடந்தையாக இருந்து விதிகளுக்கு எதிராகச் செயல்பட்டுள்ளார் எனும் விசாரணை அலுவலரின் கண்டுபிடிப்பிற்கு போதிய சாட்சி ஆதாரங்கள் ஆவணங்களில் காணப்படவில்லை. இதற்கு மேல்முறையீட்டாளரை மட்டுமே பொறுப்பாளியாக்க முடியாது. வாடகைதாரர் சட்டவிதிகளை மீறினால் அந்த சரத்தின்படி வெளியேற்ற வழிவகை உள்ளது.

மேலும், தணிக்கை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு இரண்டு பத்திகளில் உள்ள ரூ.10,000/–க்கான தொகைக்கு இந்நாள்வரை விளக்கம் ஏதும் சமர்ப்பிக்காததால் அத்தொகையினை அன்னாரிடமிருந்து வசூல் செய்ய சட்டவிதிகளின்படி வாய்ப்பு உள்ளது. அதை உயர் அதிகாரிகள் ஆய்வு செய்து சரிசெய்ய இயலும். இதன் காரணமாக திருக்கோவில் சொத்துகளுக்கு பெரும் பாதிப்போ, நிதியிழப்போ மேல்முறையீட்டாளரால் ஏற்பட்டதாக ஆவணங்களில் போதிய சாட்சிகள் மேல்முறையீட்டாளருக்கு எதிராக இல்லை.

ஆதலால், உறுதி செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மிகக் கடுமையானது என

கருதினாலும், சரி செய்ய சட்ட விதிகளில் இடம் உள்ளதாலும் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வசூலித்து இழப்பீடு ஏற்படாத வண்ணம் சரி செய்ய முடியும். ஆனால், இந்து சமய அறநிலையத் துறை ஆணையரால் வழங்கப்பட்டுள்ள தண்டனையானது மேல்முறையீட்டாளரின் ஊதியத்தை பெருமளவு பாதிக்கும் நிலையில் உள்ளது. அன்னாருக்கு கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு 2 1/2 லட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. இது அவரது வாழ்வாதாரத்தை பாதிக்கும் என்பதாலும் இயற்கை நியதிக்கு அப்பாற்பட்டது என்பதாலும் இனி வருங்காலங்களில் பணியில் கவனமுடனும், சிரத்தையுடனும் செயல்பட வேண்டும் என்பதற்காகவும் மேல்முறையீட்டாளருக்கு தண்டனை என்பது சந்தர்ப்ப சாட்சியங்களின் அடிப்படையில் போதிய ஆதாரங்களின் அடிப்படையில் நீதி வழங்க வேண்டும். ஆனால் இவ்வழக்கில் 5 ஆண்டுகளுக்கு தண்டனை வழங்கினால் ஏறத்தாழ 15 லட்சத்திற்கு மேல் இழப்பீடு வரும் என்பது ஏற்றுக்கொள்ள இயலாத நிலை உள்ளது.

ஆதலால், மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டினை பகுதியாக அனுமதித்து, அன்னாருக்கு வழங்கப்பட்ட தண்டனையை குறைத்து "செயல் அலுவலர் நிலை–2 என்ற நிலையிலிருந்து அதன் கீழ் நிலைப் பதவியான நிலை–3 செயல் அலுவலராக ரூ.20600/– ( Level – 10 ) தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் 01.03.2023 முதல் இரண்டு ஆண்டுகளுக்கு பணி இறக்கம் (Recuction to a lower post for 2 years) செய்யலாம் என தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

2. இந்நேர்வின் மீது பிறப்பிக்கப்படும் அரசு ஆணையின் நகலொன்றினைத் தேர்வாணையத்தின் தகவலுக்காக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக அரசிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் இவ்வலுவலகக் கடித எண். 3181/டிசிடி–சி1/2023–2, நாள் 24.05.2023 உடன் தனியாக அனுப்பி வைக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செயலருக்காக,

[ மாதிரி படிவம் ]

# I. அரசு மேல்முறையீடு – ஆணை

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத் துறை – திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை–3) – தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், விதி 17 (b)–ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் தண்டனை வழங்கப்பட்டது – தண்டனையை எதிர்த்து அரசுக்கு மேல்முறையீடு – **ஆணை** – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.2– 1) துறை**

அரசாணை (ப) எண். 19 நாள் : 02.06.2023

கலியுக வைகாசி 18

திருவள்ளுவராண்டு– 2054

படிக்கப்பட்டவை :

1. தஞ்சாவூர், இணை ஆணையர் குற்றச்சாட்டுக் குறிப்பாணை எண்:3920/2022/ஆ2 நாள்: 02.02.2022
2. சென்னை, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் செ.மு. ந.க . எண் 24725/2022/எல்2 நாள்: 21.02.2023
3. திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை–3) 10.03.2023 நாளிட்ட மேல்முறையீடு.
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண் 3181/டிசிடி–சி1/2023–1 நாள்: 24.05.2023.

--------

**ஆணை :**

இந்து சமய அறநிலையத்துறையில் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாபநாசம் அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயிலில் நிலை–3 செயல் அலுவலராகப் பணிபுரிந்து வரும் திரு. வே. சாXXXXXXXX, புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை

வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் பணிபுரிந்தபோது கண்டறியப்பட்ட நிர்வாகக் குறைபாடுகள் தொடர்பாக மேலே முதலாவதாக படிக்கப்பட்ட தஞ்சாவூர், இணை ஆணையரது குற்றச்சாட்டுக் குறிப்பாணையில் தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17 (b)—ன் கீழ் கீழ்க்காணும் 6 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது.

**குற்றச்சாட்டு எண். 1 :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலி மனையில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு, வணிக வளாகம் அமைந்துள்ள முன்பகுதியான சிவன் கோயில் கீழ ரத வீதியின் வழிகாட்டி மதிப்பு பெறாமல், மதிப்பு குறைந்த பெருமாள் கோவில் வடக்கு மாட வீதியின் சந்தை மதிப்பினைப் பெற்று அதன் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்ய கணக்கீடு தயார் செய்து, இணை ஆணையருக்குப் பரிந்துரை செய்து குறைவான மதிப்பின் அடிப்படையில் நியாய வாடகை கட்டணம் நிர்ணயம் செய்து திருக்கோவிலுக்கு பெரிய அளவில் நிதியிழப்பினை ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 2 :**

திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள காலி மனையில் துறை அனுமதியின்றி புதிதாக வணிக வளாகம் கட்டுவது தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு ஏ.எஸ்.524/2017—ல் ஆணையரால் இணக்கத் தீர்வு ஏற்படுத்தப்பட்டு ஆணையர் சென்னை ந.க.எண்.24819/2017/ஆ1 நாள்:15.09.2017—ன்படி 01.07.1993 முதல் 28.02.2017 முடிய வாடகைதாரரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட வாடகைத் தொகை ரூ. 1,32,000/— போக மீதமுள்ளத் தொகை ரூ.17,54,051.68/—னை வசூல் செய்து நிரந்தர முதலீட்டில் முதலீடு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு பின்பும் இரண்டு ஆண்டுகள் இத்திருக்கோயிலில் செயல் அலுவலராகப் பணியாற்றிய போதும் நிலுவைத் தொகையினை முறையாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்காததால் நாளது தேதி வரை ரூ.4,90,000/— வசூல் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இதனால் நிலுவைத் தொகையினை வசூல் செய்து நிரந்தர முதலீடு செய்வதன் மூலம் வரப்பெறும் வட்டி வருவாய் இனத்தினை தடை செய்து திருக்கோவிலுக்கு நிதி இழப்பினை ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 3 :**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான விராலிமலை நகரில் சர்வே எண்.12/1–ல் உள்ள 9 ஏக்கர் 20 செண்ட் புன்செய் நிலம் திரு. சண்முகம் என்பவர் வசம் உள்ளது. மேற்காணும் நிலத்திற்கு திரு. சண்முகம் வருடம் ஒன்றுக்கு ரூ.400/– குத்தகையாக செலுத்தி வருகிறார். மேற்படி நிலத்தினைச் சுற்றியுள்ள நிலங்களில் வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பு பகுதியாக மாறியுள்ளதால் குத்தகைதாரரை வெளியேற்ற வருவாய் நீதிமன்றத்தில் பி.டி.150/2017 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் திரு. சண்முகம் இவ்விடத்தில் நீண்ட காலமாக விவசாயம் ஏதும் செய்யாமல் இருந்த காரணத்தினாலும் மேற்படி இடம் விவசாயத்திற்கு தகுதியற்ற மற்றும் குடியிருப்பு பகுதியாக மாறியுள்ள காரணத்தினாலும், மேற்படி இடத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றவும், அவர் இதுவரை செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையினைச் செலுத்த வேண்டியும், வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி வழக்கில் 05.04.2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் குத்தகைதாரரை வெளியேற்ற உத்தரவிடாமல் தாவா நிலத்திற்குரிய குத்தகை பாக்கியை மூன்று மாதத்திற்குள் மனுதாரர் செலுத்த வேண்டும் எனவும், தவறினால் எதிர் மனுதாரரே தாவா நிலத்தில் இருந்து குத்தகைதாரரை வெளியேற்றலாம் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், தாவா நிலத்திற்கு நியாயக் குத்தகை நிர்ணயம் செய்ய விரும்பினால் அதற்கு தனியாக நீதிமன்றத்தில் மனு செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், நியாயக் குத்தகை நிர்ணயம் செய்வதற்கு எவ்விதமான நடவடிக்கையும் செயல் அலுவலரால் எடுக்கப்படவில்லை.அதனால், நாளது தேதி வரை வருடம் 1–க்கு ரூ.400/– மட்டுமே குத்தகைத் தொகையாக பெறப்பட்டு வரப்பெறுகிறது. நியாய குத்தகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் இருந்து திருக்கோவிலுக்கு மிகப்பெரிய நிதி இழப்பினை ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு எண். 4 :**

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான, வடக்கு மாட வீதியில் வார்டு எண். 20, கதவு எண்.120–ல் உள்ள காலிமனைக்கு தற்போதைய மாத வாடகை ரூ.161/– ஆகும். திரு. கந்தசாமி என்பவர் வாடகைதாரராக இருந்து வருகிறார். ஆனால் மேற்படி இடத்தின் வாடகைதாரர் இலாகா அனுமதியில்லாமல் ஒன்பது கடைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி கட்டடம் கட்டி அதனை உள்வாடகைக்கு விட்டு வருகிறார். இலாகா அனுமதி பெறாமல் கட்டடம் கட்டுவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காமல் வாடகைதாரருடன் உடந்தையாக இருந்து இலாகா சட்டவிதிகளுக்கு எதிராகவும், திருக்கோவில் நலனுக்கு எதிராகவும் செயல்பட்டது.

**குற்றச்சாட்டு எண். 5 :**

பசலி 1430–க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.5–ல் மேற்படி பசலியில் பங்குனி மாத உற்சவத்திற்கான செலவு இனங்களில் ஆலயத் தேரைக் கழுவும் பணி உபயதாரர் மூலம் செய்யப்படும் என பதிவு செய்யப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஆனால் ஆலயத் தேரைக் கழுவுவதற்கு ரூ.3,200/– செலவிடப்பட்டு அதற்கு செலவுச்சீட்டு வைக்கப்பட்டுள்ளது. எனவே, உபயதாரர் மூலம் செலவினைச் செய்துவிட்டு ரூ.3,200/– முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை இழப்பாகக் கருதி பொறுப்பாளர்களிடம் இருந்து ஈடு செய்யப்பட வேண்டும் எனவும் தணிக்கைப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை தணிக்கைப் பத்தி தடை நீக்கம் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோயில் நிதியினைக் கையாடல் செய்தது.

**குற்றச்சாட்டு எண். 6 :**

பசலி 1430–க்கான தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.7–ல் மேற்படி பசலியில் ஒன்பது வகையான செலவினங்களுக்கான செலவுத் தொகைகளுக்குச் செலவு சீட்டுகள் தாக்கல் செய்யப்படாததால் செலவின் உண்மைத் தன்மையை உறுதி செய்ய இயலவில்லை என்பதால் செலவுத் தொகை ரூ.24,001/– தணிக்கை மறுப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தவறான முறையில் திருக்கோவில் நிதியினைச் செலவிட்டு அதற்கு செலவுச் சீட்டு வைக்காமல் திருக்கோவில் நிதியினைக் கையாடல் செய்தது.

2. மேற்படி ஒழுங்கு நடவடிக்கையில நிரூபணமான 1 முதல் 4 வரையிலான குற்றச்சாட்டுகள் மற்றும் பகுதியாக நிரூபணமான குற்றச்சாட்டு 5 மற்றும் 6 ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆணையரது செயல்முறையில் அன்னாரை செயல் அலுவலர் நிலை–2 என்ற நிலையிலிருந்து அதன் கீழ்நிலைப் பதவியான நிலை–3 செயல் அலுவலராக ரூ.20600/– ( Level – 10 ) தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் 01.03.2023 முதல் 5 ஆண்டுகளுக்கு பணியிறக்கம் (Reduction to a lower post for 5 years) செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

3. திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை–3) ஆணையரால் விதிக்கப்பட்ட தண்டனையினை எதிர்த்து மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட மேல்முறையீட்டினை துறைத்தலைவர் வழியாக அரசுக்கு சமர்ப்பித்துள்ளார். அன்னார்

சமர்ப்பித்த மேல்முறையீட்டின் மீது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954–ல் ஒழுங்குமுறை 18 (1) (a)–ன் கீழ் தேர்வாணையத்தின் கருத்து கோரப்பட்டது.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தினல் தனது கருத்தினைப் பின்வருமாறு தெரிவித்துள்ளது:

"இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் வழங்கப்பட்டுள்ள தண்டனையானது மேல்முறையீட்டாளரின் ஊதியத்தை பெருமளவு பாதிக்கும் நிலையில் உள்ளது. அன்னாருக்கு கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு 2 1/2 லட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. இது அவரது வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் என்பதாலும், இயற்கை நியதிக்கு அப்பாற்பட்டது என்பதாலும் இனி வருங்காலங்களில் பணியில் கவனமுடனும், சிரத்தையுடனும் செயல்பட வேண்டும் என்பதற்காகவும் மேலமுறையீட்டாளருக்கு தண்டனை என்பது சந்தர்ப்ப சாட்சியங்களின் அடிப்படையில் போதிய ஆதாரங்களின் அடிப்படையில் நீதி வழங்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில் 5 ஆண்டுகளுக்கு தண்டனை வழங்கினால் ஏறத்தாழ 15 லட்சத்திற்கு மேல் இழப்பீடு வரும் என்பது ஏற்றுக் கொள்ள இயலாத நிலை உள்ளது. ஆதலால், மேல் முறையீட்டாளரின் மேல்முறையீட்டினைப் பகுதியாக அனுமதித்து அன்னாருக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறைத்து "செயல் அலுவலர் நிலை–2 என்ற நிலையிலிருந்து அதன் கீழ்நிலைப் பதவியான நிலை–3 செயல் அலுவலராக ரூ.20600/– ( Level – 10 ) தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் 01.03.2023 முதல் இரண்டு ஆண்டுகளுக்குப் பணியிறக்கம் (Redcution to a lower post for 2 years) செய்யலாம் என தேர்வாணையம் கருதி அவ்வாறே அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது."

5. திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை–3) அரசுக்கு அளித்த மேல்முறையீட்டினை உரிய ஆவணங்களைக் கொண்டும், தமிழ்நாடுஅரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தினைக் கொண்டும், அரசு சுயமாகவும் கவனமாகவும் ஆய்வு செய்தது. திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை–3) திருக்கோயிலுக்கு சேர வேண்டிய பல்வேறு நிலுவை தொகைகளை வசூலிக்காததன் மூலம் அன்னார் தனது கடமையிலிருந்து தவறியுள்ளார். இதன் மூலம் திருக்கோயிலுக்கு வட்டி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இருப்பினும் மேற்படி வரவினங்கள் பின்னர் வசூலிக்கப்பட்டுள்ளன. எனவே, திரு. வே.சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை–3) மீது தொடரப்பட்ட ஒழுங்கு

நடவடிக்கையில் அன்னாரை செயல் அலுவலர் நிலை–2 என்ற நிலையிலிருந்து அதன் கீழ்நிலைப் பதவியான நிலை–3 செயல் அலுவலராக ரூ.20600/– ( Level – 10 ) தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் 01.03.2023 முதல் 5 ஆண்டுகளுக்குப் பணியிறக்கம் (Reduction to a lower post for 5 Years) செய்து இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் மேலே படிக்கப்பட்ட செயல்முறையில் பிறப்பிக்கப்பட்ட தண்டனையைக் குறைத்து, "செயல்அலுவலர் நிலை–2 என்ற நிலையிலிருந்து அதன் கீழ்நிலைப் பதவியான நிலை–3 செயல் அலுவலராக 01.03.2023 முதல் இரண்டு ஆண்டுகளுக்குப் பணியிறக்கம் (Reduction to a lower post for 2 years)" எனும் தண்டனையாக மாற்றியமைக்கலாமென அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

6. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித நகலொன்று மேல்முறையீட்டாளர் திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை–3) அவர்களுக்கு இவ்வரசாணையுடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

(அXXXX வXXXXXXXX)
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர் :

1. திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை–3)
(முதன்மைச் செயலாளர்/ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை வழியாக) (இணைப்புடன்).
2. முதன்மைச் செயலாளர்/ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34 (இணைப்புடன்).

**நகல் :**

3. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
தேர்வாணையச் சாலை, சென்னை–3.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (டு2) துறை, சென்னை–9.
4. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
5. அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
6. இருப்புக்கோப்பு/உதிரி.

[ மாதிரி படிவம் ]

## அரசால் தண்டனை மாற்றியமைப்பிற்கு பின் பணி நியமனம் வழங்குதல்

**இந்து சமய அறநிலையத்துறை, முதன்மைச் செயலாளர் / ஆணையர் அவர்களின் செயல்முறைகள்**

முன்னிலை : திரு. ம. ரXXXXXXXX, இ.ஆ.ப
முதன்மைச் செயலாளர்/ஆணையர்.

செ.மு.ந.க.எண் 24725/2022/எல்2 நாள் 02.06.2025.

பொருள் : பணிப்பிரிவு – திரு. வே.சாXXXXXXXX – செயல் அலுவலர் நிலை 2 முன்னாள் செயல் அலுவலர் – அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் – விராலிமலை வட்டம் மற்றும் நகர் – புதுக்கோட்டை மாவட்டம் – தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை – பணி இறக்கம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது – அரசால் தண்டனை காலம் மாற்றியமைத்து ஆணையிடப்பட்டது – **தண்டனை மாற்றியமைப்பிற்கு பின் பணி நியமனம் வழங்குதல்** – நிலை–2 செயல் அலுவலர் பதவியில் நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை :

1. ஆணையர் செ.மு.ந.க. எண் 24725/2022/எல்.2 நாள்: 21.02.2023
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண். 3181/டிசிடி–சி1/2023–1, நாள் : 24.05.2023.
3. அரசாணை (ப) எண். 19 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி2–1) துறை, நாள்: 02.06.2023
4. திரு. வே. சாXXXXXXXX, நிலை–3 செயல் அலுவலர், கடித நாள்: 28.05.2025.

-----

திரு. வே.சாXXXXXXXX, நிலை–2 செயல் அலுவலர் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில்

பணிபுரிந்த போது ஏற்பட்ட நிர்வாக குறைபாடுகளுக்காக அன்னார் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு விதிகளில் விதி 17 (b)—ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. மேற்கண்ட ஒழுங்கு நடவடிக்கை நேர்வில் பார்வைக் குறிப்பு 1—ன் மூலம் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் அன்னாரை நிலை—3 செயல் அலுவலராக ஐந்து ஆண்டுகளுக்குப் பணி இறக்கம் செய்து ஆணையிடப்பட்டது.

திரு. வே. சாXXXXXXXX, நிலை—2 செயல் அலுவலரால் மேற்கண்ட ஆணையினை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனு மீது பார்வைக் குறிப்பு 3—ல் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட அரசாணையில் திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலர் (நிலை—3) மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் அன்னாரை செயல் அலுவலர் நிலை—2 என்ற நிலையிலிருந்து அதன் கீழ் நிலைப் பதவியான நிலை—3 செயல் அலுவலராக ரூ.20600/— ( Level – 10 ) தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் 01.03.2023 முதல் 5 ஆண்டுகளுக்குப் பணி இறக்கம்(Reduction to a lower post for 5 years) செய்து இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட தண்டனையைக் குறைத்து "செயல் அலுவலர் நிலை—2 என்ற நிலையிலிருந்து அதன் கீழ் நிலைப் பதவியான நிலை—3 செயல் அலுவலராக 01.03.2023 முதல் 2 ஆண்டுகளுக்கு பணிஇறக்கம் (Reduction to a lower post for 2 years)" எனும் தண்டனையாக மாற்றியமைக்கலாம் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட செயல் அலுவலரின் தண்டனைக் காலத்தினைக் குறைத்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளதால் மேற்கண்ட உத்தரவின்படி தனக்கு மீண்டும் நிலை—2 செயல் அலுவலராக பணி நியமனம் வழங்குமாறு பார்வைக் குறிப்பு 4—ல் திரு. வே. சாXXXXXXX, நிலை—3 செயல் அலுவலர் வேண்டியுள்ளார்.

திரு. வே. சாXXXXXXXX, நிலை—3 செயல் அலுவலரின் தண்டனை காலத்தினை 2 ஆண்டுகளாக குறைத்து அரசால் ஆணையிடப்பட்டுள்ள நிலையில் அன்னாருக்கு நிலை—2 செயல் அலுவலர் பதவியில் பணி நியமனம் வழங்கி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

திரு. வே. சாXXXXXXXX, செயல் அலுவலரை தக்க மாற்று ஏற்பாடுகள் செய்து உடனடியாகப் பணியிலிருந்து விடுவிக்குமாறு தொடர்புடைய இணைஆணையரைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணை ஆணையர் ஆணையின்படி தம்மிடம் உள்ள திருக்கோயில்களின் அனைத்துப் பொறுப்புகளையும் ஒப்படைத்துவிட்டு மாறுதல் செய்யப்பட்டுள்ள திருக்கோயிலில் உடன்

பணியில் சேர மேற்கண்ட செயல் அலுலருக்கு ஆணையிடப்படுகிறது.

மாறுதல் செய்யப்பட்ட செயல் அலுவலர் தமது பொறுப்பில் உள்ள அனைத்து திருக்கோயில்களின் பொறுப்புகளையும் நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகள் உட்பட அனைத்தையும் கூடுதல் பொறுப்புச் செயல் அலுவலரிடம் முழுமையாக ஒப்படைத்துப் பின்னர் விடுபட ஆணையிடப்படுகிறது.

பொறுப்பு ஒப்படைப்பு/ஏற்றமைக்கு அறிக்கையனுப்பவும் செயல் அலுவலர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

பொறுப்பு ஒப்படைப்பு/ஏற்றதைக் கண்காணித்து அறிக்கை அனுப்ப தொடர்புடைய இணை/உதவி ஆணையர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒம்/–) ம. ரXXXXXXXX
முதன்மைச் செயலாளர்/ஆணையர்

/உண்மை நகல் உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்

பெறுநர்:

1. திரு. வே. சாXXXXXXXX, நிலை – 3 செயல் அலுவலர்,
அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில்,
பாபநாசம்,
அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்
2. செயல் அலுவலர்,
அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோயில்,
பாபநாசம்,
அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்

**நகல்**

3. உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, திருநெல்வேலி.
4. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, திருநெல்வேலி.
5. இவ்வலுவலக எல் பிரிவு. (எண்ணிடல் மூலம்)
6. மிகை.

**தமிழ்நாடு காவல் துறையில் ஒழுங்கு நடவடிக்கை தொடுக்க தகுதி வாய்ந்த அலுவலர் மற்றும் மேல் முறையீட்டு அலுவலர் பற்றிய விவரங்கள்**

| வ. எண் | பதவித்தரம் | சிறு தண்டனைகள் | பெருந் தண்டனைகள் | பணியிடை நீக்கம் | மேல்முறையீடு |
|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 |
| | | ( வசைகள் / கண்டனம்/ ஊதிய உயர்வு நிறுத்தம் / ஊதியப் பிடித்தம் ) | கட்டாய ஓய்வு / பணியறவு / பணிநீக்கம் /பணி அல்லது ஊதிய இறக்கம் | | |
| 1 | காவலர்கள் (Gr.II,I,HC) மற்றும் அந்த தரத்தில் உள்ளவர்கள் | துணைக் கண்காணிப்பாளர் தரம் (அ) கூடுதல் கண்காணிப்பாளர் தரம் (DSP/ADSP) | கண்காணிப்பாளர் தரம் (SP) | கண்காணிப் பாளர் தரம் (SP) | காவல் துறைத் துணைத் தலைவர் (DIG) |
| 2 | காவல் துணை ஆய்வாளர்கள் மற்றும் அந்த தரத்தில் உள்ளவர்கள் (SI) | துணைக் கண்காணிப்பாளர் தரம் – (வசைகள் / கண்டனம் மட்டும்) மற்றவை கண்காணிப்பாளர் தரம் (SP) | காவல் துறைத் துணைத் தலைவர் (DIG) | கண்காணிப் பாளர் தரம் (SP) | காவல் துறைத் தலைவர் (IGP) |
| 3 | காவல் ஆய்வாளர்கள் மற்றும் அந்த தரத்தில் உள்ளவர்கள் (Inspector) | கண்காணிப்பாளர் தரத்தில் உள்ளவர்கள் (SP) | காவல் துறைத் துணைத்தலைவர் தரத்தில் உள்ளவர்கள் (DIG) | காவல் துறைத் துணைத் தலைவர் தரத்தில் உள்ளவர்கள் (DIG) | காவல் துறைத் தலைவர் (IGP) |
| குறிப்பு : மேல்முறையீடு : இறுதி தண்டனை வழங்கும் அலுவலரின், அடுத்த உயர் பதவி வகிப்பவரிடம் (Appellate Authority) 30 நாட்களுக்குள் செய்ய வேண்டும். | | | | | |
| 4 | துணைக் கண்காணிப்பாளர் தரம் (அரசின் நியமனப் பணி அலுவலர்) (DSP/ADSP) | காவல்துறை இயக்குநர் | அரசு | அரசு அல்லது அரசின் ஒப்புதல் பெற்று இயக்குநர் | அரசு |

# VI

# தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955

## புத்தகங்களை அஞ்சல் மூலம் பெறுவதற்கு...







A/C No. : 4346059654
Name : Ramesh Mahadev
Bank : Kotak Mahindra Bank
Branch : Uthangudi, Madurai
IFSC : KKBK0008720

UPI ID : 7200389831@upi



Paytm, Google Pay, Phone Pay, NEFT or
Other Online Transfer to 7200389831
புத்தக பிரதியானது ஐந்து வேலை நாட்களுக்குள் (Within 5 Working Days)
கூரியர் (Courier Service) மூலமாக தங்களுக்கு கிடைக்கப்பெறும்.

மேற்படி வகையில் செலுத்தியமைக்கான தொடர்புடைய இரசீதின் விவரங்களுடன் தங்களது பெயர், முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு, கீழ்க்கண்ட வாட்ஸ்அப் (அ) தொலைபேசி எண் (அ) மின்னஞ்சலுக்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றினை அனுப்புங்கள்.

**டாக்டர். ரமேஷ் மகாதேவ், எல்.எல்.எம்., பி.ஹெச்.டி. (சட்டம்)**
உயர்நீதிமன்ற வழக்கறிஞர் / நிறுவனர் / மேனாள் உதவி ஆணையர்
வலலுநர் குழு வழக்கறிஞர் – இந்து சமய அறநிலையத்துறை

**அம்மா மல்லிகா - மகேஸ்வரி அன்னதான அறக்கட்டளை**

3/145, கே.பி.பி. டவர், கோடக் மகிந்திரா வங்கி மேல்தளம்,
(மீனாட்சி மிஷன் மருத்துவமனை அருகில்),
மேலூர் மெயின் ரோடு, உத்தங்குடி, மதுரை-625 107
Email : drrameshmahadevadvocate@gmail.com
தொடர்புக்கு : 0452-4352690, 72003 89831 (WhatsApp)
Website : www.vaanamaeellai.org

# VI

# தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955

### தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள் — ஓர் அறிமுகம்

தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறைடு) விதிகள், 1955 விதி 2–ன் படி, அந்த விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகள் "தகுந்த மற்றும் போதுமான காரணங்களுக்காக" (For good and sufficient reasons) வழங்கப்படலாம். ஆனால் எவையெல்லாம் "தகுந்த மற்றும் போதுமான காரணங்களாக" கொள்ளப்படலாம் என்பது இந்த விதி தொகுப்பில் விளக்கப்படவில்லை. ஊழல், தவறான நடத்தை, பணிபுரிவதில் கவனக் குறைவாகவும் அசட்டையாகவும் இருத்தல், மேலதிகாரிகளின் ஆணைகளுக்கும், அறிவுரைகளுக்கும் கீழ்ப்படியாமை, பணம் கையாடல், விதிகளுக்குப் புறம்பாக நடந்து கொள்வது, உண்மையை மறைத்தல், கணக்குகளில் மோசடி செய்தல், ஏமாற்றுதல், அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்துதல், நன்னடத்தைப் பிறழ்தல் முதலியன ஒரு காவல் சார்நிலைப் பணி ஊழியருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கையினை தொடர்வதற்கு "தகுந்த மற்றும் போதுமான காரணங்களாக" கருதப்படலாம்.

விதி 2–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகள் "சிறிய தண்டனைகள்" மற்றும் "பெரிய தண்டனைகள்" என இரு கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

### ஒழுங்கு நடவடிக்கை தொடுக்கும் அதிகாரம்

சிறிய தண்டனை வழங்கக் கூடிய அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவர், பெரிய தண்டனைக்கு வழிகோலும் ஒழுங்கு நடவடிக்கையைத் துவக்கி வைக்கலாம்.

**தமிழ்நாடு காவல் துறையில் ஒழுங்கு நடவடிக்கை தொடுக்க தகுதி வாய்ந்த அலுவலர் மற்றும் மேல் முறையீட்டு அலுவலர் பற்றிய விவரங்கள்**

| வ. எண் | பதவித்தரம் | சிறு தண்டனைகள் | பெருந் தண்டனைகள் | பணியிடை நீக்கம் | மேல்முறையீடு |
|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 |
| | | ( வசைகள் / கண்டனம்/ ஊதிய உயர்வு நிறுத்தம் / ஊதியப் பிடித்தம் ) | கட்டாய ஓய்வு / பணியறவு / பணிநீக்கம் /பணி அல்லது ஊதிய இறக்கம் | | |
| 1 | காவலர்கள் (Gr.II,I,HC) மற்றும் அந்த தரத்தில் உள்ளவர்கள் | துணைக் கண்காணிப்பாளர் தரம் (அ) கூடுதல் கண்காணிப்பாளர் தரம் (DSP/ADSP) | கண்காணிப்பாளர் தரம் (SP) | **கண்காணிப்பாளர் தரம் (SP)** | காவல் துறைத் துணைத் தலைவர் (DIG) |
| 2 | காவல் துணை ஆய்வாளர்கள் மற்றும் அந்த தரத்தில் உள்ளவர்கள் (SI) | துணைக் கண்காணிப்பாளர் தரம் – (வசைகள் / கண்டனம் மட்டும்) மற்றவை கண்காணிப்பாளர் தரம் (SP) | காவல் துறைத் துணைத் தலைவர் (DIG) | கண்காணிப்பாளர் தரம் (SP) | காவல் துறைத் தலைவர் (IGP) |
| 3 | காவல் ஆய்வாளர்கள் மற்றும் அந்த தரத்தில் உள்ளவர்கள் (Inspector) | கண்காணிப்பாளர் தரத்தில் உள்ளவர்கள் (SP) | காவல் துறைத் துணைத்தலைவர் தரத்தில் உள்ளவர்கள் (DIG) | காவல் துறைத் துணைத் தலைவர் தரத்தில் உள்ளவர்கள் (DIG) | காவல் துறைத் தலைவர் (IGP) |
| குறிப்பு : மேல்முறையீடு : இறுதி தண்டனை வழங்கும் அலுவலரின், அடுத்த உயர் பதவி வகிப்பவரிடம் (Appellate Authority) 30 நாட்களுக்குள் செய்ய வேண்டும். | | | | | |
| 4 | துணைக் கண்காணிப்பாளர் தரம் (அரசின் நியமனப் பணி அலுவலர்) (DSP/ADSP) | காவல்துறை இயக்குநர் | அரசு | அரசு அல்லது அரசின் ஒப்புதல் பெற்று இயக்குநர் | அரசு |

தண்டனை வழங்கக்கூடிய அதிகாரியால் மட்டுமே குற்றச்சாட்டுக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதில்லை. குற்றச்சாட்டுகளைப் பிறப்பித்தலும், விசாரணையும், அதிகாரம் பெற்ற தகுந்த அதிகாரியின் ஆணைகளின் கீழ் செயல்படுகிற இன்னொருவரால் செய்யப்படலாம்.

**உரிய சட்ட நடைமுறை**

தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறைடு) விதி தொகுப்பில் சிறிய தண்டனை பிறப்பிப்பதற்கு ஒரு நடைமுறையும், பெரிய தண்டனை பிறப்பிப்பதற்கு பிறிதொரு விரிவான நடைமுறையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. **'சிறிய தண்டனை' வழங்குவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை** [ **விதி** (3 (a)) ]
2. **'பெரிய தண்டனை' வழங்குவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை** [ **விதி** (3 (b)) ]

**ஒழுங்கு நடவடிக்கை தொடர்வதென முடிவு செய்தல்** (Decision to Initiate Disciplinary Proceedings Actions)

ஒழுங்கு நடவடிக்கையினை தொடர்வதென முடிவு செய்த பின்னர் எந்த விதியின் கீழ் நடவடிக்கை தொடுப்பதென்பதனை, அதாவது விதி 3 (a) அல்லது விதி 3 (b)—ன் கீழ் நடவடிக்கை தொடுப்பதென்பதை நன்கு ஆய்வு செய்து முடிவு செய்ய வேண்டும். குற்றச்சாட்டின் தன்மை, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் வழங்கப்பட உத்தேசிக்கும் தண்டனை, விசாரணையின் தன்மை ஆகிய அம்சங்களையும் நன்கு பரிசீலித்து ஒரு முடிவுக்கு வர வேண்டிய கடமை ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலருக்கு உண்டு. விதிகளில் வழங்கப்பட்டுள்ள விருப்புரிமையை (Discretion) விரும்பத்தகாத வகையில் செயல்படுத்தக் கூடாது.

தேவையில்லாத இனங்களில் எல்லாம் விதி 3 (b)—ன் கீழ் நடவடிக்கை தொடுப்பது சரியான அணுகுமுறையன்று. அரசின் 11.03.1993 நாளிட்ட சுற்றறிக்கை எண்.14353 ப.ம.நி.சீ/93—1—ன்படி பெரிய தண்டனை தேவைப்படாத நேர்வுகளில் விதி 3 (b)—ன் கீழ் நடவடிக்கை தொடுப்பதனைத் தவிர்த்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதற்கிணங்க ஊழல், ஒழுக்கமின்மை, ஒழுக்க ஈனம் முதலிய பொதுப்படையான இனங்களுக்கு பாதகம் இன்றி வருவாய்க்கு அதிகமான

சொத்து சேர்த்தல், லஞ்சம் பெறல்/பெற முனைதல், கையாடல், ஆவணங்களைத் தவறாக திருத்துதல், தீய நோக்கினை உள்ளடக்கிய கடமை பிறழ்தல், சொந்த நலனுக்குப் பதவியை தவறாக பயன்படுத்துதல், இரகசியங்களைக் கசியவிடல், பயணப்படி மற்றும் மருத்துவ செலவினை ஈடு செய்யும் இடங்களில் பொய்யான கோரிக்கை சமர்ப்பித்தல் முதலியன விதி 3 (b)—ன் கீழ் நடவடிக்கை தொடுத்திட தகுந்த நேர்வுகளாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிறிய தண்டனை வகையிலான ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை**

தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறைடு) விதிகளின்படி ஒரு காவல் சார்நிலை ஊழியரின் மீது சிறு தண்டனையினை வழங்கிட உள்ள ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியருக்கு குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியர் இழைத்துள்ள பிழைகள் அல்லது வரம்பு மீறிய செயல்களைக் குறிப்பிட்டு அன்னார் மீது 3 (a)—ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும், அதற்கான தற்காப்பு விளக்கம் இருப்பின் அதனை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்குமாறும், தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யப்படும் எனவும் "காரணம் காட்டும் குறிப்பாணை" வழங்கிட வேண்டும்.

குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தற்காப்பு விளக்கம் ஏதும் சமர்ப்பிக்காவிடில் நேரடியாக ஒழுங்கு நடவடிக்கையினை முடிவுக்கு கொண்டு வந்து இறுதி ஆணை பிறப்பித்திடலாம்.

3 (a) பிரிவின் கீழ் நடவடிக்கை தொடர்கையில் வழக்கில் நேரடி விசாரணை தேவையில்லை. ஆவணங்கள் ஏதும் பார்வைக்கு வழங்க வேண்டிய அவசியம் இல்லை/மறுக்கலாம்.

தற்காப்பு விளக்கம் ஏற்புடையதாக இருந்து அந்த நேர்வில் குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியர் குற்றம் இழைக்கவில்லை என நன்கு தெரியும் பட்சத்தில் விளக்கம் ஏற்கப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியர் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார் என இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட ஊழியருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் அல்லது ஒழுங்கு நடவடிக்கையின் முடிவில் குற்றம் இழைத்துள்ளதாக தெரியவரும் பட்சத்தில் சிறு தண்டனைகளை வழங்கி உத்தரவிடலாம்

**தண்டனையாக ஊதிய உயர்வை தள்ளிப்போடுதல்**

விதி 3 (a)–ன் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முடிவாக ஊதிய உயர்வை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்தி வைக்கலாம். இது திரண்ட பயனின்றி (Without cumulative effect or Without accumulated benefit) மற்றும் திரண்ட பயனுடன் (With cumulative effect or With accumulated benefit) என இரு வகைப்படும்.

திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டால், குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டு, தண்டனை காலம் முடிவுற்றதும் நிறுத்தப்பட்ட காலத்தின் ஊதிய உயர்வு வழங்கப்படும். திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டால் தண்டனையாக நிறுத்தப்பட்ட ஊதிய உயர்வின் இழப்பு பணிக்காலம் முழுவதும் இருக்கும். இதுவன்றி ஊதிய உயர்வு தள்ளிப் போகும் காலத்தில் விடுப்பு அனுபவித்தால் அதற்கு இணையான காலத்திற்கு மேலும் ஊதிய உயர்வு தள்ளிப் போகும். திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டால், விடுப்பு எடுப்பதால் ஏற்படும் இடைவெளிகளை சேர்த்து என ஆணையிட வேண்டும். திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தப்படுமேயானால், விடுப்பு எடுப்பதால் ஏற்படும் இடைவெளிகளை நீக்கி கணக்கிட வேண்டும் என ஆணையிட வேண்டும்.

ஊதிய உயர்வானது, ஊதிய நிறுத்த ஆணை வழங்கப்பட்ட தேதிக்கு முன்னரே வழங்கப்பட வேண்டியிருந்து நிர்வாக காரணங்களால் வழங்கப்படாதிருக்கும் நிலையில் அவ்வூதிய உயர்வு அந்த ஆணையினால் பாதிக்கப்படமாட்டாது.

ஊதிய நிறுத்த ஆணை வெளியிடப்படுவதற்கு முன்னர், அந்த தண்டனையால் ஓய்வூதியம் பாதிக்கப்படுமா என்பதைப் பரிசீலித்து, அப்படி பாதிக்கப்படும் எனில் எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதனையும் பரிசீலித்து, இறுதி ஆணையில் ஓய்வூதியத்தின் மீது தண்டனையின் விளைவு பரிசீலிக்கப்பட்டதையும், அது நிறைவேற்றப்படுவது விரும்பப்படுவதையும் தெளிவாக்கிட வேண்டும்.

ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை முழுமையாக செயல்படுத்த இயலாத சூழ்நிலையில் மட்டுமே, தண்டனை முடிவுறாத காலத்திற்கான ஊதிய உயர்வு நிறுத்தத்திற்கு இணையான தொகையை வசூல் செய்திட வேண்டும். தண்டனை காலம் முடிவுறும் முன்னரே புதிய ஊதிய விகிதங்கள் அறிவிப்பு மற்றும் நீதிமன்ற ஆணைக்கு

ஏற்ப தண்டனை காலம் முடிவுறும் முன்னரே பதவி உயர்வு வழங்கல் ஆகிய இனங்களில் இத்தகைய சூழ்நிலை உருவாகிடக் கூடும்.

**ஊதிய உயர்வு நிறுத்த ஆணைகளை வெளியிடுவதற்கு முன் எந்தெந்த இனங்களில் விதி 3 (b)–ன் கீழான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.**

ஊதிய உயர்வு நிறுத்தமென்பது "சிறிய தண்டனை" –க்கான பட்டியலில் இடம்பெற்று இருந்தாலும், ஒரு சில இனங்களில் விதி 3(b)–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பெரிய தண்டனைக்கான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என விதி 3 (a)–ன் கீழ் வரும் இரண்டாவது காப்புரை கூறுகிறது. அதாவது விதி 3 (a)–ன் கீழ் அனுப்பப்பட்ட காரணம் கேட்கும் அறிவிப்பிற்கான பதிலை பரிசீலித்த பின்னர், சம்பந்தப்பட்ட நேர்வில் ஆணையிடப்படவுள்ள ஊதிய உயர்வு நிறுத்தம் ஓய்வூதியத்திற்கு பாதிப்பு விளைவிக்க கூடுமாயினும், அல்லது ஊதிய உயர்வு நிறுத்தம் திரண்ட பயனோடு (காலவரையறை தேவையில்லை) ஆணையிடப்படக் கூடுமாயினும், அல்லது திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஊதிய உயர்வு நிறுத்தம் ஆணையிடப்படக் கூடுமாயினும் விதி 3 (b)–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். ஊதிய உயர்வு நிறுத்தம் சிறிய தண்டனையே ஆயினும், மேலே குறிப்பிட்டுள்ள மூன்று இனங்களில் விதி 3 (b)–ன் கீழ் குறிப்பிட்டுள்ள விரிவான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

**பெரிய தண்டனை வகையிலான ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை**

விதி 3 (b)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கையினை தொடர்வதென முடிவு செய்த பின்னர் குற்றச்சாட்டின் தன்மை, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் வழங்கப்பட உத்தேசிக்கும் தண்டனை, விசாரணையின் தன்மை ஆகிய அம்சங்களையும் நன்கு பரிசீலித்து ஒரு முடிவுக்கு வர வேண்டிய கடமை ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலருக்கு உண்டு. விதிகளில் வழங்கப்பட்டுள்ள விருப்புரிமையை (Discretion) விரும்பத்தகாத வகையில் செயல்படுத்தக் கூடாது. தேவையில்லாத இனங்களில் எல்லாம் விதி 3 (b)–ன் கீழ் நடவடிக்கை தொடுப்பது சரியான அணுகுமுறையன்று.

அரசின் 11.03.1993 நாளிட்ட சுற்றறிக்கை எண்.14353 ப.ம.நி.சீ/93–1–ன்படி பெரிய தண்டனை தேவைப்படாத நேர்வுகளில் விதி 3 (b)–ன் கீழ் நடவடிக்கை தொடுப்பதனைத் தவிர்த்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதற்கிணங்க ஊழல், ஒழுக்கமின்மை, ஒழுக்க ஈனம்

முதலிய பொதுப்படையான இனங்களுக்கு பாதகம் இன்றி வருவாய்க்கு அதிகமான சொத்து சேர்த்தல், லஞ்சம் பெறல்/பெற முனைதல், கையாடல், ஆவணங்களைத் தவறாக திருத்துதல், தீய நோக்கினை உள்ளடக்கிய கடமை பிறழ்தல், சொந்த நலனுக்குப் பதவியை தவறாக பயன்படுத்துதல், இரகசியங்களைக் கசியவிடல், பயணப்படி மற்றும் மருத்துவ செலவினை ஈடு செய்யும் இடங்களில் பொய்யான கோரிக்கை சமர்ப்பித்தல் முதலியன விதி 3 (b)—ன் கீழ் நடவடிக்கை தொடுத்திட தகுந்த நேர்வுகளாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

விதி 3 (b)—ன் கீழ் தொடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கையில் குற்றச்சாட்டுகளைத் தொடுப்பது மிகவும் முக்கியமான பணியாகும்.

**குற்றச்சாட்டு குறிப்பாணை தயார் செய்தல் அல்லது குற்றச்சாட்டுகளைத் தொடுத்தல்**

இந்த விதிகளில் பட்டியலிட்டு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரிகள் தான் ஒழுங்கு நடவடிக்கை துவக்கி குற்றச்சாட்டு குறிப்பாணை தயார் செய்ய வேண்டும். பணியமர்வு செய்யும் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரோ அல்லது அவரால் அதிகாரம் ஒப்பளிக்கப்பட்டவரோ குற்றப்பத்திரிக்கை தயார் செய்ய வேண்டும்

1. குற்றச்சாட்டுகள் குறிப்பானவையாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையிலும் தெரிவிக்கப்பட வேண்டும். தெளிவற்ற தன்மை தவிர்க்கப்பட வேண்டும்.

2. சம்பவம் நடந்த இடம், நாள், நேரம் முதலியன தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும். முதலில் நிகழ்வினை குறிப்பிட்டு பின்னர் குற்றச்சாட்டினைத் தெரிவிக்க வேண்டும்.

3. குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர் மீறியதாக அல்லது கடைபிடிக்கத் தவறியதாக கருதப்படுகிற விதிகள் மற்றும் சட்டங்கள் ஆகியவற்றைக் குற்றச்சாட்டு குறிப்பாணையில் குறிப்பிட வேண்டும். அந்த ஆணை அல்லது விதி அல்லது சுற்றறிக்கை, நிகழ்ச்சி நடந்ததாக கூறப்படும் அன்று செயல்பாட்டில் இருந்ததை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு குற்றத்தையும் தனியாகவும், கருத்து செறிவுள்ளதாகவும்

குறிப்பிட வேண்டும்.

5. ஒவ்வொரு தவறுக்கும் ஒரு குற்றச்சாட்டு பதியலாம். அதே நேரத்தில் ஒரே குற்றச்சாட்டை பலவாறு பிரித்து பட்டியலிடக் கூடாது.

6. குற்றக் குறிப்பாணையில் இந்த தவறுக்காக இன்ன தண்டனை வழங்கப்படும் என்று எவ்விடத்திலும் குறிப்பிடக் கூடாது. அவ்வாறு பதிவுகள் இருப்பின் குற்றக் குறிப்பாணை செல்லாததாக அமைய முக்கிய காரணமாகி விடும்.

ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு தகுதியான பணியமர்வு அதிகாரி அல்லது அவரால் அந்த நடவடிக்கை தொடர்வதற்கு அதிகாரம் ஒப்பளிக்கப்பட்ட அதிகாரி மட்டுமே குற்றச்சாட்டு குறிப்பாணையில் கையொப்பமிட வேண்டும்.

**குற்றக் குறிப்பாணையின் உள்ளடக்கம்**

விதி 3 (b)–ன் கீழ் வழங்கப்படும் குற்றச்சாட்டு கடிதம் அல்லது குறிப்பாணை எப்படி அமைந்திட வேண்டும் என்பதற்கு அரசே ஒரு மாதிரி படிவத்தை வெளியிட்டுள்ளது. இதில் ஒரு பொதுவான மேல் கடிதமும், நான்கு பிற்சேர்க்கைகளும் அடங்கும். குற்றச்சாட்டுகள் பிற்சேர்க்கை ஒன்றிலும், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமான சாட்டுரைகள் பிற்சேர்க்கை இரண்டிலும், குற்றச்சாட்டினை நிரூபிக்க பயன்படுத்தப்பட உள்ள ஆவணங்களின் பட்டியல் பிற்சேர்க்கை மூன்றிலும், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக சாட்சியமளிப்பவர்களின் பட்டியல் பிற்சேர்க்கை நான்கிலும் தெரிவிக்கப்படும். இந்த குற்றச்சாட்டு கடிதம் அல்லது குறிப்பாணை ஒழுங்கு நடவடிக்கையினைத் தொடுத்திடும் தக்க அதிகாரியினால் கையொப்பமிடப்பட வேண்டும்.

ஒரு பொதுவான மேல் கடிதமும்,

பிற்சேர்க்கை I - குற்றச்சாட்டுகள்;

பிற்சேர்க்கை II - குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமான சாட்டுரைகள்;

பிற்சேர்க்கை III - குற்றச்சாட்டினை நிரூபிக்க பயன்படுத்தப்பட உள்ள ஆவணங்களின் பட்டியல்;

பிற்சேர்க்கை IV - குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக சாட்சியமளிப்பவர்களின் பட்டியல் மற்றும்

வினா படிவம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆவணமாகும்.

**குற்றச்சாட்டுக் குறிப்பாணை அல்லது காரணம் காட்டும் குறிப்பாணையினை வழங்குதல் அல்லது சார்வு செய்தல்** (Mode of services – Service of charge memo or Showcause Notice)

விதி 3 (b)–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டால் குற்றச்சாட்டு குறிப்பாணை ஒன்றை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இணைப்புகள் மற்றும் வினா படிவத்துடன் குற்றம் சாட்டப்பட்டவருக்கு சார்பு செய்ய வேண்டியது அவசியமாகும்.

கீழே குறிப்பிட்டுள்ள முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றி குற்றச்சாட்டு கடிதம்/குறிப்பாணை சார்வு செய்யப்படலாம்.

நேரில் சார்வு செய்தல் அல்லது பதிவு தபால் மூலம் ஒப்புகை அட்டையுடன் அனுப்பி வைத்தல் அல்லது

கடைசியாக தெரிந்த முகவரியில் சார்வு செய்தல் அல்லது வீட்டில் உள்ள வயது வந்த உறுப்பினரிடம் சார்வு செய்தல் அல்லது

இவை சாத்தியமில்லையென்றால் கடைசியாக வசித்த முகவரியில் பார்வையில் படும்படி ஒட்டி அதற்கான இரு சாட்சிகள் கையொப்பம் பெற வேண்டும்.

இன்னும் மிக முக்கியமான பொருள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மேற்காணும் மூன்று வழி முறைகளும் கூட பின்பற்ற இயலாத நிலையில் தினசரி நாளிதழ்களில் அறிவிப்பு செய்வதன் மூலமும், சம்பந்தப்பட்ட ஆவணம் பிழையாளி அலுவலருக்கு சார்வு செய்யப்பட்டதாக பொருள் கொள்ளலாம்.

**ஆவணங்களைப் பார்வையிடுதல்**

தனது விளக்கத்தை அளிப்பதற்கு முன்னர் குற்றச்சாட்டினை நிரூபிக்க பயன்படுத்தப்பட உள்ள ஆவணங்களையும், சம்பந்தப்பட்ட பிற ஆவணங்களையும் பார்வையிட அனுமதிக்கும்படி குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியர் கோரலாம். அத்தகைய வேண்டுகோள் பெறப்படின், ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியின் முன்னிலையிலோ அல்லது அவரால் நியமிக்கப்படுகிற அதிகாரியின் முன்னிலையிலோ ஆவணங்களைப் பார்வையிட அனுமதி வழங்கலாம்.

குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் ஆவணங்களைப் பார்வையிட அனுமதி மறுத்திடலாகாது. ஆனால் தொடர்பில்லாதவை என கருதப்படும் ஆவணங்களையும், பொதுநலன் கருதி பார்வையிட அனுமதிக்க இயலாத ஆவணங்களையும், சரியான பிற காரணங்களுக்காக பார்வையிட மறுக்கக் கூடிய ஆவணங்களையும், அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு பார்வையிட அனுமதி மறுக்கலாம்.

**விசாரணை அலுவலர் நியமனம்**

குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியரின் விளக்கத்தைப் பெற்று பரிசீலித்த பின்னர், குற்றச்சாட்டை அவர் மறுக்கின்றார் எனில் நேர்முக விசாரணை நடத்தப்பட வேண்டும். இத்தகைய நேர்வில் குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியர் கேட்கவில்லையென்றாலும், நேர்முக விசாரணை நடத்தப்படவேண்டும். அனுமதிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள்ளோ அல்லது வழங்கப்பட்ட காலநீட்டிப்புக்குள்ளோ விளக்கம் பெறப்படவில்லை என்றாலும் கூட நேர்முக விசாரணைக்கு நடவடிக்கை எடுத்திடலாம்.

குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியர் மீது நேரடி விசாரணை மேற்கொள்ள, ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் விசாரணை அலுவலரை நியமிக்க வேண்டும் அல்லது ஒழுங்கு நடவடிக்கை அலுவலரே விசாரணை அலுவலராகவும் செயல்படலாம்.

விசாரணை அலுவலர் பிழையாளி அலுவலரை விட உயர் நிலை பதவியில் இருக்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்ட நிகழ்வு குறித்து முதல் நிலை அறிக்கை/ஆரம்ப

விசாரணை (Preliminary Enquiry) மேற்கொண்ட அலுவலராக இருக்கக்கூடாது. குற்றம் குறித்து நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட அலுவலராக இருக்கக்கூடாது. பிழையாளிக்கு உறவு நிலையிலோ அல்லது அரசு/துறையின் சாட்சியாக அல்லது குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வுகள் தொடர்பான முடிவான கருத்து அல்லது குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வுகளோடு எத்தகைய ஈடுபாடும் இருப்பவராக இருந்திடலாகாது.

**விசாரணை**

விதி 3 (b)–ன் கீழ் எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கையில் "விசாரணை" ஒரு முக்கிய அங்கம் ஆகும். இந்த விசாரணை "மறுக்கப்பட்ட குற்றச்சாட்டுகள்" குறித்து நடத்தப்பட வேண்டும். குற்றச்சாட்டின் உண்மை நிலையை கண்டறிய உதவுவதோடு, தண்டனை வழங்குவது குறித்து தக்கதோர் முடிவினை ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி எடுத்திடவும், விசாரணையின் முடிவே ஆதாரமாக அமைந்திடும்.

இந்திய சாட்சிய சட்டம் (Indian Evidence Act) மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Criminal Procedure Code) ஆகியவற்றின் கூறுகள் துறையளவிலான பணி ஒழுங்கு நடவடிக்கை விசாரணைக்குப் பொருந்தாது. இருப்பினும் இவைகள் இயற்கை நீதியின் கோட்பாட்டிற்கு இணங்க அமைந்துள்ளதால், மிகவும் நுட்பமாக இல்லாவிட்டாலும், சாதாரணமாக பின்பற்றப்பட வேண்டும். இது நீதி விசாரணை போன்றதொரு தோற்றத்தைக் கொண்டுள்ளதால், ஒருதலைப்பட்சமின்றியும், எந்தவொரு சந்தேகத்திற்கு இடமளிக்காமலும், விசாரணை நடத்தப்படுகிறது என்ற உணர்வினை குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியருக்கு உருவாக்கிட வேண்டும். முக்கியமாக அவருக்கு முறையான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

முதல் நாள் விசாரணைக்கான தேதி, நேரம், இடம் முதலியவைகளை முன்கூட்டியே குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியருக்கு தெரிவிக்க வேண்டும். அன்றைய தினம் அவர் குற்றச்சாட்டினை ஒப்புக் கொள்கிறாரா அல்லது மறுக்கின்றாரா என்பதனை முதற்கண் கேட்டறிய வேண்டும். அவர் குற்றச்சாட்டினை ஒப்புக் கொள்கிற பட்சத்தில் அதனை பதிவாக்கி, அவருடைய கையொப்பத்தை பெற்று, விசாரணை அலுவலர் தன்னுடைய கையொப்பத்தையும் இட வேண்டும். மறுக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் குறித்தே விசாரணை நடத்தப்படும்.

விசாரணை அலுவலர் சாட்சியங்கள், குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் அவர் தரப்பு சாட்சியங்கள், தொடர்புடைய ஆவணங்கள் போன்றவற்றைப் பரிசீலித்தும், நேரடி விசாரணை நடத்தியும் விசாரணை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

**விசாரணை அலுவலர் மாற்றம் ஏற்படும் நிலையில்**

விசாரணை அலுவலர் மாற்றம் ஏற்படும் நிலையில், விசாரணை முடிந்துள்ள நிலையிலிருந்து தொடரலாம் அல்லது மறுபடியும் ஆரம்பத்திலிருந்து விசாரணையினை தொடங்கலாம். நீதியை நிலைநாட்ட எந்தவொரு சாட்சியையாவது குறிப்பாகவோ அல்லது முழுமையாகவோ விசாரிப்பது பொருத்தமாக இருக்கும் என அவர் கருதினால், அத்தகைய சாட்சியை மீண்டும் அழைத்து விசாரணை, குறுக்கு விசாரணை தேவைப்படின் மறுவிசாரணை ஆகியவைகளை புதிதாக பொறுப்பேற்ற விசாரணை அலுவலர் நடத்திடலாம்.

**ஒருதலைப் பட்சமான (ex-parte) விசாரணை**

குற்றச்சாட்டினை முறையாக சார்வு செய்த பின்னரும், குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியர் குறிப்பிட்ட கால அளவுக்குள் விளக்கம் தராமலும், விசாரணைக்கு ஆஜராகாமலும், விதிகளில் காணும் ஏற்பாடுகளை பின்பற்றாமலோ அல்லது பின்பற்ற மறுப்பு தெரிவித்தாலோ, விசாரணை அலுவலர் ஒருதலைப்பட்சமான (ex-parte) விசாரணை நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

**விசாரணை அலுவலரின் அறிக்கை**

குற்றச்சாட்டின் உண்மை நிலையைக் வெளிக்கொணர்ந்து, இறுதி முடிவு எடுப்பதில் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரிக்கு உதவியாக இருப்பதுவே விசாரணை அதிகாரியின் கடமையாகும். குற்றவியல் வழக்குகளில் உள்ளது போல் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படுவதெல்லாம் துறையளவில் நடைபெறும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது. நிகழ்ந்திருக்கக் கூடியதன் மிகுதிப்பாடு (Preference of property) தான் முடிவுகளுக்கு அளவுகோல். கிடைக்கப்பெற்ற ஆவணங்கள், சாட்சிகளின் வாக்குமூலங்கள், ஆதாரங்கள் மற்றும் மறுப்புரைகளின் அடிப்படையில் எந்தவொரு குற்றச்சாட்டு குறித்தும் தனித்தனியே முடிவினைத் தெரிவிக்க வேண்டும். ஒழுங்கு நடவடிக்கையின் கருப்பொருளுக்கு சற்றேதும் தொடர்பில்லாத எந்த ஒரு

காரணத்தையும் கருத்தில் கொள்ளக் கூடாது.

தனது முடிவான அறிக்கையில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது அல்லது நிரூபிக்கப்படவில்லை என்பதை விசாரணை அலுவலர் தெளிவாக குறிப்பிட வேண்டும். சில நேர்வுகளில் குற்றச்சாட்டின் ஒரு பகுதி மட்டுமே நிரூபிக்கப்பட்டதாகக் கருதப்படின் அந்த பகுதி மட்டுமே நிரூபணமானதாகக் குறிப்பிடப்படலாம். எந்த சூழ்நிலையிலும் தண்டனை குறித்து பரிந்துரை செய்யக்கூடாது.

**விதி 3 (b)—ன் கீழான குற்றச்சாட்டை முடிவு செய்தல்**

ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி விசாரணை அறிக்கையினைப் பரிசீலித்து ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தனது கருத்துக்களை (Findings) அளிக்க வேண்டும். விசாரணை அலுவலரின் கண்டுபிடிப்புகள் ஒழுங்கு நடவடிக்கை அலுவலரைக் கட்டுப்படுத்தாது. ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் விசாரணை அறிக்கையினின்று மாறுபட்டும் இறுதி ஆணை வழங்க அதிகாரம் உடையவர் ஆவார்.

**ஒழுங்கு நடவடிக்கையை முடிவு செய்தல் [அ] இறுதி ஆணை வழங்குதல்**

விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் அதனை குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியருக்கு வழங்கி, அவர் மேற்கொண்டு மேல் விளக்கம்/முறையீடு ஏதேனும் செய்ய விரும்பினால் அதனை 15 நாட்களுக்கு மிகாத கால அளவுக்குள் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரம் பெற்ற அலுவலருக்கு அனுப்பி வைக்கும்படி தெரிவிக்க வேண்டும். அவரது மேல் விளக்கத்தினைப் பெற்று மீண்டும் நன்கு பரிசீலனை செய்த பின்னர் இறுதி ஆணை வெளியிடப்பட வேண்டும். இறுதி ஆணை நிலைமையினை முழுமையாக விளக்குகிற பாங்கில் விரிவாக இருந்திட வேண்டும். அதனை தக்க ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியின் பெயரில் வெளியிடுவது மட்டுமின்றி அவரது கையொப்பத்துடன் வெளியிடப்பட வேண்டும். இறுதி ஆணை தக்க முறையில் குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியருக்கு சார்வு செய்யப்பட வேண்டும்.

அனைத்து கட்ட பரிசீலனைக்குப் பின்னர் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்யப்பட்டால் குற்றச்சாட்டின் மீது மேல் நடவடிக்கையை கைவிட்டு அதன்படி இறுதி ஆணையை வெளியிடலாம்.

ஒழுங்கு நடவடிக்கை, கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையின் அறிக்கையின் அடிப்படையில் தொடுக்கப்பட்டிருந்தால், மேல் நடவடிக்கையை கைவிடுவது தொடர்பான ஆணைகளை வெளியிடுவதற்கு முன் விழிப்புப்பணி ஆணையரின் (Vigilance and Anti-Corruption Wing) ஒப்புதலை சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத்துறை மூலம் பெற்றிட வேண்டும்.

**குற்றவியல் வழக்கில் தண்டிக்கப்படும் போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை**

குற்றவியல் வழக்கின் முடிவில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட காவல் சார்நிலை ஊழியருக்கெதிராக விதி 3 (b)–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விரிவான நடவடிக்கையினைப் பின்பற்றிட தேவையில்லை. குற்றவியல் வழக்கில் தண்டனைக்குக் காரணமாக அமைந்த நிகழ்ச்சியின் வெளிப்பாடாக, அவர் முறையீடு ஏதேனும் செய்ய விரும்பினால் அதற்கு போதுமான வாய்ப்பினை நல்கி, அந்த முறையீட்டினைப் பரிசீலித்த பின்னர் தண்டனை வழங்கப்படலாம்.

**ஒரே நேரத்தில் குற்றவியல் மற்றும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை**

ஒரே நேரத்தில் குற்றவியல் மற்றும் துறை நிலையிலான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் நேர்வுகளில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் இருந்து பெற்று நடவடிக்கை எடுத்திடலாம். குற்றவியல் நடவடிக்கையில் விடுவிக்கப்படுவதோ அல்லது தண்டிக்கப்படுவதோ வேறு நிலைப்பாடு.

அலுவலகப் பணிக்கு சற்றேதும் தொடர்பில்லாத குற்றவியல் வழக்கினை எதிர்கொண்டுள்ள அரசு ஊழியரை தேவைப்படும் நேர்வுகளில் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கலாம். குற்றவியல் வழக்கின் முடிவைப் பொறுத்து அவருக்கு எதிராக துறையளவிலான ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடலாம்.

**பதவி உயர்வு**

பதவி உயர்வுக்கு முன்னர் காவல் சார்நிலை ஊழியர் மீது திட்டவட்டமான குற்றச்சாட்டு சுமத்தினாலோ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தாலோ பதவி உயர்வு பட்டியலில் அவர் பெயர் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் கூட அவருக்கு பதவி உயர்வு பாதிக்கும்.

**தற்காலிக பணிநீக்க ஒழுங்கு நடவடிக்கை நடைமுறை**

தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறைடு) விதிகளின்படி,

(அ) மிகக் கடுமையான குற்றச்சாட்டு குறித்து நடவடிக்கை மேற்கொள்ள உள்ள நிலையில்,

(ஆ) இந்திய குற்றவியல் சட்டத்தின்படி, குற்றம் இழைத்து விசாரணை நிலுவையில் இருந்து வரும் நிலையில் தற்காலிகப் பணி நீக்கம் செய்விக்கும் அதிகாரம் குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியரின் நிலைக்கு அடுத்த உயர்நிலையில் உள்ள (Immediate Superior Officer of the State Service or Any Higher Authority) மாநிலப் பணி அலுவலருக்கு மட்டுமே உண்டு. மேலும், அவருக்கும் மேல்நிலையில் உள்ள அலுவலர்களும் இந்த அதிகாரத்தினைச் செயல்படுத்திடலாம்.

**தற்காலிக பணி நீக்க காலத்திற்கான பிழைப்பூதியம் (Subsistence Allowance)**

| | | முதல் 6 மாதம் | 6 மாதத்திற்குப் பின் | |
|---|---|---|---|---|
| | | | உயர்த்தினால் | குறைப்பு செய்யப்பட்டால் |
| 1. | அடிப்படை சம்பளம் | 50% | 75% | 25% |
| 2. | அகவிலைப்படி | 50% | 75% | 25% |
| 3. | வீட்டு வாடகைப்படி | 100% | 100% | 100% |
| 4. | நகர ஈட்டுப்படி | 100% | 100% | 100% |
| 5. | மருத்துவப்படி | NIL | NIL | NIL |

உரிய ஆணை வழங்கப்பட்டு, பணியாளர் பணியிலிருந்து விடுவிக்கப்படும்

நாளிலிருந்து தற்காலிகப் பணி நீக்கத்தில் இருப்பதாகக் கொள்ளலாம்.

இந்த விதிகளின் கீழ் செய்யப்பட்ட (அ) செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட தற்காலிக பணி நீக்க உத்தரவு, அதனைப் பிறப்பித்த அதிகாரியினால் (அ) அதன் சார்நிலை அதிகாரியினால் எந்நேரத்திலும் திரும்பப் பெறப்படலாம்/நீக்கப்படலாம்.

காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு 48 மணி நேரம் காவல்துறையில் காவலில் வைக்கப்பட்டால், கைது செய்யப்பட்ட நேரத்தில் இருந்து தற்காலிக பணி நீக்கத்தில் இருப்பதாகக் கருதி உத்தரவிட வேண்டும். இதற்கு காவல்துறையின் FIR மற்றும் மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவு இரண்டும் தேவை.

தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள ஒருவர் ஓய்வு நாளன்று (Date of Superannuation) ஓய்வுபெற அனுமதிக்கலாகாது. அன்னாரின் பணி ஓய்வு நாளில் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப்பட உரிய அரசாணைகளை வழங்கிட வேண்டும். அந்த அதிகாரம் அரசுக்கு மட்டுமே உண்டு.

**பணியிலிருந்து ஓய்வு பெறும் நாளன்று தற்காலிக பணி நீக்கத்தில் வைத்திடும் ஆணை வெளியிடுதலைத் தவிர்த்தல்**

பணியிலிருந்து ஓய்வு பெறும் நாளன்று பிறப்பிக்கப்படும் தற்காலிக பணி நீக்க ஆணைகளை தவிர்த்திடுவது தொடர்பாக அரசாணை பலவகை எண் 144 ப.ம.நி.சீ.(N) துறை, நாள்: 8.6.2007–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆணைகளுக்கிணங்க கடைசி தருணத்தில், அதாவது பணியிலிருந்து ஓய்வு பெறும் நாளன்று அரசு (அ) காவல் சார்நிலை ஊழியரை தற்காலிக பணிநீக்கத்தில் வைத்திடுவது தவிர்க்கப்பட வேண்டும். இத்தகைய நேர்வுகளில், அரசு (அ) காவல் சார்நிலை ஊழியரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிப்பதா அல்லது தற்காலிகப் பணி நீக்கத்தில் வைப்பதா என்பதனை அரசு (அ) காவல் சார்நிலை ஊழியர் பணியில் இருந்து ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே முடிவு செய்திட வேண்டும். இந்த மூன்று மாத கால அளவுக்குள் ஏதேனும் ஒழுங்கீனம் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் அதிவேகமாக நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட அரசு (அ) காவல் சார்நிலை ஊழியருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை தமிழ்நாடு ஓய்வூதிய விதி தொகுப்பின் விதி 9–ன் கீழ் தொடரப்படும் என்பதனை தெளிவாக குறிப்பிட்டு, அவருக்கு ஓய்வு பெறுவதற்கு அனுமதியை வழங்கிடலாமா அல்லது குற்றச்சாட்டின் கடுமையினைக் கருதி அவரை தற்காலிகப் பணி நீக்கத்தில் வைத்திட வேண்டுமா என்பதனை விரைந்து முடிவு செய்திடல் வேண்டும். நிலுவையிலுள்ள ஒழுங்கு

நடவடிக்கையில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் நேர்வில் ஓய்வூதிய பிடித்தம் அல்லது ஓய்வூதியத்தில் குறைப்பு போன்ற தண்டனை மட்டுமே சாலப் பொருத்தமாக இருக்குமென சம்பந்தப்பட்ட அதிகாரியால் கருதப்படின், சம்பந்தப்பட்ட அரசு (அ) காவல் சார்நிலை ஊழியருக்கெதிரான ஒழுங்கு நடவடிக்கை தமிழ்நாடு ஓய்வூதிய விதி தொகுப்பின் விதி 9–ன் கீழ் தொடரப்படும் என்பதனை தெளிவாக குறிப்பிட்டு, அவர் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதித்திடலாம். இந்த ஆணைக்கிணங்க ஒரு அரசு (அ) காவல் சார்நிலை ஊழியர் பணியில் இருந்து ஓய்வு பெறும் நாளிலிருந்து 3 மாதங்களுக்கு முன்பே ஆணைகள் வெளியிடுவதில் சரி வர நடவடிக்கை எடுக்கப்படாமல் தவறுகள் இழைக்கப்படுமாயின், அத்தகைய நேர்வுகள் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட காரணமாக அமைந்திடக் கூடும்.

**ஓய்வு பெறும் நாளன்று ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்து, தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் நேர்வில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை**

அரசு (அ) காவல் சார்நிலை ஊழியர் ஓய்வு பெறும் தருணத்தில், அவருக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்து, குற்றச்சாட்டின் தன்மை கடுமையாக இருந்து, அவர் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டிருந்தால், அடிப்படை விதி 56 (1) (c)–ன் கீழ் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதி மறுத்து, அவரது பணியினை விசாரணை முடிந்து இறுதி ஆணை வெளியிடப்படும் வரை நீட்டித்து ஆணையிடப்பட வேண்டும்.

விதி 3 (b)–ன் கீழ் தொடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையினை எதிர்கொண்டுள்ள காவல் சார்நிலை ஊழியர் பணியில் இருந்து ஓய்வுபெற அனுமதிக்கப்பட்டால், நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கை தமிழ்நாடு ஓய்வூதிய விதி தொகுப்பின் விதி 9–ன் கீழ் தொடரப்படும். ஒழுங்கு நடவடிக்கையை தொடுத்திட்ட அதிகாரியே, அதனை தொடர்ந்து நடத்தி, குற்றச்சாட்டின் மேல் முடிவினை கண்டறிந்து, இறுதி ஆணைகள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**மேல்முறையீடு** (Appeal) : விதி 6–ன்படி, உத்தரவு தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் மேல் முறையீடு செய்யப்பட வேண்டும். ஒழுங்கு நடவடிக்கை எடுத்த அதிகாரியின் மேலதிகாரிக்குத்தான் மேல்முறையீடு அனுப்ப வேண்டும். மேல் முறையீடு குற்றம் சாட்டப்பட்ட காவல் சார்நிலை ஊழியரின் பெயரிலேயே இருக்க வேண்டும். (விதி 8)

முறையற்ற அல்லது மரியாதை இல்லாத வாக்கியங்கள் பயன்படுத்தப்படக் கூடாது. முறை வழி அலுவலர் மூலம் தான் அனுப்ப வேண்டும் (விதி 9)

**சீராய்வு (அ) திருத்தி அமைத்தல்** (Revision) : விதி 15 (a)–ன்படி, மேல் முறையீட்டு அலுவலர், துறைத்தலைவர், அரசு ஆகியோர் தானாகவே உரிய ஆவணங்களைப் பெற்று ஆய்வு செய்து தண்டனையை திருத்தி அமைக்கும் அதிகாரம் உண்டு. (காலக்கெடு தண்டணை வழங்கப்பட்ட 6 மாதத்திற்குள்)

**மறு ஆய்வு** (Review) : விதி 15 (b)–ன்படி மாநில அரசானது எந்நேரத்திலும் தாமாகவோ அல்லது வேறுவகையில், மறு ஆய்வின் கீழ் உள்ள உத்தரவு பிறப்பிக்கும் நேரத்தில் கிடைக்காத (அ) முன்னிடப்படாத புதிய சான்றுப் பொருள் (அ) சாட்சியம் மற்றும் வழக்கின் போக்கை திசை மாற்றக் கூடிய தன்மையிலானது அவர்தம் கவனத்திற்கு வந்திடும்போது, இவ்விதிகளின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மறு ஆய்வு செய்திடலாம்

.

**நீதிமன்ற தீர்வழிகள் :** மேற்கண்ட இனங்களில் அல்லது நடைமுறைகளில் குறையுற்ற அல்லது திருப்தி இல்லாத நிலையில் குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர், **மாண்பமை உயர்நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தில்** மனு செய்து தகுந்த மற்றும் இன்ன பிற தீர்வழிகளை பெறலாம்.

# தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955

[TAMILNADU POLICE SUBORDINATE SERVICE (DISCIPLINE AND APPEAL) RULES, 1955]

**விதி 1 :** (1) இவ்விதிகள் தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955 என அழைக்கப் பெறலாம்.

(2) இவ்விதிகள் 1955 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.அவை ஜனவரி 1, 1955 முதல் செயல்லாற்றலுக்கு வரும்.

(3) இவ்விதிகளின் பணி என்பதானது, நேர்விற்கேற்ப தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி அல்லது தமிழ்நாடு சிறப்பு காவல் சார்நிலைப் பணி எனப் பொருள்படும்.

**விளக்கம் :** மாநிலத்தின் காவல் பணியின் உறுப்பினர் மற்றும் காவல் பதவி வகிக்கும் நபர், இவர்கள் பணியானது குழுமம்/கழகம்/உள்ளாட்சி அமைப்பின் கீழ் இருப்பினும்,அவர் தம் ஊதியமானது மாநில தொகு நிதியிலிருந்து பெறாது வேறு நிதியிலிருந்து பெற்றாலும், இவ்விதிகளின் பொருட்டு மாநில காவல் பணி உறுப்பினராகவும், காவல் பதவி வகிப்பவராகவும் கருதப்படுவார்கள். **[அ.நி. எண்.1380 உள்துறை நாள் : 5.6.1969]**

**விதி 2 :** (1). கீழ்கண்ட தண்டனைகள் தகுந்த காரணங்களின் பேரில் காவல் பணி உறுப்பினர்களின் மேல் விதிக்கப்படும். அவையாவன :–

(அ) கண்டனம் ;

(ஆ) தண்டம் அல்லது அபராதம் ;

(இ) திறன் தடை நிறுத்தம் உள்ளிட்ட ஊதிய உயர்வுகள் அல்லது பதவி உயர்வு நிறுத்தம் ;

(ஈ) முதுநிலைப் பட்டியலிலிருந்து கீழ்நிலைக்கு, கீழ் பதவிக்கு தரம் குறைத்தல் அல்லது அதே சம்பள ஏற்ற முறையில் கீழ் நிலைக்கு குறைத்தல் ;

(உ) (1) உத்தரவினைப் பொருட்படுத்தாததினாலும், உத்தரவினை மீறியதினாலும் மாநில அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியதனால் ஊதியத்திலிருந்து பிடித்தம் ;

(2) ஊதிய உயர்வு நிறுத்த ஆணை செயல்படுத்த இயலாவிடில், மொத்த ஊதிய உயர்வுகளின் தொகைக்கு ஈடான தொகை ஊதியத்திலிருந்து பிடித்தம்;

**விளக்கம் :** திறன் பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்த நேர்வில், ஊதிய உயர்வு நிறுத்த தொகைக்கு மூன்று மடங்கு ஈடான தொகை பிடித்தம் மேற்கொள்ளப்படும்.

(3) சம்பள ஏற்ற முறையில் கீழ் நிலைக்கு இறக்கம் செய்யப்படும் உத்தரவு செயல்படுத்த இயலாத போது, மொத்த தொகைக்கு ஈடாக ஊதியத்தில் பிடித்தம்.

(ஊ) உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் நேர்வில் கீழ் நிலை பதவிக்கு அல்லது கீழ் சம்பள ஏற்ற முறைக்கு அல்லது ஒரே சம்பள ஏற்ற முறையில் கீழ்நிலைக்கு இறக்கம் என்பதான தண்டனை செயல்படுத்த முடியாத நிலையில் 15 நாட்களுக்கு மேற்படாத பணியிடை நீக்க காலம் ;

(எ) விதி 3 (உ) – ன் கீழ் ஏற்கனவே பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நபருக்கு அவசியமான அளவிற்கு பணியிடை நீக்கம் ;

(ஏ) குடிமைப்பணி ஒழுங்கு முறை விதிகள் பிரிவுக்கூறு 465 (2) அல்லது பிரிவுக் கூறு 465 (அ) – ன் கீழ் அன்றி வேறு வகையாக கட்டாய ஓய்வு ;

(ஐ) மாநில அரசு குடிமைப் பணியிலிருந்து அகற்றப்படுவதானது வருங்கால வேலை வாய்ப்பிற்கு தகுதியற்றவரல்ல ;

(ஒ) மாநில அரசு குடிமைப் பணியிலிருந்து பணியறவு என்பதானது வருங்கால வேலை வாய்ப்பிற்கு தகுதியற்றவராகிறார் ;

மேலும், வரம்புரையாக, அலுவலரின் முறையீட்டை பரிசீலித்த பின்னர் ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையானது அலுவலரின் ஓய்வூதியத்தைப் பாதிக்கும் எனில் அல்லது ஊதிய உயர்வு நிறுத்தம் திரண்ட பயனின்றி 3 வருடங்களுக்கு மேற்படின் அல்லது ஊதிய உயர்வு நிறுத்தம் திரண்ட பயனுடன் கூடிய யாதொரு காலத்திற்குமெனில், கீழ்காணும் துணை விதி(ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் தண்டனை விதிக்கப்படுவதற்கு முன் பின்பற்றப்படும்.

பணித் தொகுதி உறுப்பினர் மேல் விதி 2–ன் துணை விதி (1)–ன் கூறுகள் (ஈ), (ஏ), (ஐ) மற்றும் (ஒ)–ல் குறிப்பிடப் பெற்ற தண்டனைகள் விதிக்கப்பட இருக்கும் ஒவ்வொரு நேர்விலும், நடவடிக்கை எடுப்பதற்கான அடிப்படை ஆதாரங்களை ஒன்றுபடுத்தி, உறுதியான குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகளாகத் தொகுத்து, குற்றச்சாட்டு எந்த புகாரின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதையும், எந்த சூழ்நிலைகள் வழக்கில் உத்தரவு பிறப்பித்தலுக்கு முன்னர் பரிசீலனையில் கொள்ளப்பட உள்ளது என்பதையும் அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும். அலுவலர் குறிப்பிட்ட தகுந்த கால வரையறைக்குள் தனது எதிர் வாதுரையில் தான் விரும்புவது வாய்மொழி விசாரணையா, நேரில் கேட்டறிதலா என்பதைத் தெரிவிக்க வேண்டும். வாய்மொழி விசாரணையானது அலுவலரின் விருப்பத்தின் பேரில் அல்லது தொடர்பான அதிகாரியின் உத்தரவின் பேரில் நடைபெறும்.

அவ்வாறான விசாரணையில், அனுமதிக்கப்படாத புகார் குற்றச்சாட்டுகளும் விசாரிக்கப்படும். குற்றஞ்சாட்டப்பட்டவர் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்திடலாம். நேரில் சாட்சியமும் தந்திடலாம் மற்றும் தான் விரும்பும் சாட்சிகளை அழைத்திடலாம். ஆனால் விசாரணை அதிகாரியானவர் சிறப்பு மற்றும் தகுந்த போதுமான காரணங்களின் பேரில், எழுத்து மூல பதிவின் பேரில் சாட்சியை அழைக்க மறுத்திடலாம். விசாரணை முடிவுற்றவுடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் விரும்பினால் தனது தரப்பு வாதுரையை மற்றுமொரு எழுத்து மூல அறிக்கை மூலம் வைத்திடலாம்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் வாய்மொழி விசாரணையை விரும்பினால் அல்லது விரும்பாமலும், இறுதி உத்தரவு பிறப்பித்தலுக்கு முன்னர் விசாரணையின் யாதொரு நிலையிலும் அவர் விரும்பினால் நேர்முகக் கேட்டறிதல் மேற்கொள்ளப்படலாம். விசாரணை அல்லது நேர்முகக் கேட்டறிதலைப் பற்றிய அறிக்கை, அதை நடத்திய அதிகாரியால், அவர் தண்டனை வழங்க வல்ல அல்லது இயலாத அதிகாரியாக இருப்பினும், தயாரிக்கப்படும் அவ்வறிக்கையானது போதுமான சாட்சியங்களின் பதிவுகளும் ஏதேனும் இருப்பின் மற்றும் விசாரணை கண்டுபிடிப்புகளின் ஆதாரங்களையும் கொண்டதாக இருக்கும். **(அ.நி. எண்.983 உள்துறை நாள் : 1.5.1970)**

**விளக்கம் :** (i) தகுதிகாண் பருவ காலத்தில், தகுதிகாண் பருவத்தினராக பணியமர்வு செய்யப்பட்ட நபரை பணியிலிருந்து விடுவிப்பது அல்லது ஒப்பந்த விதிமுறைகளுக்கிணங்க ஒப்பந்த பணியாளராக உள்ளவரை பணியிலிருந்து விடுவிப்பது என்பது இவ்விதியின் நோக்கத்திற்கிணங்க பணியறவு அல்லது பணி அகற்றுகை எனப் பொருள்படாது.

(ii) அரசு உத்தரவினைப் பொருட்படுத்தாததினாலும் அல்லது மீறியதாலும் அரசுக்கு ஏற்பட்ட பண இழப்பிற்கான தண்டனையானது

ஊதியத்திலிருந்து முழு அல்லது பகுதி பிடித்தத்துடன் அதே குற்றத்திற்காக வேறு வகை தண்டனையும் விதிக்கலாம்.

(2). கூறுகள் (ஏ), (ஐ) மற்றும் (ஒ)—ல் குறிப்பிடப் பெற்ற தண்டனைகள் நேர்விற்கேற்ப, தநா. சார்நிலை காவல் அலுவலர்கள் நடத்தை விதிகள், 1964—ன் விதி 23—ன் மீறலுக்காக விதிக்கலாம். **(அ.நி. எண்.271 உள்துறை (காவல் — V) நாள் : 19.2.1997)**

**விதி 2 (அ) :—** ஆளுநர் அல்லது அவரால் பொது ஆணையின் அல்லது சிறப்பு ஆணையின் மூலம் அதிகாரமளிக்கப் பெற்ற அதிகாரியானவர், பணித்தொகுதியினைச் சார்ந்த யாதொரு நபர் மீது ஒழுங்கு நடவடிக்கைத் தொடரலாம். **(அ.நி. எண்.3011 உள்துறை (காவல் — V) நாள் : 4.12.1973)**

**விதி 3 (அ) :—** பணித்தொகுதி உறுப்பினரின் மேல் விதி 2(1)—ன் கூறுகளில் (அ),(ஆ),(இ),(உ),(ஊ)—ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகள் விதிக்கப்பட இருப்பின், அலுவலருக்கு விருப்பத்தின்படி முறையிட "தகுந்த வாய்ப்பு" அளிக்கப்படும் மற்றும் அவ்வாறான முறையீடு தண்டனை அளிப்பதற்கு முன் பரிசீலனையில் கொள்ளப்படும்.

வரம்புரையாக, பொருண்மைகளின் அடிப்படையில் நீதிமன்ற தண்டனை தீர்ப்புக்குள்ளாகும் அலுவலர் அல்லது தலைமறைவாகியிருக்கும் அலுவலர் அல்லது ஏனைய பிற காரணங்களுக்காக தகவல் தொடர்பு கொள்ள இயலாத அலுவலர் மீது மேற்குறிப்பிட்ட தண்டனைகள், விதிக்கப்பட இருப்பின், இத்துணை விதியின் வேண்டுறுத்தல்கள் பொருந்தாது. **(அ.நி. எண்.4212 உள்துறை நாள் : 27.11.1965)**

வரம்புரையாக,வருவாய் கோட்ட அலுவலர்அல்லது முதன்மை நடுவர் நேர்விற்கேற்ப, காவல் நிலை ஆணை எண் 145 — ன் கீழ் விசாரணை செய்து முடிவுகள் கொண்டு இருப்பின், துறை விசாரணையில் குற்றவாளி தாமே சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்திட விரும்பினாலன்றி, விசாரிக்கும் காவல் அதிகாரியானவர் வருவாய் கோட்ட அலுவலர்அல்லது முதன்மை நடுவர் நேர்விற்கேற்ப முடிவுகளின் அடிப்படையில் குற்றச்சாட்டுகளைத் தொடுத்து, குறுக்கு விசாரணை ஏதேனும் இருப்பின் பதிவு செய்து, வருவாய் கோட்ட அலுவலர்அல்லது முதன்மை நடுவர் முன்னிலையில்

கொடுக்கப்பட்ட வாக்குமூலங்களின் தொடர்ச்சியாக விசாரணை நடவடிக்கைகளைத் தொடர வேண்டுமேயன்றி புதியதாக தொடக்க நிலையில் ஆரம்பித்தல் கூடாது. **(அ.நி. எண்.3313 உள்துறை நாள் : 8.12.1971)**

வரம்புரையாக, குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபருக்கு குற்ற விவர அறிக்கையுடன் ஒவ்வொரு குற்றச்சாட்டும் எந்த புகாரின் அடிப்படையில் மற்றும் எந்த சூழ்நிலைகள் தண்டனை இறுதி உத்தரவு பிறப்பித்தலுக்கு முன்னர் பரிசீலிக்கப்பட உள்ளது என்பதனைத் தெரிவித்த பின்னர், தனது தரப்பு எழுத்து மூல வாதுரையினைக் குறிப்பிட்ட தேதிக்குள் சமர்ப்பிக்கவில்லை எனில் அல்லது விசாரணை அதிகாரியின் முன் முன்னிலை ஆகவில்லை எனில் அல்லது இவ்விதிகளின் காப்புரைகளைக் கடைபிடிக்க தவறுதல் அல்லது மறுத்தலின் பேரில் விசாரணை ஒருதலை பட்சமாக நடத்தப்படும். **(அ.நி. எண்.847 உள்துறை (காவல் – V) நாள் : 15.6.1999)**

**( ஆ).** கூறு (i)–ல் குறிப்பிடப் பெற்ற விசாரணை அல்லது நேர்முகக் கேட்டறிதல் முடிவு பெற்றவுடன் மற்றும் அக்கூறில் குறிப்பிடப் பெற்ற தண்டனை வழங்கவல்ல தகுதி வாய்ந்த அதிகாரியின் எண்ணத்தில், விசாரணையின் போது சேகரிக்கப்பட்ட சாட்சியத்தின் அடிப்படையில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் மீது விதி 2–ல் குறிப்பிடப்பெற்ற தண்டனை ஏதேனும் விதிக்க வேண்டுமாயின், அவ்வாறு தண்டனை உத்தரவிடுவதற்கு முன்னர், விசாரணை அறிக்கையின் அல்லது நேர்முகக் கேட்டறிதலின் விவர நகல்அல்லது இரண்டும், நேர்விற்கேற்ப குற்றஞ்சாட்டப்பட்டவருக்குக் கொடுத்து, அவரிடம் மறு முறையீடு ஏதேனும் 15 நாட்களுக்கு மேற்படாத தகுந்த கால அளவில் சமர்ப்பிக்கக் கோரலாம்.அவ்வாறான முறையீடானது, விசாரணையின் போது சேகரிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் இருந்தால் மட்டுமே, தண்டனை இறுதி உத்தரவு பிறப்பித்தலுக்கு முன்னர் முறையீடு பரிசீலனையில் கொள்ளப்படும். விதிக்கப்பட உள்ள தண்டனைக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கம் தர வாய்ப்பு அளித்திட அவசியமில்லை. **(அ.நி. எண்.1625 உள்துறை (காவல் – V) நாள் : 10.11.1997)**

வரம்புரையாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசனை தேவைப்படும் ஒவ்வொரு நேர்விலும், தண்டணை உத்தரவிடுவதற்கு முன்னர் அதன் ஆலோசனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இருப்பினும், மேலும் வேறு பணித் தொகுதி அல்லது பிரிவிலிருந்து மாற்றல் பணியமர்வு மூலம் தற்காலிகத் துறையில் பணியமர்த்தப்பட்ட ஒரு நபரின் நேர்வில், அரசானது அந்நபரை அப்பதவியிடத்திற்கு முழு நேர உறுப்பினராக பணியமர்த்தப்படுவதற்கு முன்னர் எப்போதேனும், அந்நபரை வேறு பணிப்பிரிவிற்கு அல்லது காலிப் பணியிடத் தேவைக்கு மாற்றிடலாம் அல்லது அந்நபர் அப்பதவியிடத்திற்குரிய தேவையான பணி உளச்சார்பு இல்லாதவராக மாநில அரசு மனநிறைவு கொண்டிருப்பின் இத்துணை விதியின் நடைமுறைகளைப் பின்பற்றாமல் மாற்றிடலாம். **(அ.நி. எண்.2642 உள்துறை நாள் : 20.10.1982)**

குறிப்பு : மற்றுமோர் முறையீடு கோரப்பட்ட பிறகு குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மீது தண்டனை விதிக்கத் தகுதி வாய்ந்த அதிகாரி மாற்றப்பட்டால், தொடர்ந்து வரும் அதிகாரி, தனது முந்தையவரால் மெய்ப்பிக்கப்பட்ட அல்லது மெய்ப்பிக்கப்படாத வழக்கின் தகுதிப்பாடுகளை மறு ஆய்வு செய்ய வேண்டியதில்லை. ஏனெனில் இது மேல்முறையீட்டு அதிகாரியின் அதிகாரங்களின் மீதான வரம்பு கடப்பு செயலாகி, ஒழுங்கு நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தி விடும். குற்ற அலுவலர் மீதான தண்டனை அளவு குறித்து தனது முன்னவரின் தற்காலிக முடிவுகளை இவர் ஏற்றுக் கொண்டால், மறு முறையீட்டின் மீது இறுதி உத்தரவு பிறப்பித்திடலாம்.எனினும், முன்னவர் தற்காலிக முடிவுரையில் குறிப்பிட்டுள்ள தண்டனை அளவு மிகவும் அதிகமாக இருப்பதாக பின்னவர் கருதினால், தண்டனையைக் குறைத்திட பின்னவர் முழு விடுதலையுரிமை கொண்டவராவார். முன்னவர் தற்காலிக முடிவுரையில் குறிப்பிட்டுள்ள தண்டனை அளவு மிகவும் குறைவாக இருப்பதாகவும், பிழையாளி அதிக தண்டனைக்குரியவர் என பின்னவர் கருதினால்,அவர் திருத்திய தற்காலிக முடிவுரையினை குற்ற அலுவலருக்கு அளித்து, அதில் அதிக தண்டனையினைக் குறிப்பிட்டு அதற்கான காரணங்களையும் குறிப்பிடலாம். **(அ.நி. எண்.2899 உள்துறை நாள் : 26.11.1971)**

**(இ).** (i). (1) பொருண்மைகளின் அடிப்படையில் குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டனை தீர்ப்புக்குள்ளாக்கப்படும் அலுவலர் (உடனடியாக தண்டனை விதிக்கப்பட்டாலும், இல்லாவிடினும்) மீது அப்பொருண்மைகளின் கீழ் விதி (ஆ)—ன் கூறு (i)—ன் கீழான தண்டனை விதிக்கப்பட இருப்பின் துணை விதி (ஆ) —ன் வேண்டுறுத்தல்கள் பொருந்தாது. ஆயினும் அலுவலருக்கு

ஏதேனும் முறையீடு தகுந்த வாய்ப்பு அளிக்கப்படும். **[அ.நி. எண்.2642 உள்துறை நாள் : 20.10.1982]**

(2) பொருண்மைகளின் அடிப்படையில் நீதிமன்ற தண்டனை தீர்ப்புக்குள்ளாயிருக்கும் அலுவலர் அல்லது தலைமறைவாகியிருக்கும் அலுவலர் அல்லது ஏனைய பிற காரணங்களுக்காக தகவல் தொடர்பு கொள்ள இயலாத அலுவலர் மீது துணை விதி (ஆ) கூறு (i)–ன் கீழான தண்டனைகள் விதிக்கப்பட இருப்பின் துணை விதி (ஆ) –ன் வேண்டுறுத்தல்கள் பொருந்தாது. **[அ.நி. எண்.4212 உள்துறை நாள் : 27.11.1965]**

(ii) தேசப் பாதுகாப்பு நலனை முன்னிட்டு துணை விதியின் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியதில்லை என ஆளுநர் உளநிறைவு கொண்டால் துணை விதி (ஆ)–வின் நடைமுறைகள் பொருந்தாது.

(ஈ). (i) விலக்கான நேர்வுகளில் துணை விதியின் நடைமுறைகளைப் பின்பற்றுவது கடினமாக இருப்பின் துணை விதி (அ) மற்றும் (ஆ)–வின் அனைத்து அல்லது ஏதேனும் காப்புரைகளை, சிறப்பு மற்றும் எழுத்து மூலப் பதிவுடன் காரணங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவருக்கு அநீதி விளையாவண்ணம் ஒதுக்கி விடலாம்.

(ii) துணை விதி (ஆ)–வின் நடைமுறைகளைப் பின்பற்றுவது பற்றிய ஐயம் எழுமாயின், பணியறவு, பணி அகற்றுகை, அல்லது படிநிலை இறக்க உத்தரவிடும் அதிகாரம் கொண்ட அதிகாரியின் முடிவே இறுதி முடிவாகும்.

(உ). (1) பணித்தொகுதி உறுப்பினர் கீழ்காணும் நேர்வுகளில் பணியிடை நீக்கத்தில் வைக்கப்படலாம் :

(i) பணி உறுப்பினர் மீது கடுமையான குற்றச்சாட்டு விசாரணை நடக்கவிருப்பின் அல்லது நிலுவையில் இருப்பின் ;

(ii) அலுவலருக்கெதிராக குற்றவியல் புகார் புலனாய்வில் இருத்தல் அல்லது விசாரணையில் இருத்தல் மற்றும் பொது நலனை முன்னிட்டு அவ்வாறான பணியிடை நீக்கம் அவசியமாயிருத்தல்.

(2) குற்றவியல் குற்றத்திற்காக / வேறு வகைக்காக 48 மணி நேரத்திற்கு மேல் சிறைக் காவலில் வைக்கப்படும் அலுவலர் இவ்விதியின் கீழ் பணியிடை நீக்கம் செய்யப்பட்டவராகக் கருதப்படுவார்.

(3) பணியிடை நீக்கத்தில் உள்ள பணி உறுப்பினர் மீதான பணியறவு, பணி நீக்கம் அல்லது கட்டாய பணி ஓய்வு தண்டனை, இவ்விதிகளின் கீழான மேல்முறையீடு அல்லது சீராய்வின் பேரில் நீக்கப்பட்டால், மற்றும் வழக்கானது மற்றும் ஒரு விசாரணைக்கு அல்லது வேறு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டால், பணியிடை நீக்க காலமானது பணியறவு, பணி நீக்கம் அல்லது கட்டாய பணி ஓய்வு அசல் உத்தரவு தேதியிலிருந்து மறு உத்தரவுகள் வரும் வரை தொடர்ந்து இருப்பதாகக் கருதப்படும்.

(4) பணி உறுப்பினர் மீதான பணியறவு, பணி நீக்கம் அல்லது கட்டாய பணி ஓய்வு தண்டனையானது நீதிமன்றத்தால் நீக்கப்பட்டால் அல்லது இல்லாநிலையாக்கப்படின், ஒழுங்கு நடவடிக்கை அதிகாரக் குழுவானது வழக்கின் சூழ்நிலைகளைப் பரிசீலித்து, பணியறவு, பணி நீக்கம் அல்லது கட்டாய பணி ஓய்வு தண்டனைக்கான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் மேற்கொண்டு விசாரணை நடத்த முடிவெடுத்தால் பணியமர்வு அதிகாரியால் உத்தரவிடப்பட்ட பணியிடை நீக்கமானது பணியறவு, பணி நீக்கம் அல்லது கட்டாய பணி ஓய்வு அசல் உத்தரவு தேதியிலிருந்து மறு உத்தரவுகள் வரும் வரை தொடர்ந்து இருப்பதாகக் கருதப்படும்.

(5) பணியிடை நீக்க உத்தரவானது அல்லது இவ்விதியின் கீழ் பணியிடை நீக்கம் உத்தரவிடப்பட்டதாகக் கருதப்படும் அதிகாரி அல்லது அதிகாரியின் சார்நிலை அதிகாரி எப்போதேனும் பணியிடை நீக்கத்தைத் திரும்பப் பெற்றிடலாம்.

குறிப்பு :- முதுநிலைப் பட்டியலில் படிநிலை இறக்கத்திற்கு வாய்மொழி விசாரணை அல்லது நேரில் கேட்டறிதல் நடத்தத் தேவையில்லை.(தலைமைக்

காவலர் பதவிக்கு பதவி உயர்வு பெறத்தகுதி வாய்ந்த "அ" மற்றும் "ஆ" பட்டியலைச் சார்ந்த காவலர்கள்).

(ஊ). ஒழுங்கு நடவடிக்கைக்கான ஆணையர் மற்றும் துணை ஆணையர் மேற்காண் துணை விதி (ஆ)(ஐ) ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளை விதித்தல் தொடர்பான ஒழுங்கு நடவடிக்கைக்கான அதிகாரியின் குறிப்பின் மீது அல்லது அதிகாரியின் சார்நிலை அலுவலர் ஆனால் (விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள அதிகாரியை விட) மேல்நிலை அலுவலர் துணை விதி (ஆ) (ஐ)–ன் கீழ் பணி உறுப்பினர் மீது விசாரணை நடத்திடலாம்.

**விளக்கம் :** இவ்விதியின் நோக்கத்திற்கிணங்க "ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி" என்பது விதி 3 (ஆ) (ஐ)–ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளை விதிக்கவல்லயாதொரு அதிகாரி அல்லது அவரின் சார்நிலை அதிகாரி ஆனால் விசாரணைக்குள்ளாகும் அதிகாரியை விட மேல்நிலை அதிகாரி என பொருள்படும். **(அ.நி. எண்.1372 உள்துறை (காவல் – III ) நாள் : 5.5.1980)**

**விதி 4 :–** விதி 2–ன் துணை விதி (1)–ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளை பணி உறுப்பினர் மீது விதிக்கத் தகுந்த அதிகாரிகள் பற்றிய அட்டவணை பின்னிணைப்பாக அளிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், ஒரு வழக்கில் தகுதி வாய்ந்த அதிகாரியானவர் இவ்விதியின் கீழ் தண்டனை விதித்து அல்லது விதிக்க மறுப்பின், கீழ்நிலை அதிகாரியானவருக்கு அதே வழக்கில் இவ்விதியின் கீழ் அதிகார வரம்பு கிடையாது.

வரம்புரையாக, மேலும், பணியமர்வு செய்திட்ட அதிகாரிக்கு சார்நிலை அதிகாரியால் யாதொரு நபரும் பணியறவு, பணி நீக்கம் அல்லது கட்டாய பணி ஓய்வு செய்யப்படமாட்டார்.

வரம்புரையாக, மேலும்,சென்னை சி.ஐ.டி "க்யு" பிரிவில் பணியாற்றும் யாதொரு பணி உறுப்பினர் அப்பிரிவில் பணியாற்றும் காலத்தில், பணியறவு அல்லது பணி நீக்கம் செய்யப்படமாட்டார் அல்லது அப்பிரிவில் பணியாற்றி முடிவுற்ற மூன்று ஆண்டு காலத்திற்கு மாநில அரசின் முன் ஒப்பளிப்பின்றி பணியறவு அல்லது பணி நீக்கம் செய்யப்படமாட்டார்.

வரம்புரையாக, மேலும்,சென்னை சி.ஐ.டி ''க்யு'' பிரிவில் பணியாற்றும் பணி உறுப்பினர், அப்பிரிவில் பணியாற்றுவதற்கு முன்னர் செய்த செயல்களுக்காக பணியறவு அல்லது பணி நீக்கம் செய்திட மாநில அரசின் முன் ஒப்பளிப்பு அவசியமில்லை.

**விளக்கம் :** (அ) ஒரு வழக்கில் கீழ்நிலை அதிகாரி தண்டனை வழங்கியதால் அல்லது விதிக்க மறுத்ததினால் , மேல்நிலை அதிகாரிக்கு அதே வழக்கில் இவ்விதியின் கீழ் தனது அதிகாரத்தினைச் செலுத்திட தடையேதுமில்லை.

(ஆ) ஒரே வழக்கில் கீழ்நலை அதிகாரியினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மீறி, இவ்விதியின் கீழ் மேல்நிலை அதிகாரி தண்டனை விதிக்கலாம் அல்லது விதிக்க மறுக்கலாம்.

(இ) குற்றம் மெய்ப்பிக்கப்படவில்லை என்ற காரணத்தினால், பணி உறுப்பினருக்கெதிரான குற்றச்சாட்டை கீழ்நிலை அதிகாரி கைவிட்டதினால் மட்டுமே, மேல்நிலை அதிகாரி எழுத்து மூல பதிவு காரணங்களின் பேரில் குற்றச்சாட்டை மறுபடியும் புதுப்பித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தடையேதுமில்லை.

(ஈ) (i) ஒரு பணிப்பிரிவு, வகுப்பு அல்லது நிலையில் உள்ள ஒரு பணி உறுப்பினர் பதவி உயர்வு அல்லது மாற்றலின் பேரில், வேறு பணிப்பிரிவு, வகுப்பு அல்லது நிலையில் பணியமர்வு பெற்று பதவி வகிப்பின், பதவி உயர்வு அல்லது மாற்றலுக்கு முன் அவர் தொடர்பான பணி அல்லது நடத்தை காரணமாக தண்டனையானது, பிந்தைய பணிப்பிரிவு, வகுப்பு அல்லது நிலையின் நேர்விற்கேற்ப தகுதி வாய்ந்த அதிகாரியினைத் தவிர்த்து தண்டனை விதிக்கலாகாது.

(ii) ஓர் உறுப்பினர் ஓர் பணியிலிருந்து மற்றொரு பணிக்கு அல்லது ஒரு வகுப்பு, பிரிவு அல்லது நிலையிலிருந்து மற்றொரு வகுப்பு, பிரிவு அல்லது பணி குறைப்பு அல்லது பணி இறக்கம் செய்யப்பட்டால், முன்னர் பதவி வகித்த வகுப்பு, பிரிவு அல்லது

நிலையின் நேர்விற்கேற்ப அவரின் பணி அல்லது நடத்தை காரணமாக யாதொரு தண்டனையானது எதிலிருந்து பணி குறைப்பு அல்லது பணி இறக்கம் செய்யப்பட்டாரோ, அவ்வாறான பணிப் பிரிவு, வகுப்பு அல்லது நிலையின் நேர்விற்கேற்ப தகுதிவாய்ந்த அதிகாரியினைத் தவிர்த்து தண்டனை விதிக்கலாகாது.

வரம்புரையாக, விதி 2 (அ), (ஆ), (இ), (உ) மற்றும் (ஊ)–ல் குறிப்பிடப் பெற்ற சிறு தண்டனைகள், பிழையாளி பணி புரிந்த காலத்தில் இழைத்த தவறுகளுக்காக, எந்த தகுதி வாய்ந்த அலுவலரின் கீழ் பணி புரிந்தாரோ, அவர் மற்றும் அவரைத் தொடர்ந்து பதவி வகிப்பவர் தண்டனை விதிக்கலாம்.

(உ) இவ்விதியின் கீழ் பதவி வகிக்கும் நபர் அல்லது பணி உறுப்பினரின் பணிகள் யாதொரு குழுமம், கழகம், அமைப்பு அல்லது உள்ளாட்சி அமைப்பின் கீழ் பொறுப்புத் தீர்வுக்கு விடப்படின், அதற்கு முன்னர் உறுப்பினர் செய்த தவறுகை அல்லது விடுகைச் செயல்களுக்காக விதி 2–ல் குறிப்பிடப்பெற்ற தண்டனை விதிக்க இருப்பின், விதி 4–ன் கீழ் தண்டனை விதிக்கத் தகுதி வாய்ந்த அதிகாரி மட்டுமே, அவர் பொருத்தமெனக் கருதும், தண்டனைகளை விதி 2–ன் கீழ் விதிக்கலாம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை தொடரும் போது அவர் பணிபுரியும் இரவல் வாங்கிய துறையானது, தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அவ்வாறான நடவடிக்கைகளுக்கு உரிய போதுமான வசதிகளை செய்து தர கடமைப்பட்டதாகும்.

**விதி 4 (அ) :–** யாதொரு வழக்கில், ஒன்றுக்கு மேற்பட்ட பணி உறுப்பினர்கள் தொடர்புற்றிருந்தால், அவர்களில் அனைவரில் உயர் பதவி வகிக்கும் அலுவலர் மேல் தண்டனை விதிக்கத் தகுந்த அதிகாரியே, ஒழுங்கு நடவடிக்கை தொடர மற்றும் விதி 2–ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளை விதிக்கத் தகுதிவாய்ந்தவராவார்.

வரம்புரையாக, ஓர் வழக்கில் ஒரு பணித் தொகுதி உறுப்பினரும் மற்றொரு பணித் தொகுதி உறுப்பினரும் சர்த்து சம்பந்தப்பட்டிருந்தால் அல்லது அவர்தம் வழக்குகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருப்பின், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை

தொடரவும், மற்றும் விதி 2–ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளை விதிக்க அரசு தகுதி வாய்ந்த அதிகாரக் குழுவாகும் மற்றும் அவ்வாறான நேர்வுகளில், அப்பணி உறுப்பினர்களில் உயர்பதவி வகிக்கும் அலுவலரின் தலைமைச் செயலக நிர்வாகத் துறையானது ஒழுங்கு நடவடிக்கையினைத் தொடர்ந்து, இவ்விதிகளில் கண்டுள்ள அனைத்து நடைமுறைகளைப் பின்பற்றி இறுதி உத்தரவு பிறப்பிக்கும். **(அ.நி. எண்.160 உள்துறை ( காவல் – V ) நாள் : 1.2.1996)**

**விதி 5 :–** விதி 2–ல் துணை விதி (1)–ல் கண்டுள்ள தண்டனை உத்தரவுகளுக்கு மேல்முறையீடு செய்திட பணி உறுப்பினர் உரிமை கொண்டவராவார்.

(அ) அட்டவணை காண்க ;
(ஆ) அட்டவணை காண்க ;

**விதி 5 (அ) :–** (1). ஓர் பணி உறுப்பினர் வழக்கில், அரசானது இறுதி அசல் உத்தரவு பிறப்பித்திருந்தால், உத்தரவு அலுவலருக்கு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து இரு தினங்களுக்குள், கீழ்கண்ட காரண அடிப்படைகளின் பேரில் உத்தரவினை மறு ஆய்வு செய்திடுமாறு அரசுக்கு மனு செய்திட அலுவலர் உரிமை கொண்டவராவார் :–

(i) தகுதி வாய்ந்த அதிகாரியினால் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை எனில் ;

(ii) தன்னைக் காத்துக் கொள்ள தகுந்த வாய்ப்பு அலுவலருக்கு அளிக்கப்படவில்லை எனில் ;

(iii) தண்டனை மிகுதியானது அல்லது அநீதியானது எனில் ;

(iv) வழக்கு தொடர்பான புதிய பொருண்மை அல்லது சாட்சியம் கண்டுபிடித்தது தனது அறிவுக்கு புலப்படா வண்ணம் இருந்தது என அரசின் உளநிறைவிற்கேற்ப மெய்ப்பித்தாரெனில் அல்லது தண்டனை விதிக்கப்படுவதற்கு முன் விசாரணையின் போது சகரிக்கப்படவில்லை எனில்

(v) சட்ட கால வரம்பினை பொருத்துகை அல்லது பதிவுரு நடைமுறை தவறு போன்ற பிழைகள் மற்றும் விடுதல்கள் காரணமாயின்.

(2). மேற்பட்ட காரணக் கூறுகளை உளநிறைவு கொண்டு ஏற்கத்தக்க வகையில் இல்லாத மனுக்கள் ஒட்டு மொத்தமாக நிராகரிக்கப்படும். **(அ.நி. எண்.2917 உள்துறை நாள் : 17.8.1965)**

**விதி 6 :–** விதி 2–ல் துணை விதி (1)–ல் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளின் உத்தரவினை எதிர்த்து மேல்முறையீட்டை, கீழ்காணும் காரணங்களை மேல்முறையீட்டுக் குழு பரிசீலிக்கும் :

(அ) ஆணைக்கான நிகழ்வுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனவா எனவும் ;

(ஆ) உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிகழ்வுகள் நடவடிக்கை எடுத்திட போதுமான அடிப்படைகளை கொண்டதா எனவும் ;

(இ) தண்டனை மிகுதியானதாக, போதுமானதாக அல்லது போதுமானதாகற்றவையாக பரிசீலித்த பின்னர் உத்தரவு மூலம்

(i) உறுதிப்படுத்தி, அதிகப்படுத்தி, குறைத்து அல்லது நீக்கிடலாம் ; அல்லது

(ii) தண்டனை வழங்கிய அதிகாரிக்கோ அல்லது வேறு அதிகாரிக்கோ உரிய வழிகாட்டல்களுடன், நேர்விற்கேற்ப, வழக்கின் சூழ்நிலைகளுக்கேற்ப வழக்கை ஒப்படைத்திடலாம்.

**வரம்புரையாக,**

(அ) மேல்முறையீட்டுக் குழுவினால் விதிக்கப்படவிருக்கும் அதிகப்படுத்தப்பட்ட தண்டனையானது வதி 2–ன் கூறு (ஈ) (2) (3) (ஏ) (ஐ) மற்றும் (ஒ) – ன் கீழ் குறிப்பிடப்பெற்ற தண்டனையாக இருப்பின் மற்றும் அவ்வழக்கில் விதி 3–ன் துணை விதி (ஆ) –ன் கீழ் விசாரணை ஏற்கனவே நடத்தப்படவில்லை எனில், மேல்முறையீட்டு அதிகாரியானவர் வதி 3–ன் துணைவிதி (ஆ)–ன் கீழ் விசாரணை ஏற்கனவே நடத்தப்படவில்லை எனில், மேல்முறையீட்டு அதிகாரியானவர் வதி 3–ன் துணை விதி (ஆ)–ன் காப்புரைகளுக்கிணங்க தானே விசாரணை நடத்திடலாம் அல்லது

விதி 3 (ஆ)—ன் காப்புரைகளுக்கிணங்க விசாரணை நடத்த உத்தரவிடலாம். ஆதன் பின்னர், அவ்வாறான விசாரணை நடவடிக்கைகளைப் பரிசீலித்து, விதிக்கப்பட உள்ள தண்டனையை எதிர்த்து மனுதாரருக்கு முறையீடு செய்திட தகுந்த வாய்ப்பளித்து, விசாரணையின் போது செகரிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், தான் பொருத்தமெனக் கருதும் உத்தரவினைப் பிறப்பிக்கலாம்.

(ஆ) மேல்முறையீட்டுக் குழுவினால் விதிக்கப்படவுள்ள அதிகப்படுத்தப்பட்ட தண்டனையானது விதி 2—ன் கூறு (ஈ) (உ) (3) (ஏ) (ஐ) மற்றும் (ஒ)—ன் கீழ் குறிப்பிடப்பெற்ற தண்டனையாக இருப்பின் மற்றும் அவ்வழக்கில் விதி 3 (ஆ)—ன் கீழ் விசாரணை ஏற்கனவே நடைபெற்றிருந்தால், மேல்முறையீட்டு அதிகாரியானவர், விதிக்கப்படவுள்ள தண்டனையை எதிர்த்து மனுதாரருக்கு முறையீடு செய்திட தகுந்த வாய்ப்பளித்து, விசாரணையின் போது செகரிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், தான் பொருத்தமெனக் கருதும் உத்தரவினைப் பிறப்பிக்கலாம்.

(இ) யாதொரு பிற வழக்கில் அதிகப்படுத்தப்பட்ட தண்டனை உத்தரவானது இயன்ற அளவுக்கு விதி 3 (ஆ)—ன் காப்புரைகளைப் பின்பற்றி தண்டனை உத்தரவினை எதிர்த்து மேல் முறையீடு செய்திட மனுதாரருக்கு தகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்டாலன்றி, உத்தரவு பிறப்பித்தல் கூடாது. **[அ.நி. எண்.2348 உள்துறை (காவல் III ) நாள் : 26.8.1977 ; அமல் 24.01.77]**

(2). ஒழுங்கு நடவடிக்கை வழக்கில், தண்டனை வழங்குவதற்கான நடைமுறையில் தவறு ஏற்படுதல், அத்தவறினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அலுவலருக்கு அநீதி ஏற்படாது என்றும், வழக்கின் முடிவை அது பாதிக்காது என்றும் மேல்முறையீட்டுக் குழு கருதும் பட்சத்தில், எழுத்து மூல காரணப் பதிவின் பேரில் அத்தகைய மேல்முறையீட்டுக் குழு தவறை நிராகரிக்கும்.

**விதி 7 :—** ஓர் அதிகாரக் குழுவானது பிறப்பித்த உத்தரவினால், விதி 5—ன் கீழ் மேல்முறையீடு செய்யப்படின், மேல்முறையீட்டு அதிகாரக் குழு பிறப்பித்த உத்தரவை

எழுத்து மூல காரணப் பதிவின் பேரில் தண்டனையினை செயல்படுத்தலாம் ; மேல்முறையீட்டின் பேரில் அல்லது தன்னிச்சையாக தண்டனையினை அதிகப்படுத்தலாம் அல்லது மாற்றிடலாம். **(அ.நி. எண்.2348 உள்துறை (காவல் III ) நாள் : 26.8.1977 ; அமல் 24.01.77)**

**விதி 8 :–** மேல்முறையீடு செய்யும் ஒவ்வொரு நபரும், தனியாகவும் தன் சொந்தப் பெயரிலும் செய்திட வேண்டும்.

**விதி 9 :–** விதி 5–ன் கீழ் மேல்முறையீடு மனுவானது மேல்முறையீட்டாளரின் சார்பான அனைத்து வாதங்கள் கொண்டதாகவும், முழுமையானதாகவும், பொருத்தமானதாகவும், பொருத்தமான நாகரீகமான மொழி நடையிலும் மற்றும் அவமரியாதை மொழியற்று இருக்கும். மேல்முறையீடு மனுவானது மேல்முறையீடு மனுவானது மேல்முறையீட்டாளர் சார்ந்துள்ள துறைத் தலைவர் மூலமாகவும் அல்லது மேல்முறையீட்டிற்கான உத்தரவு பிறப்பித்த அதிகாரி மூலமாகவும் சமர்ப்பிக்கலாம்.

மனுதாரருக்கு உத்தரவு நகல் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு திங்களுக்குள் மேல்முறையீட்டு மனு செய்யப்படவில்லை எனில் யாதொரு மேல் முறையீடும் அனுமதிக்கப்படமாட்டாது.

வரம்புரையாக, மேல்முறையீட்டாளர் அவ்வாறான ஒரு திங்கள் கால வரம்பிற்குள் மேல்முறையீடு செய்திட இயலாததற்கு தகுந்த காரணங்கள் மேல்முறையீட்டுக் குழு உள்நிறைவுக் கொள்ளத்தக்க வகையில் இருப்பின், அவ்வாறான அதிகாரக்குழு, மனுதாரருக்கு உத்தரவு நகல் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து இரு திங்களுக்குள் மேல்முறையீட்டு மனுவை அனுமதிக்கும்.

**விளக்கம் :** தொடர்பான நபர் தலைமறைவாகப் போய்விடின் அல்லது வேறு காரணங்களின் பேரில் தகவல் தொடர்பு கொள்ள முடியாமல் போய்விடின், இவ்விதியில் குறிப்பிடப்பெற்ற ஒரு மாத கால அளவானத, உத்தரவு தேதியிலிருந்து கணக்கில் கொள்ளப்படும்.

**விதி 10 :–** மேல்முறையீடு செய்திட உத்தரவிட்ட அதிகாரியின் நிலைக்கு குறையாத அதிகாரியினால் மேல்முறையீடு மனு நிறுத்தி வைக்கப்படலாம்; அதாவது,

(அ) மேல்முறையீடானது இவ்விதியின் கீழ் மேல்முறையீடு இல்லா நேர்வில் அல்லது,

(ஆ) விதி 9—ன் காப்புரைகளுக்கிணங்கவில்லை எனில்; அல்லது,

(இ) மேல்முறையீடு மனுவானது இரண்டாவதாகவும் முந்தைய மேல்முறையீடு மனுவின் மறுபதிப்பாகவும், முந்தைய மனுவை பரிசீலித்த அதே மேல்முறையீட்டு குழுவை முன்னிட்டும் மற்றும் மறுபரிசீலனை செய்வதற்கான புதிய காரணங்கள், சூழ்நிலைகள் இல்லையெனில் ; அல்லது

(ஈ) இவ்விதிகளின்படி மேல்முறையீட்டிற்கு உரியவரல்லாத அதிகாரிக்கு விண்ணப்பித்தல்.

வரம்புரையாக, மேல்முறையீடு மனு நிராகரிக்கப்படும் ஒவ்வொரு நேர்விலும், மனுதாரருக்கு அதற்கான காரணக் கூறுகள் தெரிவிக்கப்படும்.

வரம்புரையாக, மேலும், விதி 9—ன் முதல் பத்தியின் காப்புரைகள் பின்பற்றத் தவறிய காரணத்தினால் நிறுத்தி வைக்கப்பட்ட மேல்முறையீடு மனுவானது, மனுதாரருக்கு நிறுத்தி வைக்கப்பட்ட தகவல் தெரிவித்த ஒரு திங்களுக்குள், காப்புரைகளைப் பின்பற்றி மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டால் நிறுத்தி வைக்கப்படமாட்டாது.

**விதி 11 :—** இவ்விதிகளின் கீழ் நிறுத்தி வைக்கப்படாத ஒவ்வொரு மேல் முறையீடும், மேல்முறையீடு செய்திட உத்தரவிட்ட அதிகாரியில் தனது கருத்துக்களுடன் மேல்முறையீட்டுக் குழுவிற்கு அனுப்பப்படும்.

**விதி 12 :—** விதி 10—ன் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட மேல்முறையீடு மனுக்களின் பட்டியல் ஒன்று, அதற்கான காரணங்களுடன் அரையாண்டிற்கு ஒரு முறை, நிறுத்தி வைத்திட்ட அதிகாரியினால் மேல்முறையீட்டு அதிகாரிக்கு அனுப்பப்படும்.

**விதி 13 :—** மேல்முறையீட்டு அதிகாரியானவர், இவ்விதியின் கீழ் அனுமதிக்கத்தக்க மேல்முறையீட்டு மனுவை நிறுத்தி வைத்திட்ட சார்நிலை அதிகாரியின் உத்தரவினை பரிசீலித்து, தான் பொருத்தமெனக் கருதும் உத்தரவினைப் பிறப்பிக்கலாம்.

**விதி 14 :-** தகுதி வாய்ந்த அதிகாரியினால் மேல்முறையீடு மனு நிறுத்தி வைக்கப்பட்ட உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு கிடையாது.

**விதி 15 :-** நீக்கம்; **(அ.நி. எண்.2348 உள்துறை ( காவல் III ) நாள் : 26.8.1977)**

**விதி 15 (அ) :-** (1). இவ்விதிகளில் அடங்கியுள்ளது எதுவாயிருப்பினும்,

(i) மாநில அரசு ; அல்லது

(ii) துறைத் தலைவர் ; அல்லது

(iii) மறு ஆய்வு செய்யப்பட உள்ள உத்தரவின் தேதியிலிருந்து ஆறு திங்களுக்குள் மேல்முறையீட்டு அதிகாரி ; அல்லது

(iv) மாநில அரசினால் சிறப்பு அல்லது பொது ஆணையினால் குறிப்பிடப் பெற்ற வேறு ஏதெனும் அதிகாரி, சிறப்பு அல்லது பொது ஆணையில் குறிப்பிடப்பெற்ற காலத்திற்குள், எப்பொழுதினும் தானே அல்லது தனது யாதொரு விசாரணையின் பதிவுருக்களை வரவழைத்து, இவ்விதிகளின் கீழ் பிறப்பித்த உத்தரவினை தேவைப்படின் த.நா. அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் (TNPSC) கலந்தாலோசித்து மறு ஆய்வு செய்திடலாம் ; மற்றும்

(அ) உத்தரவினை உறுதிப்படுத்தலாம், மாற்றலாம் அல்லது நீக்கலாம் ; அல்லது

(ஆ) உத்தரவிடப்பட்ட தண்டனையினை உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகப்படுத்தலாம் அல்லது நீக்கிடலாம் அல்லது யாதொரு தண்டனை விதிக்கப்படவில்லை எனில், தண்டனை விதிக்கலாம் ; அல்லது

(இ) வழக்கின் நிலவரத்திற்கேற்ப பொருத்தமெனக் கருதும் வகையில், உத்தரவு இட்ட அதிகாரிக்கோ அல்லது வேறு அதிகாரிக்கோ வழக்கை ஒப்படைத்து, மறு விசாரணை செய்திடப் பணிக்கலாம் ;

(ஈ) தான் பொருத்தமெனக் கருதும் உத்தரவுகளை நிறைவேற்றிடலாம்.

வரம்புரையாக, மறு ஆய்வு அதிகாரியினால் தண்டனை விதித்து அல்லது அதிகப்படுத்தும் உத்தரவானது, அரசு அலுவலருக்கு விதிக்கப்படவுள்ள தண்டனையினை எதிர்த்து முறையீடு செய்திட தகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்டாலன்றி, உத்தரவு பிறப்பிக்கப்படமாட்டாது. விதி 2–ன் துணை விதி (1)–ன் (ஈ) (2) (ஊ) (எ) (ஒ) மற்றும் (ஐ) கூறுகளில் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளை விதிக்க அல்லது மறு ஆய்வு கோரிய ஆணைகளில் உள்ள தண்டனைகளைஅவ்வாறான கூறுகளில் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளுக்கு அதிகப்படுத்த வேண்டுமாயின், விதி 3–ன் துணை விதி (ஆ)–ல் குறிப்பிடப் பெற்ற நடைமுறைகளைப் பின்பற்றி விசாரணை நடத்தி, விசாரணையின் போது சகரிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் விதிக்கப்பட உள்ள தண்டனையை எதிர்த்து அரசு அலுவலருக்கு முறையீடு செய்திட தகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்ட உத்தரவிடப்படும் மற்றும் வுளுஊ யுடன் கலந்தாலோசிக்க அவசியமாயின் ஆலோசித்த பின்னர் உத்தரவிடப்படும்.

வரம்புரையாக மேலும், மறு ஆய்வு அதிகாரம், துறைத் தலைவரால் செலுத்தப்படுவது என்பது;

(i) மேல்முறையீட்டில் அதிகாரி ஆணையிட்டிருந்தால் ; அல்லது

(ii) மேல்முறையீடு செய்யப்படாது, செய்யப்பட வேண்டிய அதிகாரியானவர் அவரை விட சார்நிலையான அதிகாரியாக இருந்தால்.

(2). மறு ஆய்வு நடவடிக்கையானது,

(i) மேல்முறையீட்டிற்கான கால வரம்பு கடப்பான பின்னர் ; அல்லது

(ii) முறையிடப்பட்ட மேல்முறையீடு ஏதேனும் முடிக்கப் பெற்ற பின்னர் தொடங்கும்

(3). இவ்விதிகளின் கீழ், மேல்முறையீடு மனு மீது நடவடிக்கை மேற்கொள்வது போன்றே, மறு ஆய்வு மனு மீதும் செயல்படத் தொடர்பிருக்கும்.

(4). ஒரே உத்தரவு தொடர்பாக ஒன்றுக்கு மேற்பட்டு மறு ஆய்வு மனு செய்யப்படலாகாது.

வரம்புரையாக, காவலர்கள் (காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் பணியறவு மற்றும் பணி அகற்றம் உத்தரவுக்கு எதிரான தங்கள் மேல்முறையீட்டு உரிமை தீர்ந்த பினனர், அரசிடம் ஒரு முறையீடு செய்து கொள்ள தகுதி கொண்டவர்களாவர்.
வரம்புரையாக மேலும், மறு ஆய்வு செய்ய வேண்டிய உத்தரவு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து ஆறு திங்களுக்குள், மறு ஆய்வு மனு செய்யப்படவில்லை எனில், மறு ஆய்வு மனு அனுமதிக்கப்படமாட்டாது. **(அ.நி. எண்.15 உள்துறை (காவல் III) நாள் : 3.1.1980)**

**விதி 15 (ஆ) :–** இவ்விதிகளில் அடங்கியுள்ளது எதுவும் மாநில அரசை தான் முன்னர் நிறைவேற்றிய உத்தரவினை மறு ஆய்வு செய்வதைத் தடுக்காது.

**விதி 16 :–** இவ்விதிகள் செயலுக்கு வராத போது, யாதொரு உத்தரவு மீதான அலுவலருக்கு மேல்முறையீட்டு உரிமை இருந்திருப்பின், இவ்விதிகளில் கண்டுள்ள எதுவும் அலுவலருக்கான உரிமையை இழக்கச் செய்திடாது. இ வ்விதிகள் செயலக்கு வரும் போது அல்லது அதன் பின்னர் நிலுவையில் உள்ள மேல்முறையீடு மனு, இவ்விதிகளின் கீழான மேல்முறையீடாகக் கருதப்பட்டு, மற்றும் இவ்விதிகளின் கீழான உத்தரவுக்கு எதிரான மேல்முறையீடு போல, விதிகள் 6 மற்றும் 7 பொருந்தும்.

**விதி 17 :–** தற்போது அமலில் உள்ள தமிழ்நாடு குடிமைப்பணி (தேச நலன் காப்பு) விதிகள் 1954–ன் காப்புரைகள், இயன்ற அளவில் , சில மாற்றங்களுக்கிணங்க பணி உறுப்பினர்களுக்கும் பொருந்தும். அதாவது அவ்விதிகளில் விதி 6–ல் "தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்" என்பதற்குப் பதிலாக "தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்" எனக் கொள்ளப்படும்.

**விதி 18 :–** (1). அக்டோபர் / நவம்பர் 1979–ல் பணி நிறுத்தம் அல்லது கிளர்ச்சியில் ஈடுபட்ட பணி உறுப்பினர்களின் மீது, இவ்விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டிருப்போர் பொறுத்து, இவ்விதிகளில் கண்டுள்ளது எதுவாயிருப்பினும்,

அவ்வாறான உறுப்பினர்கள் மீதான தண்டனையை அரசானது தன்னிச்சையாகவோ அல்லது விண்ணப்பத்தின் பேரிலோ விதிக்கப்பட்ட தண்டனையினை நீக்கிட அதிகாரமுண்டு மற்றும் அதிகாரம் கொண்டதாகக் கருதப்படும்.

(2). அவ்வாறே, அரசு ஆணை எண்.1631, உள்துறை நாள்:11.06.1980—ல் இட்ட உத்தரவில், விதிக்கப்பட்ட தண்டனைகளை நீக்கியதானது. இவ்விதிகளின் கீழ் விதிகளின் கீழ் விதிக்கப்பட்டதாகக் கருதப்படும் மற்றும் துணை விதி (1)—ன் கீழ் எப்போதும் செல்லுநிலை உரியதாகவும், அனைத்து காலங்களில் செயலில் உள்ளதாகவும் இருக்கும். **(அ.நி. எண்.1852 உள்துறை (காவல் III ) நாள் : 12.7.1980)**

# தமிழ்நாடு சார்நிலை காவல் அலுவலர்கள் நடத்தை விதிகள், 1964

## TAMIL NADU SUBORDINATE POLICE OFFICERS' CONDUCT RULES, 1964

| விதி எண் | பொருள் மற்றும் விபரம் |
|---|---|
| 1 | குறுந்தலைப்பு |
| 2 | சொற்பொருள் விளக்கங்கள் |
| 3 | நெருங்கிய உறவினரை நிறுவனங்களில் அல்லது நிறுமத்தில் வேலைக்கமர்த்துதல் கூடாது |
| 4 | பரிசில்கள், கொடைகள் மற்றும் வெகுமதிகள் பொதுவாக கூடாது. முன் அனுமதி தேவை |
| 5 | காவல் அலுவலர்களைச் சிறப்பிக்கும் முறையிலான பொதுமக்களின் செய்முறைகள் பொதுவாக கூடாது. முன் அனுமதி தேவை. |
| 6 | பொதுக் கூட்டங்களில் சால்வை முதலியன அளிக்கப்படல் பொதுவாக கூடாது. முன் அனுமதி தேவை |
| 7 | நன்கொடை அல்லது நிதி திரட்டல் பொதுவாக கூடாது. முன் அனுமதி தேவை. |
| 8 | கொடுக்கல் மற்றும் வாங்கல் பொதுவாக கூடாது. முன் அனுமதி தேவை. |
| 9 | இடம் பெயர் சொத்து, இடம் பெயரா சொத்து மற்றும் மதிப்பு மிக்க சொத்து வாங்க முன் அனுமதி தேவை (அ) ஒரு மாதத்திற்குள் அறிவித்தல் வேண்டும்<br>இடம் பெயர் சொத்து – உதாரணம் : நகைகள், LIC பாலிசி, பங்குகள், பிணையங்கள், சீருந்து, மோட்டார் சைக்கிள், குதிரை, டி.வி. முதலியன.<br>(Assets & Liabilities Statement should be submitted every Financial Year) |
| 10 | முதலீடுகள் கூடாது. |

| | |
|---|---|
| 11 | நிறும பதிவு மேம்பாட்டில் மற்றும் மேலாண்மையில் பங்கு கொள்ளல் – முன் அனுமதி தேவை |
| 12 | தனிப்பட்ட வணிகம் அல்லது வேலை கூடாது |
| 13 | நொடிப்பும் வழக்கமான கடன்பாடும் அரசுக்கு அறிவிக்க வேண்டும் |
| 14 | ஏற்பளிக்கப் பெறாத தகவல் அறிவிப்பு கூடாது |
| 15 | இதழ், தொலைக்காட்சி அல்லது வானொலியுடன் தொடர்பு கூடாது |
| 16 | அரசு பற்றிய திறனாய்வு கூடாது |
| 17 | குழு அல்லது வேறு ஏதேனும் ஆணைக் குழுவின் முன்சான்று அளித்தல் கூடாது |
| 18 | அரசியலிலும் தேர்தலிலும் பங்கு கொள்ளல் மற்றும் தேர்தலில் அலுவலரின் நிலை கூடாது |
| 19 | அரசுப் பணியாளர் செயல்கள் மற்றும் நடத்தை குறித்து நியாயம் பேசுதல் கூடாது |
| 20 | பணியாளர் சங்கங்களில் உறுப்பினராதல் கூடாது |
| 20 (அ) | கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் அல்லது வெளிநாட்டிற்குச் செல்வதற்கு முன்னர் மறுப்பின்மைச் சான்றிதழ் பெறுதல் |
| 20 (ஆ) | காவல் பணித் தொகுதி உறுப்பினர், தனது குடும்ப உறுப்பினர் எவரையும் ஆதரவு திரட்ட அனுமதிக்க கூடாது |
| 21 | பணியில் நெருங்கிய உறவினரின் கீழ் அல்லது நெருங்கிய உறவினருடன் பணியாற்றுதலும் அரசு ஆதரவைப் பெறும் நிறுவனங்களில் நெருங்கிய உறவினரை வேலைக்கமர்த்தலும் கூடாது |
| 22 | அலுவல் சார்பற்ற அல்லது மற்ற வெளிச் செல்வாக்கிற்காக ஆதரவு நாடுதல் கூடாது |
| 22 (அ) | மத நோக்கம் / வழிபாட்டுத் தலம் கட்ட நன்கொடை திரட்டக் கூடாது |
| 23 | இரு மனைவியருடன் வாழ்வு கூடாது |
| 24 | கடமையில் நேர்மையும், பற்றும் – எல்லா காலத்திலேயும் |

| | |
|---|---|
| 25 | வேலை நிறுத்தங்கள் ஈடுபடக் கூடாது |
| 26 | விடுப்பு பெறும் நோக்கத்திற்காக மருத்துவர் ஒருவரைக் கலந்தறிதல் கூடாது |
| 27 | தனிப்பட்ட வேலைகளுக்கு காவல் அலுவலரைப் பயன்படுத்துதல் கூடாது |
| 28 | அரசுப் பணிக்கு விண்ணப்பம் துறைத் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும் |
| 29 | பதவி விலகலை விலை கொடுத்து வாங்குதல் கூடாது |
| 30 | பரிந்துரை கூடாது |
| 31 | அமைச்சர்களிடம் முறையீடு கூடாது |
| 32 | பணியிடை நீக்கத்தில் காவல் அலுவலர்கள் சரியான முகவரியைத் துறைத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும் |
| 33 | தனியார் வேலைக்கு காவல் அலுவலர் விண்ணப்பித்தல் – முன் அனுமதி பெற வேண்டும் |
| 34 | காவல் அலுவலர் பணியிடங்களுக்கு விண்ணப்பித்தல் தலைவர் ஒப்புதல் அவசியம் |
| 35 | பொருள் விளக்கம் காணல் |
| 36 | நீக்கமும் காப்பும் |
| 37 | பிற சட்டங்கள் மற்றும் ஆணைகளுக்கான காப்புரைகள் |

# VII

# தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள்

# VII

## தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள்

### பகுதி - I
### பொது

**விதி 1 :–** (a) இவ்விதிகள் தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை & மேல்முறையீடு) விதிகள் என அழைக்கப்படலாம்.

(b) அவை ஜனவரி 1, 1955 முதல் செயல்லாற்றலுக்கு வரும்.

**விதி 2 :–** இவ்விதிகள் மாநில குடிமைப்பணி உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மற்றும் மாநிலத்தின் கீழ் குடிமைப் பதவியிடம் வகிக்கும் ஒவ்வொரு நபருக்கும், பிறவாறு வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தால் தவிர, பொருந்துவனவாகும்.

(i) அப்போதைக்கு செயல்லாற்றலிலுள்ள ஏதேனும் சட்டத்தால் அல்லது விதியினால் அல்லது அதன் கீழ்;

(ii) எவரேனும் அத்தகைய உறுப்பினர் பொறுத்து, அத்தகைய உறுப்பினர் அல்லது நபர் மற்றும் அரசுக்குமிடையிலான நிகழ்நிலை ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையினால்.

**விளக்கம் :–** மாநிலத்தின் குடிமைப் பணியின் உறுப்பினர் மற்றும் மாநிலத்தின் குடிமைப் பதவி வகிக்கும் நபர் இவர்கள் பணியானது குழுமம் / கழகம் உள்ளாட்சி அமைப்பின் கீழ்விடப்படினும் அவர் தம் ஊதியமானது மாநில ஒட்டுமொத்த நிதியிலிருந்து

பெறாவிடினும் இவ்விதிகளின் பொருட்டு மாநில குடிமைப்பணி உறுப்பினராகவும் குடிமைப் பதவி வகிப்பவராகவும் கருதப்படுவார்கள்.

**விதி 3 :–** விதி 2–ன் வகையங்கள் எவ்வாறு இருப்பினும் தமிழக ஆளுநர் அரசிதழ் அறிவிக்கை வாயிலாக, இவ்விதிகளின் பகுதியினை அல்லது முழுமையான செயல்பாட்டிலிருந்து, ஏதேனும் பதவி வகிப்பவரை (அ) தொகுதிப் பதவியிடங்கள் வகிப்பவரை, மாநில ஆளுநர் உரியவாறு பொருந்தாது என விளம்புகை செய்யலாம் மற்றும் அதன் பேரில் இவ்விதிகள் அத்தகைய விலக்கலுக்கு உள்ள வரை அவ்வாறே பொருந்துவது முடிவுறுத்தப்படும்.

**விதி 4 :–** ஐயப்பாடு ஏதேனும் எழுமாயின்,

(a) ஏதேனும் நபருக்கு இவ்விதிகள் பொருந்துவது குறித்து; மற்றும்

(b) இவ்விதிகள் பொருந்திடும் ஏதேனும் நபர் ஒருவர் எந்த குறிப்பிட்ட பணிக்கு அல்லது இரண்டு அல்லது மேற்பட்ட பணிகளில் அத்தகைய பணிகளில் எதனைச் சார்ந்தவர் என்பது குறித்து ஐயப்பாடு எழுமாயின், விடயம் அரசிற்கு சுட்டியுரைக்கப்பட்டு, அதன் முடிவே இறுதியானதாகும்.

## பகுதி - II
## வகைப்பாடு

**விதிகள் 5, 6, 7 :–** நீக்கம்

## பகுதி - III
## தண்டனைகள்

**விதி 8 :–** கீழ்க்காண் தண்டனைகள் தகுந்த மற்றும் போதுமான காரணங்களின் பேரில் மற்றும் இதன் பின்னர் வகை செய்யப்பட்டுள்ளவாறு விதி 2–ல் குறித்துரைக்கப்பட்டுள்ள மாநில குடிமைப் பணி உறுப்பினர் அல்லது மாநிலத்தின் கீழ் குடிமைப் பதவி வகிக்கும் ஒவ்வொரு நபர் மீதும் விதிக்கப்படலாம் அவையாவன:–

(i) கண்டனம்

(ii) தண்டம் / அபராதம் (இவ்விதிகளின் கீழ் அத்தகைய தண்டனை அனுமதிக்கத் தக்க நபர்களின் நேர்வில்)

(iii) ஊதிய உயர்வு அல்லது பதவி உயர்வு நிறுத்தி வைத்தல் இருப்பினும் ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை பணியில் இருக்கும் போது முழுமையாக செயல்படுத்த முடியாது எனில், சொல்லப்பட்ட தண்டனை அரசு ஊழியர் மீது விதிக்கப்படாது.

மேலும் வரம்புரையாக, ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் எழுந்த எதிர்பாரா நிகழ்வு காரணமாக ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை முழுமையாக அமல்படுத்த இயலாதிருக்கிறவிடத்து நேர்வுகளில், செயல்விளைவு அளிக்க முடியாத அத்தகை ஊதிய உயர்வுத் தொகைக்கு நிகரான பணத் தொகை நபரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும்.

இன்னும் வரம்புரையாக ஊதிய உயர்வு திறள் விளைவு நிறுத்த நேர்வுகளில் நிறுத்த உத்தரவிடப்பட்ட ஊதிய உயர்வுகளின் தொகைக்கு மூன்று மடங்கு சமமான தொகை பிடித்தம் செய்யப்படும்

(iv) முதுநிலைப் பட்டியலில் கீழ்நிலைக்கு இறக்கம் அல்லது நேரடியாக நியமனம் செய்யப்பட்ட பதவியிடத்திற்கு கீழ் அல்லாத கீழ் பதவியிடம் அல்லது சம்பள ஏற்ற முறையில் நேரடியாக நியமனம் செய்யப்பட்ட சம்பள ஏற்ற முறைக்கு கீழ் அல்லாத கீழ் சம்பள ஏற்றமுறை அல்லது சம்பள ஏற்ற முறையில் கீழ்நிலை. வரம்புரையாக, சில நேர்வுகளில் சம்பள ஏற்ற முறையில் கீழ்நிலை இறக்க தண்டனை முழுமையாக செயல் விளைவு கொடுக்க முடியாதிருக்கிறவிடத்து, அத்தகைய சம்பள ஏற்ற முறையில் கீழ்நிலை இறக்கத்தின் விளைவாக தண்டனைக் காலத்தில் கழிவுறாத காலத்திற்கு நிகரான பணத்தொகை நபரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும்.

(v) உத்தரவை பொருட்படுத்தாததினால் உத்தரவை மீறியதினாலும் மத்திய, மாநில அரசுகளுக்கு அல்லது உள்ளாட்சிகளுக்கு பண இழப்பு (Pecuniary

Loss) ஏற்படுத்தியதனால், ஊதியத்திலிருந்து பிடித்தம்.

(vi) கட்டாய ஓய்வு

(vii) மாநில அரசு குடிமைப் பணியிலிருந்து பணி விலக்கல் / நீக்கல்

(viii) மாநில அரசு குடிமைப் பணியிலிருந்து பணியறவு

(ix) பணி இடைநீக்கம், விதி 17 (e)–ன் கீழ் நபர் ஒருவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறவிடத்து, தண்டனை விதிக்கும் அதிகாரி அவசியமெனக் கருதுகிற அளவுக்கு

இனங்கள் (i) முதல் (iii), (v) மற்றும் (ix)–ல் குறிப்பிடப் பெற்ற தண்டனைகள் சிறு தண்டனைகளாகவும் மற்றும் இனங்கள் (iv) & (vi) முதல் (viii) வரை பெருந்தண்டனைகளாகவும் கருதப்படும்.

இனங்கள் (vi) (vii) அல்லது (viii)–ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகள் நேர்விற்கேற்ப, தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் விதி 19–ன் மீறுகைக்காக அரசு ஊழியர் மீது விதிக்கப்படும்.

**விளக்கம் I :– பணியிலிருந்து விடுவித்தல்**

(i) தகுதிகாண் பருவத்தில் பணியமர்த்தப்பட்ட நபர் ஒருவரை வகுத்தமைக்கப்பட்ட (அ) நீட்டிக்கப்பட்ட தகுதிகாண் பருவம் முடிவடைவதற்கு முன்னர் அல்லது இறுதியில்; அல்லது

(ii) ஒப்பந்தத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நபர் ஒருவர் ஒப்பந்த விதிமுறைகளின் படி விடுவித்தல்; அல்லது

(iii) ஒப்பந்தத்தின் கீழன்றி வேறு வகையில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட நபர் ஒருவர், பணியமர்வு காலம் கழிவுற்ற பின்னர் விடுவிக்கப்படுதல் என்பது,

இந்த விதியின் பொருளமைவில் பணி நீக்கம் அல்லது பணியறவு எனக் கொள்ளப்படுதலாகாது.

**விளக்கம் II :–** கீழ்க்கண்டவை இந்த விதியின் பொருளமைவில் தண்டனையாகக் கொள்ளப்படாது. அவையாவன,

(i) அரசு ஊழியர் வகிக்கும் பதவியின் பணி நியமன, பணி விதிகளுக்கிணங்க துறைத்தேர்வில் தேர்ச்சி பெறத் தவறியமைக்காக அரசு ஊழியர் ஊதியத்திலிருந்து ஊதிய உயர்வு நிறுத்தி வைத்தல்;

(ii) நிலைபேறுள்ள (அ) நிலைபேறில்லா தகுதியில், பதவி உயர்வுக்கு தகுதி உள்ள பணி, கிரம நிலை (அ) பதவியிடத்திற்கு அரசு ஊழியர் ஒருவரின் பதவி உயர்வு இன்மை.

(iii) அரசு ஊழியர் ஒருவரின் நடத்தை தொடர்பாக அன்றி, நிர்வாக அடிப்படையின் காரணமாக (அ) உயர்பதவிக்கு பொருத்தமற்றவர் எனக் கருதுவதன் அடிப்படையில் அரசு ஊழியர் ஒருவர் உயர்பதவியிலிருந்து கீழ்நிலை பதவிக்கு பதவி இறக்கம்;

(iv) தகுதிகாண் பருவகால விதிகளுக்கிணங்க அல்லது பணி நியமன விதிகளுக்கிணங்க, தகுதிகாண் பருவத்தில் ஏதேனும் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட அரசு ஊழியர் தனது நிலையான பணிக்கு மாற்றப்படுதல்;

(v) மத்திய / மாநில அரசு துறைகளிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து பணி இரவல் பெறப்பட்ட அரசு ஊழியர் திரும்ப பணியமர்த்தப்படல்; மற்றும்

(vi) முதுமை அல்லது பணி ஒய்வு தொடர்பான வகையினங்களுக்கிணங்க அரசு ஊழியர் ஒருவரின் கட்டாயப் பணி ஒய்வு

**விளக்கம் III :–** நபர் ஒருவரை மாநில அரசின் குடிமைப் பணியிலிருந்து பணி விலக்கல் (Removal) செய்வது எதிர்கால வேலைவாய்ப்பிற்கு அவரை தகுதிக் கேடாக்காது. ஆனால் நபர் ஒருவரை மாநில அரசின் குடிமைப் பணியிலிருந்து பணியறவு (Dismissal) செய்வது எதிர்கால வேலைவாய்ப்பிற்குத் தகுதிக் கேட்டினை உண்டாக்கும்.

**விதி 9 :–** (a) விதி 8–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளுடன் கூடுதலாக, வனக்காப்பாளர்கள் மீது 15 திங்களுக்கு மேற்படாத பணியிடை நீக்க தண்டனையினை, வனப்பொறியாளர், வனப் பயன்பாட்டு அலுவலர், மாநில பணி மதிப்பீடு அலுவலர் (அ) மாவட்ட வன அலுவலர் நேர்விற்கேற்ப, விதிக்கலாம்.

(b) விதி 8–ல் அடங்கியுள்ளது எது எவ்வாறு இருப்பினும், இவ்விதிகளின் பின்னிணைப்பு I கலம் (2)–ல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தண்டனைகளை, தமிழ்நாடு சிறைத்துறை சார்நிலைப் பணியாளர்கள், தீயணைப்புத்துறை சார்நிலைப் பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு துறைமுக சார்நிலைப் பணியாளர்கள் மீது கலம் (1)–ல் நேரிணையாக குறித்துரைக்கப்பட்டுள்ள மற்றும் கலம் (3)–ல் நேரிணையாக குறித்துரைக்கப்பட்டுள்ள அதிகாரிகள் விதிக்கலாம்.

(c) (1) ஆளுநர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரி பொது அல்லது சிறப்பு உத்தரவு மூலம் –

(i) ஏதேனும் அரசு ஊழியருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை தொடங்கலாம் ;

(ii) அரசு ஊழியர் எவருக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை துவக்குமாறு, விதி 12–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்க அதிகாரங்கொண்ட தகுதி வாய்ந்த அதிகார ஆயத்திற்கு நெறியுறுத்தலாம்.

(2) விதி 8–ல் இனங்கள் (i) முதல் (iii) & (v)-ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்க தகுதி வாய்ந்த அதிகார ஆயம், விதி 8 இனங்கள் (iv) & (vi) முதல் (viii)-ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிப்பதற்கு ஒழுங்கு நடவடிக்கைகளை, அத்தகைய அதிகாரி பிந்தைய தண்டனைகளை விதிக்க அதிகாரங் கொண்டவரல்ல எனும் பொருண்மை பொருட்டன்றி, அரசு ஊழியருக்கு எதிராக துவக்கலாம்.

**விதி 9A:–** ஒரே துறையினைச் சார்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட அரசு ஊழியர்கள் கூட்டாக ஈடுபட்டிருக்கிற நேர்வில் (அ) அவர்களின் வழக்குகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கும் போது, அத்தகைய அரசு அலுவலர்களுள் உயர் பதவி வகிக்கும் அலுவலரினைப் பொறுத்து அந்த துறையின் உடனடி உயர் அதிகாரி ஒழுங்கு நடவடிக்கை தொடுத்திட அதிகாரங் கொண்டவராவார் மற்றும் அனைவருக்கும் எதிரான ஒழுங்கு நடவடிக்கை ஒன்றாகச் சேர்க்கப்படும். விதி 17 (b)–யின் விதிமுறைக்கிணங்க விசாரணை நடத்தப்படவிருக்கிறவிடத்து, சொல்லப்பட்ட அதிகாரியானவர் தானே விசாரணை நடத்தலாம் அல்லது அத்தகைய அதிகாரிகளுள் உயர் அதிகாரி மீது பெருந் தண்டனை விதிக்கவல்ல தகுதிவாய்ந்த அதிகாரியினால் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரி மூலம் விசாரணை நடத்தச் செய்திடலாம். சொல்லப்பட்ட அதிகாரியானவர், உரிய நிலையில் வழக்கினை இறுதி உத்தரவு பிறப்பித்தலுக்காக, அத்தகைய அரசு அலுவலர்களுள் உயர் பதவி வகிக்கும் அரசு அலுவலர் பொறுத்து விதி 8–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்க அதிகாரங் கொண்ட அந்த துறையின் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு வழக்கினை குறித்தனுப்பிடுவார்.

வரம்புரையாக பல்வேறு துறைகளைச் சார்ந்த கூட்டாக தொடர்புள்ள அரசு ஊழியர்களின் நேர்வில் அல்லது ஒன்றுக்கொன்று தொடர்புள்ள வழக்குகளின் நேர்வில், விதி 8–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்கவும் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை தொடுக்கவும் அரசு அதிகாரங் கொண்டதாகும் மற்றும் அத்தகைய நேர்வுகளில் உயர் பதவி வகிக்கும் அரசு ஊழியர் பொறுத்து, தலைமைச் செயலக நிர்வாக துறை அத்தகைய ஒழுங்கு நடவடிக்கைகளை தொடங்கி, இவ்விதிகளில் விதிக்கப்பட்டுள்ள முழுமையான நடைமுறைகளை பின்பற்றி இறுதி உத்தரவு பிறப்பித்திடும்.

மேலும் வரம்புரையாக, அரசு தலைமைச் செயலரின் நிர்வாக கட்டாள்கையின் கீழ் கூட்டாக ஈடுபட்ட அரசு அதிகாரிகள் நேர்வில் இந்த விதி பொறுந்தாது.

**விதி 10 :–** தண்டம் / அபராதம் தண்டனையானது, சார்நிலைப் பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தமிழ்நாடு கடைநிலைப் பணியினைச் சார்ந்த உறுப்பினர் மீது மட்டும் மற்றும் இவ்விதிகளின் இணைப்பு II–ல் குறித்துரைக்கப்பட்ட பதவியிடங்களில் பதவி வகிக்கும் நபர் மீது விதிக்கப்படலாம்.

**விதி 11 :–** நீக்கம்

**[அ.நி.எண். 19 ப.ம.நி.சீ (என்) துறை, நாள் 11–2–2008; அமல் 11–2–08]**

**விதி 12 :–** (1) விதி 8 இனங்கள் (i) & (iii) முதல் (viii)-ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளில் எதனையும் மாநில அரசானது, மாநிலப் பணி உறுப்பினர் மீது விதிக்கலாம்.

வரம்புரையாக தமிழக ஆளுநர் ஏதேனும் பணி, வகுப்பு (அ) வகையினர்க்கு பணி நியமன அதிகாரியாக இருப்பாராயின், சொல்லப்பட்ட தண்டனைகளில் எதனையும் பணி, வகுப்பு (அ) வகையினைச் சார்ந்த உறுப்பினர்கள் மீது நேர்விற்கேற்ப விதிக்கலாம்.

மேலும் வரம்புரையாக, இவ்விதிகளின் பின்னிணைப்பு (iv)–ல் கலம் (1)–ல் குறித்துரைக்கப்பட்ட பணி உறுப்பினர்களின் நேர்வில், இனங்கள் (i), (iii)–ல் குறித்துரைக்கப்பெற்ற தண்டனைகள், ஊதிய உயர்வு நிறுத்த தொடர்பானவை மற்றும் விதி 8 (v)–ன் தண்டனைகளை கலம் (2) (3) & (4)–ல் நேரிணையான பதிவுகளில் குறிக்கப்பெற்ற அதிகாரிகள் விதிக்கலாம்.

இன்னும் வரம்புரையாக, சென்னையில் உள்ள உயர் நீதிமன்றம் தமிழ்நாடு மாநில நீதித்துறை மாநில நீதித்துறைப் பணி உறுப்பினர்கள் மீது, விதி 8ன் இனங்கள் (i),(iii),(iv),(v), & (ix)–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை மாநிலப் பணி உறுப்பினர்கள் மீது விதிக்கலாம்.

(2) இவ்விதிகளில் அடங்கியுள்ளது எது எவ்வாறு இருப்பினும், நியமன அதிகாரி அல்லது நியமன அதிகாரியினை விட நிர்வாக முறையில் உயர்ந்த எந்த அதிகாரியும், விதி 8 இனங்கள் (i), (iii), (iv), (v) & (ix)–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை மாநிலப் பணி உறுப்பினர்கள் மீது விதிக்கலாம்.

வரம்புரையாக, அரசினால் அல்லது பணி நியமன அதிகாரியினை விட நிர்வாக முறையில் உயர்ந்த அதிகாரியினால் மாநிலப் பணி உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறவிடத்து, விதி 8 இனங்கள் (iii)–ல் தண்டனை பதவி உயர்வு நிறுத்தம் தொடர்பானவை மற்றும் (iv), (vi), (vii) & (viii)–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகள் அரசு (அ) அத்தகைய உயர் அதிகாரியினால் மட்டுமே விதிக்கப்படும்.

மேலும் வரம்புரையாக, மாநிலப் பணியில் உள்ளடக்கப்பட்ட பதவியிடங்கள் வகிக்கும் உறுப்பினர்களுக்கு மாநில அரசு பணி நியமன அதிகாரியாக இருக்கிறவிடத்து, தொடர்பான துறைத் தலைவர்கள் இனம் (i) & (iii)–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை ஊதிய உயர்வு நிறுத்தம் தொடர்புடைய மற்றும் விதி 8 இனங்கள் (v)&(ix)–ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளை அத்தகைய துறைத் தலைவர்களுக்கு உடன் கீழ் அல்லாத அத்தகைய உறுப்பினர்கள் அன்றி பிற உறுப்பினர்கள் மீது விதிக்கலாம்.

இன்னும் வரம்புரையாக, மாநிலப் பணியில் உள்ளடக்கப்பட்ட பதவியிடங்கள் வகிக்கும் உறுப்பினர்களின் நேரடி உயர் அதிகாரியாக உள்ள அனைத்து அதிகாரிகளும் தண்டனை வழங்க அதிகாரமில்லாதிருந்தாலும் கூட அத்தகைய மாநிலப் பணி உறுப்பினர்கள் மீது விதி 17 (b)–யின் கீழ் குற்றச்சாட்டு வனைந்திடலாம் அல்லது விதி 17 (a)–யின் கீழ் காரணங்கேட்கும் குறிப்பாணை வழங்கிடலாம் மற்றும் அவர்கள் தாங்களே விசாரணையினை நடத்தலாம் அல்லது விசாரணையினை நடத்த விசாரணை அதிகாரியினை நியமிக்க தகுதிவாய்ந்த

அதிகாரியினை வேண்டலாம். வழக்கு விசாரணை நடைமுறை முடிந்து இறுதி நிலை எட்டிய பின்னர் அல்லது காரணம் கேட்கும் குறிப்பாணைக்கு விளக்கம் பெற்ற பின்னர் நேர்விற்கேற்ப தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இறுதி உத்தரவிற்கு ஆவணங்களைச் சமர்ப்பித்திடுவார்.

இன்னும் வரம்புரையாக, பணி நியமன அதிகாரி அல்லது பணி நியமன அதிகாரியினை விட நிர்வாக முறையில் உயர்ந்த அதிகாரி மாநிலப் பணி உறுப்பினர்கள் மீது விதி 17 (e)–யின் கீழ் பணியிடை நீக்க உத்தரவு பிறப்பித்திருக்கிறவிடத்து, அத்தகைய உறுப்பினர்கள் மீது விதி 8 இனம் (ix)–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனை விதிக்க தங்கள் அதிகாரத்தினைச் செயலுறுத்தலாம்.

**விதி 13 :–** The authority which may impose suspension referred to in rule 17(e) on members of the State Services shall be as follows: -

| Class of members of the State Service | | Authority which may impose suspension |
|---|---|---|
| 1. | Members of the Tamil Nadu State Judicial Service | The High Court of Judicature at Madras |
| 2. | First Assistant, Board of Revenue | Board of Revenue (Full Board) |
| 3. | Assistant Engineers in Public Works Department, Junior Superintendent, Public Works Workshops, and the Non-technical Personal Assistant to the Chief Engineer, P.W.D. (General) | Chief Engineer, P.W.D.(General) |
| 4. | Assistant Electrical Inspectors, Chief Accountants and Administrative Officers | Chief Electrical Inspector to the Government |
| 5. | All Officers in the cadre of Assistant Surgeons | Director of Medical Services, Chennai, Director of Medical Education, Chennai |
| 6. | Senior and Junior Assistants, Vaccine Section, King Institute, Guindy | Director of Medical Services |

| | | |
|---|---|---|
| 7. | Health Officers, Class-II, Statistician and Medical Officers (Maternal and Child Health), Grade II, Chief Entomologist and Senior Entomologist | Director of Public Health |
| 8. | Lay Secretaries and Treasurers in Government Medical Institutions | Director of Medical Services or Honorary Director of Indigenous Medicine, as the case may be |
| 9. | Assistant Engineers (Highways and Rural Works) | Chief Engineer (Highways and Rural Works) |
| 10. | Members of State Services, where the appointing authority is other than State Government<br>(Vide G.O.Ms.No.19, P&AR(N) Department, dated 11.2.2008) (w.e.f.11.2.2008) | Appointing authority |
| 11. | Other Members of the State Services | State Government |
| 12. | Drugs Inspectors | Drugs Controller |
| 13. | Members of the Tamil Nadu Stationery and Printing Service except the General Manager and the Works Manager | Director of Stationery and Printing |
| 14. | Agricultural Officers | Assistant Director of Agriculture in-charge of a Division / Taluk / Seed Centre or Deputy Director of Agriculture or Joint Director of Agriculture in-charge of the Region, as the case may be, and the Additional Director of Agriculture (Personnel) in Head office |
| 15. | Headmasters/Headmistresses in Government High Schools and Government Higher Secondary Schools (under the Department of School Education) | Director of School Education |
| 16. | Teachers in Academic Subjects, Teachers in Languages, Physical Directors / Directresses in Government Higher Secondary Schools (under the Department of School Education) | Joint Director of School Education (Higher Secondary) |
| 17. | Personal Assistants to District Educational Officers / Inspectresses of Girls Schools | Joint Director of School Education |

**விதி 14 :-** (a) (1) :- விதி (c)–ல் சுட்டுகைச் செய்யப்பட்டுள்ள பணியிடை நீக்கத் தண்டனை (அ) தண்டனைகளை

(i) கண்டனம்

(ii) தண்டம்

(iii) ஊதிய உயர்வுகள் நிறுத்தம், மற்றும்

(iv) (a) உத்தரவுகளை மீறியதனால் அல்லது கவனக்குறைவினால் மாநில அரசு (அ) மைய அரசு (அ) உள்ளாட்சி அமைப்புக்கு ஏதேனும் நிதி இழப்பு ஏற்படுத்தியதனால், முழுவதுமாக அல்லது பகுதியாக ஊதியத்திலிருந்து பிடித்தம், அல்லது,

(b) நிறுத்தப்பட்ட ஊதிய உயர்வு தொகைக்கு நிகரான பணமதிப்பு தொகை அவசியமான அளவுக்கு ஊதியத்திலிருந்து பிடித்தம் அத்தகைய உத்தரவு செயல்விளைவு கொடுக்கப்பட முடியாதிருக்கிறவிடத்து, மாநில சார்நிலைப் பணி அலுவலர் மீது அவரது உடனடி உயர் அதிகாரி, அல்லது அத்தகைய உறுப்பினர்களின் நியமன அதிகாரியாக சார்நிலைப் பணி அதிகாரி இருக்கிறவிடத்து, அத்தகைய அதிகாரி அல்லது ஏதேனும் உயர் அதிகாரி;

வரம்புரையாக, நகரத்தில் (அ) ஊரகத்தில் உள்ள மருத்துவ நிலையத்தில் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்கள் பொறுத்து, ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை வழங்கிட சிவில் சர்ஜன் படிநிலைக்கு குறையாதவராக இருக்கிறவிடத்து, நிலையத் தலைவர் மற்றும் பிற நேர்வுகளில் மாவட்ட மருத்துவ அலுவலர், அத்தகைய நிலையத் தலைவர் (அ) மாவட்ட மருத்துவ அலுவலர் நேர்வுக்கேற்ப, நியமன அதிகாரியாக இல்லாதிருக்கிறவிடத்து தண்டனை விதிப்பதற்கு முன் அத்தகைய அதிகாரிக்கு அறிக்கைவிட்டு முன் ஒப்பளிப்பு

பெறுதல் வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டவராவர்.

மேலும் வரம்புரையாக NCC அலகுகளில்/பிரிவுகளில் பணியாற்றும் சார்நிலைப் பணி உறுப்பினர்களைப் பொறுத்து இந்தக் கூறில் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளை விதிக்கவல்ல தகுதிவாய்ந்த அதிகாரி தொடர்பான அலகுகளின் மேல்நிலை அதிகாரி ஆவார்.

**குறிப்பு 1 :–** இந்தக் கூறில் "மாநிலப் பணியின் உடனடி உயர் அதிகாரி" எனும் சொற்றொடர், தவறிழைத்த காலத்தில் குற்றமிழைத்த அரசு ஊழியர் எவரின் கீழ் புரிந்தாரோ அந்த பணி மாநிலப் பணியின் உடனடி உயர் அதிகாரி மற்றும் அவரது அலுவலக வழிமுறையுரிமையர் எனப் பொருள்படும்.

**குறிப்பு 2 :–** "மாநிலப் பணியின் உடனடி உயர் அதிகாரி" எனும் சொற்றொடர், மத்திய, மாவட்ட சிறைச்சாலைகளில் பணியாற்றும் தமிழ்நாடு சிறைத்துறை சார்நிலைப் பணி, தமிழ்நாடு அமைச்சுப்ப பணி, தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி (வகுப்பு **XXII**) உறுப்பினர்கள் பொறுத்து தொடர்பான சிறைச்சாலைக் கண்காணிப்பாளரை சுட்டுகை செய்வதாகப் பொருள் கொள்ளப்படும்.

**குறிப்பு 3 :–** "மாநிலப் பணியின் உடனடி உயர் அதிகாரி" எனும் சொற்றொடர், தமிழ்நாடு தலைமைச் செயலக பணி, தமிழ்நாடு பொது சார்நிலைப் (பணி வகுப்புகள் **XV & XXII**) மற்றும் தமிழ்நாடு கடைநிலைப் பணி உறுப்பினர்கள் பொருந்துகைப் பொறுத்து தலைமைச் செயலகத்தின் தொடர்பான துறையின் பணியமைப்பு பொறுத்து வகிக்கும் சார்பு செயலர் எனக் கருதப்படுவார்.

வரம்புரையாக, "மாநிலப் பணியின் உடனடி உயர் அதிகாரி" எனும் சொற்றொடர் ஓட்டுநர்கள், வாகன

துப்புரவாளர்கள், மற்றும் தலைமைச் செயலகத்தில் (வகுப்பு **IV** தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி) உள்ள மோட்டார் சைக்கிள் செய்தியாளர்கள் பொருந்துகைக்கு பொதுத் துறை சார்பு செயலரையும் உள்ளடக்கியதாகக் கருதப்படும்.

**(2)** கீழ்க்காண் தண்டனைகளை

(i) பதவி உயர்வு நிறுத்தம்

(ii) முதுநிலைப் பட்டியலில் கீழ் கிரம நிலைக்கு (அ) கீழ் பதவியிடத்திற்கு (அ) கீழ் சம்பள ஏற்ற முறைக்கு இறக்கம் அதே பணியில் (அ) வேறு பணியிலும் அல்லது சம்பள ஏற்ற முறையில் கீழ் நிலைக்கு இறக்கம்;

(iii) குடிமைப் பணி ஒழுங்காற்று விதிகளின் உறுப்பு **465 (2)** அல்லது **465A** குறிப்பு 1–ன் கீழ் வேறுவகையில் கட்டாய ஓய்வு

(iv) மாநில அரசு குடிமைப் பணியிலிருந்து பணி விலக்கல்/நீக்கம்; மற்றும்

(v) மாநில அரசு குடிமைப் பணியிலிருந்து பணியறவு, **NCC** பிரிவின் சார்நிலைப் பணி உறுப்பினர் உட்பட பணி நியமன அதிகாரி (அ) வேறு ஏதேனும் அதிகாரி விதிக்கலாம்.

வரம்புரையாக, பணியமர்வு அதிகாரியினை விட உயர் அதிகாரியினால் பணி நியமனம் செய்யப்பட்ட நபர்களின் நேர்வில், இந்தக் கூறில் குறிப்பிடப்பெற்ற தண்டனைகளை அத்தகைய உயர் அதிகாரிக்கு சார்நிலை அதிகாரியினால் விதிக்கப்படலாகாது.

மேலும் வரம்புரையாக, இவ்விதிகளின் பின்னிணைப்பு **III** –ல் குறித்துரைக்கப்பட்ட பணி உறுப்பினர்களின் நேர்வில், கூறு

(1) & (2)–ல் குறிப்பிடப்பெற்ற தண்டனைகள் மற்றும் விதி 17 (e)–ல் சுட்டுகை பணியிடை நீக்கம் விதிக்கவல்ல அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் எதிராக குறித்துரைக்கப்படலாம்.

(b) ஏதேனும் வழக்கு ஒன்றில் இவ்விதியின் கீழ் உயர் அதிகாரி தண்டனை விதித்து அல்லது விதிக்க மறுத்து இருக்கிறவிடத்து, அதே வழக்கு பொறுத்து கீழ்நிலை அதிகாரி இவ்விதியின் கீழ் மேற்கொண்டு நடத்திட அதிகார வரம்பு கிடையாது.

(c) கீழ்நிலை அதிகாரி ஏதேனும் வழக்கு ஒன்றில் தண்டனை விதித்து அல்லது விதிக்க மறுத்து இருக்கும் நிகழ்மை (பொருண்மை)அதே வழக்கு பொறுத்து உயர் அதிகாரி இவ்விதியின் கீழ் தனது அதிகாரம் செலுத்த தடையாக இராது.

(d) ஏதேனும் வழக்கு ஒன்றில் இவ்விதியின் கீழ் உயர் அதிகாரியின் தண்டனை விதிக்கும் அல்லது விதிக்க மறுக்கும் உத்தரவானது, அதே வழக்கு பொறுத்து கீழ்நிலை அதிகாரி பிறப்பித்த உத்தரவினைப் புறக்கணித்து இருக்கும்

(e) நபர் ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டு மெய்பிக்கப்படவில்லை என்று கீழ்நிலை அதிகாரி நடவடிக்கை விட்டு விடுதல் எனும் பொருண்மை, உயர் அதிகாரியானவர் எழுத்துருவிலான காரணங்கள் பதிவின் பேரில் அவ்வாறான குற்றச்சாட்டை புத்துயிரூட்டி நடவடிக்கை எடுப்பதற்கு தடையாக இராது.

**விதி 15** :– (a) பணித் தொகுதியின் வகுப்பு, வகை அல்லது கிரமநிலை சார்ந்த உறுப்பினர் பதவி உயர்வு (அ) மாற்றல் செயப்படுகிறவிடத்து, வேறு பணியில், மாநிலத்தில் (அ) சார்நிலைப் பணியில் வேறு வகுப்பு, வகை அல்லது கிரமநிலையில் பதவி அமர்த்தப்படும் போது, அத்தகைய பதவி உயர்வு அல்லது மாற்றலுக்கு முன்னர் அவரது பணி மற்றும் நடத்தை பொறுத்து, பிந்தைய பணித் தொகுதியின் வகுப்பு, வகை அல்லது கிரமநிலை நேர்விற்கேற்ப உறுப்பினர் மீது தண்டனை விதிக்க அதிகாரம் வாய்ந்த அதிகாரி தவிர யாதொரு அதிகாரியினால் தண்டனை விதிக்கப்படுதல் கூடாது.

(b) நபர் ஒருவர் பதவி இறக்கம் அல்லது மாற்றப்படுகிறவிடத்து :– மாநிலப் பணியிலிருந்து சார்நிலைப் பணிக்கு, அல்லது ஒரு

பணியிலிருந்து மற்றொரு பணிக்கு,அல்லது ஒரு பணித்தொகுதியின் வகுப்பு, வகை அல்லது தர நிலையிலிருந்து மற்றொரு வகுப்பு, வகை அல்லது தரநிலைக்கு

அவர் பணித் தொகுதியின் வகுப்பு, வகை அல்லது தர நிலை நேர்விற்கேற்ப பணியிலிருந்த போது, அவரது பணி மற்றும் நடத்தை குறித்து யாதொரு தண்டனையும், எதிரிலிருந்து பதவி இறக்கம் அல்லது மாற்றப்பட்டாலோ அத்தகைய பணித் தொகுதியின் வகுப்பு, வகை அல்லது தரநிலையின் உறுப்பினர் மீது தண்டனை விதிக்கும் அதிகாரம் வாய்ந்த அதிகாரியால் தவிர, தண்டனை விதிக்கப்படுதல் கூடாது.

**விதி 16 :–** நபர் ஒருவர் தண்டனை வழங்கிடும் அதிகார ஆயத்திற்கு இரவல் அளிக்கப்பட்டிருக்கிறவிடத்து.,

(i) கட்டாய ஓய்வு (அ) பணி விலக்கல் (அ) பணியறவு தண்டனை விதிக்கவல்ல அதிகாரம் இரவல் அளித்திடும் அதிகார ஆயத்திடம் அல்லாது பிற அதிகாரியிடம் கிடையாது; இரவல் பெற்றிடும் அதிகார ஆயம், சில நேர்வில் கட்டாய ஓய்வு (அ) பணி விலக்கல் (அ) பணியறவு தண்டனை விதிக்க வேண்டும் என கருதுகிறவிடத்து, விசாரணையினை முடித்து, தொடர்பான நபரை இரவல் அளித்த அதிகாரிக்கு அத்தகைய அதிகாரி தேவையெனக் கருதும் அத்தகைய நடவடிக்கைக்கு திரும்ப அனுப்பி வைத்தல் வேண்டும்.

வரம்புரையாக, நபர் ஒருவர் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு இரவல் அளிக்கப்பட்டிருக்கிறவிடத்து மற்றும் இரு துறைகளும் ஒரே நிர்வாக அதிகாரத்தின் கீழ் இருக்கும் போது, தொடர்பான நபரை இரவல் அளித்த அதிகாரிக்கு மாற்றம் செய்ய வேண்டுறுத்தும் இக்கூறின் வகையம் பொருந்தாது.

(ii) தமிழக ஆளுநரால் ஏதேனும் நேர்வில் குறிப்பான உத்தரவுகளினால் வேறு விதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி,

தண்டனை வழங்கிடும் அதிகாரி ஏதேனும் சிறிய தண்டனை வழங்கிடும் முன்னர் இரவல் அளித்த அதிகாரியினை கலந்தாலோசிப்பார் மற்றும் தற்காலிக பணிநீக்க நேர்வில், அந்த தண்டனை விதிக்க வழிவகுத்த சூழல்களைப் பற்றி இரவல் அளித்த அதிகாரிக்கு அறிக்கையிடுவார்.

**விதி 16 A :–** மாநிலப் பணித் தொகுதி உறுப்பினர் ஒருவர் அல்லது மாநில குடிமைப் பதவியிடம் வகிக்கும் நபர் ஒருவரின் பணி ஏதேனும் நிறுவனம், கழகம், அமைப்பு அல்லது உள்ளாட்சி கழகத்திடம் விடப்பட்டிருக்கிறவிடத்து, அவ்வாறு அவரது பணி வைக்கப்படுவதற்கு முன்னரான ஏதேனும் காலத்தில், விதி 8–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டகைளுக்குள்ளாகும் ஏதேனும் செயல் அல்லது தவறுகை செய்திருந்தால், விதி 14–ன் கீழ் அத்தகைய உறுப்பினர் (அ) நபர் மீது அத்தகைய தண்டனை விதிக்க அதிகாரங் கொண்ட அதிகாரி மட்டுமே அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை துவக்க முடியும் மற்றும் தான் பொருத்தமெனக் கருதுகிற விதி 8–ல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தண்டனை விதிக்க முடியும் மற்றும் அத்தகைய நடவடிக்கை துவங்கும் நேரத்தில் அவர் எந்த இரவல் பெற்ற அதிகாரியின் கீழ் பணியாற்றுகிறாரோ அவர், அத்தகைய நடவடிக்கைகளை தொடங்கி நடத்திடும் அத்தகைய தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அனைத்து தகுந்த வசதிகளைச் செய்திட கட்டுப்பட்டவராவார்.

**விதி 16 B :–** (1). நிறுவனம், கழகம், அமைப்பு, தன்னாட்சி வாரியங்கள் (அ) ஏதேனும் பிற அதிகார அமைப்புகளிலிருந்து இரவல் பணி பெறப்பட்ட நபர் ஒருவருக்கு தற்காலிக பணிநீக்க உத்தரவு பிறப்பிக்க அல்லது ஒழுங்கு நடவடிக்கை நடத்த வேண்டியிருக்கிறவிடத்து, உடனடியாக இரவல் கொடுத்த துறைக்கு அரசு ஊழியருக்கு பணியிடை நீக்க உத்தரவு அளிக்க அல்லது ஒழுங்கு நடவடிக்கை துவக்க வேண்டிய வழிவகுத்த சூழல்கள் பற்றி தெரிவித்தல் வேண்டும்.

(2). அரசு ஊழியருக்கு எதிராக நடத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை காண் முடிவுகளின் பேரில் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி விதி 8 கூறு (i) முதல் (iii) & (v)–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை வழங்க எண்ணங் கொண்டிருப்பின், இரவல் கொடுத்த அதிகாரியுடன் கலந்தாலோசித்து, தான் அவசியமெனக் கருதும் அத்தகைய உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்–

(i) இருப்பினும், இரவல் பெற்ற மற்றும் இரவல் கொடுத்த துறைகளிடையே கருத்து வேறுபாடு எழும் நிகழ்வில், அரசு ஊழியரின் பணி இரவல் கொடுத்த துறைக்கு திரும்ப மாற்றப்படும்.

(ii) விதி 8 இனங்கள் (iv) & (vi) முதல் (viii) வரையிலான ஏதேனும் தண்டனைகளை அரசு ஊழியர் மீது விதிக்க இரவல் பெற்ற அதிகாரி எண்ணங்கொள்வாராயின், இரவல் கொடுத்த துறைக்கு அத்தகைய அரசு ஊழியரின் பணி திரும்ப அளித்தும் மற்றும் அவசியமெனக் கருதும் அத்தகைய நடவடிக்கைகளுக்கு வழக்கு நடவடிக்கைகளை மாற்றி அனுப்பிடுதல் வேண்டும்.

**விதி 17 :–** (a) மாநில குடிமைப் பணி உறுப்பினர் மீது அல்லது குடிமைப்ப பதவி வகிக்கும் நபர் ஒவ்வொருவரின் நேர்வில், விதி 8 இனங்கள் (i), (ii), (iii), (v) & (ix)–ல் அல்லது விதி 9–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகள் விதிக்கப்படுவதாக இருக்கிறவிடத்து, அவர் விரும்பும் விளக்கம் தந்திட தகுந்த வாய்ப்பு அளித்திடல் வேண்டும். மற்றும் அத்தகைய விளக்கம், தண்டனை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, சங்கதிகளின் அடிப்படையில் நீதிமன்றத்தில் குற்றத் தீர்ப்புக்குள்ளாக்கப்பட்ட அரசு ஊழியர் மீது மேற்சொன்ன தணடனைகள் விதிக்க கருத்துரு கொண்டிருக்கிறவிடத்து (அ) தொடர்பான அரசு ஊழியர் தலைமறைவாகி இருக்கிறவிடத்து (அ) பிற காரணத்தினால் அரசு ஊழியருடன் தகவல் தொடர்பு கொள்ள இயலாதிருக்கிறவிடத்து, இத்துணை விதியின் வேண்டுறுத்தல்கள் பொருந்தாது.

மேலும் வரம்புரையாக, அரசு ஊழியரின் விளக்கம்/முறையீடு ஏதேனும் பரிசீலித்த பின்னர், ஊதிய உயர்வுகள் நிறுத்தல்

செய்தல் மற்றும் அத்தகைய ஊதிய உயர்வுகள் நிறுத்தமானது அரசு ஊழியருக்கு கொடுக்கப்படத்தக்க ஓய்வூதியத்திற்கு கேடு பயன் அளித்திடும் வகையில் அல்லது 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு திரள் பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தம் தண்டனைகளை விதிக்க எண்ணம் கொண்டிருக்கும் ஒவ்வொரு நேர்விலும், அத்தகைய தண்டனை உத்தரவு அரசு ஊழியர் மீது பிறப்பித்தலுக்கு முன்னர் துணை விதி (ḃ)–யில் உள்ள நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

(ḃ) (i) 1850–ஆம் ஆண்டு பொது ஊழியர்களின் விசாரணைச் சட்டத்தின் வகையங்களுக்கு குந்தகமின்றி, மாநில குடிமைப்பணி உறுப்பினர் (அ) குடிமைப் பதவியிடம் வகிக்கும் நபர் மீது விதி 8 இனங்கள் (iv), (vi), (vii) & (viii)–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்க கருத்துரு கொண்டிருக்கிறவிடத்து, அரசு ஊழியரின் மேல் நடவடிக்கை எடுப்பதற்கான அடிப்படைகளை ஒன்றுபடுத்தி தகுந்த தெளிவான குற்றச்சாட்டுகளாகத் தொகுத்து எந்தக் குற்றச்சாட்டு மற்றும் எந்த சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒவ்வொரு குற்றச்சாட்டு அமைந்துள்ளது என்பதை விவர அறிக்கையுடன் தயாரித்து, எந்த சூழல் பரிசீலனைக்கு கொண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட உள்ளது என்பதனை நபருக்கு தெரிவிக்க வேண்டும். அரசு ஊழியர் தகுந்த காலவரையறைக்குள் தனது எதிர் அறிக்கையில் தாம் விரும்புவது வாய்மொழி விசாரணையா அல்லது நேரில் கேட்டறிதலா என்பதையும் குறிப்பிட்டு அறிக்கை அனுப்ப வேண்டும். குற்றம் சாட்டப்பட்ட ஊழியர் விரும்பினால் அல்லது அதிகார ஆயம் பணித்தால் வாய்மொழி விசாரணை மேற்கொள்ளப்படும். குற்றம் சாட்டப்பட்ட ஊழியரே வாய்மொழி விசாரணை புறந்தள்ளி இருப்பினும் கூட, சாட்சிகளின் சாட்சியங்களால் மட்டுமே மெய்ப்பிக்கப்படக்கூடிய, குற்றம் சாட்டப்பட்டவரால் ஏற்றுக் கொள்ளப்படாத குற்றச்சாட்டுகள் பொறுத்து, தொடர்பான

அதிகாரியினால் அத்தகைய விசாரணை நடத்தப்படலாம். விசாராணையின் போது ஏற்கப்படாத குற்றச்சாட்டுகளுக்கு வாய்மொழி சாட்சியம் கேட்கை செய்யப்படும் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்திடவும் மற்றும் தாம் விரும்பும் சாட்சிகளை அழைத்திடவும் உரிமையுடையவராவார்;

இருப்பினும் விசாரணை நடத்தும் அதிகாரி சிறப்பு மற்றும் போதுமான காரணங்களின் எழுத்துருவிலான பதிவின் பேரில் சாட்சி ஒருவரை அழைத்திட மறுக்கலாம். குற்றம் சாட்டப்பட்ட நபர் வாய்மொழி விசாரணை விரும்பினாலும் (அ) கேட்கப்பட்டிருந்தாலும் இறுதி உத்தரவு பிறப்பித்தலுக்கு முன்னர் விசாரணையின் எந்த நிலையிலும் நேர்முக கேட்கை செய்யப்படலாம். விசாரணை அல்லது நேர்முக கேட்கை (நேர்விற்கேற்ப) பற்றிய அறிக்கை, விசாரணை அல்லது நேர்முக கேட்கை செய்திடும் அதிகாரியால், அத்தகைய அதிகாரி தண்டனை வழங்க வல்ல அதிகாரியாக இருப்பினும் இல்லாவிடினும், விசாரணை அறிக்கை தயாரிக்கப்படும்.

அத்தகைய அறிக்கை போதுமான சாட்சிய பதிவுருக்கள், ஏதேனுமிருப்பின் மற்றும் காண் முடிவுகளின் விவர அறிக்கை மற்றும் அதற்கான அடிப்படைகளையும் கொண்டிருக்கும்.

விசாரணை அதிகாரி விசாரணை ஒன்றில் கேட்கை மற்றும் சாட்சியத்தினை முழுமையாக அல்லது பகுதியாக பதிவு செய்த பின்னர் ஆள்வை செயலறுத்தல் முடிவுற்றால் மற்றும் அத்தகைய அதிகார வரம்பினைச் செலுத்திடும் மற்றொரு விசாரணை அதிகாரி வழிமுறையுரிமை கொண்டால், அவ்வாறு பின்வரும் விசாரணை அதிகாரி முன்னவர் பதிவு செய்த சாட்சியத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கலாம் அல்லது சாட்சியத்தில் பகுதியின் தான் பதிவு செய்த சாட்சியத்தின் பகுதியின் பேரில் நடவடிக்கை எடுக்கலாம்.

வரம்புரையாக, வழிமுறையுரிமை விசாரணை அதிகாரி நீதிநலன் பொருட்டு ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தை மேலும் விசாரணை செய்ய எண்ணங் கொண்டிருப்பின், அத்தகைய சாட்சிகளை இதன் பின்னர் வகை செய்யப்பட்டுள்ளவாறு மறுபடியும் அழைத்து, விசாரணை, குறுக்கு விசாரணை செய்திடலாம்.

மேலும் வரம்புரையாக, தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் விதி 20B–யின் பொருளமைவில் பாலியல் சித்ரவதை புகார் ஒன்று இருக்கிறவிடத்து, அத்தகைய புகார்களை விசாரிக்க ஒவ்வொரு அரசு அலுவலகம் அல்லது துறையில் நிறுவப்படும் புகார்கள் குழு, இந்த விதிகளின் நோக்கங்களுக்காக ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியினால் நியமனம் செய்யப்பட்ட விசாரணை அதிகாரி எனக் கருதப்படல் வேண்டும் மற்றும் புகார்கள் விசாரிக்கும் குழுவானது இயன்றவரையில் இவ்விதிகளில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கிணங்க விசாரணை நடத்துதல் வேண்டும்.

**(அ.நி.எண்.160 ப.ம.நி.சீ. (என்) துறை, நாள் : 20.09.2006; அமல் 20.09.2006)**

இன்னும் வரம்புரையாக, அரசு ஊழியர் ஒருவர் தனது வழக்கினை முன்னிட்டு ஓய்வு பெற்ற அரசு ஊழியர் எவரேனும் உதவி பெற்றிடலாம். ஆனால் விசாரணை அதிகாரி சட்டத் தொழிலாற்றுநராக இருந்தாலன்றி, அல்லது விசாரணை அதிகாரி வழக்கின் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு அவ்வாறு அனுமதித்திருந்தாலன்றி இந்நோக்கத்திற்காக வழக்கறிஞர் ஒருவரை அனுமதித்தலாகாது.

**விளக்கம் :–** உதவி அளித்திட இரண்டு ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் தம் வசம் நிலுவையில் வைத்துள்ள ஓய்வு பெற்ற அரசு ஊழியரின் உதவியினை அரசு ஊழியர் பெறுதல் கூடாது.

(ii) கூறு (1)–ல் குறிப்பிட்டுள்ளவாறு விசாரணை அல்லது நேர்முக விசாரணை முடிந்தவுடன் தண்டனை வழங்கு தகுதிறம் கொண்ட அதிகாரியானவர். விசாரணையின் போதான சாட்சியங்களின் அடிப்படையில் தண்டனை வழங்க கருத்து/எண்ணம் கொண்டிருப்பின், அவ்வாறான தண்டனை உத்தரவு பிறப்பித்திடுவதற்கு முன், அரசு ஊழியருக்கு விசாரணை பற்றிய நகல் பிரதி ஒன்றினை அளித்து, விளக்க அறிக்கை ஒன்றினை 15 நாட்களுக்குள் கோரலாம்; இறுதி உத்தரவு பிறப்பித்திடுவதற்கு முன்னர் விசாரணையின் போதான சாட்சிய அடிப்படையிலான ஊழியரின் விளக்க அறிக்கை பரிசீலனை செய்திடலாம். குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஊழியருக்கு தண்டனை விதிப்பதற்கு முன்னர், விதிக்கப்படவுள்ள தண்டனை தொடர்பாக முறையிட வாய்ப்பு வழங்க அவசியமில்லை.

இருப்பினும், ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியானவர் ஒவ்வொரு வழக்கிலும் (TNPSC) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்க அவசியமிருப்பின் கலந்தாலோசித்து, தண்டனை விதிப்பதற்கு முன்னர் ஆலோசனையினை பரிசீலித்துக் கருத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் வரம்புரையாக, வேறு பணி அல்லது வகுப்பிலிருந்து மாற்றல் செய்யப்பட்டு தற்காலிக துறையில் பணி நியமனம் செய்யப்படும் ஒரு நபரின் நேர்வில், மாநில அரசானது, எந்நேரத்திலும் சொல்லப்பட்ட பதவியிடத்திற்கு அத்தகைய நபர் முழு உறுப்பினராக நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர், காலிப் பதவியிடம் தேவைக்காக (அ) அரசின் தேவைக்கு அவர் பதவியிடம் மிகையாகும் போது (அ) சொல்லப்பட்ட பதவியிடத்திற்கு அவருக்கு அவசியமான உளச்சார்பு இல்லை என மாநில அரசு உளநிறைவு கொள்ளுமாயின், இத்துணை விதியில் குறிப்பிடப்பெற்ற நடைமுறைகளைப் பின்பற்றாமல் அவரை அத்தகைய பிற வகுப்பு (அ) பணிக்கு பணியிறக்கம்

செய்திடலாம்.

(c) (1) குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்புக்குள்ளாக்க வழிவகுத்த சங்கதிகளின் அடிப்படையில் பணி உறுப்பினர் மீது (அத்தகைய நீதிமன்றத்தால் அவர் உடனடியாக தண்டனை விதிக்கப்பட்டாலும் (அ) இல்லாவிடினும்) துணை விதி (b)-ன் கூறு (i)–ல் உள்ள தண்டனைகளை விதிக்க கருதுகிறவிடத்து, துணை விதி (b)–யின் வேண்டுறுத்தல்கள் பொருந்தாது; ஆனால் அவர் விரும்பிடும் முறையீடு அளிக்க தகுந்த வாய்ப்பு கொடுக்கப்படும் மற்றும் அத்தகைய முறையீடு ஏதேனும், தண்டனை உத்தரவு பிறப்பபிக்கப்படுவறதற்கு முன்னர் பரிசீலனையில் கொள்ளப்படும்.

(2) குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்புக்கு வழிவகுத்த சங்கதிகளின் அடிப்படையில் (அ) தொடர்பான நபர் தலைமறைவாகிறவிடத்து (அ) பிற காரணங்களின் பேரில் அலுவலருடன் தகவல் தொடர்பு கொள்ள இயலாதிருக்கிறவிடத்து, பணி உறுப்பினர் மீது விதி 8 (அ) 9–ல் குறித்துரைக்கப்பட்ட தண்டனைகளை விதிக்க கருத்துரு கொண்டிருக்கிறவிடத்து, துணை விதி (b)-யின் வேண்டுறுத்தல்கள் பொருந்தாது. (ii) நாட்டுநலன் பொருட்டு துணை விதி (b)–யில் குறிப்பிடப்பெற்ற நடைமுறைகளை பின்பற்றுதல் உகந்தது அல்ல என மாநில ஆளுநர் மன நிறைவு கொள்கிறவிடத்து, துணை விதி (b)–யின் காப்புரைகள் பொருந்தாது.

(d) (i) துணை விதி (a) மற்றும் (b)–யின் ஏதேனும் வகையங்கள் அல்லது அனைத்தும், தவிர்க்க முடியாத நேர்வுகளில் சிறப்பு மற்றும் போதுமான எழுத்துருவிலான காரணங்கள் பதிவின் பேரில், துணை விதிகளின் வேண்டுறுத்தல்கள் பின்பற்றுவது கடினமாக இருக்கிறவிடத்து கைவிடப்படும் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அநீதி இழைக்கா வண்ணம் அந்த வேண்டுறுத்தல்கள் கைவிடப்பட

வேண்டியதாகும்.

(ii) துணை விதி (b)–யில் வகுத்தமைக்கப்பட்ட நடைமுறையினைப் பின்பற்றுவது இயலுமா என்பது குறித்து ஐயம் எழுமாயின், அத்தகைய நபரை பணியறவு (அ) பணி விலக்கல் அல்லது படிநிலை இறக்கம் செய்திட தகுநிறம் வாய்ந்த அதிகாரியின் முடிவே இறுதியானதாகும்.

(e) (1) பணித் தொகுதி உறுப்பினர் ஒருவர் பணியிடை நீக்கம் செய்யப்படலாம்–

(i) அவருக்கெதிராக கடுங்குற்றத்திற்காக விசாரணை எதிர் நோக்கப்படுகிறவிடத்து (அ) நிலுவையில் இருக்கிறவிடத்து; அல்லது

(ii) அவருக்கு எதிராக குற்றவியல் குற்றம் புகார் புலனாய்வில் (அ) வழக்கு விசாரணையில் மற்றும் அத்தகைய பணியிடை நீக்க உத்தரவு பொது நலன் முன்னிட்டு அவசியமாக இருக்கிறவிடத்து;

(2) அரசு ஊழியர் எவர் ஒருவர் குற்றமுறு குற்றச்சாட்டின் பேரில் அல்லது வேறுவகையில் 48 மணி நேரத்திற்கு மேம்பட்டு சிறைக்காவலில் இருத்தி வைக்கப்பட்டால் இவ்விதியின் கீழ் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதாக கருதப்படுவார்.

(3) பணியிடை நீக்கத்தில் உள்ள அரசு ஊழியர் ஒருவர் மீது விதிக்கப்பட்ட பணியறவு, பணி விலக்கல், அல்லது கட்டாய பணி ஓய்வு உத்தரவு மேல்முறையீடு அல்லது மறு ஆய்வின் பேரில் இவ்விதிகளின் கீழ் நீக்கறவு செய்யப்படுகிறவிடத்து மற்றும் வழக்கானது மேலுமான விசாரணைக்கு (அ) நடவடிக்கைக்கு (அ) வேறு ஏதேனும் பணிப்புரைகளுக்கு குறித்தனுப்புகை செய்யப்படும்போது, பணியிடை நீக்க உத்தரவானது, பணியறவு, பணி விலக்கல் (அ) கட்டாயப்பணி ஓய்வு அசல் உத்தரவு தேதியிலிருந்து தொடர்ந்து செயல்லாற்றலில்

இருப்பதாகவும் மற்றும் மேலுமான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரை செயல்லாற்றலில் இருக்கும்.

(4) அரசு ஊழியர் ஒருவர் மீது விதிக்கப்பட்ட பணியறவு, பணி விலக்கல் (அ) கட்டாய பணி ஒய்வு தண்டனை உத்தரவு நீதிமன்ற உத்தரவினால் நீக்கறவு அல்லது இல்லா நிலையத்தாக்கப்படுகிறவிடத்து மற்றும் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி வழக்கின் சூழல்களைப் பரிசீலித்து, எந்த குற்றச்சாட்டுகளின் பேரில் பணியறவு, பணிவிலக்கல் (அ) கட்டாயப் பணி ஒய்வு முதலேற்பில் விதிக்கப்பட்டதோ அதன் பேரில் மேலுமான விசாரணை செய்திட முடிவு செய்திடும் போது, பணியறவு, பணி விலக்கல் அல்லது கட்டாய பணி ஒய்வு உத்தரவு அசல் தேதி முதல் அரசு ஊழியர் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்படுவதாகக் கருதப்படுவார் மற்றும் மேலுமான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரை பணியிடை நீக்கத்தில் தொடர்ந்து இருப்பார்.

வரம்புரையாக, வழக்கின் தகுதிப்பாடுகளை சீர்தூக்கி பாராமல் நுட்ப/நுணுக்க ஆதாரங்களின் பேரில் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறவிடத்து, அந்த நிலையினை எதிர்கொள்ள தேவைப்பட்டாலன்றி அத்தகைய மேலுமான விசாரணை உத்தரவு பிறப்பித்தலாகாது.

(5) அரசு ஊழியர் ஒருவர் தற்காலிக பணி நீக்கத்தில் அல்லது தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதாக கருதப்படுகிறவிடத்து (ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பாக (அ) பிறவாறு) மற்றும் அந்தப் பணியிடை நீக்க காலத்தில் வேறு ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடங்கப்படும் போது (அ) ஏதேனும் குற்றவியல் புகார் புலனாய்வில் இருக்கும் போது (அ) அவருக்கு எதிராக வழக்கு விசாரணை இருக்கும் போது மற்றும் கூறு (1)—ன் வேண்டுறுத்தலின்படி பொது நலன் முன்னிட்டு அரசு ஊழியரின் தற்காலிக பணி நீக்கம் அவசியமாக இருக்கிறவிடத்து, அவரை தற்காலிக பணி நீக்கம் செய்ய தகுதிறம் வாய்ந்த அதிகாரி, எழுத்துருவிலான காரணங்கள் பதிவின் பேரில், அத்தகைய அனைத்து வழக்கு நடவடிக்கைகள், குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்புக்கு அடிப்படையான சங்கதிகளின்

பேரிலான துறை நடவடிக்கைகள் உட்பட, முடிவடையும் வரை, அத்தகைய அரசு ஊழியரை தொடர்ந்து தற்காலிக பணி நீக்கத்தில் வைத்திருக்க உத்தரவிடுவார்.

(6) இந்த விதிகளின் கீழ் செய்யப்பட்ட (அ) செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட

(7) தற்காலிக பணி நீக்க உத்தரவு, அதனைப் பிறப்பித்த அதிகாரியினால் (அ) அதன் சார்நிலை அதிகாரியினால் எந்நேரத்திலும் திரும்பப் பெறப்படலாம்/நீக்கப்படலாம்.

(f) ஒரு அரசு ஊழியருக்கு, அவருக்கு எதிரான குற்றங்கள், அதன் சார்பான குற்றச்சாட்டுகள் பற்றிய அறிக்கை, மற்றும் வழக்கில் உத்தரவு பிறப்பித்தலுக்கு கருத்தில் கொள்ளப்பட்ட சூழ்நிலைகள் போன்ற விவரங்கள் கொண்ட அறிக்கை நகல் ஊழியருக்கு அளிக்கப்பட்டு, ஊழியர் தனது மறுப்புரையை அந்த நோக்கத்திற்கான குறிப்பிட்ட நாட்களுக்குள் அளிக்காமலிருந்தால் அல்லது விசாரணை அதிகாரியின் முன் நேரில் ஆஜராகாமலிருந்தால் அல்லது இவ்விதிகளின் காப்புரைகளின்படியான நடைமுறைகளை கடைப்பிடிக்காதிருப்பின், விசாரணை அதிகாரியானவர் விசாரணையினை ஒருதலைப்பட்சமாக முடிவு செய்திடுவார்.

(g) ஓர் அரசு ஊழியருக்கெதிரான தவறான நடத்தைக் குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாக ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி கருதிடும் போது, தானே விசாரிக்கலாம் அல்லது விசாரணை அதிகாரியை நியமித்து விசாரிக்கலாம்.

விளக்கம் :– ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியே விசாரணை நடத்துகிறவிடத்து "விசாரணை அதிகாரி" எனம் சுட்டுகை ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியினை சுட்டுவதாகப் பொருள் கொள்ளப்படும்.

**விதி 17 (h) :–** ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் மற்றும் துணை ஆணையர், ஒழுங்கு நடவடிக்கை அதிகார ஆயம் சுட்டியுரைப்பதன் பேரில், மாநில பணித் தொகுதி உறுப்பினர் அல்லது குடிமைப் பதவியிடம் வகிக்கும் நபர் பொறுத்து விதி 17 (b) (i)–ன் கீழான விசாரணை நடத்தலாம்.

விளக்கம் :– இந்த விதியின் நோக்கத்திற்காக "ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி" எனில் விதி 17 (b) (i)–யில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளை விதிக்க அதிகாரம் வாய்ந்த அதிகாரி அல்லது அவருக்கு சார்நிலையாக உள்ள ஆனால் விசாரணை நடத்தப்பட உள்ள அதிகாரியினை விட உயர் அதிகாரி எனப் பொருள்படும்.

**விதி 18 :–** (a) தண்டனை வழங்கவல்ல அதிகாரி கீழ்க்கண்ட விபரங்களுடன் கூடிய பதிவுருவை பராமரித்தல் வேண்டும்.

(i) அரசு அலுவலரின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்,

(ii) வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்

(iii) குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அலுவலரின் முறையீடுகள் ஏதேனும் மற்றும் ஏதேனும் சாட்சியங்கள்,

(iv) விசாரணை கண்டுபிடிப்புகள் மற்றும் அதற்கான ஆதாரங்கள்

(b) அனைத்து தண்டனை உத்தரவுகளும் எந்த அடிப்படையில் விதிக்கப்பட்டுள்ளன என எழுத்துருவில் குறிப்பிட்டு எந்த நபருக்கு எதிராக பிறப்பிக்கப்படுகிறதோ அவருக்கு தெரிவிக்கப்படும்.

(c) இவ்விதிகளின் கீழ் ஒவ்வொரு ஆணை அறிவிக்கை மற்றும் கட்டளைகள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அரசு அலுவலருக்கு நேரிலும் அல்லது ஒப்புதலுடன் கூடிய பதிவு அஞ்சலிலும் அல்லது நபர் இல்லை எனில் குடும்பத்தின் முதிய உறுப்பினரிடம் சார்வு செய்தல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன வழியில் சமர்ப்பிக்கப்பட முடியவில்லை எனில் அரசு அலுவலரின் இறுதி இருப்பிடத்தில் தெளிவாகத் தெரியும் இடத்தில் ஒட்டி வைத்தல்

(d) இறுதி உத்தரவு பிறப்பிக்கும் போது ஒழுங்கு நடவடிக்கை

அதிகாரியானவர் விசாரணையின் பேரில் சான்றுப் பொருட்கள் மீதான பொறுப்புத் தீர்வு தொடர்பாகவும் ஆணையிடலாம். மேல்முறையீடு காலம் முடிந்த பின்பு தொடர்புடைய அலுவலர் சான்றுப் பொருட்களை தீர்வு செய்திடுவார்.

## பகுதி - IV
## மேல்முறையீடுகள்

**விதி 19 :–** மாநில குடிமைப் பணி உறுப்பினர் மற்றும் குடிமைப் பதவி வகிக்கும் நபர் அரசுப் பணியில் முடிவுறுத்தப்பட்ட நபர் உட்பட ஒவ்வொருவரும் இதன் பின் வகை செய்யப்பட்டுள்ளவாறு, அதிகாரியினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்திட உரிமையுடையவராவர்.

(a) விதி 8 அல்லது விதி 9–ன் கீழ் தண்டனை விதிக்கப்பட்டால்

(b) குறிப்பிட்ட காலத்திற்கான அல்லது வரையிலா காலத்திற்கான ஒப்பந்தத்தில் பணியமர்த்தப்பட்டிருப்பின், அவரது ஒப்பந்த விதிமுறைகளுக்கிணங்க பணியிலிருந்து விடுவித்தல் மற்றும் அவரது பணி முடிவுறுத்தப்படும் போது இருவகையான ஒப்பந்தப் பணியிலும் அவர் 5 வருடத்திற்கும் மேலாக தொடர் பணியினை முடித்திருத்தல்; மற்றும்

(c) ஓய்வூதிய விதிகளுக்கிணங்க அரசு அலுவலருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச ஓய்வூதியத்தை கூடுதல் ஓய்வூதியம் உட்பட குறைத்தல் மற்றும் நிறுத்தி வைத்தல்.

**விதி 20 :–** (1) மாநில பணித் தொகுதி உறுப்பினர் அல்லது சார்நிலைப் பணி உறுப்பினர், அத்தகைய பணியிலிருந்து முடிவுறுத்தப்பட்ட உறுப்பினர் உட்பட, எவர் நேர்வில் அரசு இறுதி உத்தரவு பிறப்பித்திருக்கிறதோ, அவர் உத்தரவு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 2 திங்களுக்குள், கீழ்க்காண் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட மறுஆய்வு செய்ய வேண்டி அரசிற்கு மனு செய்ய உரிமை கொண்டவராவர்.

(a) தகுதியான அதிகாரியினால் உத்தரவு பிறப்பிக்கப்பட வில்லையென்றும்;

(b) தன்னைக் காத்துக் கொள்வதற்கான தகுந்த வாய்ப்பு அரசு அலுவலருக்கு கொடுக்கப்படவில்லையென்றாலும்;

(c) தண்டனை மிகுதியானது அல்லது அநீதியானது என்றாலும்;

(d) வழக்கு தொடர்பான புதிய சாட்சியத்தை கண்டுபிடித்தது தனது அறிவுக்கு எட்டாவண்ணம் இருந்ததாகவும் மற்றும் தண்டனை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன் நிரூபிக்க முடியவில்லை என்றும் அரசின் திருப்திக்கேற்ப முறையீட்டாளர் நிரூபித்தல்

(e) காலவரையறைச் சட்டத்தினை பொருந்தச் செய்யத் தவறுதல் அல்லது பதிவுருக்களின் தோற்றத்தில் தெளிவாக காணப்படும் பிழை போன்ற வெளிப்படையான தவறுகை (அ) விடுதல்கள் வரம்புரையாக, அரசானது தன் உளத்தேர்வின்படி சொல்லப்பட்ட இரு மாதங்களுக்குள் மறு ஆய்வு சமர்ப்பித்தலுக்கான ஏதேனும் காலத்தாழ்வினை மன்னித்து விட்டுவிடலாம்.

(2) மேற்காண் ஏதேனும் அடிப்படைகளை உளநிறைவு செய்திடாத மறுஆய்வு மனு ஒட்டு மொத்தமாக நிராகரிக்கப்படும்.

(3) மாநில அரசு அன்றி வேறு அதிகாரி, விதி 12 துணை விதி (2)–ன் பயன் திறத்தினால், மாநில பணித் தொகுதி உறுப்பினர் மீது தண்டனை விதிக்கும் உத்தரவு பிறப்பித்திருக்கிறவிடத்து, அத்தகைய உறுப்பினர் உத்தரவானது துறைத் தலைவரின் சார்நிலை அதிகாரியால் பிறப்பிக்கப்பட்டிருப்பின் துறைத்தலைவருக்கும்; துறைத் தலைவரால் பிறப்பிக்கப்பட்டிருப்பின் அரசிற்கும் மேல்முறையீடு செய்ய உரிமையுடையவராவார். **(அ.நி.எண். 19 ப.ம.நி.சீ (கு) நாள்: 11.02.2008; அமல் : 11.02.2008)**

**விதி 21 :–** நீக்கம்

**விதி 22 :–** இவ்விதி **NCC** நகராட்சி பொறியியல் சார்நிலைப் பணி, காவல்துறை விரல் ரேகைப் பிரிவு அலுவலர்கள் மேல்முறையீடு செய்வது பற்றி விளக்குகிறது.

**விதி 23:–** (1) விதி 8 அல்லது 9–ன் கீழ் தண்டனைக்கான மேல்முறையீட்டுக் குழு கீழ்க்காணும் மேல்முறையீடு விபரங்களை பரிசீலிக்கும்.

(a) தண்டனை உத்தரவிடுவதற்கான காரணங்கள் நன்கு உறுதிப்படுத்தப்பட்டு உள்ளனவா என்றும்

(b) நடவடிக்கை எடுப்பதற்கு போதுமான உறுதியான காரணங்கள் என்றும்

(c) தண்டனையானது மிகுதியாகவும், போதுமானதாகவும் அல்லது போதுமற்றவையாகவும் இருப்பின் உத்தரவு மூலம்

(i) உறுதிப்படுத்தி அதிகப்படுத்தி குறைத்து அல்லது நீக்கறவு செய்து

(ii) தண்டனை வழங்கிய அதிகாரிக்கே அல்லது வேறு அதிகாரிக்கு வழக்கை குறித்தனுப்பி வழக்கின் நிலவரத்திற்கு தகுந்தவாறு கட்டளையை பணிக்கலாம்.

வரம்பரையாக

(i) மேல்முறையீட்டு அதிகாரியினால் விதிக்கப்படவிருக்கும் அதிகப்படுத்தப்பட்ட தண்டனையானது விதி 8ன் கீழ் (iv) (v) (c) (vi) (vii) (viii) தண்டனையாக இருப்பின், துணை விதி 17 (b)–யின்படி முன்னதாக விசாரணை நடத்தப்படவில்லையெனில் விதி 17 (c)–யின் காப்புரைகளுக்கிணங்க மேல்முறையீட்டு அதிகாரியே அத்தகைய விசாரணை நடத்தலாம் அல்லது விதி 17 (b)–யின் வகையங்களுக்கிணங்க விசாரணை நடத்த

உத்தரவிடலாம் மற்றும் அதன் பின்னர் அத்தகைய விசாரணை நடவடிக்கைகளின் முடிவின் பேரில் பொருத்தமெனக் கருதும் அத்தகைய உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்.

(ii) மேல்முறையீட்டுக் குழுவினரால் விதிக்கப்படவிருக்கும் அதிகப்படுத்தப்பட்ட தண்டனையானது விதி 8–ன் கீழ் (iv) (v) (c) (vi) (vii) & (viii) தண்டனையாக இருப்பின், துணை விதி 17 (b)–யின்படி முன்னதாக விசாரணை நடத்தப்பட்டு இருப்பதால் விதிக்கப்படவிருக்கும் தண்டனையை எதிர்த்து முறையீடுகள் செய்தவற்தகான "தகுந்த வாய்ப்பு" மேல்முறையீட்டாளருக்கு கொடுத்த பின்பு சாட்சியங்களின் அடிப்படையில் தான் தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்கலாம்.

(iii) வேறு யாதொரு வழக்கு எதிலும் அதிகரிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக விதி 17 (a)–யின் வகையத்திற்கிணங்க மேல்முறையீட்டாளருக்கு தகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்டாலன்றி அத்தகைய அதிகரிக்கப்பட்ட தண்டனை விதித்தல் கூடாது.

**(2)** தண்டனை விதிக்க பின்பற்றப்படும் நடைமுறையில் ஏதேனும் தவறு அல்லது பிழையினை, மேல்முறையீட்டு அதிகாரி எழுத்துருவிலான காரண பதிவின் பேரில் அந்த தவறு அல்லது பிழை ஒரு பொருட்டு அல்ல என்றும அது தொடர்பான நபருக்கு அநீதி விளைவிக்காது அல்லது வழக்கின் முடிவுகளையோ பாதிக்காது என்பதன் பேரில் ஒதுக்கி விடலாம்.

**விதி 24 :–** மேல்முறையீடு ஒன்றின் நேர்வில் நீதி மற்றும் சமத்துவ அடிப்படையில் வழக்கின் சூழல்களுக்கேற்ப மேல்முறையீட்டு அதிகாரி மேல் முறையீடு விண்ணப்பத்தின் மேல் உத்தரவுகளை பிறப்பிக்கும்.

**விதி 25 :–** மேல்முறையீடு செய்யும் நபர் தனியாகவும், தன் சொந்தப் பெயரிலும்

மேல்முறையீடு செய்ய வேண்டும்.

**விதி 26 :–** இவ்விதிகளின் கீழ் மேல்முறையீடு மனுவானது மேல் முறையீட்டாளரின் சார்பான அனைத்து வாதங்கள் கொண்டதாகவும், முழுமையானதாகவும், பொருத்தமானதாகவும், பொருத்தமான நாகரீகமான மொழி நடையிலும் மற்றும் அவமரியாதை மொழியற்று இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு அத்தகைய மேல்முறையீடு மனுவானது மேல்முறையீட்டு அதிகாரிக்கு முகவரியிட்டு விண்ணப்பிக்கப்படும் மற்றும் மனுவானது மேல்முறையீட்டாளர் சார்ந்திருந்த அல்லது சார்ந்துள்ள துறைத்தலைவர் மூலமாகவும் அல்லது மேல்முறையீட்டிற்கான உத்தரவு பிறப்பித்த அதிகாரி மூலமாகவும் அல்லது சார்நிலைப் பணியாளர்கள் வழக்கமான அலுவலக வழி மூலமாகவும் மனுவை சமர்ப்பிக்கலாம்.

**விதி 27 :–** எந்த அதிகாரியின் உத்தரவினால் மேல்முறையீடு செய்யப்பட்டதோ அந்த அதிகாரிக்கு கீழல்லாத அதிகாரியினால் மேல்முறையீடு ஒன்று நிறுத்தி வைக்கப்படும்.

(1) இவ்விதிகளின் கீழ் மேல்முறையீடு இல்லா வழக்கில் மேல்முறையீடாக இருப்பின் அல்லது

(2) விதி 26–ன் வகையங்களைப் பின்பற்றவில்லையெனில், அல்லது

(3) மேல்முறையீட்டுக்குரிய உத்தரவு பற்றி மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பபட்ட தேதிக்குப் பின்னர் இரு திங்களுக்குள் மேல்முறையீடு முன்னிடப்படவில்லையெனில் மற்றும் காலத்தாழ்விற்கு போதிய காரணம் காண்பிக்கப்படவில்லையெனில் அல்லது

(4) மேல்முறையீடு மனுவானது, இரண்டாவதாகவும் முந்தைய மேல்முறையீடு மனுவின் மறு பதிப்பாகவும் முந்தைய மனுவை பரிசீலித்த அதே மேல்முறையீட்டு அதிகாரிக்கு முன்னிட்டும் மற்றும் மறுபரிசீலனை செய்வதற்கான புதிய காரணங்கள் இல்லையெனில், அல்லது

(5) இவ்விதிகளின் கீழ் மேல்முறையீடு முன்னிடப்பட வேண்டியிராத

அதிகாரிக்கு முகவரியிடுதல்

வரம்புரையாக, மேல்முறையீடு நிறுத்தி வைக்கப்படும் ஒவ்வொரு நேர்விலும் மேல்முறையீட்டாளருக்கு அதற்கான காரணக்கூறுகள் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக, விதி 26—ன் வகையங்களைப் பின்பற்ற தவறிய காரணத்தின் பேரில் மட்டுமே நிறுத்தி வைக்கப்பட்ட மேல்முறையீடு ஒன்று, நிறுத்தி வைப்பு பற்றி மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் மீண்டும் சமர்ப்பிக்கலாம் மற்றும் அவ்வாறான வகையங்களை பின்பற்றிய வடிவத்தில் மீண்டும் சமர்ப்பிக்கப்படுமாயின், நிறுத்தி வைக்கப்படாது.

**விதி 28 :—** தகுதிறம் வாய்ந்த அதிகாரியினால் மேல்முறையீடு நிறுத்தி, வைக்கப்பட்டதற்கு எதிராக மேல்முறையீடு இராது.

**விதி 29 & 30 :—** நீக்கம்

